உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த குரு துணை

# சித்தாந்தப்

# பொன்மலர்

OFFICE OF THE REGISTRAR OF CO...
27 JAN 1934
MADRAS

அருட்பெரும் கட்டுரைகள் பல அடங்கியுள்ளன.

இது

தூத்துக்குடி என்னும்

திருமந்திர நகர்ச் சைவ சித்தாந்த சபையின்

ஐம்பதாவது ஆண்டு நிறைவுப் பொன்விழாவின்

நினைவுக்குறியாக

அச் சபையாரால் வெளியிடப்பெற்றது.

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை,

சென்னை.

1933 விலை ரூபா 1.

# முன்னுரை

"சித்தாந்தப் பொன்மலர்" என்னும் இச்சுவடி, எங்கள் சைவ சித்தாந்த சபையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவுப் பொன் விழாவின் நினைவுக்குறியாக வெளியிடப்பெற்றுள்ளது. இதில், நமது சைவ சித்தாந்த சன்மார்க்கத்தின் சார்பாகவும் செந்தமிழ் இலக்கியத்தின் சார்பாகவுமுள்ள பல கட்டுரைகள் அடங்கியுள்ளன. எங்கள் வேண்டுதலை அன்புடன் ஏற்றுப் பெரியார் பலர் அரும் பெரும் கட்டுரைகள் எழுதி யுபகரித்தனர். சென்னை இராயப்பேட்டை, சாது அச்சுக்கூட உரிமையாளராகிய சைவத் திருவாளர் - திரு. வி. உலகநாத முதலியாரவர்கள், இம்மலரின் ஒவ்வொரு பக்கத்தின்கீழும் அரும்பொருள் மணிகளைப் பதிக்கும் தொண்டை மேற்கொண்டு அணி செய்ததோடு, இதனைத் திருத்தமாகவும், அழகாகவும் மிக விரைவில் அச்சிட்டு உதவினார்கள். திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தங்கள் கழகத்திலுள்ள பல போட்டோ பிளாக்குகளை அளித்துபகரித்தனர். மேற்படி கழக சென்னைக் கிளை நிலைய ஏஜண்டு சைவத் திருவாளர் வ. சுப்பையா பிள்ளையவர்களும், சைவ சித்தாந்த மகா சமாஜ அமைச்சர் சைவத் திருவாளர் ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்களும் இதனை அச்சிடுவதற்குப் பலவகைகளிலும் வேண்டும் துணை புரிந்தனர். இங்ஙனம் பலவாற்றானும் உதவிபுரிந்த பெரியார் அனைவர்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சைவ சித்தாந்த சபையார்,

தூத்துக்குடி.

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முன்னுரை ... | | ... iii |
| 2. | சபையின் வரலாறு ... | | ... vi |
| 3. | வாழ்த்து ... | திருவாளர்-பண்டிதமணி - கதிரேசன் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி. | ... xi |
| 4. | வாழ்த்துரை ... | ,, திரு. வி. கலியாணசுந்தரனார், "நவசக்தி" ஆசிரியர், சென்னை. | ... xii |
| 5. | பன்னிரு திருமுறைப்பாக்கள்... | ,, மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், பி. ஏ., மாஜி தாசில்தார், திருநெல்வேலி. | ... 1 |
| 6. | சைவ சித்தாந்தம் ... | ,, "ஞானசித்தி" | ... 4 |
| 7. | சைவசமயம் உலகப்பொதுச்சமயம் | ,, மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், பி. ஏ. மாஜி தாசில்தார், திருநெல்வேலி. | ... 6 |
| 8. | திருமுறை விளக்கம் ... | ,, C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள், B.A., F.M.U., வழக்கறிஞர், கோவை. | ... 14 |
| 9. | திருவாசகம் ... | ,, வித்வான் - மறை. திருநாவுக்கரசு அவர்கள், தமிழ்ப் பண்டிதர், கார்ப்பொரேஷன் ஹைஸ்கூல், நுங்கம்பாக்கம், சென்னை. | ... 23 |
| 10. | பெரியபுராண ஆராய்ச்சி ... | ,, அ. மு. சரவண முதலியாரவர்கள், தலைமைத் தமிழாசிரியர், போர்டுஹைஸ்கூல், லால்குடி | 29 |
| 11. | சுத்தாத்துவிதம் ... | ,, கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள், எம். ஏ., எம். எல்., தாகூர் விரிவுரையாளர், திருநெல்வேலி. | ... 39 |
| 12. | நாயன்மார் சரித்திரங்களும் கல்வெட்டுச் சாசனங்களும்... | ,, இராவ் சாகிப் - C. M. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள், பி. ஏ., பி. எல்., வழக்கறிஞர், கோவை. | ... 43 |
| 13. | அத்துவாக்கள் ... | ,, வ. மு. இரத்தினேசுவரையர் அவர்கள், தமிழ்ப் பண்டிதர், ஆவினிப்பட்டி. | ... 54 |
| 14. | தேவார அமைப்பு ... | ,, E. N. தணிகாசல முதலியார் அவர்கள், பி. ஏ., பி. எல்., வழக்கறிஞர், சென்னை. | ... 60 |
| 15. | தொகைநூற் சங்கப்புலவர்கள் அகராதி ... | ,, ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி. ஏ., பி. எல்., வழக்கறிஞர், சென்னை. | ... 65 |
| 16. | சத்தியும் சிவமும் ... | ஸ்ரீமதி ஈ. த. இராஜேஸ்வரி அம்மாள் அவர்கள், எம். ஏ., எல். டி., சென்னை. | ... 75 |
| 17. | பழந்தமிழ்நூற் சிவப்பண்பு ... | திருவாளர்-திருவள்ளுவரகம் - ப. இராமநாத பிள்ளை அவர்கள், தலைமையாசிரியர், அலர்மேலு பெண் கல்லூரி, வலம்புரி. | ... 80 |
| 18. | சித்தாந்தச் செந்நெறி அல்லது காட்டிக்காணும் பேரருட்டிறன் | ,, ஆசிரியர் - அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள், தோரமங்கலம், ஜலகண்டபுரம். | ... 93 |
| 19. | சிவாலய பூஜை விளக்கம் ... | ,, சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள், திருமயிலை. | 99 |
| 20. | சேக்கிழார் நூல்நயம் ... | ,, T. S. கந்தசாமி முதலியார் அவர்கள், பி. ஏ., சாத்தூர். | ... 108 |
| 21. | சச்சிதானந்தம் ... | ,, வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள், தூத்துக்குடி. | 117 |
| 22. | திரோதான சத்தி ... | ,, காருடை - சு. சூரியமூர்த்தி பிள்ளை அவர்கள். | 119 |
| 23. | சைவமாதர் சைவத்தை வளர்க்க வேண்டும் ... | ,, திருவரங்க - நீலாம்பிகையார், பாளையங் கோட்டை. | ... 123 |
| 24. | சைவசமயப் பாதுகாப்பு ... | ,, ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள், பி. ஏ., எல். டி., சென்னை நகராண்மைக் கழகக் கல்விப் பகுதித் தலைவர். | ... 124 |

உ

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த குரு துணை

---

### தூத்துக்குடி என்னும் திருமந்திர நகர்ச்

# சைவ சித்தாந்த சபையின் வரலாற்றுச் சுருக்கம்

மேலைத்தேயத் தத்துவ ஆராய்ச்சிப் புலவர்களாற் கடவுட் கொள்கைக்கு மாறாகப் புதிது புதிதாக வெளியிடப்பெறும் நூல்களைப் படித்தலாலும், புறச்சமயக் கொள்கைகள் புத்தகம் பத்திரிகைகள் வாயிலாகவும், சொற்பொழிவுகளின் மூலமாகவும் பரப்பப்படுவதாலும் நமது சைவ நன்மக்கள் நாஸ்திகக் கொள்கைகளினும், புறச்சமயக் கொள்கைகளினும் பற்றுடையராதலைக் கண்ட இந்நகரிலுள்ள சைவப் பிரபுக்களும், கல்விமான்களும் இவற்றை யொழித்து, நம்மவரைச் சைவசமயப் பற்றுடையராகச் செய்தற்கு ஒரு சைவ சபை இன்றியமையாது வேண்டற்பாலது என உறுதி செய்தனர். அங்ஙனமே கொல்லம் 1059-ம்௵ (கலி 4985) சுபானு வருடம் ஆவணித்திங்கள் 10-ம் நாள் (1883௵ ஆகஸ்டு௴ 25௳) நல்லோரையில் இச்சபை முதற்கண் "சைவப்பிரகாச சமாஜம்" என்னும் பெயரால் ஆ. ப. பச்சைப்பெருமாள் செட்டியாரவர்கள் சத்திரத்தில், எல்லாம் வல்ல சிவபெருமான் திருவருட்டுணையால் நிறுவப்பெற்றது. நூற்றுக்கணக்கான சைவமக்கள் உறுப்பினராகச் சேர்ந்தார்கள். இந்நகர் சரஸ்வதி ஆங்கில சுதேச பாஷைப் பாடசாலைத் (Sarasvathi Anglo-Vernacular School) தமிழாசிரியர் உயர்திரு. குமாரசுவாமி பிள்ளையவர்கள் தலைவராகவும், உயர்திரு. ஓ. ப. உலகநாத பிள்ளையவர்கள் காரியதரிசியாகவும் அமர்ந்து சமாஜக் காரியங்களைச் செவ்வனே நடாத்திவந்தார்கள். ஞாயிற்றுக்கிழமைதோறும் சொற்பொழிவுகள் செய்யப்பெற்றும், சைவ உண்மைகள் செறிந்த பல துண்டுப் பத்திரிகைகள் வெளியிடப்பெற்றும் வந்தன. புத்தக நிலையம் ஒன்று நிறுவப்பெற்றுப் பல புத்தகங்கள் தொகுக்கப்பெற்றன. சைவ நன்மக்கள் நாடோறுங் கூடி, சைவ புராணங்களும் சைவ சாத்திரங்களும் ஆராய்ச்சிசெய்து வந்தனர். அக்காலத்துச் சைவ வித்வான்கள் பலர் அடிக்கடி போந்து சைவ உண்மைகளைப் போதித்து வந்தார்கள். யாழ்ப்பாணம் சிவஸ்ரீ: சி. செந்திநாத ஐயரவர்கள் பலமுறை அரியசொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்கள். ஸ்ரீலஸ்ரீ சூளை சோமசுந்தர நாயகரவர்கள் போந்து மூன்று சொற்பொழிவுகள் ஆற்றினார்கள். அது காலை நாஸ்திகத்திலும் புறச்சமயக் கொள்கைகளிலும் ஈடுபட்டிருந்த பலர் சைவ சமயப் பற்றுடையராய்த் திகழ்ந்தனர். இனி, சமாஜ முக்கியஸ்தர்கள் பலர் இவ்வூர் மேலவூரில் வதிந்திருந்ததால் சமாஜக்காரியங்களைச் செவ்வனே நடைபெறச் செய்வதற்கு வசதியாக 1066-ம்௵ ஐப்பசித் திங்கள் 1௳ (1890-ம்௵ அக்டோபர்௴ 16௳) சமாஜம் தபசு மண்டபத்துக்கு மாற்றப்பட்டது. சில ஆண்டுகள் முனிசிபல் மானேஜர் உயர்திரு. நமசிவாயம் பிள்ளையவர்கள் தலைவராகவும், சிவாலய தருமகர்த்தர் உயர்திரு. ச. முத்தைய பிள்ளையவர்கள் காரியதரிசியாகவும், பின் சில ஆண்டுகள் வக்கீல் உயர்திரு T. S. கோபாலபிள்ளையவர்கள் தலைவராகவும், சபை நிறுவியாருள் ஒருவராகிய உயர்திரு. தெ. ச. சு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் காரியதரிசியாகவும், உயர்திரு. சங்கரமகாதேவு அவர்கள் உபகாரியதரிசியாகவும் அமர்ந்து சமாஜத் தொண்டுகளைச் செவ்வனே நடாத்திவந்தனர். இராய்பஹதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், B. A., B. L., ஸ்ரீமத் சபாபதிநாவலரவர்கள் முதலிய பெரியோர்கள் அந்நாட்களில் போந்து சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.



இனி, இரண்டாம் முறையாக நமது சமாஜத்துக்கு எழுந்தருளிய வைதீக சைவ சித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சூ. சோமசுந்தர நாயகரவர்கள் 1068-ம்௵ ஆடித் திங்கள் 9௳ (1893-ம்௵ ஜூலை௴ 23௳) கூடிய சமாஜக் கூட்டத்தில் சமாஜத்தினரின் சைவசித்தாந்த ஆராய்ச்சித் திறனை நோக்குங்கால் இச்சமாஜம் "சைவம்" என்னும் பொதுப் பெயரால் வழங்குவதைவிட சைவசித்தாந்தம் என்னும் சிறப்புப் பெயரால் வழங்குவதே தகுதியுடையதென மொழிந்து, அன்றுமுதல் இது "சைவ சித்தாந்த சபை" என்னும் பெயரால் வழங்கல்வேண்டும் என்று ஆணை தந்தார்கள்; அனைவரும் அதனை அன்புடன் ஒப்புக்கொண்டனர். அன்றுமுதல் "சைவ சித்தாந்த சபை" என்னும் பெயரால் இச்சபை விளங்கி வருகின்றது. சில நாட்கள் சபையில் தங்கி, அக்காலத்தில் சாமக்குளம் வேங்கடரமண தாசரென்ற ஸ்ரீ சுப்பிரமணிய சர்மா அவர்கள் ஈண்டுள்ளார்க்குச் சிவஞானபோதப் பொருள்களை விளக்கியுள்ளார்கள்.

இந்நகர் மேலவூர் வடக்குரதவீதியில், சைவ வேளாளர்களால், சமயாச்சாரியர்கள், அறுபான்மும்மை நாயன்மார்கள், சந்தானச்சாரியர்கள், முதலாயினோர் குருபூஜைகள் செய்வதற்காகவும், சைவசமய பரிபாலனஞ் செய்வதற்காகவும் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மடாலயம் என ஒரு மடாலயம் அமைக்கப்பெற்று, அம்மடாலயம் திருப்பணி செய்து முற்றுப் பெற்றபின் சைவவேளாளர்களின் தீர்மானப்படி 1072-ம்௵ ஏவிளம்பி௵ சித்திரைத்திங்கள் 15௳ (1897-ம்௵ ஏப்ரல்௴ 26௳) ஆகிய நன்னாளில் ஷை மடாலயத்தில் நமது சபை நிலைபேறுற நிறுவப்பெற்றது. உயர்திரு. சி. வ. சின்னக்கண்ணுப்பிள்ளையவர்கள் தலைவராகவும், ஷை மடத்து ஐயா உயர்திரு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் உபதலைவராகவும், உயர்திரு. தெ. ச. சு. சுப்பிரமணியபிள்ளையவர்கள் காரியதரிசியாகவும் அமர்ந்து சபையின் தொண்டுகளைச் செவ்வனே நடாத்தி வந்தார்கள். ஷை மடத்து ஐயா சுப்பிரமணிய பிள்ளையவர்கள் சைவ மாணவர்கட்குச் சித்தாந்த சாத்திரபாடங்களும், தமிழ் இலக்கண இலக்கியங்களும் கற்பித்து வந்தார்கள். வழக்கம்போல் ஞாயிற்றுக்கிழமைகளிலும், பிற விசேடகாலங்களிலும், சபையின் உறுப்பினர்களாலும், ஏனைய கல்விமான்களாலும், சொற்பொழிவுகள் 1079-ம்௵ வரை முறையே செய்யப்பெற்று வந்தன. அவ்வாண்டில், திருவாளர்கள் சிவ. நல்லபெருமாள் பிள்ளையவர்கள் தலைவர் & பொக்கிஷதாராகவும், பொ. மு. முத்தைய பிள்ளையவர்கள் உபதலைவராகவும், தி. திருஞானசம்பந்தமூர்த்தியா பிள்ளையவர்கள் உபகாரியதரிசியாகவும் நியமனஞ் செய்யப்பெற்றனர். அவ்வாண்டில் திருவாளர்கள் யாழ்ப்பாணம் வித்வான் சி. தாமோதரம் பிள்ளையவர்கள், சிதம்பரம், வசவலிங்க புராணிகரவர்கள், சீதாராம சாஸ்திரிகள், மதுரை வக்கீல் P. நாராயணய்யர் அவர்கள், சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர், நா. வேதாசலம் பிள்ளையவர்கள், தஞ்சை. வெ. குப்புசாமி ராஜு அவர்கள், பேட்டை த. ஆறுமுக நயினார் பிள்ளை அவர்கள் முதலிய அறிஞர்களால் சொற்பொழிவுகள் செய்யப்பெற்றன. சபையின் 20-ம் ஆண்டு நிறைவு விழா சிதம்பரம் வித்வான் வசவலிங்க புராணிகர் அவர்கள் தலைமையில் நடாத்தப்பெற்றது.

அவ்வாண்டிலேயே தமிழ் வேதபாராயண பாடசாலை ஆரம்பிக்கப் பெற்றது. திருவாரூர் ஸ்ரீலஸ்ரீ சட்டநாத தேசிகரவர்கள் ஆசிரியராக அமர்த்தப் பெற்றார்கள். சுமார் 30 மாணவர்கட்கு மேல் இப்பாடசாலையில் பயின்று வந்தார்கள். 1081-ம் ஆண்டில் தமிழ்வேத பாராயண பாடசாலை மாணவர்கள் திருச்செந்தூர் திருநெல்வேலி முதலிய தலங்களில் நடைபெற்ற பிரம்ம உத்சவங்கட்குச் சென்று தமிழ்வேத பாராயணஞ் செய்தனர். அதன் பின்னர்தான் இந்நாட்டில் உத்சவ காலங்களில் தேவாரகோஷ்டிகள் வரவழைக்கும் வழக்கம் ஏற்பட்டது. ஆசிரியர் ஸ்ரீ சட்டநாத தேசிகரவர்களுக்குப் பின்

அவர்களுடைய சகோதரர் ஸ்ரீ தியாகராஜ தேசிகரவர்களாலும் அதற்குப் பின் ஸ்ரீசங்கர மகாதேவு அவர்களாலும் இப்பாடசாலை தொடர்ந்து நடத்திவரப் பெற்றது.

1081-ம் ஆண்டு புரட்டாசிமீ 2உ (17-9-1905)யில் 21-வது ஆண்டு நிறைவு விழா, பாலவநத்தம் ஜமீன்தார் திரு. பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள் தலைமையில் சிறப்பாக நடாத்தப்பெற்றது.

இனி, 1082-ம்ஆண்டில் மடத்து ஐயா என்ற திரு. சுப்பிரமணிய பிள்ளையவர்களால், சபையின் நிலையமான திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் மடாலயம் தமக்கே சொந்தமென்றும், சைவசித்தாந்த சபைக்கு யாதொரு பாத்தியதையும் இல்லை என்றும், ஆதலின் சபையை மேற்படி மடாலயத்தினின்றும் அப்புறப்படுத்த வேண்டுமென்றும் தூத்துக்குடி சப்கோர்ட்டில் 1906ஹு 37-ம் நம்பராக ஓர் அசல் வழக்குத் தொடரப்பெற்றது. அந்த வழக்கு சுமார் மூன்று வருடங்கள் நடைபெற்று மேற்படி மடாலயத்தில் நமது சபைக்கு அதன் காரியங்களை எக்காலமும் நடாத்த உரிமை யுண்டென்று கோர்ட்டு மூலம் உறுதி செய்யப்பெற்றது.

1084-ம் ஆண்டில் சித்தாந்த சாத்திர பாடசாலை முறையாகத் தொடங்கப்பெற்று நாளது வரை நடாத்தப்பெற்று வருகின்றது. சைவசித்தாந்த சாத்திரங்களும், திருக்குறள் முதலிய நீதிநூல்களும் அதில் கற்பிக்கப்பெற்று வருகின்றன. உயர்திரு. சித்தாந்த ஆசிரியர் ந. சிவகுருநாத பிள்ளை யவர்கள் ஆசிரியராக அமர்ந்து இப்பாடசாலையைச் சிரத்தையாய் நடத்திவருகிறார்கள். அதில் பயின்ற மாணவர்கள் பலர் உளர்.

1085-ம் ஆண்டில் சபையின் 26-வது ஆண்டு நிறைவு விழா, சுவாமி விருதை சிவஞான யோகிகளின் தலைமையில் நடாத்தப்பெற்றது. இவ்வாண்டு முதல் ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ச்சியாகவே சபையின் தொண்டுகளும், ஆண்டு நிறைவு விழாக்களும் சிறப்பாக நடாத்தப்பெற்று வருகின்றன. சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 26-ஆம் ஆண்டு நிறைவு விழா, இச்சபையின் 48-ஆம் ஆண்டு நிறைவு விழாவுடன் சேர்த்து நடத்தப்பெற்றது. ஆண்டு விழாத் தலைவர்களின் பெயர்கள் இதனடியிற் காட்டப்பெற்றிருக்கின்றன.

திருவாளர்கள் :

26, மறைத்திருவன் வி. சிவஞான யோகிகள், கோவிற்பட்டி.

27/28, சுவாமி வேதாசலம் அவர்கள், பல்லாவரம்.

29, ஜெகமண்டலாதிபதி கோபண்ண மன்றாடியாரவர்கள், ஜமீன்தார், புரவிபாளையம்.

30, முதலியார் சபாரத்னம் அவர்கள், யாழ்ப்பாணம்.

31, K. சிதம்பரநாத முதலியார் அவர்கள், B. A. மிராசுதார், சீகாழி.

32, J. M. நல்லசாமிப் பிள்ளை அவர்கள், B. A.. B. L. மதுரை.

33, அட்டாவதானம், பூவை கலியாணசுந்தர யதீந்திரரவர்கள், சென்னை.

34, M. T. சுப்பிரமணிய முதலியாரவர்கள், உத்தமபாளையம் மிராசுதார், மதுரை.

35, K. சதாசிவ செட்டியாரவர்கள், B. A. சென்னை.

36, திவான்பஹதூர் ,சர். T. N. சிவஞானம் பிள்ளை அவர்கள், B.A. திருநெல்வேலி.

திருவாளர்கள் :

37, P. V. மாணிக்க நாயக்கரவர்கள், B. E. M. C. I., சென்னை.

38, K. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M. A., M. L., திருநெல்வேலி.

39/47, C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், B. A. கோயம்புத்தூர்.

40, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

41/45, திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், சென்னை.

42, வாலையானந்த சுவாமிகள் என்ற சச்சிதானந்த சிவாச்சாரியாரவர்கள், பஞ்சாக்கரபுரம், கொரடாச்சேரி.

43, மணி-திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், தமிழாசிரியர், சென்னை.

44/48, ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், B. A., L. T. சென்னை.

46, ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், B. A., B. L. சென்னை.

49, T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள், B. A., B. L. சென்னை.



தென்றமிழ் நாட்டிலுள்ள சைவ வித்வ சீலர்களிற் பெரும்பான்மையோர் ஆண்டு நிறைவுவிழாக் காலங்களிலும் ஏனைய காலங்களிலும் இவண் போந்து சொற்பொழிவுகள் ஆற்றி இருக்கின்றார்கள். ஸ்ரீமதிகள் அம்மணி அம்மையார் (புரவிபாளையம் ஜமீன்தாரணியார்), பண்டிதை - அசலாம்பிகை அம்மையார், பண்டிதை - ஆண்டாள் அம்மையார், பண்டிதை-கிருஷ்ணவேணி அம்மையார் முதலிய பெண்மணிகளும் போந்து, சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்கள். சைவப் பெண்மணிகளின் நலத்தின்பொருட்டு, சபையின் கிளையாகப் "பாகம் பிரியாள் மாதர் சங்கம்" என ஒன்று நிறுவப்பெற்று நடைபெற்று வருகின்றது.

இனி, இந்நகர் சிவாலயத்தில் அறுபான்மும்மை நாயன்மார்கள், சந்தானாச்சாரியார்களின் பிரதிஷ்டை, நமது சபையின் முயற்சியினாலேயே செய்யப்பெற்றது. ஆண்டுகள் தோறும் சைவ ஆச்சாரியரைக் கொண்டு ஆண், பெண் இருபாலருக்கும் சிவதீட்சை செய்விக்கப்பெற்று வருகின்றது. சமயாச்சாரியர், சந்தான ஆச்சாரியர் குரு பூஜா காலங்களில் அவ்வவர் புராணபடனமும், சபையின் நிலையமான திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் மடாலயத்தில் மகேசுவர பூசையும், சிவாலயத்தில் சிறப்பு வழிபாடும் செய்யப்பெற்று வருகின்றன.

புத்தக நிலையத்தில் சிவாகமங்கள், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், புராணங்கள், இலக்கண இலக்கியங்கள், நீதிநூல்கள் முதலிய 750 நூல்கள்வரை தொகுத்து வைக்கப்பெற்றிருக்கின்றன.

1093-ம் ஆண்டில் பெண்மக்களுக்குப் பொதுக்கல்வியுடன் சமயக்கல்வியும் கற்பித்தற்பொருட்டு, ஐந்தாவது வகுப்பு வரையிலுள்ளதாக அம்பலவாணர் பெண் பாடசாலை என்னும் பெயரால் ஒரு பாடசாலை நிறுவப்பெற்றது. இப்பாடசாலையின் பரிபாலனம் செவ்வனே நடைபெறுதற்கு ஒரு கழகம் நியமிக்கப்பெற்று அவர்கள் வசம் ஷை பாடசாலை ஒப்புவிக்கப்பெற்றது. அது அவர்களால் சில ஆண்டுகள் பரிபாலிக்கப்பட்டு வந்தது. பின்னர் அப்பாடசாலை திரு. மா. கிருஷ்ணபிள்ளை யவர்களின் பெயரால் அவர்கள் குடும்பத்தாரால் நடாத்தப்பெற்று வருகின்றது.

தலைவர் திருவாளர் சிவ. நல்லபெருமாள் பிள்ளையவர்கள் 1079-ம் ஆண்டு முதல் தலைவராகவும், திருவாளர்கள், தெ. ச. சு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், P. V. கணபதியப்ப பிள்ளை அவர்கள், B. A. B. L., S. குமாரசாமிப் பிள்ளை அவர்கள், B. A., M. சங்கரசுப்பிரமணிய பிள்ளை அவர்கள், B. A. B. L., முதலியவர்கள் முறையே துணைத்தலைவர்களாகவும், திருவாளர்கள், ஓ. ம. முத்துராமலிங்கம் பிள்ளையவர்கள், A. சிதம்பரம் பிள்ளை அவர்கள், A. R. சிதம்பரம் பிள்ளை அவர்கள், S. நாகப்பபிள்ளை அவர்கள், A. S. தெய்வநாயகம் பிள்ளை அவர்கள், T. பாண்டிப்பெருமாள் பிள்ளை அவர்கள், த. ச. வே. சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள், முறையே காரியதரிசிகளாகவு மிருந்து சபையின் காரியங்களைச் செவ்வனே நடாத்தி வந்திருக்கிறார்கள். இப்பொழுது திருவாளர்கள் M. A. S. முத்துப்பிள்ளையவர்கள், தெ. ச. சு. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் அமைச்சர்களாக அமர்ந்து சபையின் காரியங்களைச் செவ்வனே நடாத்தி வருகின்றார்கள்.

சபைக்குச் சட்டதிட்டங்கள் ஒழுங்காய் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஒவ்வோர் ஆண்டிலும் மகாசபை கூடி, நிறைவேற்றற்கழக உறுப்பினர்களும், தலைவர் அமைச்சர் முதலிய உத்தியோகஸ்தர்களும் தெரிந்தெடுக்கப்பெற்று அவர்களாலேயே காரியங்கள் செவ்வையாய் நடாத்தப்பெற்று வருகின்றன. சபையின் வரவு செலவு கணக்குகள் அமைச்சர்களால் ஒழுங்காக எழுதப்பெற்று, ஒவ்வோர் ஆண்டிலும் தணிக்கை செய்யப்பெற்று ஆண்டு நிறைவுப் பேரவைகளில் அச்சிட்டு வெளியிடப்பெற்று வருகின்றன.

சிவநின்மாலிய மான்மியம், திரிபதார்த்த சிந்தனை, சைவாநுட்டானக் கிரியாவிதி, பரார்த்த சிவபூஜாதிகார வினாவிடை, சைவக் கிரியாதிகார நிரூபணம், ஔவை வெண்பாப் பொருள் விளக்கம், பூப்பிள்ளை அட்டவணை, கீதார்த்ததீபிகாபாச நிரசனம், கந்தர் கலிவெண்பா, சர்வான்மாக்களும் முத்தியைச் சார்ந்தேதவிடும், சிவஞானசுவாமிகள் ஆனந்தக்களிப்பு, ஷை சுவாமிகள் சரித்திரம் (தமிழ்ஆங்கிலம்), சமயாச்சாரியர் சந்தானாச்சாரியர்

சரித்திரங்கள், திருஞானசம்பந்தர் இரட்டைமணிமாலை, சைவச்சிறப்பு முதலிய புத்தகங்களும், நூற்றுக்கணக்கான துண்டுப்பத்திரிகைகளும் இச்சபையிலிருந்து வெளியிடப்பெற்றிருக்கின்றன.

முடிவாகக் கூறுமிடத்துப் பல சைவ சபைகளும், சைவசித்தாந்த மகா சமாஜமும் தோன்றுவதற்கும், சைவசித்தாந்த உண்மைகள் பரவுவதற்கும் இச்சபையே முக்கிய காரணமாக வுள்ளது என்று கூறுதல் மிகையாகாது.

இச்சபைக்கு 1093-ம் ஆண்டு முதல் திருவாவடுதுறை ஆதீன கர்த்தர்கள் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் நூறு கொடுத்து உதவிபுரிந்து வருகின்றார்கள். இந்நகரிலும் கொழும்பு முதலிய வெளியூர்களிலுமுள்ள வர்த்தகர்கள், கனவான்கள் முதலியவர்களும் ஒவ்வோர் ஆண்டிலும் வேண்டும் பொருளுதவி புரிந்து சபையின் தொண்டுகள் இனிது நடைபெறும்படி செய்துவருகின்றார்கள். இந்நகர்ச் சைவப்பிரகாச அச்சியந்திரசாலை யதிபர்கள் ஷை அச்சியந்திரசாலை நிறுவப்பெற்ற 1892-ம் ௵ முதல் நாளிதுவரை சபையினின்றும் வெளியிடப்பெறும் புத்தகம் பத்திரிகை முதலியவைகளைக் காகிதமுள்பட இனாமாகவே அச்சிட்டு உதவி வருகின்றார்கள். உயர்திரு. தெ. ச. சு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் இச்சபை நிறுவிய காலம் தொடங்கி, தமது இறுதிக்காலம்வரை நாற்பது ஆண்டுகள் சபைக்கு உயிர்போல் அமர்ந்து பல்லாற்றானும் துணை புரிந்து வந்தார்கள். உயர்திரு. சித்தாந்த ஆசிரியர், ந. சிவகுருநாத பிள்ளையவர்களும் சபையின் போதகாசிரியரா யிருந்தலோடமையாது தமது இளம்பிராயந் தொடங்கி நாற்பத்தொரு ஆண்டுகளாகச் சபைக்கு உற்ற துணையாக அமர்ந்து எல்லாக் காரியங்களையும் சிரத்தையுடன் நடாத்தி வருகின்றார்கள்.

பொன்னார்மேனிக் கண்ணுதற் பெருமான் திருவருளால் இச்சபை எந்நாளும் நிலைபெற்றுச் சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்வதாக.

இவ்வரலாறு சபையிலுள்ள பல ஆதாரவுகளைக் கொண்டும் பெரியோர் வாய்மொழி கொண்டும் தெரிந்தவரை எழுதப்பெற்றது.

மேய்கண்ட தேவன் மெல்லடி வாழ்க.

இங்ஙனம் :

**தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையார்.**

# வாழ்த்து

மகிபாலன்பட்டி பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்

நேரிசையாசிரியப்பா

எந்நாட் டவர்க்கும் இறைவனும் முதல்வனைத்
தென்னா டுடைய சிவனெனக் கூறிய
மணிமொழி யதனால் அணியசீ ருரிமை
பாண்டிநா டாயஇப் பழம்பதிக் கென்ப
இத்திரு நாட்டின் இனியதண் டமிழும்
மெய்த்திருச் சைவமும் மிகுமணங் கமழச்
சந்தனப் பொதியின் மந்தமா ருதமும்
நந்தலில் பரவையின் அந்தண் காலும்
வந்தினி துலவ மக்கள்நல் லுயிரும்
உடலுமின் புறுதற் கிடனாய்த் திகழ்வது
திருமந் திரமெனச் செப்பும்இந் நகரே.
இத்திரு நகரின் மெய்த்தவச் சைவ
விழுக்குடிப் பிறந்த ஒழுக்கமிக் குடைய
வித்தக ருளச்செறு வித்திய பயனெனச்
சைவசித் தாந்தத் தனிப்பெருஞ் சபையினைக்
காண்டக நிறுவினர் ஆண்டைம் பதின்முன்
இப்பெருங் கழகம் இயற்றிய விழுப்பயன்
செப்புத லரிதே யொப்புரை எளிதே
மொழியுஞ் சைவமும் வழுவிலா உயிர்கள்
பெருநல மெய்தற் குரியஎன் பதூஉம்
அம்மொழி தமிழே அப்பெருஞ் சமயம்
செம்மைசால் சைவ சித்தாந் தம்மே
என்பதும் நம்மனோர்க் கேற்றஇவ் விரண்டு
முன்பல பிறப்பின் முயல்தவப் பேற்றாற்
கிடைத்தன என்பதும் அடுத்தஇக் கண்கொடு
துய்த்திறை யடிக்கண் நித்திய இன்பம்
பெறுதலே மக்கட் குறுதி என்பதும்
இன்னன பிறவும் எடுத்தெடுத் தினிது
பன்னிப் பன்னிப் பல்லாண் டாக
நலம்பல புரிந்தீண் டிலங்குமிக் கழகம்
அரன்திரு வருளால் ஐம்பதாம் ஆண்டு
நிரம்பப் பெற்றிந் நீணிலம் புகழப்
பொன்விழாக் கண்டு பொலிதரல் நன்றே
அணிவிழா இதுபோல் மணிவிழாப் பற்பல
கண்டுநங் கண்ணுத லருளால்,
மண்டிணி ஞாலத்து வாழ்கபல் லாண்டே.

# வா ழ் த் து ரை

திரு. வி. கலியாணசுந்தரனார்

ஸைசவம் சிவசம்பந்தம். சிவம் அன்பு. "அன்பே சிவம்"—**திருமூலர்.** "இன்பமே என்னுடை அன்பே" —**மாணிக்கவாசகர்.** அன்பாகிய சிவத்தின் நெறி சைவம் ஆகும்.

அன்பு நெறியாகிய சைவம், மன்பதைக்குப் பொதுவானது. அஃது ஒரு நாட்டார்க்கோ, ஒரு மொழியார்க்கோ, ஒரு நிறத்தார்க்கோ, ஒரு மதத்தார்க்கோ, ஓரினத்தார்க்கோ உரியதன்று. அஃது எல்லோர்க்கும் உரியது. எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் சிவம், ஒரு நாட்டில், ஒரு மொழியில், ஒரு நிறத்தில், ஒருமதத்தில், ஓரினத்தில் எங்ஙனங் கட்டுப்பட்டுக் கிடக்கும்? எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பது சிவமாதலால், எவ்வுயிரையும் தன்னுயிர்போல் கருதிப் பயன்கருதாப் பணிசெய்வது சிவநெறி நிற்பதற்கு அறிகுறியாம். "எல்லாரும் ஏத்தும் ஈசன்"; "உரைசேரும் எண்பத்து நான்குநூறாயிரமாம் யோனி பேதம், நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான் கோயில்—**ஞானசம்பந்தர்**; "எவ்வுயிரும் நீங்காதுறையும் இறைசிவன் என்று - எவ்வுயிர்க்கும் அன்பா யிரு"—**சைவ சமயநெறி.**

மன்பதைக்கே உரியதாயிருந்த சைவத்திற்கு நாளடைவில், நாடு, மொழி, சாதி, சம்பிரதாயம் முதலிய தளைகள் இடப்பட்டன. அதனால் சைவம் சிறைப்பட்டது என்று கூறல் மிகையாகாது. தளைகளை உடைத்துச் சிறையினின்றும் சைவத்தை விடுதலை செய்ய முன்னே சில அறிஞர் முயன்றனர்; இந்நாளிலுஞ் சில அறிஞர் முயன்றுவருகிறார்.

முயற்சி நேரியமுறையில் நடைபெறுதல்வேண்டும். மகாநாடுகளாலும், தீர்மானங்களாலும், பிற ஆரவாரங்களாலும் பெரும் பயன் விளைதல் அரிது. சைவ ஆக்கத்துக்குச் சிவனடியே சிந்திக்குந் திரு தேவை; சிவபாத விருதயர் திறமும், மங்கையர்க்கரசியார் மனமும், குலச்சிறையார் குணமும் தேவை.

சைவ வான்பயிர் ஓம்ப இந்நாளில் சில சபைகள் ஆங்காங்கே பணியாற்றி வருகின்றன. அவைகளுள் ஒன்றாய் - தொன்மையதாய் - விளங்குவது **தூத்துக்குடிச் சைவ சித்தாந்த** சபை. இச்சபை, இக்காலத்துக்கு இன்றியமையாத சில நற்றுறைகளில் இறங்கி ஓரோ வழி உழைத்து வந்திருக்கிறது; இப்பொழுது பொன்விழாக் கண்டு மகிழ்ச்சியுறுகிறது. இனி இச்சபை, இக்காலத்துக்குரிய அறத்துறைகளில் முற்றுந் தன் கருத்தைச் செலுத்தித் தொண்டாற்றிப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து, அன்புநெறி ஓம்ப, ஆலவாய் அண்ணல் அருள் பொழிவானாக.

தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபை வாழ்க; வாழ்க; நீடூழி வாழ்க.



# சித்தாந்தப் பொன் மலர்



உ

திருச்சிற்றம்பலம்

## பன்னிரு திருமுறைப் பாக்கள்

### தே வா ர ம்

**திருமுறை—க.**

ஈறாய்முத லொன்றாய்இரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான் இடம் வீழிம்மிழ லையே.

**(கருத்துரை)** கடவுள் உயிர்களோடும் உலகத்தோடும் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் உள்ள அத்துவித நிலையில் நிற்கின்றார்.

**திருமுறை—உ.**

மூத்தானை மூவுல குக்கொரு மூர்த்தியாய்க்
காத்தானைக் கனிந்தவ ரைக்கலந் தாளாக
ஆர்த்தானை அழகமர் வெண்ணியம் மான் தன்னை
ஏத்தாதார் என்செய்வார் ஏழையப் பேய்களே.

**(க - ரை)** இறைவனை வழிபட்டு அதனாற் பெறப்படும் பெரும்பயனை அடையாதிருக்கிற ஏழை மாந்தருடைய நிலை மிகப் பரிதபிக்கத்தக்கது.

**திருமுறை—ங.**

ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே.—**திருஞானசம்பந்தர்.**

**(க - ரை)** இறைவன், அவனது அருட் பேரொளியால் உள்ளத்தில் உணரப்படுவானன்றி தருக்க அளவைகளால் அறியப்படுவானல்லன்.

**திருமுறை—ச.**

இருள்தரு துன்பப் படல மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருள்தரு கண்ணிழந் துண்பொருள் நாடிப் புகலிழந்த

குருடருந் தம்மைப் பரவக் கொடுநர கக்குழிநின்
றருள்தரு கைகொடுத் தேற்றும்ஐ யாறன் அடித்தலமே.

**(க - ரை)** இறைவன், தன்னை மெய்அறிவு (பதிஞானம்) இல்லாமல் வழிபடும் எளிய மாந்தரையும் தனது திருவருளாற் காத்தருள்வன்.

**திருமுறை—௫.**

என்னில் யாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யானொரு வன்னுளன்
என்னுளே உயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே.

**(க - ரை)** ஒருவன், தனக்கு இனியனா யிருப்பதைப் பார்க்கிலும் இறைவன் அவனுக்கு இனியனாயிருக்கின்றான்.

**திருமுறை—௬.**

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில் தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில் உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில் அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.
—**திருநாவுக்கரசர்.**

**(க - ரை)** இறைவனைத் திரு ஐந்தெழுத்து ஓதியும், திருக்கோயிலுக்குச் சென்றும், திருநீறணிந்தும், பூக்களால் அருச்சித்தும் வழிபடாத மாந்தர், செத்துச் செத்துப்பிறந்து உலகிலுள்ள பெருந்துன்பத்துக்கு ஆளாகிக் கழிகின்றார்கள்.

**திருமுறை—௭.**

வஞ்சமற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலியைப்
பஞ்சிலச்சீ றடியாளைப் பாகம்வைத் துகந்தானை
மஞ்சுற்ற மணிமாட வன்பார்த்தான் பனங்காட்டூர்
நெஞ்சத் தெங்கள்பிரானை நினையாதார் நினைவென்னே.—**சுந்தரர்.**

**(க - ரை)** களவில்லாதவர்களுடைய மனதில் வீற்றிருக்கின்ற இறைவனைப்பற்றி, ஒருவன் தன் மனதில் நினைக்கும் தூய நினைவுகளே சிறந்த நினைவுகளாம்.

## திருவாசகம்

**திருமுறை—௮.**

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.—**மாணிக்கவாசகர்.**

**(க - ரை)** ஏ மனமே! நீ சிறிதுநேரம் நுகரப்பெறும் அற்பமான உலக இன்பத்தைவிட்டு, எப்பொழுதும் நிலையாயுள்ள பேரின்பம் தரவல்ல கூத்தப்பிரானை நினைத்தும், புகழ்ந்து பேசியும், வணங்கியும் வழிபடுவாயாக.

"ஒன்றி யிருந்து நினைமின்கள் உம்தமக்கு ஊனமில்லை"



## திருவிசைப்பா

**திருமுறை—௯.**

அண்டமோ ரணுவாம் பெருமைகொண் டணுவோர் அண்டமாஞ் சிறுமைகொண் டடியேன்
உண்டவூண் உனக்காம் வகையென துள்ளம் உள்கலந் தெழுபரஞ் சோதி
கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்லிற் குறுகலர் புரங்கள்மூன் றெரித்த
கண்டனே நீலகண்டனே கங்கைகொண்ட சோளேச் சரத்தானே.—**கருவூர்த்தேவர்.**

**(க - ரை)** பேருலகெங்கும் நிறைந்து விளங்கும் பேரொளிப் பேருருவனாயிருக்கிற சிவபெருமான், அணுவாம் சிறு உருக்கொண்டு உயிர்களுடைய உள்ளத்திற் கலந்து விளங்கும் பேரொளிப் பொருளாயுமிருக்கின்றான்.

## திருமந்திரம்

**திருமுறை—௧௦.**

இன்பமுந் துன்பமும் நாட்டா ரிடத்துள்ள
நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்
என்ப இறைநாடி நாடொறு நாட்டினின்
மன்பதை செப்பஞ் செயில்வையம் வாழுமே.—**திருமூலர்.**

**(க - ரை)** ஒரு நாட்டிலுள்ள பெருமக்களுக்கு உண்டாகும் இன்பதுன்பங்கள் அந்த நாட்டில் ஒவ்வொருவரும் செய்யும் நல்வினை தீவினைகள் சேர்ந்து விளைக்கும் மொத்தப் பயனாக உண்டாகின்றன. இனி, மக்கள் இறைவனைப் பத்தியோடு வழிபடும் செவ்வியமுறையில் ஒழுகுவார்களாயின் அந்நாடு இனிது வாழும்.

## ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்

**திருமுறை—௧௧.**

ஆறதே றுஞ்சடை யானருள் மேவ அவனியர்க்கு
வீறதே றுந்தமிழ் ழால்வழி கண்டவன் மென்கிளிமாந்
தேறல்கோ தித்தூறு சண்பகந் தாவிச் செழுங்கமுகின்
றூறதே றும்பொழிற் சண்பையர் காவலன் சம்பந்தனே.—**நம்பியாண்டார்நம்பி.**

**(க - ரை)** திருஞானசம்பந்த அடிகள் பாடியருளிய தேவார அருட்பாக்களை ஓதுதல், மாந்தர் சிவபெருமானது திருவருளை அடைந்து உய்தற்கு வழியாயிருக்கின்றது.

## பெரிய புராணம்

**திருமுறை—௧௨.**

வேத காரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதநெறி யறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே எனமொழிந்தார் எங்கள்பிரான் சம்பந்தர்.—**சேக்கிழார்.**

**(க - ரை)** சிவபெருமான் அருளிச்செய்த வைதீக சைவநெறியி லொழுகாத சமணர், புத்தர்களுடைய ஒழுக்கமானது மாந்தரைப் பழி பாவங்கட்கு உள்ளாக்கும் குற்றமுடையது.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B. A., சிந்துபூந்துறை.

"உழப்பின் வாரா உறுதிக ளுளவோ - கழப்பின் வாராக் கையற வுளவோ"

# சைவ சித்தாந்தம்

கடவுள் ஆன்மா மலம் கன்மம் மாயை என ஐந்து பதார்த்தங்கள் நித்தமாயுள்ளன வென்பது சைவ சித்தாந்தம்.

உலகந் தோன்றி நின்று அழியுங் காரியமாய் அசேதனமாயிருத்தலினாலும், ஆன்மா மலத்தினால் மறைப்புண்டு ஒன்றும் உணராது கிடந்தும், மாயா தனுகரணங்களைப் பெற்று ஏகதேசமாக அறிவு விளங்கியும் இவ்வாறு கேவல சகலப்படுதலாலும் இவ்விரண்டையும் இணைத்துக் காரியப்படுத்தும் ஒரு முதல்வன் இவற்றிற்கு வேறாக வேண்டப்படுவன். அவன் மலமாயா கன்மங்களை அடையாதவனாய், எவ்வகை உபாதிகளினுஞ் சாராதவனாய், ஞானானந்த வஸ்துவாய் விளங்கல் வேண்டும். அதனால் ஏனைப் பொருள்களினும் வேறாக முதல்வன் ஒருவனுளன் என்பது சித்திக்கும்.

இனி, மலகன்ம மாயைகளோடு கூடி ஐந்தவத்தைப்பட்டு இம்மை மறுமைகளிற் புக்கு உபாதியுறும் பொருள் ஒன்று, அம்முதல்வனின் வேறாக உண்டென்பது, ஐந்தவத்தைப்படுதல், உணர்த்த உணர்தல், சுகதுக்க மோகாதிகளில் அழுந்துதல் முதலிய இலக்கணங்களாற் பெறப் படுகின்றது. ஞானானந்த வஸ்துவாய் விளங்கும் முதல்வன்மேல் அக்குற்றங்களை ஏற்றுதல் ஒவ்வாமையான் அவ் வியல்புடைய ஆன்மா வென்பதொன்று உண்டென்பது சித்திக்கும். அதுபற்றியன்றே சாமவேதத்துள்ள ஒரு சாகைக் கண்ணதாகிய மைத்திராயணியோபநிடதம் "இனி எவன் சரீரமென்று சொல்லப்பட்டானோ அவனே பூதாத்துமாவென்றுஞ் சொல்லப்பட்டான். அவனுக்கு ஓராத்மாவுண்டு. அவன் தாமரை இலையின் நீர்போலுள்ளவன். அவன் பிரகிருதிகுணங்களாற் கட்டுண்டு தன்னிலைமாறி மூடனாய் இருக்கின்றான். மூடனாய்ப் போனபடியால் ஆத்மாவினிடத்தி லுள்ளவனும் பிரபுவும் பகவானுமாகிய பிரேரகனைக் காணவில்லை" என ஆன்மாவினியல்பினை எடுத்து விளக்கிற்று.

இதனால் வேதாந்த (உபநிடத) நூலினும் இவ்வுண்மை கொள்ளப்படுமென்பது போதரும்.

இனி, முதல்வனும் ஆன்மாவுமென இரண்டு பொருளுண்டென்னில் ஒரு மாங்கனி யிருக்குமிடத்தில் மற்றொரு மாங்கனியிருக்க இடம் பெறாவாறுபோல ஒன்றனுள்ளொன்று இருக்க இடம் பெறாவே யென்னில், அறியாது கூறினாய்; மாங்கனியிரண்டுந் தூலப்பொருள்களாதலால், ஒன்றிருக்குமிடத்து மற்றொன்றிருக்க இடம் பெறா; முதல்வனும் ஆன்மாவும் உருவுடைய தூல வஸ்துக்களன்று; அருவமாய்ச் சூக்குமமும் அதிசூக்குமமுமான பொருள்கள். அதனால் அவை ஒன்றினொன்று இருக்க இடம் பெறுதற்கு ஓராசங்கையுமில்லை. அது "உடலுயிர் கண் ணருக்கன் அறிவொளிபோற் பிறிவரு மத்துவிதமாகும்" நீர்மையதாம்.

இன்னும், இந்நிலை "விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல், மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" என்னும் தமிழ் வேதத்தானும்,

"திலேஷு தைலம் ததி நீவரைப்பி; ஆபஸ்ரோதஸ் வரணீஷு சாக்கிநி; எவமாத்மாதம் நிஜாயதே"

"தில்த்தின் கண்ணே தயிலம் போலவும், தயிரில் நெய் போலவும், பிரவாகத்தில் நீர் போலவும், அரணியில் அக்கினி போலவும் இவ்வான்மா ஆன்மாவினிடத்தில் உண்டாகின்றான்" என பிரமோபநிடதத்தும் சுவேதாசுவதரோப நிடதத்தும் விளங்கும் மந்திரத்தானும் தெளியப்படும்.

இன்னும் "முப்பொருளும் சமவியாபகமாயினும் நீரும் எண்ணெயும் போல ஒன்றற்கொன்று தூலசூக்குமங்களா மியல்புடைமையின் அதுபற்றி வியாப்பியமும் வியாபகமுமாய் நிற்பனவாம்" என்னுஞ் சுருதியும் ஐயநீக்கி இனிது தெளிவிக்கும்.

இவ்விடத்துப் பாசம் தூலமும், ஆன்மா சூக்குமமும், முதல்வன் அதிசூக்குமமுமாய்

"சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்"

நிற்றலின் வியாபக வியாப்பிய நிலைபெற்று நிற்றற்கு இழுக்கின்றுமென வுணர்க.

இங்ஙனம் வேதாந்த சித்தாந்தங்கள் முதல்வனும் உயிரும் அத்துவிதமாய் நிற்கு நிலையை ஒத்த கருத்தோடு விளக்கி நிற்றலால், இஃதறியாது உரைப்பன வெல்லாம் அறிவின்மையா லெழும் ஆசங்கைகளாம். இது நிற்க.

இனி, ஆன்மா சேதனப் பொருளாயினும் அதனது சிற்சத்தி தடைப்பட்டு ஒன்றினும் வியாபியாது நிற்றற்கு ஒரேது வேண்டப்படுதலின், அவ்வாறு செய்வது ஆணவமலமாம். அம்மல மறைப்பையே அஞ்ஞானமெனவும் அவித்தையெனவும் நூல்கள் ஓதும். இருளின்பாற்பட்ட கண், எவ்வாறு ஒன்றுஞ்செய்ய இயலாது அடங்கிநிற்குமோ அவ்வாறு ஆன்மா செயலற்று நிற்றல் ஆணவமலத்தால் நேர்ந்த தீங்கினாலாம்.

இவ்வுண்மை யுணர்வார்க்கு ஆணவமலமொன்றுண்டென்று புலனாம்.

இனி, ஆன்மாவினிடத்து மலமறைப்பினால் விருப்பு வெறுப்புக்கள் நிகழ, ஆன்மா யான் எனதென்னுஞ் செருக்கோடு பிறர்க்கு இதம் அஹிதம் வாயிலாக நல்வினை தீவினை செய்ய, கருத்துவகைபற்றி அவை ஆகாமியமாகும். பின்பு அவை சுவர்க்க நரகங்களிற் சென்று கட்டுண்டு சஞ்சிதமென்னும் பெயர் பெறும்; அவ்வினைப்பயனை அநுபவித்தற் கேற்ற உடம்பினையெடுத்து ஆன்மா அநுபவிக்கும் பொழுது அவை பிராரத்தமெனப்படும்.

இவ்வாறு ஆகாமிய சஞ்சித பிராரத்த நிலையுறும் பொழுது காரிய கன்மமெனவும், இவ்வேறுபாடு நோக்காது பொதுவகையான் நிற்கும்பொழுது காரணமாகிய மூலகன்மமெனவும் பெயர் பெற்றுக் கன்மம் இருபகுதிப்படு மென்பதும், இவற்றுள், ஆதியந்த முடைத்தாய்த் தோற்ற நாசங்களுக்கு இடனாய் நிற்பது காரியகன்மமும், அநாதியென்னும் வழக்கிற்கு இடனாய் நிற்பது காரணமாகிய மூலகன்மமுமா மென்பதும் ஆகம நூற்றுணிபாம். இதனாற் கன்மமென்பதொன் றுண்டென்பது துணியப்படும்.

இனி, மலமறைப்பின் வருந்திய உயிர், தனது சிற்சத்தியின் வியாபார பேதமாகிய இச்சா ஞானக்கிரியைகள் சீவித்த லேதுவாக, மாயாகாரிய தனுகரண புவனங்களை விரும்ப, அதனால், இருளிற் சிறிது நீக்கிக் கண்ணுக்கு ஏகதேச விளக்கந் தரும் விளக்கின் செயல்போல, அவ்விருப்பினால் வரும் நன்மை நோக்கி, முதல்வன் அநாதியாயுள்ள காரணமாயையைக் கலக்கி அதினின்று கலையாதி மண்ணந்தமான தத்துவங்களையும், அவற்றின் காரியமாகிய தனுகரண புவனங்களையும் ஆன்மாவுக்குக் கொடுப்பன். அவை கொண்டு ஆன்மா இச்சா ஞானக்கிரியைகள் ஏகதேசமாக சீவிக்கப்பெற்றுப் போகம் நுகர்ந்தும், மலபோதத்தால் இருவினை புரிந்தும் பிறப்பிறப்புகளிற் படுவன். இப்படிப் பிறந்திறக்குங் காலத்துத் திருவருள் காரணமாக நல்வினை மேற்பட, அவ்வினை காரணமாக சிவபுண்ணியந் தலைப்பட, அது காரணமாக இருவினை யொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் வந்தெய்த முதல்வன் அருளே வடிவாய் எழுந்தருளி ஞானத்தைக் கொடுத்து மலபந்தமொழித்து வீடெய்துவிப்பன். அந்நிலையில் ஆன்மா முதற் பொருளோடு அத்துவித முற்று நித்தியானந்த வாழ்வினை யுறுவன்.

இது சைவ சித்தாந்தத்தின் சங்கிரகவுரையாம்.

"ஞானசித்தி"

# சைவ சமயம் உலகப் பொதுச் சமயம்

மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B. A.

## I சொற்பொருள்

"சைவசமயம் உலகப் பொதுச் சமயம்" என்ற கட்டுரைப் பெயர், சைவ சமயம், உலகப் பொதுச் சமயம் என்னும் இரண்டு பெருஞ் சொற்றொடர்களாலாகியது. சைவசமயம் என்ற சொற்றொடர் சைவம் சமயம் என்னும் இரண்டுசொற்களாலாகியது. உலகப் பொதுச் சமயம் என்ற சொற்றொடர், உலகம், பொது, சமயம் என்னும் மூன்று சொற்களாலாகியது. இச்சொற்றொடர்களின் பொருள்களையும் சொற்றொடர்களில் அடங்கிய சொற்களின் பொருள்களையும் ஆராய்வாம்.

2. சைவம் சமயம் என்ற இரண்டு சொற்களும் சேருங்கால் நிலைமொழியிலுள்ள மகர ஒற்றுக்கெட்டுச் சைவசமயம் என ஆகியது. சிவத்தினுடைய தொடர்பு உடையது சைவம்; செய்யப்பட்ட நெறி சமயம். ஆகவே சைவ சமயம் என்பது சிவத்தினோடு உயிர்களைத் தொடர்பு படுத்தும் நெறியாகும். அதாவது மக்களுயிர்கள் சிவத்தை அடைதலைக் குறியாகக் கொண்டு அக்குறியை அடைதற்குச் செல்லும் நெறி சைவசமயமாகும்; ஒரு குறியை அடைதற்கு நெறியானது இன்றியமையாது வேண்டப்படுவதாகலின். சிவம் என்றசொல் மங்கலம் அல்லது நன்மை என்று பொருள்படும். உள்ளம், நா, மெய் முதலியவைகளால் உயிர்களின்பமடையுமாறு செய்யப்படுஞ் செயல்களெல்லாம் நன்மையாகும். உலக வாழ்வில் உயிர்களெல்லாம் இன்பத்தையே நாடுகின்றன; தேடுகின்றன; கூடுகின்றன. இவ்வாறு உயிர்களெல்லாம் இன்பத்தை வேட்கையால் நாடி அறிவாலே தேடிச் செயலாலே கூடுகின்ற இயல்பானது இன்பப் பொருளாகிய சிவத்தை அடையச் செய்கின்ற இயல்பன்றிப் பிறிதன்று. இங்ஙனம் உயிர்களெல்லாம் இன்பத்தை அடைதற்கு நிலைக்களனுயுள்ள பொருள் சிவமேயாகும். சிவத்தினுடைய தொடர்பின்றி எந்த உயிரும் எவ்வகையான இன்பத்தையும் அடைதல் முடியாது. மக்கள் உயிர்கள் இத்தகைய சிவப்பொருளை அடையச் செய்யும் நெறி சைவ சமயமாகும்.

3. உலகப் பொதுச் சமயம் என்ற சொற்றொடர், உலகம் - பொது - சமயம் என்னும் மூன்று சொற்களாலாயது. உலகம் என்ற சொல் இங்கே உலகில் வாழும் மக்களைக் குறிக்கிறது; விலங்கு முதலிய ஏனைய உயிர்களுக்குச்சமயம் வேண்டப்படுவதன்றாகலின். எந்தப் பொருள், மக்கள் பலர் வழங்குவதாயிருக்குமோ, அந்தப் பொருள் அப்பலருக்கும் பொதுவாகும். சமயம் என்ற சொல் நெறி என்று பொருள்படும் என்பது முன்னே கூறப்பட்டது. உலகம்+பொது+சமயம் என்ற மூன்று சொற்களும் ஒன்றோடொன்று சேரும்பொழுது புணர்ச்சி இலக்கண முறைப்படி உலகம் என்ற சொல்லின் ஈற்றிலுள்ள மகர வொற்றுக்கெட்டும், பொது என்ற சொல்லின் முதலிலுள்ள பகர ஒற்று இரட்டித்தும், பொது என்ற சொல்லுக்கும் சமயம் என்ற சொல்லுக்கும் இடையில் சகர ஒற்றுத் தோன்றியும் உலகப் பொதுச் சமயம் என்றாகியது. உலகப் பொதுச் சமயம் என்ற சொற்றொடர் உலகிலுள்ள பலதர அறிவினையுடைய மக்களுக்கு அவரவர் நாடித் தேடுகின்ற இன்பநிலையைக் கூடுதற்கு வழிகாட்டும் பொதுநெறி என்று பொருள்படும்.

4. சைவ சமயம் உலகப் பொதுச்சமயம் என்பது, சைவசமயம் உலகிற்குப் பொதுவாயுள்ள சமயம் என விரியும். அதாவது சைவசமயமானது உலகில் வாழ்கிற எல்லா மக்களுக்கும் அவரவர் அறிவு நிலைக்குத் தக்கவாறு இன்பத்தை நாடித் தேடி அடைதற்கு வழிகாட்டும் பொதுச் சமயமாயுள்ளது. சைவ சமயமானது எங்ஙனம் எல்லா மக்களுக்கும் வழி காட்டும் பொதுச் சமய மாயுள்ளது என்பது இக்கட்டுரையில் விளக்கிக் கூறப்படும்.

5. சைவசமயம் உலகப் பொதுச் சமயம் என்பது அச்சமய நூல்களிற் கூறப்படும்

" 'பவனமாய்ச் சோடையாய்' என்ற பத்துப் பாட்டும் சிவன்தாளடைவோர்க்குத் தெப்பம்"



பதி பசு பாசம் (கடவுள் உயிர் உலகம்) என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களாலும், பசு பாசத் தடையை நீக்கிப் பதியைக் கூடிப் பேரின்பப்பேறு அடைதற்கு அறியப்படவேண்டிய தத்துவ அமைப்பு, தத்துவ இயக்கம் முதலிய தத்துவ உண்மைகளாலும், இம்முறைமைகளைப் பின்பற்றி ஒழுகிச் சுவாநுபூதி நிலை அடைந்த சீவன் முத்தர்களுடைய தன்மைகளாலும் நன்கு தெரியவரும். இவற்றை எல்லாம் விரித்துக் கூறி, கட்டுரைப் பொருளை விளக்க, இச்சுருங்கிய கட்டுரை இடந்தராது ஆதலின் அவை சுருங்கிய அளவில் இங்கே குறிப்பிட்டுக் கூறப்படும்.

## II சைவ சமயச் சிறப்பு இலக்கணங்கள்

6. ஏனைய சமயங்களிற் கூறப்படாதனவாய்ச் சைவசமயம் ஒன்றினுக்கே சிறப்பாக உரியனவாயுள்ள இலக்கணங்கள் பல உள. அச்சிறப்பு இலக்கணங்கள் சைவ சமயத்துக்கு ஏனைய சமயங்களின் தலைமைப் பதவியை அளித்து ஏனைய சமயிகளை எல்லாம் சைவ சமய நிலையை அடைதற்கு ஏறிவரும் சோபானப் படிகளாக அமையும்படி செய்கின்றன. சைவ சமயம் உலகிலுள்ள ஏனைய சமயங்களுக்குத் தலைமைச் சமயம் என்பதனால் சைவ சமயக் கடவுள் ஏனைய சமயங்களைப் பின்பற்றி ஒழுகும் மக்களிடத்தில் பேரன்பும் பேரறிவும் பேராற்றலுமுடைய முழுமுதற் கடவுளாய் அவ்வச் சமயக்கடவுளரை அதிட்டித்து நின்று அவர்கள் செய்யும் வினைக்குத் தக்கபடி நற்பயன் விளைவிக்கின்றான் என்பது போதரும். சைவ சமயத்துக்கு உரிய பல சிறப்பிலக்கணங்களில் கட்டுரைப்பொருள் விளக்கத்துக்கு வேண்டிய அளவு சிலமாத்திரம் இங்கே கூறப்படும்.

## III கடவுளுடைய பொது இயல் சிறப்பு இயல்கள்

7. சைவ சமயமானது தனது சிறப்பு இலக்கணங்களிலொன்றாகக் கடவுளுக்குப் பொது இயல் சிறப்பு இயல் என்ற இரண்டு இலக்கணங்கள் கூறுகின்றது. பொது இயல் தடத்த இலக்கணம் என்றும், சிறப்பு இயல் தன்னியல் அல்லது உண்மை இயல் அல்லது சொரூப இலக்கணம் என்றும் கூறப்படும். சுருங்கக் கூறின் உயிர்கள்மேல் வைத்த பேரிரக்கத்தினால் அவைகளுக்குப் படைப்பு முதலிய ஐந்தொழில்களியற்றி அருள் செய்யும் பொருட்டுக் கடவுள் உயிர்களோடும், உலகத்தோடுஞ் சேர்ந்து நிற்கும் நிலை அவனுடைய பொது இயலாகும். உயிர் உலகம் என்னும் ஒன்றனையும் சாராது, முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து கடவுள் தனித்து நிற்கிற நிலை அவனுடைய சிறப்பு இயலாகும். கடவுள், சிறப்பு இயல் நிலையில் சிவன் என்றும், பொது இயல் நிலையில் சத்தி என்றும் கூறப்படுவன். சிவனும் சத்தியும் பிரிக்க முடியாத தாதான்மியப் பொருள்கள். சிவனின்றிச் சத்தியில்லை; சத்தியின்றிச் சிவனில்லை. சிவன் ஒருவனே உலகிற்கு முழுமுதற் கடவுள். அயன்மால் உருத்திரன் முதலிய மூர்த்திகளெல்லாம் சத்தியின் தொழில் வேறுபாடு பற்றிக் கொள்ளப்படும் மூர்த்திகள். சைவ சமயமானது நிலமுதல் நாதமீறாக முப்பத்தாறு தத்துவங்களைக் கூறுதலினாலும், சைவ சமயங் கூறுகிற முத்திநிலை அத்தத்துவங்களையெல்லாம் கடந்த நிலையாதலானும், சைவ சமயக் கடவுளாகிய சிவன் தத்துவங்களெல்லாவற்றையுங் கடந்த அதீத நிலையிலுள்ளவனாதலினாலும் சைவசமயத்தில் சிறப்புஇயல் பொதுஇயல் என்னும் பாகுபாடு கூறப்பட்டுள்ளது. ஏனைய சமயங்களிலெந்தச் சமயமும் இருபத்தினாலு தத்துவங்களுக்கு மேற் கூறாததாலும், அச்சமயக் கடவுளருடைய நிலையும் சைவசமயத்தின் முப்பத்தாறு தத்துவங்களுக்குக் கீழ்ப்பட்ட நிலையதாதலாலும் அச்சமயங்களில் கடவுளுக்குச் சிறப்பு இயல் பொதுஇயல் என்ற பாகுபாடு கூறப்படவில்லை. மேலும் ஏனைய சமயங்கள் மாயா தத்துவங்களின் அமைப்புகளையும் அவைகளின் இயக்கத்தையும் அறியாமையினாலும், அவைகளில் ஒவ்வொன்றும் தன் சமயமே பெரிது என்றும், பிற சமயத்திலுள்ளவர் கடவுளுடைய அருளுக்கு ஆளாகாமல் நரகுக்கு ஆளாவார் என்றும் கூறிப் பிணங்குகின்றன. மாயா தத்துவங்களின் இயற்கை அமைப்புகளையும் இயக்கத்தையும் நன்கு அறிந்த சைவ சமயமானது உலகிலுள்ள பலவேறு அறிவு நிலையிலுள்ள மாக்

" முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள் - அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்"

தருக்கு அவரவர் அறிவு நிலைக்கு ஏற்ற தத்துவங்களில் வைத்து அமைக்கப்பட்டிருக்கிற பலவேறு சமயங்கள் வேண்டப்படுவன என்றும் அப் பல்வேறு சமயங்களும் கூறுகிற கடவுளிடத்தும் வியாபகமாயிருக்கிற சிவன் அக்கடவுளரை அதிட்டித்து நின்று அவைகளைப் பின்பற்றி உண்மையில் ஒழுகும் பல்வேறு மாந்தருக்கும் அருள் செய்கின்றான் என்றும் கூறுகின்றது. ஆதலினால் சைவசமயமானது ஏனைய சமயங்களை எல்லாம் தனது இளைய சகோதர சமயங்களாகக் கொள்ளுதலன்றி அவைகளுடன் சிறிதும் பிணங்குவதில்லை. உலகிற் பல சமயங்களைப் பின்பற்றி ஒழுகும், மாந்தர் ஒருவருக்கொருவரிணங்கி ஒழுகுதலுக்கு வேண்டப்படும் சமயப் பொறுமையானது அதனிடமியல்பாக அமைந்துளது. கடவுள், உயிர் என்னும் இரண்டு பொருள்களுமில்லை என்றும், உலகம் ஒன்றே நிலையான பொருள் என்றும் கூறும் சாருவாக சமயத்தையும் கூட, அது கீழான அறிவு நிலையைக் குறிக்கிற ஒரு சமயமாக வைத்துக் கூறுகிறது. இவ்வாறே சில சமயங்கள் உயிர், உலகம்என்ற இரண்டு பொருள்கள் உள என்றும், சில சமயங்கள் கடவுள் உயிர் என்ற இரண்டு பொருள்கள் உள என்றும் ஸ்மார்த்த ஏகான்மவாத சமயம் கடவுள் ஒருவரே உள்பொருள் என்றும் பலவாறாகக் கூறுகின்றன. சைவசமயம் ஒன்று மட்டுமே முப்பொருள்களையும், முப்பொருள்களின் முழு இலக்கணங்களையுங் கூறி, மலத்தாற் கட்டுப்பட்ட நிலையிலுள்ள உயிர்களெல்லாம் உலக வாழ்வினால், மலம் சிறிதும் அநாதியே இல்லாதவனாகிய கடவுளை அடைந்து தத்துவங்களெல்லாவற்றையுங் கடந்த பரமுத்திப் பேரின்பம் அடைதற்கு உரியவைகள் என்றும் கூறுகின்றன. உலகிலுள்ள பல பேரரசர்களுக்கும் பல சிற்றரசர்களுக்கும் பெருந் தலைமை பூண்டு உலக முழுவதையும் ஒரு வெண்கொற்றக் குடையின் கீழ்வைத்து ஆளுஞ் சக்கரவர்த்தி ஒருவனே தான் நேராய்ஆளும் குடிகளிடத்திலும் அப்பேரரசர் சிற்றரசர்களின் ஆட்சியில் வாழுங் குடிகளிடத்திலும் தண்ணளி பூண்டு அவர்களுக்குத் தீங்கு வாராமற் காத்து இன்பமளிக்க வல்லனாயிருத்தல்போல, தலைமைச் சைவசமயக் கடவுளொருவனே சைவசமயிகளுக்கும் ஏனைய சமயிகளுக்கும் அவரவர் அறிவு நிலைக்குத் தக்கவாறு இன்ப வகைகளை அறிந்து அளிக்கவல்ல அருளும் அறிவு மாற்றலுமுடைய முழுமுதற் கடவுளாயிருக்கின்றான். சாருவாக சமயமுள்ளிட்ட உலகிலுள்ள பல்வேறு சமயங்களும் உலகில் இயல்பாக அமைந்துள்ள பலவேறு பருமை நுண்மைகளை உடைய பலவேறு தத்துவங்களைப் பற்றியுள்ளதா யிருத்தலாலும், அப் பலவேறு சமயங்கள் கூறுகிற பலவேறு உண்மைகளெல்லாம் அந்த அந்தத் தத்துவங்களில் ஏகதேசப்பட்டு விளங்குகிற அருட் பேரொளி விளக்கத்தினால் அறியப்படுதலாலும், அவ்வருட் பேரொளியின் அபின்னமாயுள்ள சைவசமயக் கடவுள் எல்லாத் தத்துவங்களுக்கும் அப்பாலுள்ள நிலையன் ஆதலாலும் அத்தகைய கடவுளைக் கூறும் சைவசமயமானது எல்லாச் சமயங்களுக்கும் பொதுச்சமயமாயுள்ளது என்பது அறிஞர்களுக்கு நன்கு விளங்கும். இவ்வாறு எல்லாச் சமயங்களுக்கும் மேலான சமயம் ஒன்றே ஏனைய சமயங்களுக்கும் பொதுச் சமயமாயிருத்தலன்றி அதற்கு ஒருபடி கீழுள்ள சமயமும் பொதுச்சமயமா யிருத்தல் முடியாது.

## IV ஆணவ மலத்தினது உண்மை

8. சைவசமயத்தினது இரண்டாவது சிறப்பு இலக்கணமாக இங்கே கூறப்படுவது ஆணவமலத்தினது உண்மை. சுத்தாத்துவித சைவசமயமும், அதனைப் போன்று முப்பொருள்களையுங் கூறுகின்ற அகச்சமயங்களின் பாற்பட்ட சைவசமயங்களும் ஆணவமலத்தினது உண்மையையும் அதனை நீக்கும் வழிகளையும் கூறுகின்றன. ஏனைய சமயங்கள் ஆணவம் என்ற ஒரு பொருளில்லை என்று கூறுகின்றன. ஒரு வினையைச் செய்து முடிக்கக் கருதுமொருவன் அவ்வினையைச் செய்து முடித்தற்கு நேரிட்டிருக்குந் தடைகளையும் அத்தடைகளை நீக்குதற்கு வேண்டிய வழிகளையும் முன்னே அறிந்தாலொழிய அதனைச் செய்து முடித்தற்கு வல்லுநனல்லாதவனாயிருத்தல் போல, உலகில் வாழும் மாந்தர் தாங்கள் வாழும் உலகவாழ்வின் பயனாக அடையப்பெறும்





பேரின்பத்துக்குத் தடையாயுள்ளது ஆணவமலம் என்றும், அத்தடையை நீக்குதற்குக் கூறப்பட்ட வழிகள் இன்ன என்றும் அறியாமலிருந்தால் உலகவாழ்வின் பயனை அடைதல் முடியாது. மாந்தர் பேரின்பமடைதற்குத் தெளிவாய் அறிய வேண்டிய அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, வெகுளி ஆகிய பஞ்சக்கிலேச முதலிய பல தத்துவ உண்மைகள் ஆணவமலத்தினது உண்மையினைப் பொறுத்திருக்கின்றன. அவைகளுக்கு மூலகாரணமான ஆணவமலத்தினது உண்மை யறிந்தாலன்றி அத்தத்துவ உண்மைகள் நன்கு விளங்கா. ஆணவமலத்தின் உண்மையை அறியாத சமயங்கள், உயிர்களுக்கு மாயாதத்துவங்களாலாகிய உலகவாழ்வு வந்த காரணமும், வினை வந்த காரணமும், வினை நீங்கும் வழியும், பல்வேறு வகைப்பட்டனவாய் உயிர்களின் அறிவு விளங்குதற்குக் காரணமும், நன்கு அறிய மாட்டா. உலகிலுள்ள பலசமயங்கள் ஆணவமலத்தினது உண்மையை அறியாமலிருப்பதனாலேதான், அவை சைவசமயத்தைப் போன்று செயல்முறைச் சமயம் (Practical religion) ஆக அமையாமல் வெறுங் கொள்கைச் சமயங்கள் (mere theoretical religions) ஆக அமைந்திருக்கின்றன. செயல்முறைச் சமயமாயிருத்தற்கு வேண்டப்படும் வினைச்சட்ட உண்மை, உயிர்வளர்ச்சி உண்மை, பல பிறப்பு உண்மை முதலிய உண்மைகள் சைவசமயத்திற் கூறப்பட்டிருத்தல் போல அக்கொள்கைச் சமயங்களிற் கூறப்படவில்லை. அக்கொள்கைச் சமயங்களைப் பின்பற்றி ஒழுகும் மாந்தர் எல்லாரும் சைவசமயத்தினது உண்மைகளை அறிந்தபின்தான் மேலான உண்மைகளை அறிந்து அவைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்து பெரும் பயன் அடைகிறவர்களா யிருக்கிறார்கள். சைவசமய உண்மைகளை அறிந்து அநுபவத்தில் உணர்ந்தாலன்றி அவர்கள் பேரின்பப் பேறு அடைதற்கு வழியில்லை.

## V அத்துவித உண்மை

9. மூன்றாவது சிறப்பு இலக்கணமாகக் கூறப்படுவது அத்துவித உண்மை. அத்துவித உண்மை என்பது கடவுளுக்கும் உயிர்களுக்கு மியல்பாயமைந்துள்ள பிரிவில்லாத தொடர்பு ஆகும். மாந்தர், தங்களுக்குங் கடவுளுக்கு மியல்பாக வுள்ள அத்துவிதத் தொடர்பை அறியாமல் கடவுளையடைந்து பேரின்பம் பெறுதல் முடியாது. அத்தகைய அத்துவித உண்மை யானது ஸ்மார்த்தம், மாத்துவம், வைணவம், சைவம் ஆகிய இந்து சமயப் பகுதிகளினன்றி உலகிலுள்ள ஏனைய சமயங்களிற் கூறப்படவில்லை. இந்து சமயப்பகுதிகளிலுள்ள ஒவ்வொரு சமயமும், சைவசமயத்தில் கட்டு (பெத்த) நிலையில் உயிர்களுக்குங் கடவுளுக்கும் உளதாகக் கூறப்பட்ட அபேதம், பேதம், பேதாபேதம் என்னும் மூன்று நிலைகளில் ஒவ்வொரு நிலையையே கூறுகின்றது. ஸ்மார்த்தம் அபேத நிலையையும் மாத்துவம் பேத நிலையையும் வைணவம் பேதாபேத நிலையையும் கூறுகின்றன. இம் மூன்று சமயங்களும் இவ்வாறு கூறுகிற மூன்று நிலைகளும் சேர்ந்து சைவசமயம் கட்டு (பெத்த) நிலையில் கூறுகிற அத்துவித நிலைக்கு ஈடாகாமலும், அவைகளில் ஸ்மார்த்தம் கூறுகிற அபேத நிலை சைவசமயம் கூறுகிற அபேத நிலைக்கு ஈடாகாமலும், மாத்துவம் கூறுகிற பேதநிலை சைவசமயம் கூறுகிற பேதநிலைக்கு ஈடாகாமலும், வைணவம் கூறுகிற பேதாபேதநிலை சைவசமயம் கூறுகிற பேதாபேத நிலைக்கு ஈடாகாமலுமிருக்கின்றன. சைவசமயம் மூன்று நிலைகளையும் விளக்கக் கூறுகிற உண்மைகள் வேறு; மூன்று சமயங்களும் தத்தம் அத்துவித நிலையை விளக்கக் கூறுகிற உவமைகள் வேறு. சைவசித்தாந்தநூல்கள் கூறியபடி அவைகளைஎல்லாம் நான் இங்கே விளக்கிக் கூற இடமில்லை. ஸ்மார்த்த கேவலாத்துவிதிகளும், வைணவ விசிட்டாத்துவிதிகளும் “ அத்துவிதம் ” என்ற வடமொழிச் சொல்லின் முதலிலுள்ள நகரம் திரிந்த அகரத்துக்கு இன்மைப்பொருள் கொண்டு கடவுளும் ஆன்மாவும் ஒருபொருள் எனக்கூறுவர். மாத்துவ துவிதிகள் அந்த அகரத்துக்கு மறுதலைப் பொருள் கொண்டு கடவுளும் ஆன்மாவும் வேறு வேறாகப் பிரிந்திருக்கிற இரண்டு பொருள்கள் எனக் கூறுவர். சைவ சமயமோ எண்ணுப் பெயர் முன் வரும் அகரம் அன்மைப் பொருள்

மாத்திரம் கொள்ளும் என்னும் வடமொழி இலக்கிய வழக்குப்படி அந்த அகரத்துக்கு அன்மைப் பொருள்கொண்டு உயிரினுடைய கட்டு நிலைக்குக் கூறுகிற அபேதம், பேதம், பேதாபேதம் என்ற மூன்று அத்துவித நிலைகளையும் விளக்குதல் அன்றி உயிரினுடைய முத்தி நிலையில் அம்மூன்று அத்துவித நிலைகளும் பிரித்தறிய வாராது பொதுமையில் நிற்கிற தன்மையுங் கூறுகின்றது. உயிருக்கும் கடவுளுக்கு மியல்பாய் அமைந்துள்ள அத்துவித உண்மையைப் பொறுத்தே 'தத்துவமசி' என்ற வேதாந்த மகா வாக்கியத்தின் கருத்தும், 'சிவத்துவமசி' என்ற சித்தாந்த மகா வாக்கியத்தின் கருத்தும், சிவோகம்பாவனைக் கருத்தும், அஞ்செழுத்துண்மையும் ஓங்கார உண்மையும் எட்டு, பன்னிரண்டு, பதினாறு கலைகளோடு கூடிய பிராசாத மந்திரங்களின் உண்மையும், ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மை முதலிய பல தத்துவ உண்மைகளின் கருத்தும், பதமுத்தி பரமுத்திகளின் நிலைகளும் விளங்கக்கூடியவைகளா யிருக்கின்றன. ஆதலின் சைவசமய அத்துவித உண்மையை அறியாத சமயிகளும், அதனை ஏகதேசப்பட்ட நிலையில் அறிகிற ஸ்மார்த்த மாத்துவ வைணவ சமயிகளும், சைவசமய உண்மைகளை அறிந்து அவைகளைச் செயல் முறையில் அநுசந்தானம் செய்து பழகிச் சுவாநுபூதிமான்களாகி, சைவசமயம் கூறுகிற உயர்ந்த பரமுத்தி நிலையை அடையவேண்டியவர்களாயு மிருக்கிறார்கள்.

## VI வேட்கை அறிவு செயல்களின் தன்மை

10. சைவ சமயத்துக்கு நான்காவது சிறப்பு இலக்கணமாக இங்கே கூறப்படுவது உயிர்களிடத்தில் இயல்பாயுள்ள வேட்கை (இச்சை) அறிவு (ஞானம்) செயல் (கிரியை) களின் தன்மை. ஆன்மாவின் வேட்கை அறிவு செயல்களின் விளக்கம் ஆணவ மலத்தினால் அநாதியே தடைப்பட்டிருத்தலால் அவ்வேட்கை அறிவு செயல்கள் அம்மல மறைப்பினின்றும் நீங்கி விளங்கித் திருந்தும் வண்ணம் கடவுள் ஆன்மாவைத் தனுகரண புவன போகங்களுடன் சேர்த்து உலகில் வாழும்படி செய்கின்றான். கடவுள், ஆன்மாவின் வேட்கை அறிவு செயல்கள் ஏகதேசத்தில் மலமறைப்பினின்று நீங்கி விளங்கித் திருந்துதற்குப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய தொழில்களையும் மலபரிபாக மடைந்து பக்குவப்பட்ட ஆன்மாவுக்கு மறைப்பை நீக்கி அருளல் (அநுக்கிரகம்) ஆகிய தொழிலையும் தூலமாயும் சூக்குமமாயும் அதிசூக்குமமாயும் இடைவிடாது செய்து வருகின்றான். உலகநெறியில் மாந்தர் முதற்கண் ஐம்பொறிகள் அந்தக்கரணங்கள் முதலிய கருவிகளாலுண்டாகும் அறிவினால் நல்வினை தீவினைகளைச் செய்து அவைகளின் பயன்களாகிய இன்ப துன்பங்களை நுகர்ந்து பெறும் உலக அநுபவத்தால் தங்கள் வேட்கை அறிவு செயல்கள் மலமறைப்பினின்று நீங்கி விளங்கிச் சிறிது திருத்தமடையப் பெறுகின்றார்கள். பின் அவர்கள் கருவி அறிவின் துணையால் அறநெறியில் நின்று தீவினையை விலக்கி நல்வினையைச் செய்யச் செய்ய அவர்களுடைய வேட்கை அறிவு செயல்கள் மேலும் மேலும் மலமறைப்பினின்று நீங்கி விளங்கித்திருத்தமடைகின்றன. பின் வீட்டு நெறியில் அவர்கள் நல்வினை தீவினை என்ற பாகுபாடின்றி அவைகளைக் கடந்து கடவுளது அருள்வழியில் நிலையாக நின்று பயன் கருதாது தங்கள் வேட்கை அறிவு செயல்களை உலகில் அருள் விளங்கும் பொருட்டு நிகழ்த்த நிகழ்த்த அவர்களுடைய வியாப்பிய வேட்கை அறிவு செயல்கள் கடவுளுடைய வியாபக வேட்கை அறிவு செயல்களுக்குள் அடங்கித் தொழிற்படுகின்றன. இவ்வாறு பக்குவப்பட்ட மாந்தருடைய வேட்கை அறிவு செயல்கள் உலகின்கண் தொழிற்படுதலினால் கடவுளுடைய வியாபக வேட்கை அறிவு செயல்கள் அவர்களுடைய வியாப்பிய வேட்கை அறிவு செயல்களுடன் பேதமின்றிக் கலந்து அவைகளைத் தம் வயப்படுத்தித் தூய்மையாக்குகின்றன. கடவுளது அருளின் வழி அன்றி உலகில் ஒன்றையுஞ் செய்யாத அவர்களுடைய வேட்கை அறிவு செயல்கள் நிகழ்தலினாலுண்டாகும் பணிகளெல்லாம் கடவுள் பெயராற் செய்யப்படும் பேருதவிப் பணிகளாகின்றன. அத்தகைய மாந்தருடைய பேருதவிப் பணிகளாலேயே இவ்வுலகம் நலமடைந்து முன்னேற்றம் பெற்று வரு





கின்றது. பக்குவப்பட்ட மாந்தருடைய வேட்கை அறிவு செயல்களானவை கடவுளுடைய வேட்கை அறிவு செயல்களுடன் பிரிவின்றிக் கலந்து ஒன்றாய் விளங்குதலால், அம்மாந்தர், தங்கள் வேட்கை அறிவு செயல்கள் முற்றிலும் திருந்தப்பெற்று, கடவுளுடன் அத்துவிதமாய்க் கலந்து அவனுடைய முற்றறிவு, அளவிலாற்றல், பேரருள், தன்வயம், இயல்பாகவே பாசங்களினீங்குதல், வரம்பி லின்பமுடைமை, தூயவுடம்புடைமை, இயற்கை யுணர்வுடைமை என்னும் எண்குணங்களும் தங்களிடம் பதியப்பெற்று அவனுடைய திருவடி நிழற்கீழ் நிலைபெற்று நின்று நிலையாயுள்ள பேரின்ப மடைகிறார்கள். இந்தப் பேரின்பப் பேறுதான் உயிர்களெல்லாம் உலக வாழ்வின் பயனாக முடிவில் அடையப் பெறும் பேறு ஆகும். சைவசமயம் கூறுகிற முத்தி நிலைகள் ஏனைய சமயங்கள் கூறும் முத்தித்தானங்களுக்கு மேலான சாலோக சாமீப சாரூப பதமுத்திகளும் அப்பதமுத்திகளுக்கு மேலான சாயுச்சிய பரமுத்தியு மாகும். அம்முத்திகளை அடைதற்கு, எடுக்கப்பட்ட தூல உடல் நீக்கம் வேண்டப்படுவதன்று; அம்முத்தி நிலைகள் எல்லாம் இவ்வுலக வாழ்க்கையிலேயே அடையத்தக்கன.

11. மேலே கூறியவாறு ஆன்மாவுக்கு முதற்கண் வேட்கை அறிவுசெயல்கள் விளங்காதிருத்தலும், பின் கருவி அறிவு விளக்கத்தினால் அவைகள் ஏகதேசத்தில் விளங்குதலும், பின் அருள் அறிவு விளக்கத்தினால் அவைகள் மாசு நீங்கி முற்றிலும் விளங்குதலும் உலக அநுபவத்தில் நாம்மாந்தரிடம் கண் கூடாக அறியக்கிடக்கிற உண்மைகள். திரோதமல வயப்பட்ட உலகபோகவாழ்க்கையில் மாந்தருக்கு உலக அறிவு திருத்தமாய் விளங்குவது இந்தவேட்கை அறிவு செயல்களின் காரியத்தினாலேதான். கடவுளது அருள் வயப்பட்ட முத்தி வாழ்க்கையில் அருள் அறிவு விளங்குவதும் இந்த வேட்கை அறிவு செயல்களின் தூய்மையான காரியத்தினாலேதான். இவ்வுலகில் மாந்தருடைய தனிச் செய்கைகளும் (Individual activities) மனைச்செய்கை, குடிச் செய்கை, குலச் செய்கை, நாட்டுச் செய்கை, உலகச் செய்கை முதலிய எத்தகைய மாந்தர் கூட்டச் செய்கைகளும் (Collective activities) அரசியற் செய்கைகளும் (Government activities) அவர்களுடைய வேட்கை அறிவு செயல்களாலேயே நடைபெறுகின்றன. இவ் வேட்கை அறிவு செயல்கள் எத்துணைத் திருத்தமடைந்திருக்கின்றனவோ அத்துணை அவைகளால் சம்பந்தப்பட்ட மாந்தருக்கு இன்பநலம் உண்டாகின்றது. ஆதலினாலே தான் மக்கட் கூட்டத்துக்கு இன்பநலம் பயக்கும் அரசியற் பணியானது கடவுளது அருள் விளங்கப்பெற்ற பெரியாரைத் துணைக்கொண்டு அரசர்கள் செய்தல்வேண்டும் என்பது திருக்குறள் முதலிய பண்டைத் தமிழ் நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வாறு மாந்தருடைய பல்வகைச் செய்கைகளும் வேட்கை அறிவு செயல்களாலேயே நடைபெறுகின்றன என்பது உலக அநுபவ அறிவினாலே நாம் அறிவதாயிருப்பினும், சைவசமய உண்மைகளில்வைத்து நாம் அவ்வுண்மையைத் தெளிவாய் அறிதல்போலச் சைவசமய உண்மைகளுக்குப் புறமாய் அறிதல் முடியாது.

## VII அருள் விளக்கம்

12. சைவ சமயத்திற்கு ஐந்தாவது சிறப்பு இலக்கணமாக அருள் விளக்கம் என்பது சுருக்கமாக இங்கே கூறப்படும். கடவுளினின்றும் வேறாகப் பிரிக்க முடியாத அவனுடைய அருட்சத்தியானது உயிரினுமுலகினும் விளங்கி உயிருலகத்தை இன்பநலம்பெறுமாறு தொழிற்படுத்து முறைமை சைவசமயத்திற் கூறப்பட்டிருத்தல் போல வேறு எந்தச் சமயத்திலுங் கூறப்படவில்லை. அருட்சத்தி ஆன்மாவினது நலத்தின் பொருட்டுத் தொழில் செய்யுங்கால் தொழில் வேறுபாடு பற்றி மூன்று நான்கு ஐந்து எட்டு ஒன்பது பதின்மூன்று முதலிய சத்திக் கூறுகளுடையதாகக் கூறப்படுகின்றது. அருட்சத்தி ஆன்மாவுக்கு மறைத்தற்றொழிலைச் செய்தற்குப் படைத்தல் காத்தல் அழித்தல்களைச் செய்யும் பொழுது திரோதான சத்தி அல்லது ஆதிசத்தி என்று கூறப்படும். வேட்கையாகிய இச்சா சத்தியும் அறிவு ஆகிய ஞானசத்தியும்

செயல் ஆகிய கிரியாசத்தியும் இந்தத் திரோதான சத்தியின் வகைகளே. கடவுளுடைய இச்சாசத்தி ஞானசத்தி கிரியா சத்தியாகிய மூன்றும் மாந்தருடைய வேட்கை அறிவு செயல்களை விளக்கித் திருத்தமடையச் செய்கின்றன. மாயா தத்துவங்களாலாகிய உலகிற் காணப்படும் அருள் விளக்கமே அறநெறியாகும். மாந்தர் முதற்கண் இந்த அறநெறியில் நின்று தீவினையை விலக்கி நல்வினையைச் செய்தலினாலே தங்களுடைய வேட்கை அறிவு செயல்கள் ஏகதேசத்தில் திருத்தமடையப் பெறுகின்றார்கள். அப்பொழுது வேட்கை, அறிவினால் திருத்தமடைந்து, உயிரைப் பற்றிய அன்பாக (Personal love) மாறி அவ்வன்பின் வழி செயல் நிகழ்கின்றது. இந்த அன்பு காரணமாக மாந்தர் செயல் செய்யும்பொழுது அவர்களிடம் பொருளைப் பற்றிய வேட்கை (Attachment to property) குறைகிறது. உயிரைப் பற்றிய அன்பு (Personal love) உயிர்ப்பற்று என்றும் பொருளைப்பற்றிய வேட்கை பொருட்பற்று என்றும் கூறப்படும். உலகபோக வாழ்க்கையில் மாந்தர் அறநெறியில் நின்று நல்வினைகளைச் செய்தலினாலே அவர்களுக்கு வேட்கை அறிவு செயல்கள் மேலும் மேலும் விளங்கித் திருந்தினாலும் அத்திருத்தம் உயிர்ப்பற்று பொருட்பற்றுக்களைச் சார்ந்து நிகழ்தல் காரணமாக ஏகதேசத்தில் நிகழ்கின்றது. அவர்கள் நல்வினை தீவினைகளைக் கடந்து மேலே 10-வது பந்தியிற் கூறப்பட்டபடி கடவுளுடைய வியாபகவேட்கை அறிவு செயல்களுக்குள் தங்களுடைய வியாப்பிய வேட்கை அறிவு செயல்கள் அடங்கும்படி அருள் நெறியில் நேராய் ஒழுக ஒழுக அவர்களுக்கு உயிர்ப் பற்று பொருட் பற்றுக்கள் நீங்கி கடவுட் பற்று பெருகி அவர்களிடம் அருட்சத்தி பதிதலாகிய சத்திநிபாதம் வளர்ந்து முதிர்கின்றது. உயிர்ப்பற்றுநீக்கத்தால் அவர்களுக்கு'நான்' என்னும் அகப்பற்றும், பொருட்பற்று நீக்கத்தால் 'எனது' என்னும் புறப்பற்றும் படி முறையில் நீங்குகின்றன. சத்திநிபாதம் முதிர்தலால் அவர்கள் முன்கருவிகளின் வாயிலால் அறிந்து கொண்டிருந்த கருவி அறிவாகிய பாசஞானமும், கடவுளுடைய அருள் விளக்கத்தால் உணர்தலை அறியாமல் 'நான் அறிகின்றேன்' என்று கூறப்படும் பசுஞானமும் நீங்கப்பெற்றுப் பதி ஞானமாகிய மெய்ஞ்ஞானத்தை அடைகின்றார்கள். தசகாரியங்களில் தத்துவ சுத்தியால் பாசஞானமும், ஆன்மசுத்தியால் பசுஞானமும் ஆன்மாவைவிட்டு நீங்குகின்றன. தத்துவசுத்தியால் பாசஞான நிலையைக் கடந்தபின் ஆன்மாவில் விளங்கும் ஞானமானது கடவுளுடைய அருள் ஒளி விளக்கத்தாலுண்டாகும் ஞானம் என்ற உண்மையை அறியாமல் ஆன்மாவினுடைய சுயஞானம் என்று மயங்கி அறிதலே 'நான் பிரமம்' என ஏகான்மவாதிகள் கூறும் பசுஞானமாகும். ஆன்மாவானவன், ஆன்ம சுத்தியால் இந்தப் பசுஞானநிலையைக் கடந்தபின் முறையே சிவதரிசனம் சிவயோகம் சிவபோகம் என்பவைகளை அடைந்து பாமுத்திபெறுகின்றான். அப்பொழுது ஆன்மாவினுடைய வேட்கை அறிவு செயல்கள் ஒன்றுபட்ட நிலையை அடைந்து அருளாம் தன்மையைப் பெறுகின்றன.

13. கேவலநிலையில் உயிர்கள் ஆணவமல மறைப்பினால் கடவுளுடைய அருளை அறியாதிருந்த காரணத்தினாலேயே சகலநிலையில் உலகவாழ்க்கையைப் பெற்றன. பகுத்தறிவுடைய மாந்தர் அவ்வருளை ஏகதேசத்தில் விளக்கக்கூடிய அறநெறியில் ஒழுகும் ஒழுக்கத்தால் உலகில் சிற்றறிவும் சிறு அன்பும் உடையவர்களாகி சிற்றின்பமடைந்து, பின்பேரறிவும் பேரன்பும் உடையவர்களாகிப் •பேரின்பம் பெறுதற்குப் பக்குவம் அடைகிறார்கள். பக்குவமடைந்த மாந்தர் அருளை நன்கு விளக்கக்கூடிய அருள் நெறியில் ஒழுகுதலினாலே சுத்தநிலையில் பேரின்பமடைகிறார்கள். இவ்வாறு அருள் விளக்கமே மாந்தருடைய எல்லா இன்ப நலங்களுக்கும் காரணமாயிருக்கின்றன. அருளை மறந்து செய்யப்படும் செய்கைகள் எல்லாம் அவர்களுக்குத் துன்பத்தையே பயக்கும்; துன்பத்தினாலேயே அவர்கள் அருளை மறந்த தீய நெறியிலிருந்து அருளை விளக்கும் நன்னெறிக்குத் திரும்புகின்றார்கள். தற்காலத்தில் உலகில் பெரும்பான்மையான மாந்தர் பணத்தையே பெரிதாக நினைத்து அருளை மறந்து ஒழுகும் ஒழுக்





கத்தினாலேயே உலகம் துன்ப நிலையை அடைந்திருக்கிறது. உலகம் இந்தத் துன்ப நிலையினின்று நீங்கி இன்பநிலை அடைதற்கு ஒரே வழியுள்ளது. சைவசமயம் கூறுகிற அந்த ஒரே வழி யாதெனில் மாந்தர் பணப் பேய்ப் பிடியினின்றும் நீங்கி அருளைப் பேணி ஒருவரோடொருவர் அன்புடன் ஒழுகுதலேயாகும் என்க.

## VIII முடிவுரை

14. மேலே சைவசமயத்துக்குச் சிறப்பு இலக்கணங்களாக (1) கடவுளுடைய பொது இயல் சிறப்பு இயற் பாகுபாடு (2) ஆணவ மலத்தினது உண்மை (3) அத்துவித உண்மை (4) வேட்கை அறிவு செயல்களின் தன்மை (5) அருள்விளக்கம் ஆகிய ஐந்து இலக்கணங்கள் சுருக்கமாகக் கூறப்பட்டன. இன்னும் விரிவஞ்சி இங்கே கூறப்படாத பல சிறப்பு உண்மைகள் உள. அவை (1) கேவலம் சகலம் சுத்தம் என்னும் ஆன்மாவின் காரண அவத்தைப் பாகுபாடு; (2) சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஆன்மாவின் காரிய அவத்தைப் பாகுபாடு; (3) விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் ஆன்மாக்களின் பாகுபாடு; (4) ஆன்மா சார்ந்ததன் வண்ணமாந் தன்மை; (5) தத்துவ ரூபம் முதலிய தசகாரியங்கள்; (6) சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் கடவுள் வழிபாட்டு வழிகள்; (7) குருலிங்க சங்கமம் என்னும் கடவுள் வழிபாட்டு முறைமை; (8) சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயை என்னும் மாயை வகைகள்; (9) நிவிர்த்தி கலை முதலிய கலை வகைகள்; (10) சூக்குமை முதலிய நான்கு வாக்கு வகைகள்; (11) மந்திரம், பதம், வர்ணம் முதலிய ஆறு அத்துவா வகைகள் (12) சமயம் விசேடம் முதலிய தீக்கை முறைகள்; (13) இயமம் நியமம் முதலிய அட்டாங்க யோக முறைமை; (14) கடவுளுடைய தூலம் சூக்குமம் அதிசூக்குமமாகிய ஐந்தொழில் வகைகள்; (15) ஐந்தொழில்பற்றிக் கடவுளுக்குக் கூறப்படும் இலயம் போகம் அதிகார நிலைகள். (16) முத்தான்மாக்கள் கடவுள் ஆணை வழியில் உலகை ஆட்சி செய்யும் முறைமை முதலியன. இந்த உண்மைகளெல்லாம் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையன. ஏனைய சமயங்களிற் கூறப்படாத இந்தச் சிறப்பு இலக்கணங்களெல்லாம் மேலே 7-வது பந்தியிற் கூறப்பட்டபடி சைவசமயத்துக்குத் தலைமைப் பதவியை அளித்து அதனை உலகப் பொதுச் சமயமாகச் செய்கின்றன. சைவ சமய உண்மைகளெல்லாம் முடிந்த முடிபான சித்தாந்த உண்மைகள். இதனாலேயே சைவசமயம் "சித்தாந்தம்" என்ற பெயராலேயே வழங்கப்பெறுகின்றது; மேற்கு நாட்டுத் தத்துவ உண்மைகள் போன்று ஆராய்ச்சி முறையிற் பலராற் பலபடக் கூறப்படும் உண்மைகளல்ல; கடவுளாலும் கடவுளது அருள்பெற்ற பெரியாராலும் ஒரு முடிபாகக் கூறப்பட்ட முழு உண்மைகள். இந்த உண்மைகள், நற்றவஞ்செய்யும் மாந்தரால் அநுசந்தானம் செய்து சுவாநுபவத்துக்கு இம்மையிலே கொண்டு வரக்கூடிய உண்மைகள். இந்த உண்மைகள், இவ்வுலக வாழ்க்கையில் மிக்க பொருள் தேடிச் சிறப்புறப் போக வாழ்க்கை வாழ்தலே மேலான வாழ்க்கை என்று கூறும் தற்கால மேற்குநாட்டு நாகரிக நஞ்சுக்கும், அதற்கு நேரே எதிரிடையாய் இவ்வுலகம் இல்பொருள் என்றும், இவ்வுலக வாழ்க்கை மித்தை வாழ்க்கை என்றும் கூறும் நமது நாட்டு ஏகான்மவாதக்கொள்கை நஞ்சுக்கும், ஊனக் கண்ணாற் காணப்பட்டதே காட்சி என்றும், ஊனக் கண்ணாற் காணப்படாத கடவுள் இல்லை என்றும், நமது நாட்டில் சமய அறிவும் ஆராய்ச்சி அறிவுத் திறனுமில்லாத ஒரு சாரார் கூறும் போலி வாழ்க்கை நஞ்சுக்கும் அமிர்தமாயிருந்து அந்நஞ்சுக்களை மாற்றி இம்மை வாழ்க்கை மறுமை வாழ்க்கை முத்தி வாழ்க்கை என்னும் மூன்று வாழ்க்கைகளையும் ஒன்றோடொன்று இணக்கமுள்ளதாகப் பொருத்தித் தொடர்புபடும்படி செய்து, முடிவில் மாந்தரெல்லாரையும் பேரின்பப் பெருவாழ்வை அடையச் செய்யவல்லன. அத்தகைய உண்மைகளை நமது இந்தியா நாட்டிலுள்ள மாந்தரும் ஏனைய நாடுகளிலுள்ள மாந்தரும் ஓதி அறிந்து கடவுளுடைய அருளுக்கு ஆளாகி இன்ப நலம் அடைவார்களாக.

# திருமுறை விளக்கம்

C. K. சுப்பிரமணிய முதலியார், பீ. ஏ.

இத்தலைப்பாகிய சொற்றொடர் திரு+முறை+விளக்கம் என்ற மூன்று மொழிகளால் ஆக்கப்பட்டது. திரு=சிறப்புப் பொருள் தரும் ஒரு அடைமொழி. முறை=புத்தகம், நூல், சாத்திரம். விளக்கம்=விளங்கச் செய்வது, சிறந்த புத்தகங்களைப் பற்றி விளங்கச் செய்யும் கட்டுரை என்பது பொருளாம். பேராசிரியர் தமது திருக்கோவையாருரையில் "திரு" என்ற மொழிக்குக் "கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்" என்று பொருள் கண்டார். திருக்கோயில், திருவிளக்கு, திருவலகு என்ற உதாரணங்களும் காட்டினர்.

"முறை" என்பது புத்தகம் அல்லது நூல்களுக்குப் பொதுப்பெயர். திருப்போரூர்ச் சந்நிதிமுறை முதலிய பெயர்களைக் காண்க. ஆனால், இது பொதுவாக எல்லா நூல்களையும் குறிக்கும் சொல்லாயினும், இன்ன (முறை) நூல் என்று சுட்டிச் சொல்லாமல் பொதுப்பெயராலே "திரு" என்ற சிறப்புப் பொருள் தரும் அடைமொழியுடன் சேர்த்துச் சொல்லும்பொழுது நூல்களுட் சிறந்தனவாய்த் தனக்குவமை யில்லாத முழுமுதற் கடவுளைப் பற்றியவையாகிய எல்லாப் பொருள்களிலும் சிறந்த பொருள் தரும் நூல்களுக்கே பெயராம். அம்முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்பது வேத சிவாகமங்களாலே துணியப்பட்ட உண்மை. அவ்வாறு சிவபெருமானைப் பற்றிய சிறந்த நூல்கள் பல இருத்தலின், இங்கு குறித்து எடுத்துக் கொண்டன யாவையோ வெனின்,

> "பாவெனப் படுவதுன் பாட்டுப்
> பூவெனப்படுவது பொறிவாழ்பூவே"

என்றவாறு சிறந்தவற்றுட் சிறந்தனவாய்த் தமக்கு மேற்பட்ட நூல்களை இல்லாதனவாய் உள்ள புத்தகங்களேயாம். அவை யாவன; "எனதுரை தனதுரையாக" என்று பிரமாணங் கூறியருளிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், "என் பெயர் பித்தனென்றே பாடுவாய்", "தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று "எல்லையில் வண்புகழுரை எடுத்திசைப்பா மொழி" என்பனவாகக் காணும் அருள் மொழிகளால் இறைவன் அடியெடுத்துக் கொடுக்கப் பாடியருளிய சுந்தரமூர்த்தி நாயனாரும், "உலகெலாம்" என்று கூத்தப்பிரான் எடுத்துக்கொடுத்த முதலை முதலாகக்கொண்டு அவனேயாய் நின்று பாடியருளிய சேக்கிழார் நாயனார் முதலியோர்களுமாகிய பெரியோர்களால் உலகிற் குறுதியாக அருளப்பெற்றவையேயாம். தற்போதம் என்பது முற்றும் ஒழிந்து அவனே தானாக நின்று நூல் சொன்ன பெரியோர்கள் இவர்களே. இவர்கள் வாக்கு இறைவன் திருவாக்கே.

"நூலுரை **போதகாசிரியர்** மூவரும், முக்குணவசத்தால் முறை பிறழ்ந்தறைவரே; இம்முறையெல்லாம் எவர் பகுத்தறியினும் அவத்தை வசத்தால் அலைகுவர் திடனே; அதிமதி நுட்பமோ டதிகலை கற்பினும் விதியது வசத்தால் விதிவிலக் கறியார்" என்று ஒரு பெரியார் கூறியபடி ஏனைய ஆசிரியர்கள் **குணம், அவத்தை, விதி** யாகியவற்றின் வசப்பட்டு நிற்பர். ஆதலின் அவர் செய்த நூல்கள் மற்றும் உண்மையுணர்த்தும் நூல்களாகா. **குணம், அவத்தை, விதி** முதலியவற்றைக் கடந்த கடவுள் ஒருவனே உண்மை உருவுடையவன். அவன் திருவாக்குகளாகிய வேத சிவாகமங்களே முழுதும் உண்மை யுணர்த்தும் நூல்கள். அவைகளைப் போலவே அவன் அருள்வழிப்பட்டு நின்று அவனே தாமாகப் பெற்ற சீவன் முத்தர்களாய் சிவத்தன்மை வாய்ந்த மேற்கூறிய பெரியோர் அருளிய திருவாக்குகளும் முழுதும் உண்மை நூல்களாம். அவைகளையே "திருமுறை" என்று பெரியோர் கூறுவர். அவை யாவன: திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதல் சேக்கிழார் நாயனார்வரை உள்ள பெரியோரருளிய **சைவத் தெய்வப் பன்னிரு திருமுறைகளேயாம்.**

இவ்வாறின்றி ஏனையோர் சொல்லியவாம் பாடல்களையும் நூல்களையும் திருமுறை





என்ற பெயரான் இக்காலத்தவர் சிலர் வழங்கி மகிழ்வர். அவை போலி என்று ஒதுக்குக. "முறை" என்ற சொல்லானது சொற்பொருளளவில் எல்லா நூல்களையும் குறிப்பினும் "**திருமுறை**" என்றபோது சிறப்புப் பெயராகச் சைவத் தெய்வப் பன்னிரு திருமுறைகளாகிய உண்மை நாயன்மார்களது திருவாக்குகளுக்கே செல்லும். "முள்ளிச்செடி கொண்டுவா" என்று ஒருவனை நோக்கி நீங்கள் சொன்னால் அவன் முள்ளையுடைமை பற்றிக் கள்ளியையாவது அல்லது வேறெந்த முட்செடியையாவது கொண்டுவந்தால் நீங்கள் அவனை என்னென்று மதிப்பீர்கள்? "முள்ளிச் செடி" என்ற சொல் முள்ளுள்ள எல்லாச் செடிகளுக்கும் செல்லாமல், முள்ளிச் செடிக்கே காரண இடுகுறிச் சொல்லாக வழங்குமாறு போலவேதான் "திருமுறை" என்ற சொல்லும், காரண இடுகுறியாகச் சைவத்தெய்வப் பன்னிரு திருமுறைகளைக் குறிப்பனவேயாகும். "திருமுறை படித்தாயா?" என்ற கேள்விக்கு "ஆம், நான் இராமலிங்கர் பாடல் படித்தேன்" என்று ஒருவன் சொன்னால் மேலே முள்ளிக்கு மாறாய்க் கள்ளியைக் கொணர்ந்தவனுக்குச் செய்யும் சன்மானமேயன்றோ இவனுக்கும் செய்வீர்கள்.

> "எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
> செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"

என்பது இலக்கணமாதலின் "திருமுறை" என்ற பெயரால் ஆன்ற பெரியோர் எப்பொருளைக் குறித்து வழங்கினார்களோ அப்பொருளையே அப்பெயரால் வழங்குதல் மரபு. அப்படிக்கல்லாது வழங்குதல் மரபல்ல. இம்மரபில் பிறழ்ந்தும் பலர் பல பாட்டுக்களுக்கு இப்பெயரை வழங்கக் காண்கின்றோமே? எனின்,

> "குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனீங்கில்லை
> ...தேசமெங்கும் புலவனெனத் திரியலாமே"

என்றபடி தண்டிக்க அரசனும், கண்டிக்கப் புலவரும் இல்லாத இக்காலத்தில் யாவரும் யாவும் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் உயர்ந்தோர் அதனை மதியார்.

ஆயின், திருமுறை என்ற பெயரால் சைவத் தெய்வப் பன்னிரு திருமுறைகளையே வழங்கினர் பெரியோர் என்றற்குச் சான்று என்னை? எனில், "முறை" என்பது தேவாரத் திருவாக்கு எழுதிய சுவடிக்கேயாகி முன்னாள் வழங்கிய வழக்கைச் சேக்கிழார் நாயனாரது திருவாக்குகளால் அறிகின்றோம்.

> "செங்கணேற்றவரே
> பொருளென்று தாந்தெரித்த
> பொங்கிசைத் **திருப்பதிக**
> **நன்முறை**யினைப் போற்றி
> எங்கள் நாதனே பரம்பொரு
> ளெனத்தொழு தெடுத்தே
> அங்கையால் முடிமிசைக் கொண்டு
> காப்புநாண் அவிழ்த்தார்"

**--திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம்** (881)

> "சாற்று மெய்ப்பொருள் தரும்
> திருமுறையினைத் தாமே
> நீற்று வணக்கையால் மறித்தலும்
> வந்து நேர்ந்துளதால்
> நாற்றடம்புயத் தண்ணலார்
> மருவு நள்ளாறு
> போற்றும் அப்பதிகம்
> போக மார்த்தபூண் முலையாள்"

**ஷை புராணம்** (782)

> "...அருமறைச் சொற்றிருப் பதிகம் எழுதுமன்பர்
> ........................................."

**ஷை புராணம்** (908)

இன்னும் "திருமுறை கண்ட புராணம்" என்ற பெயர் வழக்கும், அப்புராணத்துட் காணும் திருப்பாட்டுக்களும் இதனை வலியுறுத்தும்.

> "பண்புற்ற திருஞான சம்பந்தர்
> பதிக முந்நூற்
> றெண்பத்தி நான்கினால் இலங்கு
> **திருமுறை** மூன்று
> நண்புற்ற நாவரசர் முந்நூற்
> றேழ் மூன்றினால்
> வண்பெற்ற **முறை**யொன்று;
> நூற்றினால் வன்றொண்டர்"

**—திருமுறைகண்ட புராணம்** (35)

> "ஆகவளர் **திருமுறை** யேத்தருட்
> டிருவாசக மொன்று
> மோகமெறி திருவிசைப்பா
> மாலை**முறை** ஒன்று,சிவ

போகமிகு மந்திரமா முறைஒன்று
புகழ் பெறவே
பாகமிகுந் திருமுறைகள் பத்தாக
வைத்தார்கள்'' ௸ (26)

"வைத்ததற்பின் நம்பிகழல்
மன்னர்பிரான் மகிழ்ந்திறைஞ்சிச்
சித்திதரு மிறைமொழிந்த
திருமுகப்பா சுரமுதலா
உய்த்தபதி கங்களையும்
ஒருமுறையாச் செய்கவெனப்
பத்திதரும் திருமுறைகள்
பதினொன்றாய்ப் பண்ணினர்'' ௸ (27)

"மந்திரங்கள் எழுகோடி
யாதலினால் மன்னுமவர்
இந்தவகை திருமுறைகள்
ஏழாக எடுத்தமைத்து
பந்தமுறு மந்திரங்கள்
பதினொன்று மாதலினால்
அந்தமுறை நான்கினொடு
முறைபதினொன் றாக்கினர்'' ௸ (28)

இத் திருமுறை கண்ட புராணத்தை இயற்றினர் உமாபதி சிவாசாரியார் என்பது சிலர் கருத்து. காஞ்சீபுரம் சபாபதி முதலியார் 1859-ம் ஆண்டில் முதலிற் பதிப்பித்த பெரியபுராணப் பதிப்பிலும், அவரது இரண்டாம் பதிப்பிலும், ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் வெளியிட்ட உரைப் பதிப்பிலும் (1888) இதன் ஆசிரியர் பெயர் குறிப்பிடப் பெறவில்லை. ஆனால் 1879-ம் ஆண்டில் சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் வெளியிட்ட பெரியபுராணப் பதிப்பில் இப்புராணத்தை "உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த திருமுறை கண்ட புராணம்'' என்றும், "நம்பியாண்டார் நம்பி புராணம்'' என்றும் குறிக்கப்பெற்றுளது. இப் புராணம் செய்தார் யாவராயினும் ஆகுக. இப் புராணத்திலே "திருமுறை'' என்ற பெயர் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் முதல் பதினோராந் திருமுறை வரையுள்ள பதினொரு சைவத் தெய்வ நூற்றொகுதிக்கே வழங்கப்பெற்றுளது தேற்றமாம். இப்புராணத் திறுதியிலே அரசனை "திருமுறைகள் கண்ட திறற் பாத்தியன்'' என்று முடிக்கின்றார் ஆசிரியர். உமாபதி சிவாசாரியார் திருத்தொண்டர் புராண வரலாற்றிலே கூறுகின்ற வகையாலே நாம் மேலே கூறிய பொருளே "திருமுறை'' என்ற சொற்றொடர்க்குப் பொருளாதல் துணிந்து கூறப்படும்.

"மூவரோது திருமுறைகளேழு; திருவாதவூரர் முறையொன்று; இசைப்பா வரைந்த முறையொன்று; பாசுரமதாதியாகக் கோவைசெய்த முறை யொன்று; சேவையர் குலாவு நீதிமுறை யொன்றுடன் பாவைபாகர் திருவருள் சிறந்த முறை பன்னிரண்டென வகுத்தபின்'' (சேக்கிழார் புராணம் 96) என்னும் திருப்பாட்டினாலே "முறை'' என்பது புத்தகம், நூல் என்ற பொருள் தரும் என்பதும் வேறு அடைமொழியின்றிச் சொல்லும்போது அப்புத்தகங்களுட் சிறந்தவற்றையே குறிக்கும் என்பதும், "திருமுறை'' என்ற சிறப்பு அடைமொழி அடுத்தபோது அச்சிறந்தவற்றுட் சிறந்தனவாய்த் தமக்கு மேற்பட்ட சிறப்புடைய நூல்களில்லாதனவாய், முழுமுதற் கடவுளது அருளைத் தரவல்லனவாயுள்ள பெருஞ் சிறப்பு வாய்ந்த சைவத்தெய்வப் பன்னிரு திருமுறைகளையே குறிக்கும் என்பதும் பெற்றாம். இத்திருப் பாட்டிலே "பாவைபாகர் திருவருள் சிறந்த முறை பன்னிரண்டு'' என்று பெயருக்குக் காரணப் பொருள் காட்டியவாறு கண்டுகொள்க. எனவே "திருமுறை'' என்ற சொற்றொடரின் பொருள் "சைவத் திருமுறை பன்னிரண்டு'' என்பதே மரபு என நாட்டியவாறு.

"தேவாரம்'' என்பது மூவர் முதலிகள் அருளிய பாடல்களுக்கும், "திருவாசகம்'' என்பது மாணிக்கவாசகப் பெருமானார் அருளிய பாடல்களுக்கும், "திருவிசைப்பா'' என்பது திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது நாயன்மார்களுடைய அருட்பாடல்களுக்கும் "திருவாய் மொழி'' என்பது வைணவ ஆழ்வார்களது அருட் பாடல்களுக்கும் பெயராயினமை இவ்வாறியன்ற மரபு வழக்கம்பற்றியேயாம். இப்படிக்கொள்ளாதபோது அவ்வப் பெயர்களின் காரணப் பொருள்களையே நோக்கித் "தேவாரங்களைத்'' "திருவாசகம்'' என்ற பெயராலும், "திருவிசைப்பாவைத்'' "திருவாசகம்'' என்ற பெயராலும், "திருவாசக''த்தைத் "திருவிசைப்பா'' என்ற பெயராலும் இவ்வாறெல்லாம் மனம் போனபடி மாறுபட





வழங்குதல் உண்டாகிச் சொல்மயக்கமும் பொருள் மயக்கமும் நேர்ந்து இடர்ப்படுவோமன்றோ?

இனி, "திருமுறைகள்'' என்றால் யாவை என மேலே கூறினோம். அவை தாம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய தேவாரங்கள், முதல் மூன்று திருமுறைகளாம். அவற்றையடுத்து வாகீசப் பெருந்தகையார் அருளிய தேவாரங்கள், நான்காவது ஐந்தாவது ஆறாவது ஆகிய மூன்று திருமுறைகளாம். சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய தேவாரங்கள், ஏழாவது திருமுறையாம். திருவாதவூரடிகள் அருளிய திருவாசகமும், திருக்கோவையாரும் சேர்ந்து எட்டாவது திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது நாயன்மார்கள் அருளிய திருவிசைப்பாக்கள் ஒன்பதாவது திருமுறையாகவும் உள்ளன. திருமூலர் திருமந்திரம் பத்தாவது திருமுறையாகும். ஆலவாய்ப்பெருமான் அருளிய திருமுகப் பாசுரம் முதல் நம்பியாண்டார் நம்பிகள் வரை பன்னிரண்டு ஆசிரியர்கள் அருளியவற்றைக் கோவை செய்த தொகுதி பதினோராந் திருமுறை எனப் பெறும். சேக்கிழார் நாயனார் அருளிய திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாம் திருமுறையாம்.

இவற்றுள்ளே, திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் கைகாட்டி யருளியபடி கண்டு இராஜராஜசோழன் வேண்டியபடி நம்பியாண்டார் நம்பிகள், முதற் பதினொரு திருமுறைகளையும் வகுத்தருளினர் என்பது வரலாறு. அநபாய சோழர் வேண்டியபடி திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் நாயனார் அருளிச்செய்தார். அதனை முற்கூறியவற்றோடுசேர்த்து, திருமுறை பன்னிரண்டு என வகுத்து, செப்பேடு செய்வித்தவர் அவ்வநபாயச் சோழரேயாம்.

இப்பன்னிரு திருமுறைகளையும் தந்த ஆசிரியர்களாவார் தேவாரம் அருளிய மூவர் முதலிகளும், திருவாசகம் திருக்கோவையாருளிய திருவாதவூரடிகளும், திருவிசைப்பா அருளிய நாயன்மார் ஒன்பதின்மரும், திருமந்திரம் அருளிய திருமூலதேவநாயனாரும், பதினோராந் திருமுறையிற் கண்ட ஆசிரியர் பன்னிருவரும், பெரியபுராணம் தந்தருளிய சேக்கிழார் நாயனாரும் ஆக இருபத்தெழுவராவார். இவர்கள் சரித வரலாறுகளிலே மூவர் முதலிகள் (1—7) திருமூலர் (10) காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேரமான்பெருமாள் நாயனார் (11) என்ற எழுவருடைய சரிதங்கள் பெரியபுராணத்திலே பெறுகின்றோம். திருமுகப்பாசுரம் அருளிய ஆலவாயடிகள், சரிதங்கடந்த பரம்பொருளாவர். அவர் தோற்றமும் கேடும் இல்லாதவராக லின், அவருக்கு வரலாறுமில்லை. அவர் தன்மையை வேத சிவாகமங்களும் எல்லாப் புராண இதிகாசங்களும் பேசும். அவர் இத்திருமுகப் பாசுரம் இயற்றிய வரலாறு பெரியபுராணத்தும் திருவாலவாய்ப் புராணங்களிலும் காணப்பெறும். வாதவூரடிகள் (8) வரலாறு திருவிளையாடற்புராணம், வாதவூரடிகள் புராணம் முதலியவற்றிற் பேசப்பெறும். சேக்கிழார் நாயனார் (12) வரலாற்றை உமாபதி சிவாசாரியார் நமக்கு உதவியுள்ளார்கள். திருவிசைப்பா ஆசிரியர்களான ஒன்பதின்மரும், பதினோராந் திரு முறையிலே எஞ்சிய எண்மரும் ஆகிய பதி னெழுவர் வரலாறுகள், அங்கங்கே கிடைக் கும் தலபுராண வரலாறுகளாலும், சி[illegible] றுண்டு கிடைக்கும் பிற கர்ண பரம்பரை முதலிய ஆதரவுகளாலும் பெறுகின்றோம். இவர்களுள்ளே நக்கீர தேவரைப் பற்றி[illegible] திருவிளையாடற்புராணத்தில் சில செய்திகள் பேசப் பெறுகின்றன. பட்டினத்து அடி களைப் பற்றித் திருவெண்காடர் புராணம் முதலிய சில நூல்கள் பேசுகின்றன. பதி னோராந் திருமுறையிலே நக்கீரதேவர் அரு ளியனவாகக் கண்ட பத்துப் பிரபந்தங்களை இயற்றிய அப்பெயருள்ள ஆசிரியர் ஒரு வரோ அன்றிப் பலரோ என்ற ஐயப்பாடு[illegible] சிலர் கொள்கின்றனர். பட்டினத்தடிகள் இயற்றினவாக விளங்கும் எல்லாப் பாடல் களும் பதினோராந் திருமுறையில் எடுக்கப் படவில்லை.

## ஆசிரியர்கள் காலம் முதலியன

இத்திருமுறை ஆசிரியர் எக்காலத் திரு தார் என்று விசாரிப்போமாயின் பதினோரா[illegible] திருமுறைத் திருமுகப் பாசுரம் சொன்[illegible] திருவாலவாயுடையார், காலம் கடந்த பர[illegible]

பொருளாவார். அவரை அடுத்துப் பத்தாவது திருமுறையாகிய திருமந்திர ஆசிரியரான திருமூல தேவர் கைலையிலிருந்து வந்த நான்மறை யோகிகள். இவர் மூவாயிரம் ஆண்டு திருவாவடுதுறை அரசமர நீழலில் யோகமிருந்து இத்திருமந்திரங்களை அருளிச்செய்தார் என்பது புராணம். இவரும் காலஎல்லை கடந்தவராவர். பதினோராந் திருமுறையில் நக்கீரதேவர் கடைச் சங்கத்தவராவர். கல்லாடர், கபிலர், பரணர்களும், சங்கத்தார்களோ அல்லது அப்பெயர் கொண்ட பிற்காலப் புலவர் பெருமான்களோ என்பது ஐயம். சங்கத்தார் காலம் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளின் முன் என்று பொதுவகையால் குறிக்கலாம். எட்டாந் திருமுறை அருளிய மணிவாசகர் கால நிச்சயம் இவ்வெல்லைக்கு முன் என்றும் பின் என்றும் பெரும் போராட்டமாகக் கிடக்கின்றது. பொதுவகையால் அவரும் ஏறக்குறைய அவ்வெல்லையில் வாழ்ந்தவரென்னலாம். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் ஒரு காலத்தவர்களாக ஏழாம் நூற்றாண்டிலும், ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அவர்க்கு முன்னும், சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமாள் நாயனார் ஒரு காலத்தவர்களாக ஒன்பதாம் நூற்றாண்டிலும், பட்டினத்துப் பிள்ளையார் கண்டராதித்தர் பத்தாம் நூற்றாண்டிலும், நம்பியாண்டார் நம்பிகளும் சேக்கிழார் சுவாமிகளும் முறையே பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிலும் வாழ்ந்தனர். ஏனைய ஆசிரியர்கள் இவற்றிற்கு இடைப்பட்ட காலத்தவர்களாதல் கூடுமென்று பொதுவகையால் சொல்வதல்லது வேறுபிரித்துத் துணியக் கூடவில்லை. இவர்களுள்ளே, சேரமான் பெருமாள், கண்டராதித்தர், ஐயடிகள் முதலிய முடியுடைய மன்னர்களாகிய சேரசோழர்களும், சேக்கிழார் முதலிய அமைச்சர்களும், பட்டினத்தார் சேந்தனார் முதலிய பெரும் பொருளாளரும், திருமூலர் முதலிய யோகியரும், நக்கீரர் முதலிய சங்கப்புலவர்களும் ஆகிய பலதிறப்பட்டார்களையும் காணலாம். ஆகவே சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் எண்ணூறு ஆண்டுகட்கு முன்னும் வாழ்ந்த பெரியார்கள் இத்திருமுறை ஆசிரியர்களிற் பெரும்பாலர் ஆவர். இவர்களுள்ளே "மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை", "கருவூர்த்தேவர்", "சேக்கிழார்" என்ற எனது தனி நூல்களிலே அவ்வவர் வரலாறுகளைப் பற்றிய எனது எண்ணங்களை விரிவாக எழுதியுள்ளேன்.

## பாடல்களின் தொகை

இப்போது கிடைக்கும் பதிகங்களிற் காண்கிறபடி உள்ள திருமுறைகளின் பாடற்றொகை பின்வருமாறு :—

| | |
|---|---|
| திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரங்கள் திருப்பதிகம் 384-க்குப் பாடல்கள் ... | 4158 |
| திருநாவுக்கரசு நாயனார் தேவாரங்கள் திருப்பதிகம் 321-க்குப் பாடல்கள் ... | 3067 |
| சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரங்கள் திருப்பதிகம் 100-க்குப் பாடல்கள் ... | 1026 |
| திருவாசகம் 659 திருக்கோவையார் 400.. | 1059 |
| திருவிசைப்பா திருப்பதிகம் 28-க்கும் திருப்பல்லாண்டு திருப்பதிகம் 1-க்கும். | 301 |
| திருமந்திரம் ... | 3047 |
| பதினோராந் திருமுறை ... | 1406 |
| திருத்தொண்டர் புராணம் ... | 4282 |
| ஆகத் திருப்பாசுரங்கள் ... | 18346 |

இவ்வெண்கள் நமக்குக் கிடைக்கும் ஓரோர் பதிப்புக்களின்படிக்குக் குறிக்கப் பெற்றன. வேறு பதிப்புக்களின்படி சில பாடல்கள் கூடவும் குறையவும் இருக்கலாம். தேவாரத் திருமுறைகளிலுங்கூட "வெள்ளி பாடல்கள்" என்று வழங்கும் இடைச்செருகல்கள் சில புகுத்தப் பெற்றுள்ளன என்று சிலர் கருதுகின்றார்கள். திருமந்திரம், மூவாயிரம் திருப்பாட்டுகள்தாம் திருமூலரால் அருளிச் செய்யப் பெற்றன என்பது,

"......முன்னியஅப் பொருள்மாலைத் தமிழ்
மூவாயிரம் சாத்தி......"

—திருமூலர் புராணம் 27.

என்ற பெரியபுராணப் பிரமாணத்தால் அறிகின்றோம்.

"மூலன் உரைசெய்த மூவாயிரந் தமிழ்" என்பது திருமூலநாயனார் திருவாக்கே





யாதலின். இப்போது உள்ள பதிப்புக்களில் அத்தொகைக்குமேல் நாற்பத்தேழு பாடல்கள் இடைச்செருகல்களாகக் காணப்படுகின்றன. பெரியபுராணத்திலே உமாபதியார் குறித்த "........ஈண்டுரைத்த திருவிருத்தம் நாலாயிரத் திருநூற் றைம்பத்து மூன்றாக அமைத்து........" என்ற தொகைக்கு மேல் 29 பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றைப் பற்றி எனது "சேக்கிழார்" என்ற நூலில் விரிவாகப் பேசியிருக்கின்றேன். இவைகளைப்பற்றி இங்கு இன்னும் அதிகமாக விவரிக்கவேண்டிய அவசியமில்லை. திருமுறைகளிற் பயின்றவர்கள், பெரியோர் துணை கொண்டும் திருவருள் துணைகொண்டும் அவற்றை எளிதில் அறிந்து கொள்ளக்கூடும்.

## திருமுறைகளின் தன்மை

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார் என்ற மூவர் முதலிகள் அருளியவை தேவாரத் திருமுறைகளாம். இவைகள் இசை மயமாய் அமைந்த அழகிய தமிழ்ப் பாசுரங்களால் சிவபெருமானது திருப்புகழ்களைக் கூறும் அருட் பாசுரங்களாம். தமிழ் விரும்புவோர், இசை பயில்வோர், நல்வாழ்வும் அருளும் நாடுவோர் முதலிய யாவர்க்கும் இவை பெரும் ஊதியமாவன. இவற்றில் அமைந்த இசை வகையைப் 'பண்' என்று சொல்லுவார்கள். இப்பண் என்பது தமிழுக்கே உரியது. "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்" என்பது திருமுறை. இந்த வகைப் பண்ணிலே பொருந்த இசை பாடி அடிமை செய்தால் மண்ணும் விண்ணும் ஆளும் ஆட்சியை இறைவன் தருவன் என்று திருஞானசம்பந்த நாயனார் ஆணையிடுகின்றார்.

"பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணன்றி விண்கொடுக்கும் மணிகண்டன்"

என்பது அவரது தமிழ்மறை.

இப்போது கிடைத்துள்ளவற்றுள்ளே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருமுறைகளிற் காண்கிறபடி நட்டபாடைமுதல் அந்தாளிக் குறிஞ்சி ஈறாக 23 பண்கள் கிடைக்கின்றன. இவற்றுள்ளே 10 பண்களுள்ள 21 பதிகங்கள்தான் திருநாவுக்கரசு நாயனார் திருமுறைகளில் காண்கின்றோம். சுந்தரமூர்த்தி நாயனார் திருமுறையிற் காண்பன அவ்விருபத்துமூன்றனுள் பதினாறும் செந்துருத்திப் பண்ணும் ஆகப் பதினேழு யாம். இதில் யாழ்மூரி ஒரு தனிப்பண்ணாகக் கணிக்கப் பெற்றது. இவற்றின் வேறாக அப்பர்சுவாமிகள் திருப்பதிகங்களிற் காணும், 'திருநேரிசை', 'திருவிருத்தம்', 'திருக்குறுந்தொகை', 'திருத்தாண்டகம்' என்ற நான்கும் அமைந்துள்ளன. இவற்றையும்சேர்க்கத் திருமுறைப்பண்கள் இருபத்தெட்டு ஆகும். இவற்றிற் சில வேறுபாடுகளுடன் சொல்வாருமுளர். இத்திருமுறைகளைக் கண்டெடுத்து வகைப்படுத்தின செய்தியை முன்னமே குறித்தேன். இவைகட்குத் திருஎருக்கத்தம் புலியூரில் திருநீலகண்டயாழ்ப்பாணர் மரபில்வந்த ஒரு பெண்மணியார் திருவருளின் வழியே பண் அடைவு படுத்தினர் என்பது வரலாறு. இவைகளிற்போலவே திருவிசைப்பாவிலும் இவற்றுட் சில பண்களின் அமைதிப்பாட்டைக் காண்கின்றோம். தமிழ் மொழியிலுள்ள உயர்ந்த இலக்கியங்களிலே காணும் மொழிப்பயிற்சி முழுதும் மிக எளிதிலே இத்திருமுறைகளிலே காணலாம். தேவதேவாகிய இறைவனுக்கு வாரம் அல்லது ஆரம் ஆதலின் இவை தேவாரம் எனப் பெறும். வாச்சியங்களிற் சிறந்த அப்பெருமானை வாச்சியமாகக் கொண்ட வாசகமாதவின் வாதவூரடிகளின் அருளிப்பாடு திருவாசகம்எனப்பெற்றது. "..........மொழிந்த வாசகமே வாசகம் அதற்கு வாச்சியம் தூசகல் அல்குல் வேய்த்தோளிடத்தவனே". திருக்கோவை, கூத்தப்பிரான் மீது அகப்பொருள் 400 துறைகளையும் அமைத்துப் பாடியதாம்.

சிவபெருமானது இசைகளையே பற்றிய பாக்களானமையால் ஒன்பதாவது திருமுறை திருவிசைப்பா எனப்பெறும். மந்திரங்களாக ஒவ்வோர் பாசுரமும் பயிலப்பெற்றுக் காப்புச்செய்தலால் திருமூலர் திருமுறை திருமந்திரம் எனப்பெறும். அப்பெயரை அதற்கு அவரே இட்டு வழங்கியுள்ளார்"..........மூலனுரை செய்த மூந்நூறு மந்திரம்......." நம்பியாண்டார் நம்பிகளால்

கோத்துத் தொகுக்கப் பெற்றபடியால் பாசுரமதாதியாகக் கோவை செய்த முறை பதிஞோராந் திருமுறை **கோவை** எனப் பெற்றது. திருத்தொண்டர் சரிதங்களைக் கூறுவதால் 12-வது திருமுறைக்குத் **திருத்தோண்டர் புராணம்** என ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் பெயரிட்டனர்.

**திருமுறைகளின் பயன்**, திருஞான சம்பந்த மூர்த்தி நாயனரும் சுந்தரமூர்த்தி நாயனரும் திருவிசைப்பா இயற்றிய சில நாயன்மார்களும் தம் தம் திருப்பதிகங்களின் திருக்கடைக்காப்பாகிய இறுதிப் பாசுரங்களிலே அவற்றைப் பயில்வோர்க்கு உளவாகிய நற்பயனை விரித்து ஆணையிட்டு உரைத்திருக்கின்றார்கள்.

"அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணைநமதே"

"......உள்குளிர்ந் தேத்தவல் லார்கள்
நரைதிரை மூப்பு நடலையுமின்றி
நண்ணுவர் விண்ணவர்க்கரசே"

"......இறந்து போக்கிலை வரவில்லை யாகி
இன்ப வெள்ளத் திருப்பர்கள் இனிதே"

"......முத்தியாவது பரகதிப் பயனே......"

"......துன்பமும் இடும்பையும் சூழகிலாவே..."

"சொல்வார்க்குங் கேட்பார்க்குந் துயரில்லையே..."

"......வான்மிசை வாழ்வார் மண்மிசைபிறவார்
மற்றிதற் காணையும் நமதே.........."

இத்திருப்பாடல்கள், அருளிச் செய்யப் பெற்ற காலத்தே அநேக ஆன்மாக்களுக்கு அநேக நன்மைகளைச் செய்தன. இவைகள் மெய்த்திருவாக்காதலின் சொன்னசொன்ன படிநிகழ்ச்சிகள் உண்டாயின. "**எம்பிரான் சிவனே எல்லாப் பொருளும்**" என்று எழுதும் ஏட்டில் "தம்பிரான் அருளால் வேந்தன் தன்னைமுன் ஓங்கப் பாட"க் கூன் பாண்டியர் கூனும் நிமிர்ந்தது. இது, "வேந்தனும் ஓங்குக" என்ற திருமுறையின் அருள்வாக்கின் திறமாய். "போதியோ பூம்பாவாய்" என்ற பதிகத்திலே "போதியோ" என்ற மெய்த் திருவாக்கின் அமுதம் குடத்துள் வந்தபோது எலும்புக்கு உயிர் கொடுத்தது. திருவோத்தூரிலே "குரும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்" என்று ஆளுடைய பிள்ளையார் திருவாக்கிலே அப் பனைகள் குறித்து அமையும் பேறுபெற்ற புண்ணியத்தால், பாச நீங்கிச் சிவபெருமானையடைந்தன. என்ற உண்மையைச் சேக்கிழார் பெருமான்,

"பிள்ளை யார்தந் திருவாக்கிற்
பிறத்த லாலே தாலமுமுன்
உள்ளபாசம் விட்டகல வொழியாப்
பிறவி தனை யொழித்துக்
கொள்ளு நீர்மைக் காலங்கள்
கழித்துச் சிவமே கூடினவாம்
வள்ளலார்மற் றவரருளின் வாய்மை
கூறின் வரம் பென்னும்"

என்று விதந்து எடுத்துக்காட்டியருளினார்கள்.

## கண்கூடாகக் காணும் பயன்

மேலே கண்ட பெருமைகள் மாபுராணத்தாலும் பிறவாற்றாலும் அறியக் கிடக்கின்றவை. அவை இருக்க, இப்போது நாம் கண்கூடாகக் காணக்கூடிய பயன்கள் உண்டா? என வினவுவாருமுளர். "மீளா அடிமை" என்ற சுந்தரமூர்த்தி நாயனர் பதிகத்தைப் பல நாள் ஓதிக்கொண்டிருந்து முன் இழந்த கண் ஒளியைப் பெற்றிருக்கிற ஒருவரை நான் நேரில் அறிவேன். "தம்மையே புகழ்ந்து" என்ற பதிகத்தின் பாராயணம் ஒருவருக்குத் தரித்திரத்தை நீக்கிச் சுகத்தை அளித்திருக்கிறதையும் நான் சொல்லக்கூடும். "மந்திரமாவது நீறு" என்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரது திருநீற்றுத் திருப்பதிகத்தை ஓதிக்கொடுக்கும் திருநீற்றினுல் இன்றைக்கும் பலர் சுரம் முதலிய கடும் பிணிகளிலிருந்து விடுபடுகின்றார்கள். "ஒன்று கொலாம்" என்னும் திருநாவுக்கரசு நாயனர் விடந்தீர்த்த திருப்பதிகத்தை ஓதி மந்திரித்துப் பாம்பு விடத்தைப் போக்கிவருகின்றார், திருச்சி ஜில்லாவில் உள்ள ஒரு பெருங் குடித்தனக்காரர். "வேயுறு தோளி பங்கன்" என்ற கோளறு பதிகம், அதனை ஓதிக்கொண்டு வழிச் செல்வோர் எவ்வளவு பேருக்கு வழித்துணையாகிப் பெருந்த இடையூறுகளையும் போக்கி உதவி புரிந்து வருகின்றது. என் உறவினர் ஒருவரை நீண்ட காலம் மிக வருத்திய குன்ம நோய், "கூற்றாயின வாறு" என்ற திருப்பதிகத்தைப் பாராயணம் செய்த பின் அறவே விட்டொழிந்துள்ளது. இன்னும்





இவற்றைப் பெருக்கி உரைத்துக்கொண்டிருக்க வேண்டா.

"இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலும் ஆம்" என்ற திருமுறைப் பிரமாணமானது இவைகளிறைற் பெறும் பயனையே குறிக்கின்றது. இவைகளின் பாசுரங்கள் ஒவ்வொன்றும் மந்திரங்களாம். மந்திரம் என்றால் தம்மை இரட்சிப்பது; காப்பாற்றுவது என்றுபொருள். அவைகள் யாவை எனின் "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திரமென்ப" என்ற இலக்கணத்தின் உதவி கொண்டு பார்ப்போமாயின் இத்திருமுறைகளே மந்திரங்களாம் என்பது தேற்றம் பெற விளங்கும். அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தே விடும் மொழியே "நிறை மொழி" என்று வரையறுத்தார் ஆசிரியர் பரிமேலழகியார். நமது திருமுறைகள் அருளப்பெற்றபோது தாம்தாம் குறித்த பயன்களை அவ்வப்போது "பயந்தே நின்றன" என்பது சரிதங்களிற் காண்கிறோம். அம்மட்டோடு அவை நின்றுவிடவில்லை. அவைகள் நித்தியமான உயிருள்ளவை, என்றும் அழியாத்தன்மையுடையன. ஆதலின் அவைகளை அவ்வப் பெரியார் அருளியபோது எவ்வெப்பயன்களை அவை கொடுத்தனவோ அவ்வப்பயன்களை அன்பர்களுக்கு இன்றைக்கும்கொடுத்து நிற்கின்றன என்று நான் திண்ணமாகக் கூறுவேன். மேலே காட்டிய நிகழ்கால உதாரணங்களிற் கண்கூடாகக் கண்டுவரும் பயன்களையும் அவ்வவர் உபாசித்த அவ்வத்திருமுறைப் பகுதிகளின் சரிதங்களையும் ஒப்ப நோக்கினுல் இவ்வுண்மை நன்கு விளங்கும். 1400 ஆண்டுகளின் முன் விடந்தீர்த்த பதிகம் இன்றைக்கும் விடந்தீர்த்து வருகிறது. அன்று கண்ணும் காசும் கொடுத்த பாட்டுகள் இன்றும் கண்ணும் காசும் கொடுத்தே வருகின்றன. இன்னும் இவ்வாறே காண்க. ஆளுடையபிள்ளையாரது திருப்பதிகங்களை எழுதும் அன்பர் சம்பந்த சரணலயர் என்பார் "அந்திரமாவன அஞ்செழுத்துமே" என்ற திருவாக்கைச்சொல்லி "உருமிடித்து விழப் புத்தன் உத்தமாங்க முருண்டு வீழ்கெனப் பொருஉரை முன்விட்ட" போது இடி வீழ்ந்தமை சரித்திரங் கூறும். மகா மந்திரங்கள் ஏழுகோடி யாதலின் மூவர் திருமுறைகளை ஏழாகவும்; மேலும் அம் மகாமந்திரங்கள் மற்றொரு பகுப்பிலே பஞ்சப்பிரம சடங்க மந்திரங்களாகிப் பதினென்றாகவும் ஆதலினுல் பின்னர்க் காட்டும் திருமுறைகளுடன் பதினொரு திருமுறைகளாகவும் நம்பியாண்டார் நம்பிகள் வகுத்தனர் என்று புராணம் கூறும். மறை முதன் மெய்யாகிய தகரத்துடன் பிரணவ மந்திரங் கூடியவழி வரும் "தோ"டுடைய என்ற எழுத்துடன் தொடங்கிய பிரணவம் 'உய்ய உலகெலாம்" என்ற மாபுராணத் திறுதியிலுள்ள மகர ஒற்றுடன் பூர்த்தியாகிறது. மகர ஒற்றினுல் வாயிதழ்கள் கூடிவிடுகின்றபடியாலே மந்திரங்களும் பூர்த்தியாகி மறைகளுக் கிறுதியாகிய சாந்தி வாசகம் சொல்வதாயிற்று ; இவற்றாலும், தம்மை உபாசித்தாரைக் காத்து வருதலாலும், பிறவாற்றாலும் திருமுறைகள் மந்திரமாதல் துணியப்பெறும்.

உலகம் இவற்றை நம்பி வழிபட்டு ஈடேறுவதாக ! யாவரும் இவற்றைப் பயில்வாராக. "தேசமெலாம் குரவையிடத் தமிழ் வேதம் விரித்தருளும் கவுணியர்தங் குல தீபம்" என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரைத் துதித்தருளினர் சிவஞான முனிவர். திருவாசகம் யாவரும் ஓதும் இயற்கைத் தாகலில் 'பொற்கல னிகர்க்கும் பூசுரர் நான்மறை மட்கலனிகர்க்கும்" என்றது சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய நால்வர் நான்மணிமாலை. பெரியபுராணம் பாடியருளிய மந்திரியார் சேக்கிழார் சுவாமிகள், அதுபாடி அரங்கேற்றிய பின்னர்த் திருத்தில்லையிலேயே அமர்ந்துகொண்டு எப்போதும் அத்திருப்புராணத்தின் சரிதங்களையே சிந்தித்து உணர்ந்துகொண்டும் தொண்டர்களுடன் தவம் செய்தும் இருந்து இறைவன் அடிநிழற் சேர்ந்தருளினர் என்று உமாபதியார் உறுதியிட்டனர்.

"தொண்டர் சீர்பரவு சேக்கிழார் குரிசில்
தூய தில்லைநகர் தன்னிலே
பண்டு மூவர்பதி கத்துலந்தஅறு
பத்து மூவர்கதை தனைஉணர்ந்(து)

அண்ட வாணரடி யார்கள் தம்முடன்
அருந்த வத்தினி லிருந்துபின்
இண்டை வைத்தசடை யம்ப லத்தவர்
எடுத்த பாதநிழல் எய்தினர் "

சைவ சீலர்களே! தமிழ் மக்களே! நீங்கள் உண்மைச் சைவர்களாகவும், தமிழ் மக்களாகவும் இருப்பது உண்மையாயின், அல்லது அப்படி இருக்க விரும்புவது உண்மையாயின் இதுவரை திருமுறைகளைப் பயிலாது மறந்ததை மறந்து விடுங்கள்! இதுவரை பயிலாதிருந்த குற்றத்தை மன்னித்தருளுமாறு இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்! இன்று முதல் திருமுறைகளில் நாள் ஒன்றுக்கு ஒரு பாசுரமாவது படித்துவரத் தொடங்குங்கள்! இராமன் கதை, நளன் கதை, பாரதக் கதை முதலிய சரிதங்களை எவ்வளவு விவரமாக உங்கள் பெண்மணிகளும் கூட அறிந்துள்ளார்களோ அதில் ஒருகூறுவது நமது திருமுறைகளையும் அவற்றை அருளிய பெரியார்களையும் மங்கையர்க்கரசியார் திலகவதியம்மையார் முதலிய பெரியார் சரிதங்களையும் உங்கள் சிறுவர் சிறுமிகளும் பெரியார் பெருமாட்டிகளும் கற்றுணரும்படி செய்யுங்கள்! பாட்டுகளைப் படித்துணர இயலாதவர்கள் ஆறுமுக நாவலரவர்கள் எழுதிய அறுபத்து மூன்று நாயன்மார் புராண வசனம் முதலியவற்றை வாசியுங்கள்! வசனம் படித்தாலும் எல்லாரும் திருமுறைப் பாட்டுகளில் இயன்றவரை பாராயணம் செய்து வாருங்கள்! நீங்கள் பயில்வதுடன் உங்கள் அன்புக்குக் கட்டுப்பட்ட, பிறர் எல்லாரையும் பயிற்றுங்கள்! இவற்றைப் பயில்வதற்காக இறைவன் தந்த உங்கள் ஆயுள் நாட்களில் ஒவ்வோர் நாளும் ஒரு சிறிது நேரத்தை ஒதுக்கிவையுங்கள்! தினம் அரை நாழிகையேனும் இத் திருமுறைகளுக்குக் கொடுங்கள்! அவ்வாறு பேசாத நாட்கள் பிறவா நாட்களாய்க் கழிந்து போவதை உணருங்கள். இத்திருமுறைகளைச் சித்திரை மாதமுதலில் தொடங்கிப் பங்குனிமாதஇறுதியிற் பூர்த்தி செய்யுமாறு வகுத்து ஆண்டுதோறும் முற்றும் பாராயணஞ்செய்து வருதல் சிறந்த நியதியாகும். இவ்வாறு செய்துவரும் பல அன்பர்களை இன்னும் தமிழ் நாட்டில் காணலாம். தேவாரங்கள் முழுமையும் தினந்தோறும் பாராயணஞ் செய்ய ஆசைகொண்ட சிவாலய முனிவருக்கு அகத்திய முனிவர் இருபத்தைந்து திருப்பதிகங்களைத் திரட்டித்தந்தனர். அவற்றை நாள்தோறும் பாராயணம் செய்து சிவாலய முனிவர் தேவாரம் அடங்கன்முறை முழுமையும் பாராயணஞ்செய்த பயனை அடைந்தார். அதுவே அகத்தியர் தேவாரத்திரட்டு எனப் பெறும். இவ்வரலாற்றினால் திருமுறைப் பாராயணத்தின் அருமையும் பெருமையும் நன்கு விளங்கும். நாள்தோறும் திருமுறைகளை விதிப்படி பூசித்து நாள் ஒன்றுக்கு ஐம்பது பாசுரங்கள் சராசரி வாசித்துப் பாராயணம் செய்து வந்தால் ஓர் ஆண்டளவில் பன்னிரு திருமுறைகளையும் பாராயணஞ் செய்து முடிக்கலாம். திருமுறைகளைப் படித்தும் பயின்றும் பாராயணஞ் செய்தும் இம்மை மறுமை வீடு என்ற மும்மைப்பயன்களையும் பெற்றுய்வீர்களாக!! இதற்கு அருளே திருமேனியாக உள்ள சிவபெருமான் திருவருள் புரிவாராக.!!!

" என்றும் இன்பம் பெருகும் இயல்பினா
லொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்."



# திருவாசகம்

வித்வான் - மறை. திருநாவுக்கரசு

" பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசகம் அதற்கு வாச்சியர்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே "
—சிவப்பிரகாசர்.

உயிர்கள் இறைவனை அடைந்து பேரின்பம் நுகர்தற்கு வழிகாட்டிகளாக உலகில் பல சமயங்களிலிருந்தும் தோன்றிய செய்யுள் நூல்களில், திருவாசகம் ஒன்றே ஒப்புயர் வற்றதாம். இதற்கு மேலே காட்டிய செய்யுளே போதிய சான்றாகும். அன்றியும், கிறித்துவரும், அதிலுங் கிறித்துவச் சமயத்தை இந்தியாவில் பரப்ப வேண்டுமென்னும் எண்ணமும் விருப்பமும் உடைய பாதிரியாரும், மேனாட்டு வெள்ளையரும் ஆகிய டாக்டர் போப் என்னுந் துரைமகனாரும் முன்சொன்ன கருத்தை வெளிப்படையாகப் போற்றிக் கொண்டதுடன் நில்லாமல், தெய்வத் தமிழ் மறையாந் திருவாசகத்தைப் பயின்று உலகமெலாம் உய்யவேண்டுமென்னுங் கருத்தினாலே அதனைத் தம்தாய் மொழியாகிய ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தாரென்றால், அதற்கு வேறு சிறந்த சான்றும் வேண்டுமோ? திருவாசகத்தைப் பற்றிச் சிறப்புடன் பேசி மகிழுதற்குச் சிவப்பிரகாச அடிகள், இராமலிங்க அடிகள் போன்ற மிகச் சிறந்த மெய்ஞ்ஞானிகள் செய்துள்ள பாக்களே போதுமானவை. இருப்பினுந் திருவாசகத்திற் பேரன்பு கொண்டு புலமையுடன் ஆழ்ந்து நோக்கின், அரும்பெறல் மணிகள் அளவின்றி மல்கிக் கிடக்கக் காணலாம். இவ்வளவுடன் மெய்யுணர்வுங்கொண்டு காண்போர் சிவபிரானையே நேரில்காணும் ஆற்றல்பெறுவர். அஃதொன்றும் வாய்க்கப்பெறாத அடியேன் என் சிற்றறிவுகொண்டு அன்பின் துணையால் "திருவாசகம்" என்ற கட்டுரையை நம்சைவசித்தாந்த சபையாரின் கட்டளைப்படி மகிழ்வுடன் எழுத முற்பட்டேன். இத்துறையி லிறங்கினமைக்காக அறிஞர்களென்னை மன்னிக்க வேண்டுகின்றேன்.

திருவாசகம் என்ற தொடரில் இரண்டு சொற்களுள. திரு என்பது சிறப்பைக்குறிக்கும் பலபொருள் கொண்ட ஒரு சொல். அஃது இங்கு வாசகமென்னுஞ் சொல்லைச் சிறப்பித்தற்கு அடையாக முன்வைக்கப்பட்டது. வாசகமென்பதற்குச் "சொல்" என்று பொருள். சிறந்த இனிய அழகிய பலசொற்களைத் தன்னகத்தே கொண்டுள்ள நூல் திருவாசகம் எனப்பட்டது. இது ஆகுபெயராம். மணிவாசகப் பெருந்தகையாரின் மாண்புகளெல்லாம் ஒன்று சேர்ந்தால் திருவாசகமாம். திருவாசகத்தின் மாண்புகளெல்லாம் ஒன்று சேர்ந்தால் மணிவாசகப் பெருந்தகையாம். ஆதலால், திருவாசகத்தைப்பற்றிப் பேசுவன எழுதுவன வாதவூரடிகளாரைப்பற்றியதே என்று கூறுதல் மிகையாம். திருவாசகம் மிக உயர்த்துப் பாராட்டப்படுதற்குக் காரணம், அதன் ஆசிரியர் சொல்லும் பொருளுங் கடந்த சுடராம் அம்மையப்பரை (கடவுளை) நனவில் நேரே கண்ணாரக்கண்டு அவர் தம் இலக்கணங்களையெல்லாம் மனங்குழைந்து, இன்பவயத்தராய்க் கேட்டார், அன்பால் மனம் நெகிழ்ந்துருகப் படிப்பார் கண்களில் நீர் மல்கித் தம்மை மறக்கும் வண்ணம் தெள்ளத் தெளியப் பாடியிருத்தலினாலேயாம் என்க.

இனிக் கடவுளின் இலக்கணத்தை உள்ளவாறு எடுத்துச் சொல்லுதல் எவராற் கூடுமென்றால் கடவுளை நேரே கண்டவராலே தான் கூடும். கடவுளை நேரே காணப்பெறாதவரால் கூடப் பெறுதென்பதற்குக் கிறித்து, மகம்மது முதலியவர்கள் கடவுளுக்கு உருவமே இல்லையென்றும், வைணவர் துன்பத்திற்கும், அறியாமைக்கும் இடமாகும் பிறப்பு இறப்புக்களில் அகப்பட்டு இறைவர் உழலுவார் என்றும், சுமார்த்த ஏகான்ம

வாதியர் தாமே கடவுள் என்னும் கடவுளிலக்கணத்தைப் பிழைபடக் கூறுவதே தகுந்த சான்ருகும் என்க. மற்று நம் மணிவாசகப் பெருந்தகையோ முற்கூறியபடி கடவுளை நேரே கண்டவராவர். அதற்கு அவர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்திலேயே அகச்சான்றுகள் பலவற்றைக் காணலாகும். அவற்றிற் சில: 'கண்ணுலியானுங் கண்டேன் காண்க', 'கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன்.'

ஓரழகிய மாளிகையை நேரே கண்டவர் அதன் அமைப்புக்களை நன்கெடுத்துக் கூறுவதுபோல நம்பிரானும் நன்கெடுத்தியம்புவார். சிவபிரான் அம்மையுடன் வந்து தம்மை ஆட்கொண்டதை மட்டும் ஒன்பது இடங்களில் அருளிச் செய்கின்றார். அவற்றிற் சில :

" கனவேயுந் தேவர்கள்
காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத்
தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப்பிடித்(து)
ஆண்டுகொண்டவா நயந்துநெஞ்சஞ்
சினவேற் கண்ணீர்மல்கத்
தெள்ளேணங் கொட்டாமோ "

" கருவாய் உலகினுக்(கு)
அப்புறமாய் இப்புறத்தே
மருவார் மலர்க்குழன்
மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில்
அந்தணனாய் ஆண்டுகொண்ட
திருவான தேவற்கே
சென்றூதாய் கோத்தும்பீ !"

இவைகளை விளக்கின் விரியுமாகலின் இதனைப் படிப்போர் ஆழ்ந்து ஊன்றிப் பார்க்க வேண்டுகின்றேன். இங்கெடுத்துக் காட்டிய மேற்கோள்களிலிருந்து வாதவூரர் இறைவனை இறைவியொடு கண்டமை நன்கு விளங்குதலால் அவர்தந் திருவாசகத்தில் கடவுளிலக்கணம் உள்ளவாறே எடுத் தருளிச் செய்யப்பட் டிருப்பது இயல்பேயாகும். அவ் விலக்கணங்களுக்குச் சில எடுத்துக் காட்டுகள்,

" விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும்
மிக்காய் விளங்(கு)ஒளியாய்
எண்ணிறந்து எல்லை
இலாதானே !......

* * *

ஓங்கார மாய்நின்ற விமலா !

* * *

வேதங்கள் ஐயாஎன ஓங்கி
ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய்
இயமான னாம்விமலா

* * *

மெய்ஞ்ஞான மாகி
மிளிர்கின்ற மெய்ச்சுடரே

* * *

ஆக்கம் அளவுஇறுதி
இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய்
அழிப்பாய் அருள்தருவாய்

* * *

மாற்றம் மனங்கழிய
நின்ற மறையோனே

* * *

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

* * *

சோதியனே துன்னிருளே
தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம்
நடுவாகி அல்லானே

* * *

கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற்
கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே
நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும்
புணர்வுமிலாப் புண்ணியனே "

—**சிவபுராணம்.**

இங்கு கூறப்பட்ட மேற்கோள்களில் கடவுளின் எண் குணங்களும் அடங்குமாறு காணலாம்.

இனித் திருவாசகம் ஒப்புயர்வற்ற நூலென்றதற்கு முதன்மையான காரணமாய கன்னெஞ்சங் கரைந்துருகுமாறு மிக உயர்ந்த நிலையினின்றும் பாடப்பட்ட செய்யுட்கள் சிலவற்றைக் காண்போமாக. அடியிற் காணும் நான்கு செய்யுட்கள் உடம்பின் இழிவுகளையும், மக்களின் குற்றங்களையும், சிவபெருமான்தன் பேரருளுடைமையையும், தன் தனிமையையும், தன்னை யாட்கொண்டு காத்தருளவேண்டு மென்பதையும் சிவபிரானிடத்தில் நேரே முறையிட்டுக் கொள்வனபோன்று மனம் புழுங்கி உரைக்கப்பட்டிருப்பது விளக்கமாம்.





" பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந்(து)
உளுத்(து)அசும் பொழுகிய பொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதிநின்(று)
இடர்க்கடல் சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் னடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே "

" வெஞ்சே லனைய கண்ணார்தம்
வெகுளி வலையி லகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச் சுடரே
நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா
பவளத் திருவாயால்
அஞ்சே லென்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே "

"....... ..........................
யான் பாவியேன்
புழுக்க ணுடைப் புன்குரம்பைப்
பொல்லாக் கல்வி ஞானமிலா
அழுக்கு மனத்(து) அடியேன்
உடையாய்உன் னடைக்கலமே "

" வெறுப்பனவே செய்யுமென்
சிறுமையைநின் பெருமையினாற்
பொறுப்பவ னேஅராப் பூண்பவனே
பொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு
ளால்என் பிறவியைவேர்
அறுப்பவனே உடையாய்
அடியேன்உன் னடைக்கலமே "

சிவபிரானிடத்தில் தன் னிழிவுகளை வெளியிட்டு அதனால் தன்னை ஒதுக்க வேண்டாமென்று வாதவூரர் செய்யும் நீத்தல் விண்ணப்பம் திருவாசகத்திலே உருக்கம் மிகுந்த சிறந்த பகுதியாம். அவற்றிற் சில,

" பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச்
சுருக்கும் அன்பின்
வெற்றடி யேனை விடுதி கண்டாய்
விடிலோ கெடுவேன்
மற்றடி யேன்தன்னைத் தாங்குந
ரில்லைஎன் வாழ்முதலே
உற்றடி யேன்மிகத் தேறிநின்
றேன்எனக் குள்ளவனே "

" என்னை அப்பா அஞ்சல் என்பவர்
இன்றிநின்(று) எய்த்தலைந்தேன்
மின்னை ஒப்பாய் விட்டிடுதி கண்டாய்
உவமிக்கின் மெய்யே
உன்னை ஒப்பாய் மன்னும் உத்தர
கோசமங்கைக் கரசே
அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன்
ஒப்பாய்என் னரும்பொருளே "

" கொம்பர் இல்லாக் கொடிபோல்
அலமந்தனன் கோமளமே "

' நினைப்பரிய தனிப் பெரியோன் ' ஆகிய நம் சிவபெருமான் தமக்குக்காட்சி அளித்து மறைந்துவிட, அவர் பிரிவாற்ருது அடிகளார் கதறியும், அலறியும் அருளிச் செய்த வாசகங்கள், கட்டழகுங் காதலுஞ் சான்ற தலைவனைத் தலைக்கூடப்பெற்ற கற்பிற் சிறந்த காதலி அத்தலைவனைத் தலைக்கூடிய சின்னாளில் இழந்தனளாயின் அவள் எத்துணை ஏக்கங்கொண்டு துன்பத்துடன், காண்போர் கேட்போர் அகங்குழைந்துருகப் புலம்புவளோ அதுபோலவே இருக்கின்றன. அவைகளுட் சில,

" அறுக்கி லேன்உடல் துணிபடத் தீப்புக்
கார்கி லேன்திரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேன்உடல் போக்கிடங் காணேன்
போற்றி போற்றிஎன் போர்விடைப் பாகா
இறக்கி லேன்உனைப் பிரிந்தினி திருக்க
என்செய் கேன்இது செய்கஎன் றருளாய்
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே "

" மாய னேமறி கடல்விடம் உண்ட
வான வாமணி கண்டத்தெம் அமுதே
நாயி னேன்உனை நினையவும் மாட்டேன்
நமச்சி வாயஎன் றுன்னடி பணியாப்
பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய ளுகிநின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே "

"முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்து
நான் முட்டிலேன் தலைகீறேன்
இனையன் பாவனை இரும்புகல் மனஞ்செவி
இன்ன தென்(று) அறியேனே.

ஓய்வி லாதன உவமனில் இறந்தன
ஒண்மலர்த் தாள்தந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படும்
என்னைநன் னெறிகாட்டித்
தாயி லாகிய இன்னருள் புரிந்தஎன்
தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன்
செழுங்கடல் புகுவேனே"

" உரியேன் அல்லேன் உனக்கடிமை
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதுந்
தரியேன் நாயேன் இன்னதென்
றறியேன் சங்கரா ........"

" அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேல்
என்பார் ஆர் இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே
பொன்னம்பலக் கூத்தா........"

இவ்வுலகில் தமக்கு யாதொன்றும் வேண்டுவதில்லை ; வேண்டுவன சிவபிரான் ஒருவனிடத்து உருக்கமான அன்பும், வரையறை இறந்த பேரன்பு மாகும் என்றடிகளார் அருளிச் செய்த வாசகங்கள் சிலவற்றைக் காண்போமாக.

" உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங்
கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே "

" அறவே பெற்றார் நின்னன்பர்
அந்தமின்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்புகின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
போா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா
மாளா இன்ப மாகடலே"

சிற்றின்பத்திற் கட்டுண்டு நுகர்ந்தார் அத்துடன் அமையாராய் அதனை மேன் மேலும் நுகரவே தலைப்படுவர். அது போலவே பேரின்பத்தினைக் கண்டவர்கள் அதனையே பெரிதும் விரும்பி முயல்வர். இங்குக் குறிப்பிடும் பேரின்பம் சிவபெருமானுவர். அவர்பால் தமக்கிருக்கும் பேரன்பு போதாதென எண்ணியே போலும் நம்பெருமான் வாதவூரர், மேலும்மேலும் அவர் திருப்பேரைச் சொல்லிச் சொல்லி 'அவருடன் என்று ஒன்றுபட்டு நிற்பேன்' என்று மனங் கரைந்து கரைந்து ஏங்கி ஏங்கிப் புணர்ச்சிப்பத்தில் மொழிந்தருளிய வாசகம் ஒன்றை இங்குக் காட்டுவாம்.

" ஆற்ற கில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்தைம் புலனாய
சேற்றி லழுந்தாச் சிந்தை செய்து
சிவனெம் பெருமா னென்றேத்தி
ஊற்று மணல்போல் நெக்குநெக்
குள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே "

உண்மையான வீரம் எவரிடத்திற் காணப்படுமென்றால் ; உண்மைப் பொருளை அறிந்து அதனிடத்தே தன் உடல்பொருள் ஆவி மூன்றனையும் வைத்து நிற்கும் உறுதி யாளரிடத்தேதான் அது காணப்படும். எவ்வளவுதான் இடர்ப்பாடுகள் வந்தாலுந் தாங்கண்ட உண்மைப் பொருளிடத்து அவர்கள் கொண்ட உறுதியான மெய்யன்பை மாற்றவே முடியாது. அவற்றிற்குத் திருவாசகத்திலிருந்து சில மேற்கோள்கள்.

" அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே "

" ....................................
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ [வாய்
எனக்கோர் துணைஎன நினைவனோ சொல்
மழவிடையானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே "

" கற்றறியேன் கலைஞானம்
கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம்
வாக்கியலால்.........."

" புற்றில்வாள் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும்ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே "

" இக்காயம் நீக்கி இனியொரு காயத்துள் புக்குப் பிறவாது போம்வழி தேடுமின் "



" வாளுலாம் எரியும் அஞ்சேன்
வரைபுரண் டிடினும் அஞ்சேன்
தோளுலா நீற்றன் ஏற்றன்
சொற்பதம் கடந்த அப்பன்
தாளதா மரைக ளேத்தித்
தடமலர் புனைந்து நையும்
ஆளலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே "

முற்கூறியபடி உடல்பொருள் ஆவி மூன்றனையும் இறைவனுக்கு ஒப்பித்த மெய்யுணர்வு சான்ற பெரியோர்கள் தாங்காணும் ஒவ்வொரு பொருளிலும், செயலிலும், இறைவனையே கண்டு களிப்பர். சிற்றுயிர்கள் கூட இறைவனைத் தலைப்பட்டுப் பேரின்பம் பெற வேண்டுமென்ப ; செய்யப்படும் ஒவ்வொரு தொழிலும் இறைவனை நினைந்தே செய்தல்வேண்டுமென்ப. இவற்றிற்குத் திருவாசகத்திற் சில மேற்கோள்கள்.

" பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்து
பரந்ததோர் படரொளிப் பரப்பே [ப்
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா.............."

" நாயேனைத் தன்னடிகள்
பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப்
பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென்
செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே
சென்றூதாய் கோத்தும்பீ "

" தினைத்தனை உள்ளதோர்
பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும்
பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக
ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ "

" நாயிற் கடைப்பட்ட
நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந்
தயாவுடைய தம்பெருமான்
மாயப்பிறப்பு அறுத்து
ஆண்டான்என் வல்வினையின்
வாயிற்பொடி அட்டிப்
பூவல்லி கொய்யாமோ "

"இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி [னேய்ச்
எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்ற
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறை
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்தந்த[யான்
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய்"

பின்னிரண்டு பாக்களும் 'பெரியோர்கள் செய்யப்படும் ஒவ்வொரு தொழிலும் இறைவனை நினைந்தே செய்தல்வேண்டும் என்பர்' என்று முன்னே கூறியதற்கு எடுத்துக் காட்டுகளாம். இதற்கு எடுத்துக் காட்டான பாக்களெல்லாம் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, தெள்ளேணம், பொன்னூசல், திருப்பொற்சுண்ணம் முதலியவற்றிற் பரக்கக் காணலாம்.

உமையொரு பாகமுடைய நம்பிரானை முன்னிலைப் படுத்திப் பல பெயர்களால் அவரை அடுக்கி விளிக்குஞ் சிறப்பமைந்த பாக்கள் பல திருவாசகத்தி லுள்ளன. அவை இறைவனோடு நேர் நின்று பேசுவது போன்ற உணர்ச்சியை அளிக்கும். அவற்றிற் சில,

" அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கு
புழுத்தலைப் புலையனேன் தனக்குச் [ம்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே "

* * *

"முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே "

"விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே

* * *

கடைபடா வண்ணங் காத்தெனை ஆண்ட
கடவுளே கருணைமா கடலே "

" அரிய பொருளே அவிநாசி அப்பா
பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதி
செய்வதொன்றும் அறியேனே "

" நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும் "

மற்றுந் திருவாசகம், சிவபெருமானிடமிருந்து தான் பெற்ற கனிந்த இன்பத்தைக் கேட்டார் மகிழ்ச்சியில் திளைப்ப அழகாக எடுத்தியம்பும். அதனைத் திருவண்டப் பகுதியின் கடைசி முப்பத்திரண்டு வரிகளில் விளக்கமாகக் காணலாம். செய்யுட்களும் பல உள. அவற்று ளிரண்டு வருமாறு:—

‘ அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனோர்கைம் மாறு ”

“ அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே ”

உயிர்கள் கட்டற்றுச் சிவபிரானை அடைந்து பிறவியறுத்துப் பேரின்பம்பெறுதற்குத் திருக்கோயில் வழிபாடு, சமய அடையாளங்கள், சரியை கிரியைத் தொண்டுகள் முதலிய இன்றியமையா தென்பதைத் திருவாசகச் செய்யுட்களால் அறியலாம். அவற்றுட் சில,

“ ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் திருக்கோயில்
தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே ”

“ ..................வெண்ணீறு
அணிகிலா தவரைக்கண்டா
லம்மநா மஞ்சுமாறே ”

“ எண்ணிலே திருநாமம் அஞ்செழுத்தும்என்
ஏழைமை யதனாலே ”

இதுவரையில், திருவாசகம் மனங் கரைத்து இறைவனிடத்துப் பேரன்பினை விளைக்கும் அன்பு நூல்களில் தலைசிறந்த தென்பதற்கு அவ் வாசகத்தின் பாக்கள் சிலவற்றிலிருந்து ஒரு சிறிதே எடுத்துக் காட்டப்பட்டன. இஃதன்றித் திருவாசகத்தில் அணி நலங்கள், அகப்பொருட்கள், சித்தாந்தக் கருத்துகள் முதலியன மல்கிக் கிடக்கின்றன. அவைகளை இங்கெடுத்துக் காட்டின் விரியுமென அஞ்சி விடுத்தாம்.

திருவாசகத்திலுள்ள பாக்கள் பல துறைகள் பற்றிப் பாடப்பட்டன. அப் பாக்கள் ஒவ்வொன்றிலும் பத்திச் சுவை ததும்பி நிற்பதற்குக்காரணம்: அஃது அவ்வத்துறைகளில் ஒன்றுபட்டு நின்று அன்புடன் ஆழ்ந்து நோக்கிப் பாடப்பட்டு இருப்பதினாலேயாம். இவ் வொப்புயர்வற்ற திருவாசகத்தினைப் பயிலாமையாலும், அதன்வழி நில்லாமையாலும் நம்மருமைத் தமிழ் நாடு இக்காலத்தில் கேடுகள் அனைத்திலும் பட்டுக் கலங்குகின்றது. இனியாவது நம் நாட்டார் திருவாசகத்தில் தம்உணர்வை நிறுத்தி அன்புடன் நாடோறும் பயில்வாராக. பயின்றால் பத்தியும் இன்பமு மடைவர். அதனை நெட்டுருச் செய்து தூய உடல், தூய உளங்கொண்டு ஒன்றியிருந்து பாடுவாராயின், பெரும் பத்தியும், பேரின்பமும் அவர்க்குண்டாகும். திருவாசகத்தில் பெரும்பான்மையான பாக்கள் மோகன ராகத்திலேயே பாடத்தகுந்த ஓசை பெற்றுள்ளன. அவ்விசையில் அதனைப் பாடுவதே பேரின்பமூட்டுவதாம். மனங் கரைந்து மலங்கெடுக்கும் திருவாசகத்தைப் பயின்று உணர்ந்து உலகம் உய்யுமாக.

“ தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.”



# பெரியபுராண ஆராய்ச்சி

அ. மு. சரவண முதலியார்

(இதன் உரிமை ஆக்கியோர்க்கே உரியது)

## ‘அப்பர்’ என்னும் பெயராராய்ச்சி

பிறைமதிபோல வளர்ந்து நற்பணியாற்றி வருகின்ற தூத்துக்குடி, சைவசித்தாந்த சபையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவுப் ‘பொன்விழா’வின் நினைவுக்குறியாக வெளிப்படுத்தும்‘சித்தாந்தப்பொன்மல’ருக்குப்‘பெரியபுராண ஆராய்ச்சி’என்னுந் தலைப்பைப் பொருளாகக் கொண்டு ஒரு கட்டுரை எழுதியனுப்பவேண்டுமென்று அச்சபையார் அடியேற்குக் கட்டளையிட்டனர். அன்பர் பணியை மறுத்தற்கு அஞ்சி இவ்வினையை மேற்கொண்டேனேயன்றி, மற்று என் கல்வி முதலிய பிறவாற்றானன்று என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

‘பெரியபுராண ஆராய்ச்சி’ என்பது பல பகுதிகளாகப் பிரித்து மிக விரிவாக எழுதி ஒரு நூலாகச் செய்வதற்கு இடந்தருவதொன்று. அப்பாகுபாடுகளுள் தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருந்தகை ‘உய்த்துணரவைப்பு’ (பல விதிகளைக் கொண்டு ஒன்றினை ஆராய்ந்து முடிவு கட்டுதல்) என்னும் உத்தியைக் கொண்டு கூறியிருப்பனவற்றுள் ‘அப்பர்’ என்னும் பெயரும் ஒன்றாதலின் அதுவே இக்கட்டுரையில் விளக்கப்படுவதாயிற்று. படிப்போர்க்கு அறிவு பெருகல் வேண்டி இவ்வுத்தியை மேற்கொண்டு கூறுவது பண்டைப்புலவர் பெருமக்கட்கு இயல்பென்பதை ‘மாணாக்கர்க்கு உணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக் கூறாது உய்த்துணர வைத்தல் அவர்க்கியல்பு’ எனத் தொல்காப்பியம் சொல்லதிகாரம் முதற் சூத்திரத்தின் உரையில் இளம்பூரணரைப்பற்றிச் சேனாவரையர் கூறியவாற்றானும் உணர்க.

திருநாவுக்கரசர் முதன் முதலாகத் திருஞானசம்பந்தரைப் பார்க்கப்போனபோழ்து பிள்ளையாரும் எதிர்கொண்டு செல்ல, வாக்கரசர் வந்து வணங்கியமையும், ஞானமுதல்வர் எதிர் வணக்கஞ் செய்து ‘அப்பரே’ என அழைத்தமையும் அவர் ‘அடியேன்’ என்று அருளினமையுமாகிய இவற்றை,

“ தொழுதணைவுற் றண்டவர சன்புருகத்
தொண்டர்குழாத் திடையே சென்று
பழுதில்பெருங் காதலுட னடிபணியப்
பணிந்தவர்தங் கரங்கள் பற்றி
எழுதரிய மலர்க்கையா லெடுத்தி றைஞ்சி
விடையின்மேல் வருவார் தம்மை
அழுதழைத்துக் கொண்டவர்தா மப்பரே
யெனஅவரு மடியே னென்றார் ”

என்னுஞ் சிறந்த பாட்டாற் குறிக்கின்றார் சேக்கிழார். ஆளுடைய பிள்ளையார் இங்கு ‘அப்பரே’ என அழைத்ததோடமையாது வாக்கரசினைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவ்வாறே அழைத்தார் எனவும், அப்பெரியாரைப் படர்க்கையில் வைத்துப் பேசும்போதும் ‘அப்பர்’ எனவே கூறினார் எனவும் தொண்டர் சீர்பரவுவார் பெரியபுராணத்துக் கூறுகின்றார். ‘அவ்வாறு கூறுவது எந்தெந்த இடங்களில்’ எனிற் கூறுதும்.

பிள்ளையார் நாவுக்கரசரை முதன் முறை கண்டு அழைத்து வருங்காலை முன்னர்ச் சீகாழியின் கண்ணுள்ள சிவபெருமான் திருக்கோயிலுட்புக்கு இறைவனை இறைஞ்சி, “ சண்பைவரு பிள்ளையார் ‘அப்பர் உங்கள் தம்பிரானாரை நீர் பாடும்’ என்ன”க் கூறியருளியதாகப் ‘பண்பயில் வண்டு’ என்னும் முதலையுடைய செய்யுளாலறிகிறோம்.

பின்னர் ஆளுடைய அரசு திருவாரூரில் தியாகராஜப் பெருமானைத் திருவாதிரை விழாக் காலத்து வணங்கி, திருப்புகலூரை நோக்கி வருங்காலை, ஆங்கு ஆண்டவனை இறைஞ்சி எழுந்தருளியிருந்த காழிவேந்தர் வாக்கரசரை வரவேற்க எதிர்கொண்டு சென்றனராக; ஆங்கு நிகழ்ந்த நிகழ்ச்சியை,

“ திருநாவுக் கரசரெதிர் சென்றி றைஞ்சச்
சிரபுரத்துத் தெய்வ வாய்மைப்
பெருஞான சம்பந்தப் பிள்ளையாரெதிர்
வணங்கி அப்பரேநீர்

*வருநாளிற் றிருவாரூர் நிகழ்பெருமை*
*வகுத்துரைப்பீ ரென்று கூற*
*அருநாமத் தஞ்செழுத்தும் பயில்வாய்மை*
*யவருமெதி ரருளிச் செய்வார் "*

என்னுஞ் செய்யுளால் அறியலாம். இஃது
திருநாவுக்கரசு நாயனர் புராணத்திலுள்
ளது. இந்நிகழ்ச்சியையே திருஞானசம்பந்த
மூர்த்தி நாயனர் புராணத்தில்,

*" மெய்த்திரு ஞானசம்பந்தர் வாக்கின்*
*வேந்தரை நோக்கி விருப்பினலே*
*'**அப்பரை** யிங்கணை யப்பெறும்*
*பேரருளுடை யோம் "*

என அரையரை அப்பர் எனப் படர்க்கை
யில் வைத்துப் பிள்ளையார் கூறியருளிய
தாகத் தெரிகிறது.

இனி, பிள்ளையாரும் அரசருமாகத் திரு
மறைக்காடு சென்று ஆங்கு ஆண்டவன்
முன்னுள்ள திருக்கதவம் திருக்காப்புக்
கொண்டிருக்குஞ் செய்தியை அறிந்த வழி,
புகலியர்கோன் தாண்டகவேந்தை நோக்கி
"உம்பர்பிரானை யுள்புக்குத் தேங்கா திரு
வேம் நேரிறைஞ்சத் திருமுன்கதவந் திருக்
காப்பு, நீங்கப்பாடும் அப்பர் என நீடுந்
திருநாவுக்கரசர் " பாடிஞரென்பது அர
சர் புராணத்தாலறியப்படுவது. இச்செய்தி
பிள்ளையார் புராணத்திலும் "அப்பரே வேத
வனத்தையர் தம்மை யபிமுகத்துத் திரு
வாயில் திறந்துபுக்கே, எப்பரிசும் யாமிறை
ஞ்சவேண்டும்" எனப் பிரமபுரப் பிள்ளை
யார் வேண்டினர் எனக் கூறப்படுகிறது.
நாவுக்கரசர் இறைவன் ஆணையின்படி நள்
ளிரவில் திருவாய்மூருக்குச் செல்ல, அதனை
யறிந்து பிள்ளையாருஞ் சென்றனர் என்று
கூறும் வழி, " அங்கவ ரேகச் சண்பை
ஆண்டகையாரும் ' அப்பர், எங்குற்றது "
எனப் பிள்ளையார் வினவின செய்தி அறியப்
படுகிறது.

பின்னர், பிள்ளையார் ஆலவாய்க்கு எழுந்
தருளுங்காலை, நாவுக்கரையரும் உடன்
செல்ல எழுந்தருளிஞராக ; அதுபோழ்து
"புரமெரித்தார் திருமகனர் அப்பர் இந்தப்
புனல் நாட்டிலெழுந்தருளியிருப்பீ ரென்று
கரகமலங்குவித் திறைஞ்சித் தவிர்ப்பவாக்
கின் காவலருந் தொழுதரிதாங் கருத்தில்
நேர்ந்தார்" என்னுமிடத்தும் பிள்ளையார்
(அப்பர்) எனவிளித்தாரென்று அறிகிறோம்.
இறுதியில் இவ்விரு பெருமக்களும் சந்தித்
தது திருப்பூந்துருத்தி யென்னுந் திருப்
பதியின்கண் ; ஆங்கும்,

*" திருஞான முனிவரசிருந்த*
*திருப்பூந்து ருத்திக்*
*கருகாக வெழுந்தருளி*
*யெங்குற்று **ரப்பரென***
*உருகா நின் றம்மடியே*
*னும்மடிக டாங்கிவரும்*
*பெருவாழ்வு வந்தெய்தப்*
*பெற்றிங்குற் றேனென்றூர் "*

**—திருநாவுக்கரசு நாயனர் புராணம் 396.**

*" அப்பர்தாம் எங்குற்றூர்*
*இப்பொழுதென் றருள்செய்யச்*
*செப்பரிய புகழ்த்திருநா*
*வுக்கரசர் செப்புவார்*
*ஒப்பரிய தவஞ்செய்தே*
*னதலிஞ லும்மடிகள்*
*இப்பொழுது தாங்கிவரப்*
*பெற்றுய்ந்தேன் யானென்றூர் "*

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணம் 935.**

எனப் பிள்ளையார் சொல் வேந்தைப்
படர்க்கையில் வைத்து அப்பர் எனவே
பேசினர் என அறிகின்றோம். எனவே,
திருநாவுக்கரசர் புராணத்தில் ஐந்து இடங்
களிலும், திருஞானசம்பந்தர் புராணத்தில்
ஐந்திடங்களிலும் பிள்ளையார் நாவுக்கரசரை
'அப்பர்' எனக் கூறினர் எனச் சேக்கிழார்
குறிப்பிடுகின்றூர். இவ்வாறு அவர் குறிப்
பதற்குக் காரணம் யாது? அவர் எந்த நோக்
கத்தோடு இங்ஙனம் கூறியிருத்தல் வேண்
டும் என ஆராய்ந்து உண்மை காண்பது
சாலச் சிறந்ததாகும். மேற்கூறிய உத்தி
யைக்கொண்டு இதுபோலவே சேக்கிழாரற்
கூறப்பட்ட பிறிதொன்றையும் ஈண்டு எடுத்
துக் காட்டுவது பொருந்துவதொன்றாகும்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் தம்மைக்
காணவந்த திருநீலகண்டயாழ்ப்பாணரை
நோக்கி " ஐயர் நீர் உளமகிழ விங்கணைந்த
உறுதியுடையோம்" என்று அருளுகின்றூர்.
அவ்வொருமுறை அவரை 'ஐயர்' என
அழைத்ததோ டமையாது திருநாவுக்கர
சரை இறுதிவரை 'அப்பர்' என்று அழைத்
தது போலவே யாழ்ப்பாணரையும் முடிவு
வரையிலும் 'ஐயர்' எனவே அழைக்கின்றூர்





எனச்சேக்கிழார் தெரிவிக்கின்றூர். பிள்ளை
யாரும் பெரும்பாணரும் திருவெருக்கத்தம்
புலியூருக்குச்சென்ற போழ்து பாணர் பரச
மயகோளரியை நோக்கி "அடிகேள், அடி
யேன் பிறந்த பதி இதுதான்" எனக்கூற,
பிள்ளையார் பெருமகிழ்ச்சி யுடையவராய்
" ஐயர் நீரவதரித்திட விப்பதியளவில்
மாதவமுன்பு, செய்தவா றெனச்சிறப்
புரைத்தருளி யச்செழும்பதி யிடங்
கொண்ட " ஆண்டவன் திருக்கோயிலுக்கு
அழைத்துச் சென்றனர்.

பின்னர், அவ்விருவரும் தருமபுரஞ்
சென்ற காலை ஆங்குள்ள பாணரது கிளைஞர்
கள் யாழ்ப்பாணரின் இசையினைக் கொண்
டாட அதனைப் பொறுக்கலாற்றுத பாணர்
ஆளுடைய பிள்ளையாரை வேண்ட, அவ்
வேண்டு கோட்கிணங்கிய அவர் 'யாழ்மூரிப்
பண்பாடினராகப் பாணர் 'இந்த யாழன்றே
என்னுடைய சுற்றத்தார் இங்ஙனம் நினைந்து
பெருமித முறுதற்குக் காரணமாயிருந்தது
எனக்கருதி அதனை முரிப்பதற்கு மேலே
ஓங்குதலும், பிள்ளையார் அவரைத்தடுத்து
" ஐயரே, உற்றவிசையளவினுல் நீர், ஆக்கிய
விக்கருவி யினைத்தாருமென வாங்கிக்
கொண்டு," மீண்டும் " ஐயர் நீர் யாழிதனை
முரிக்குமதென்" என வினவியதாகப்பெரிய
புராணச் செய்யுட்களால் அறிகின்றோம்.
எனவே, பிள்ளையார், இழிந்த மரபினராகக்
கருதப்படும் யாழ்ப்பாணரை நான்கு இடங்
களில் 'ஐயரே' என அழைத்திருக்கின்றூர்.
இன்னும், பிறப்பினுற் பறையராகிய திரு
நாளைப்போவாரை அதனுல் உயர்ந்தவராகக்
கருதப்படுகின்ற தில்லைவாழந்தணர், ஆண்ட
வன் கனவின்கண் தோன்றிக்கட்டளையிட்ட
வாறே அழைக்கவந்த ஞான்று "ஐயரே!
அம்பலவரருளா லிப்பொழுதணைந்தோம் "
எனக் கூறியதாகக் குறிப்பிடுகின்றூர் சேக்
கிழார் என்னுஞ் செந்நாப் புலவர்.

திருஞான சம்பந்தரும் தில்லைவாழந்தண
ரும் பிறப்பினுல் உயர்ந்தவர்களென்பதும்,
திருநீலகண்ட யாழ்ப்பாணரும் திருநாளைப்
போவாரும் பிறப்பினுல் மிகவுந் தாழ்ந்த
வர்களென்பதும், அவ் வுயர்ந்தவர்கள் இத்
தாழ்ந்தவர்களை 'ஐயரே' என அழைத்தன
ரென்பதும் நோக்க, இஃது ஆராய்ச்சிக்
குரியதொன் றன்றோ? இன்னும் சேக்கி
ழார், ஆண்டவனை 'ஐயர்' எனக் குறிப்பிடு
கின்றூரன்றிப் பிறப்பால் உயர்ந்தவராகக்
கருதப்படும் மறையவர்களை 'ஐயர்' என
யாண்டுங் குறிப்பிட்டா ரில்லை. பிறப்பினுல்
இழிந்த கண்ணப்பரை, "சார்வலைத் தொடக்
கறுக்க, எகும் ஐயர் " என்றும், " ஆணை
யாஞ் சிவத்தைச் சார அணைபவர் போல
ஐயர்" என்றும், இரண்டிடங்களிலே தமது
கூற்றுக வைத்துக் கூறுகிறூர் : இவற்றை
யெல்லாம் நுணித்து நோக்குங்காலை அவ்
வாசிரியர் ஏதேனும் ஓர் சிறந்த கருத்தைக்
கொண்டன்றி இங்ஙனங் கூறியிருத்தல் ஒல்
லாது என்னும் முடிவுக்கு வரவேண்டிய
வர்க ளாகின்றோம். அக் கருத்து யாதா
யிருக்கலாமெனிற் கூறுதும் : 'ஐயர்' என்
பது 'ஐ' என்னும் உரிச்சொல்லடியாகப்
பிறந்த பெயர்ச்சொல். "ஐ - வியப்பாகும்"
என்பது தொல்காப்பியம். எனவே, 'ஐயர்'
என்னுஞ் சொல் வியக்கத்தகுந்த செயற்
கரிய செயலை யுடையவராகிய முனிவர்
களுக்கும் ஒழுக்கம் நிறைந்த விழுப்பெருங்
கேள்வியுடைய மெய்யன்பர்கட்கும் உரிய
தாகும். அவர்க் குரியதாதலை "ஐயர் யாத்
தனர் கரணம் என்ப"து போன்ற இடங்
களில் வைத்துணர்க. எனவே, ஒழுக்கத்
திற் சிறந்தார் எக்குடியிற் பிறந்தாராயினும்
அவரை 'ஐயர்' எனக் கூறுவது பொருந்
துவதன்றி ஓர் மரபினர்க்கே அதனை உரித்
தாக்குதல் பொருந்தாது என்பதே அவ்
வாசிரியர் கருத்தாகுமெனக் கோடலை
யன்றி வேறு புலப்படாமை காண்க.
நூலாராய்ச்சியின் நுட்பம் உணர்ந்தார் இத
னைச் சாதித் துவேஷம் பற்றி எழுதப்
பட்டதெனக் கருதார். பிறர் கருத்து எனக்
குப் பொருளன்று.

இதுபோலவே, அப்பர் என்ற சொல்லும்
வந்திருப்பதனுல் அதனை ஆராய்வோமாக:
பிள்ளையார் அப்பரென்று திருநாவுக்கரசரை
அழைத்தது ஒரு பெயராக இருக்கவேண்டு
மென்று சேக்கிழார் கருதியிருப்பின் அவர்
அந் நாவுக்கரசரைப் பெரிய புராணத்துள்
எங்கேனும் தமது கூற்றுகவாதல், பிள்ளை
யார் ஒழிந்த மற்றவர் கூற்றுகவாதல் அப்ப
ரென்று கூறியிருத்தல் கூடும். அவ்வாறு
யாண்டுங் கூறினரில்லை. அவர் நூலமைப்பு
முறையை நோக்கின், ஒரு பெரியாருக்கு

இட்ட பிள்ளைத் திருநாமத்தை அவருக்கு மற்றொரு பெயர் வருகின்றவரை கூறி, பிறிது பெயர் வந்தவுடனே அப் பெயரைத் தமது கூற்றாக வைத்துக் கூறுதல் இயல்பென்பது பெறப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, திருநாவுக்கரசர் புராணத்தில் மருணீக்கியார் என்ற பிள்ளைத் திருநாமத்தாலேயே அரசரைக் கூறி, அவர் சமண சமயம் புக்குத் தருமசேனர் என்னும் பெயர் தரித்தபின் அப்பெயராலேயே கூறி, பின் அவர் சைவசமயம் புகுந்து தமது சூலை நோய் தீரப் பாடிய காலத்தில் ஆண்டவனால் 'நாவுக்கரசு' என்ற பெயர் போந்ததாகச் சொன்ன அவ்வாசிரியர் அடுத்த செய்யுளிலே தமது கூற்றாக வைத்து "இத்தன்மை நிகழ்ந்துழி நாவின்மொழிக் கிறையாகிய அன்பரும்" எனவும், பிள்ளையார் புராணத்தில் அவர் சிவஞானத்துடன் கலந்த பாலையுண்டு தொடர்பு பட்டமையால் "சிவஞான சம்பந்த ராயினர்" எனக் காரணங் கூறி, அடுத்த செய்யுளில் தமது கூற்றாக, "தவமுதல்வர் சம்பந்தர்" எனவுங் கூறியிருத்தலைக் காணலாம்.

அருண்மொழித் தேவர் நூலமைப்பு முறை இவ்வாறிருத்தலின் அப்பர் என்பது ஒரு பெயராக வழங்கவேண்டுமென்று கருதியிருப்பின் எங்கேனும் தமது கூற்றாக அப்பர் என்று கூறியிருப்பார். கல்வெட்டுக்களிலும் அப்பெயர் காணப்படவில்லை. ஆனால் இற்றைஞான்றோ திருநாவுக்கரசர் என்றால் தெரிந்துகொள்ளாத சிலர் அப்பர் எனின் அறிந்துகொள்கின்றனர். அது அவரது பெயரில்லாவிடின் பிள்ளையார் அங்ஙனம் அழைத்ததின் கருத்தென்னை யெனிற் கூறுதும்:

முதன் முறை இருவருஞ் சந்தித்த காலை, சேக்கிழார் திருஞானசம்பந்தரை 'விடையின்'மேல் வருவார் தம்மை அழுதழைத்துக்கொண்டவர்' என்னும் அடையால் உரைத்து, அவர் 'அப்பரே' என விளித்ததாகக் கூறுகிறார். இது திருநாவுக்கரசர் புராணத்துள்ளது. இனி, விடையின்மேல் வருவாரை எங்ஙனம் அழுதழைத்துக் கொண்டார் எனத் திருஞானசம்பந்தர் புராணத்திலுள்ள அப்பகுதியை நோக்கின் ஆங்கு, "செம்மேனி வெண்ணீற்றான் திருத்தோணிச் சிகரம் பார்த்து அம்மே அப்பா என்று அழைத்தருளினர்" எனக் காண்கின்றோம். எனவே, பிள்ளையாராற் பார்க்கப்பட்டவர் சிவந்த திருமேனியின்கண் திருநீறணிந்த சிவபெருமான். அவரை 'அப்பா' என அழைத்தார். நமது நாவுக்கரசர் பிள்ளையாரைக் காணவந்த போழ்து பிள்ளையார் எதிர்கொண்டு சென்று அவரது தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியையும் சிவவேடப் பொலிவழகையும் கண்டு முறைப்பெயராக 'அப்பரே' என அழைத்தனர். இக்கருத்தைத் தெரித்தருளவே சேக்கிழார் பிள்ளையாரை அவ்வடைமொழியாற் கூறினர். இவ்வொரு ஆதாரவுமட்டும் அன்று; இக்கருத்தைப் புலப்படுத்த இன்னும் பல வகையான ஆதாரவுகள் தருகின்றார் ஆசிரியர்; அவற்றை முறையே காண்போமாக.

பிள்ளையாருக்குப் பூணூல் விழா நடந்த ஞான்று மறையவர்கள் வேணுபுரவேந்தரை நோக்கி 'உமக்கு நான்கு வேதங்களையும் ஓதும் உரிமையைத் தந்தோம்' என்றனர். உடனே ஆங்கு நிகழ்ந்த நிகழ்ச்சியை,

"சுருதியா யிரமோதி யங்க மான
தொல்கலைக ளெடுத்தியம்புந் தோன்ற லாரைப்
பருதியா யிரங்கோடி விரிந்தா லென்னப்
பரஞ்சோதி யருள்பெற்ற பான்மை மேன்மை
கருதியா தரவோடும் வியப்புற் றேத்துங்
கலைமறையோர் கவுணியனார் தம்மைக் கண்முன்
வருதியா னப்பொருளென் றிறைஞ்சித் தாமுன்
வல்லமறை கேட்டையந் தீர்ந்து வாழ்ந்தார்"

என்னுஞ் செய்யுளாலே சேக்கிழார் தெரிவிக்கின்றார். இத்திருப்பாட்டினாலே சீகாழியிலுள்ள சிறந்த மறையவர்களனைவரும் நெடுங்காலமாகத் தியானித்துக் கொண்டு வந்த ஓர் தியானப் பொருள் இப்பொழுது வடிவெடுத்துக் கண் முன்னே வந்தருளியது எனக் கருதிப் பிள்ளையாரை வணங்கி மகிழ்ந்தனரென்பது புலனாகின்றது.

இனி, பிள்ளையார் திருநாவுக்கரசரை எதிர்கொள்ளச் சென்ற காலை, திருநாவுக்கரசரின் சீரிய தோற்றத்தைக் கீழ்வருமாறு சேக்கிழார் எழுதிக் காட்டுகின்றார்; அது,

"சிந்தையிடையறா அன்புந்
திருமேனி தனிலசைவுங்
கந்தைமிகை யாங்கருத்துங்
கையுழவா ரப்படையும்





வந்திழிகண் ணீர்மழையும்
வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத்
தரசுமெதிர் வந்தணைய"

என்பது.

அத்தோற்றத்தைக் கண்ணுற்ற பிள்ளையார் செய்தியை,

"கண்ட கவுணியக் கன்றுங்
கருத்திற்பரவு மெய்க்காதற்
றொண்டர் திருவேட நேரே
தோன்றிய தென்று தொழுதே
அண்டரும் போற்ற அணைந்தாங்
கரசுமெதிர் வந்திறைஞ்ச
மண்டியஆர் வம்பெருக
மதுரமொழி யருள்செய்தார்"

என்னுஞ் சிறந்த செய்யுளாலே சேக்கிழார் தெரிவிக்கின்றார். இப் பாட்டினால் ஆளுடைய பிள்ளையார் தமது திருவுள்ளத்தின்கண் ஒரு சிவவேடத்தை அமைத்து நீண்ட காலமாகத் தியானித்துக்கொண்டு வந்தன ரென்பதும், அத் திருவேடமே ஆண்ட அரசின் திருவேடமாக இருந்தமை கண்டு பெரிதும் மகிழ்ந்து வணங்கின ரென்பதும் அறியக் கிடக்கின்றன. வெங்குரு (சீகாழி)விலுள்ள வேதியரனைவராலுங் கண்முன்வரு தியானப்பொருள் என்று இறைஞ்சப்பெற்ற மறையவர் குலதிலகராகிய மாண்பு மிக்க திருஞான சம்பந்தச் செம்மல், வேளாளகுல திலகராகிய திருநாவுக்கரசரைத் தமது கண் முன்னே வருகின்ற தியானப் பொருளென்று கருதி இறைஞ்சினா ரென்றால் இஃது வியப்பினும் வியப்பன்றோ?

மூன்றாண்டிலேயே இறைவன் திருவருளைப் பெற்றுச் சிவகுமாரராக விளங்கும் திருஞான சம்பந்தப் பிள்ளையார் ஓர் சிவவேடத்தைத் தியானிக்க வேண்டியது என்னையெனிற் கூறுதும்:

அயரா அன்பின் அரன்கழ லடைந்த சீவன் முத்தர்களும் ஒரோவழி, தம்மை வாசனா மலம் வந்து தாக்கிப் பிறவியிற் புகுத்தாவாறு சிவ வேடத்தையும் திருக்கோயில்களையும் சிவனெனவே கண்டு தொழவேண்டுமென்பது அறிவு நூல் முடிபாகும்; இதனை,

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே"

என்னுஞ் சிவஞானபோதப் பன்னிரண்டாஞ் சூத்திரத்தால் உணர்க. சிவஞானமாபாடியக் கர்த்தாவாகிய மாதவச் சிவஞான யோகிகளும் அச்சூத்திரத்து மூன்றாம் அதிகரணத்தில் 'திருவேடத்தினியல்பு,

"தூயவெண் ணீறு துதைந்தபொன்
மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு
சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயு முடையார்
புகுந்தனர் வீதியுள்ளே"

"சிந்தை யிடையறா வன்பும்..........."

"கண்ட கவுணியக் கன்றும்............."

(இவ்விரண்டு செய்யுட்களும் மேலே காட்டப்பட்டன.) என்பவற்றா னறிக' எனத் திருநாவுக்கரசரின் திருவேடத்தையே மேற்கோளாகக் காட்டியது எண்ணி இன்புறற்பாலது.

இனி, திருவள்ளுவர் துறவற வியலில் 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்திற்குப் பின் 'அவாவறுத்தல்' என்ற அதிகாரத்தை வைத்த முறையும், அவ்வதிகாரத் தலைப்பில் "அஃதாவது முன்னும் பின்னும் வினைத்தொடர் பறுத்தார்க்கு நடுவு நின்ற உடம்பும் அதுகொண்ட வினைப் பயன்களும் நின்றமையின், வேதனை பற்றி ஒரோவழி துறக்கப்பட்ட புலன்கண்மேற் பழைய பயிற்சி வயத்தான் நினைவு செல்லுமன்றே? அந்நினைவும் அவிச்சையெனப் பிறவிக்கு வித்தாமாகலின் அதை இடைவிடாத மெய்ப்பொருளுணர்வான் அறுத்தல்" எனப் பரிமேலழகர் எழுதியமையும் ஈண்டுச் சிந்திக்கத் தகுந்தன. "நீதி நின்று நினைவார் வேடமாம் ஆதி" எனவும்,

"மருந்துவேண் டில்லிவை மந்திரங் கள்ளிவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்ளிவை
திருந்துதே வன்குடித் தேவதே வெய்திய
அருந்தவத் தோர்தொழு மடிகள்வே டங்களே"

எனவும் வரும் ஆளுடைய பிள்ளையாரின்

திருவாக்குக்களும் சிவவேடத்தின் சிறப்பினைத் தெரிவித்தல் காண்க.

இனி, நமது நாட்டின்கண் 'ஆணையிடுதல்' என்ற ஓர் வழக்கம் தொன்றுதொட்டு இருந்துவருகிறது. அதனை உலகவழக்கிலும் நூல் வழக்கிலும் பரக்கக் காணலாம். அறிவு விளங்கப்பெறாத சிற்றூர்களில் உள்ள சிறுவர்களுங்கூட ஒவ்வோர் சமயம் "எங்களப்பராணை, எங்கள் சாமியாணை, நாங்கள் இதைச் செய்தே தீருவோம்" எனச் சொல்லக் கேட்கின்றோம். அவ்வாறு அவர்கள் தமது தந்தைமீதும் இறைவன்மீதும் ஆணையிடுவானேன் என நுனித்து நோக்கின், மக்கள் ஆணையிடுங்கால், தமது உயிரினுஞ் சிறந்ததொரு பொருளின்மேற்றான் ஆணையிடுவர் என்னும் முடிவுக்கு வருதல் கூடும். இவ்வழக்கம் தோன்றியகாலத்து இவ்வுயர்ந்த கருத்துடன் தோன்றி நாளடைவில் நமது நாட்டு வழக்கப்படி அக்கருத்துத் தொலைந்து வெறுஞ் சொல்லளவில் வழங்கலாம். 'எங்களப்பராணை' எனச் சொல்லும் ஒருவன் தனது தந்தையின் இறுதிக்காலம் விரைவில் நேரவேண்டுமென்று கருதி அதற்கு நல்வரவு கூறுபவனாக இருக்கலாம். எனினும் அதன்மூலத்தை நோக்குமிடத்து மேற்கூறிய முடிபையன்றி வேறு வழியில்லையென்பது நன்கு பெறப்படும்.

இனி, அங்ஙனம் ஆணை கூறுமிடத்தும் சாத்தன் என்பவன் கொற்றன் என்பானை நோக்கி 'நான் இக்காரியஞ் செய்தே தீருவேன்' எனக் கூறுங்கால் ஆணையிட நேரின் தனது உயிரினுஞ் சிறந்ததொரு பொருளாக எதனைக் கருதியிருக்கின்றானோ அதன்மேல் ஆணையிட்டுக் கூறுவன். அச்சாத்தனே கொற்றனை 'நீ இஃது செய்தே தீரவேண்டும்' எனக் கட்டளையிடுங்கால் அக்கொற்றன், தனது உயிரினுஞ் சிறந்ததாக எதனைக் கருதியிருக்கின்றானோ அதன்மேல் ஆணையிட்டுக் கூறுவன். எனவே, சாத்தன் ஒருவனே, தன்னாற் செய்யப்படுதலும் கொற்றனாற் செய்யப்படுதலுமாகிய நிகழ்ச்சி வேறுபாட்டால் ஆணையிடுதலிலும் வேறுபடுவான் என்ற உண்மையை நன்கு உணர்தல்வேண்டும். இதனை நூல் வழக்கில் வைத்துக் காட்டுவோமாக.

கைகேயி என்பாள், தன் புதல்வனாகிய பரதன் நாடாளுதலும் இராமபிரான் காடாளுதலுமாகிய எண்ணத்தை உட்கொண்டவளாய், தன் நாயகனாகிய தசரதனிடத்து அதனைக் கூறாது கவலையுற்றிருந்தனள். அவள் எண்ணத்தை உணராது கவலையை மட்டும் உணர்ந்த தசரதன் கூறியதைக் கம்பர் தமது கவின் மொழிகளால் விளக்குகின்றனர்; அது,

"கள்ளவிழ் கோதை கருத்துணராத மன்னன்
வெள்ள மிகுஞ்சுடர் மின்னினென்ன நக்கான்
உள்ளமுவந்தது செய்வனொன்று லோபேன்
வள்ள லிராமனுன் மைந்தனாணை யென்றான்"

என்பது. ஈண்டுத் தசரதன் கைகேயினிடம் 'நீ விரும்பியதைக் கூறு; அதனைக் கொடுத்தற்கு யான் சிறிதும் உலோபத்தனஞ் செய்யேன். இராமன்மேல் ஆணை' எனக் கூறுதற்குக் காரணமென்னை? மன்னன் தன் இன்னுயிரினுஞ் சிறந்தவனாக இராமபிரானைக் கருதியதனாலன்றோ? அக்கருத்தை யுடையவனாயிருந்ததனாலன்றோ இராகவன் பிரிந்தவுடனே சக்கரவர்த்தியின் உயிரும் பிரிந்தது. அம்மன்னனுக்கு மகனாகிய இராகவனைத் தவிர வேறு உயிர் இல்லையென்பதைக் கைகேயி தன்வரத்தைக் கேட்டவுடனே தசரதன் செயலைக் கூறும் பகுதியில் "இந்த நெடுஞ் சொலவ்வேலை கூறுமுன்னே, வெந்த கொடும் புண்ணில் வேல் நுழைந்ததொப்ப, சிந்தை மயங்கித் திகைத்தயர்ந்து வீழ்ந்தான்," "மைந்தனலாதுயிர் வேறிலாத மன்னன்" என்னுஞ் செய்யுளாலே கம்பநாடர் விளக்குகின்றார். கைகேயி தனது எண்ணத்தைத் தெரிவித்த அளவில் அரசன் மூர்ச்சையாகிக் கீழே வீழ்ந்துவிட்டனன்; வீழ்ந்தவன் சிறிது நேரஞ் சென்று உணர்ச்சி பெற்று விழித்துப் பார்க்குங்காலை, கைகேயி தனது நிலையினின்றும் ஒரு சிறிதுந் தளராதிருத்தலைக் கண்ட வேந்தன் வியந்து கூறியது,

"இந்நிலை நின்றவள் தன்னையெய்த நோக்கி
நெய்ந்நிலை வேலவன் நீ திசைத்த துண்டோ
பொய்ந்நிலை யோர்கள் புணர்த்தவஞ்சமுண்டோ
அந்நிலைசொல் எனதாணை உண்மையென்றான்"

என்பது.

முன்னர் இராமன் மேல் ஆணையிட்ட அரசன் பின்னர்த் தன்மீது ஆணையிடுதல்





இங்கு நோக்கத்தக்கதாகும். 'நான் கொடுப்பேன்' எனக் கூறியபோழ்து அது தன் செயலாதலின் 'இராமன் மீது ஆணை' என்றான். பின்னர் மனைவியை நோக்கி 'நீ உண்மையைச் சொல்' என வினவிய காலை, சொல்லுதல் அவள் செயலாதலின் அவளது உயிரினும் இனியவனாக அவளாற் கருதப்படுகின்ற தன்மீது ஆணையிட்டுக் கூறினன்.

இனி, இராவணனால் அசோக வனத்திற் சிறைப்படுத்தப்பட்டிருந்த சீதாபிராட்டி, தன்னைக் காணுதற்கு வந்த அநுமானிடத்தில், தன் நாயகனுக்குக் கூறுமாறு சொல்லிய செய்திகளுள் ஒன்று,

"இன்னு மீண்டொரு திங்களிருப் பன்யான்
நின்னை நோக்கி யுரைத்தது நீதியோய்
பின்னை யாவி பிடிக்கின்றி லேனந்த
மன்ன னாணை யிதனைமனக் கொள்நீ"

என்பதாகும். கற்புடை மகளிர் தமது உயிரினுஞ் சாலச் சிறந்தவராகத் தமது நாயகரையே கருதுவார்களாகலின், அக்குணத்திலே தலைசிறந்த பிராட்டியார் ஆவியை விடுதலாகிய தன் செயலைக் கூறுங்காலை, தனது இன்னுயிரினும் இனியவனாகிய இராமபிரானைக் குறித்து 'அந்த மன்னனாணை' என்றது மாட்சியுடைய தொன்றன்றோ!

இனி, 'முற்றுந் துறந்த முனிவர்கள் ஆணையிட நேரின் யார்மீது இடுவார்கள்' எனின், அவர்கள் அகப்பற்றும் புறப்பற்றுந் துறந்தவர்களாதலின் தமக்குச் சிறந்தவர்களாகக் கருதப்படும் குரவர் மீதும் இறைவன் மீதுமே ஆணையிடுவார்கள். இவ்வுண்மையை இராமலிங்க அடிகளின் திருவருட்பாவிற் பரக்கக் காணலாம். அவற்றுள் ஒன்று,

"மருவாணைப் பெண்ணாக்கி யொருகணத்தே
கண்விழித்து வயங்கு மப்பெண்
உருவாணை யுருவாக்கி யிறந்தவரை
யெழுப்புகின்ற உருவ னேனும்
கருவாணை யுறவிரங்கா துயிருடம்பைக்
கடிந்துண்ணுங் கருத்த னேலும்
குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை
ஞானியெனக் கூறொ ணாதே"

என்பதாகும்.

திருநீலகண்ட நாயனார், தமது மனைவியாரின் ஊடலைத் தீர்க்கப் பல இன்மொழிகள் கூறி அவரது திருமேனியைத் தீண்டச் சென்ற காலை, அவ்வம்மையார் "தீண்டுவீராயினெம்மைத் திருநீலகண்டம்" என்று அந்நாயனார், தமது உயிரினும் சிறந்ததாகக் கொண்டு இடையறாது போற்றி வந்த திருநீலகண்டத்தின் மீது தீண்டாமையாகிய செயலை அவர் மேற்கொள்ளுதற் பொருட்டு ஆணையிட்டதும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கதாகும். இதுகாறுங் கூறியவாற்றால் எவ்வெக்காலங்களில் எவ்வெப்பொருள் மீது ஆணையிடுவது என்பதை யறிந்தோம்.

நமது திருஞானசம்பந்தப் பிள்ளையார் தமது தந்தையாராகவே கருதித் திருநாவுக்கரசரை 'அப்பரே' என அழைத்து வந்தமையால் ஓரமயம் 'யான் இச்செயலைச் செய்தே தீருவேன்' என்று அவரிடங் கூறுங்காலை அவர் மீதே ஆணையிட நேர்ந்தமைகண்டு களிப்புறுவோமாக.

பிள்ளையார், வளவர்கோன் மகளாகிய மங்கையர்க்கரசியாரின் வேண்டுகோளுக்கிணங்கி மதுரைக்குச் செல்லப் புறப்படுங்காலை, தாண்டக வேந்தர் தடுத்தனரென்பதை,

"ஆயபொழுது திருநாவுக்கரசு
புகலியாண் டகைக்குக்
காயமாசு பெருக்கியுழல்
கலதியமணர் கடுவினைசெய்
மாயைசால மிகவல்லார்அவர்
மற்றென்னை முன்செய்த
தீயதொழிலும் பலகேட்டேன்
செல்லவிசையேன் யானென்றார்"

என்னுஞ் செய்யுளாற் சேக்கிழார் பெருந்தகை தெரித்தருள்கின்றார். அதற்கு மறுமொழியாகப் பிள்ளையார் கூறியது,

"என்றுகூற எல்லையிலா
நீறுபோற்று மிருவரையுஞ்
சென்றுகாணுங் கருத்துடையே
னங்குத்தீங்கு புரியமணர்
நின்றநிலைமை யழிவித்துச்
சைவநெறிபா ரித்தன்றி
ஒன்றுஞ்செய்யே னாணையும
தென்றாருடைய பிள்ளையார்"

என்பதாகும். ஈண்டு 'மதுரைக்குப் போதலாகிய செயலையான் ஒழியேன்' என்பதை

கூறுங்கால், தமது தந்தையாரகவே கருதப்பட்டு வந்த நாவுக்கரையர்மீது ‘ஆணை உமது’ என்று பிள்ளையாரருளியது சாலவும்பொருந்துவதொன்றன்றோ; படிப்போர்க்கு அறிவு பெருகுமாறு இங்ஙனம் உய்த்துணர வைக்கும் ஆற்றல் வாய்ந்த சேக்கிழார் பெருமானுக்கு யாம் செய்யுங் கைம்மாறு என்னே!

இனி, தாதையாரை அழைக்கும் முறைப்பெயர் பல இருக்கவும் ‘அப்பரே’ என்றழைத்ததின் காரணம் யாது என ஆராய்வோமாக. “அப்பர் சோற்றுத்துறை சென்றடைவோமே” “விடையுடையப்பன்” “அல்லல் தீர்க்கும் அப்பனார்” “அங்கம்பூண்டவனுடைய அப்பனுக் கழகியவூர்” “அரக்கனை அடர்த்தருளும் அப்பன்” எனவரும் ஆளுடைய பிள்ளையாரின் திருவாக்குக்களால் அவர் ஆண்டவனை ‘அப்பர்’ என்றே அழைத்தலில் மிகவும் விருப்பமுடையவர் என்பதை உணரலாம். தமது உடற்றந்தையாராகிய சிவபாத இருதயரையும் அவர் ‘அப்பர்’ எனவே அழைத்தனர் என்பதற்குத் தாம் தொண்டைநாடு செல்லக் கருதிய காலை தந்தையாரும் உடன்வர எண்ணினராக; அதுபோழ்து பிள்ளையார் “அப்பர் நீரினியிங்கொழிந் தருமறையங்கிவேட் டன்போடும், துப்புநேர் சடையார்தமைப் பரவியே தொழுதிரும்” எனக்கூறியதே தக்க சான்றாகும். இன்னும் மதுரையிலே தாம் எழுந்தருளியிருந்தகாலை, தம்மைக் காண வந்த தாதையாரைப் பரிசனங்கள் பார்த்து “அப்பர் எழுந்தருளினார்” என வணங்கி அவ்வோகை யுரையைப் பிள்ளையாருக்குத் தெரிவித்தனர் என்று அறிகின்றோம். ஆதீனத் தலைவராயிருப்பவர் எவரையேனும் முறைப்பெயராக அழைத்தனராயின், ஆங்குள்ள அனைவரும் அவரை அவ்வாறே அழைப்பது தொன்றுதொட்டு வரும் வழக்கமாதலின், பிள்ளையார் தந்தையாரை ‘அப்பரே’ என அழைப்பது வழக்கமாயிருந்தது கொண்டு அவர் அடியார்களும் அம்மரபு வழுவாமல் “அப்பர் எழுந்தருளினார்” எனக் கூறிவணங்கினார் எனச்சேக்கிழார் செப்புந் திறமை சிந்தித்து வியக்கற்பாலது. இவ்வாற்றால், பிள்ளையாருக்கு உடற்றந்தை சிவபாத இருதயரென்பதும், உயிர்த்தந்தை உமையொருபாகனென்பதும், அவ்வுயிர்த் தாதையை உணரும் மெய்யுணர்வு நீங்காதிருப்பதற்கு அவர் இடையறாது தியானித்து வழிபடுகின்ற தந்தை திருநாவுக்கரசரென்பதும் பெறப்படுதல் காண்க.

இன்னும் இவ்வுண்மையை வலியுறுத்தற்கு அருண்மொழித் தேவரால் எடுத்தாளப்படும் சொற்றொடர்கள் சில ஈண்டுக் கண்டு இன்புறற்பாலன; அவை,

“பிள்ளையார், அப்பர் உங்கள்
தம்பிரானாரை நீர்பாடீர்”

“பிள்ளையார் எதிர்வணங்கி அப்பரே நீர்”

“புரமெரித்தார் திருமகனார், அப்பர்”

என்பன. இவற்றுள் திருஞானசம்பந்தர் ‘அப்பரே’ என அழைக்கும் பகுதிகளில் சேக்கிழார் தமது கூற்றாக வைத்து அவரைப் ‘பிள்ளையார், மகனார்’ எனக் கூறுதல் காண்க. இன்னும்,

“தெருட்கலை ஞானக்கன்றும் அரசும்”

“அன்ப ரீட்டங் களிசிறப்ப
ஆண்டஅரசும் சிவக்கன்றும்”

“செந்நீர் வாய்மைத் திருநாவுக்
கரசும் புகலிச் சிவக்கன்றும்”

என வருந் தொடர்களில் “அரசு கன்று” என வைத்து ஆசிரியர் தமது கருத்தைப் புலப்படுத்துதல் சிந்தித்து மகிழ்தற்குரிய தொன்றாகும். இன்னும் அவர் அவ்விரு பெருமக்களும் சீகாழித் திருக்கோயிலுக்குச் செல்லுங்காலை, திருஞானசம்பந்தரையும் திருநாவுக்கரசரையும் முறையே “அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம் அன்புசெறி கடலும்” என உருவகப்படுத்துகின்றார். அருள் அன்பினின்றும் தோன்றுதல் முறைபற்றி, அஃது பிள்ளையும் அன்பு தந்தையுமாகும் என்பதை ‘அருளென்னு மன்பீன் குழவி’ என்னுந் திருக்குறளால் அறிக. எனவே திருஞானசம்பந்தரை ‘அருட்கடல்’ என்பதனால் பிள்ளையாராகவும், திருநாவுக்கரசரை ‘அன்புக்கடல்’ என்பதனாலே தந்தையாராகவும் உய்த்துணர வைத்தது சேக்கிழார் ஒருவருக்கே உரிய திறனன்றோ! என்னே! அவர் புலமையின் பெருமை!



இனி, “பிள்ளையார் ‘அப்பரே’ என்றழைத்த கருத்தினைத் திருநாவுக்கரையர் தெரிந்திருந்தனரோ” எனின், நன்கு தெரிந்துள்ளார் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. சிறந்த இரண்டு நண்பர்களுள் ஒருவன் தீநெறியிற் செல்வானாயின், அதனைத் தடுக்கப் புகுந்த மற்றொருவன் தான் நினைத்ததனைச் சொல்லப்புகுமுன் அதனைச் சொல்லுதற்குத் தனக்கு உரிமையுண்டு என்பது தோன்றத் தங்களுக்குள்ள நட்புரிமையைச் சுட்டி ‘ஏ நண்பா!’ என விளிப்பான். அங்ஙனமே ஒரு தந்தையும் அவ்வழிக்கண் செல்லும் தன் புதல்வனை நல்வழியில் நிறுத்தற்பொருட்டு ‘ஏமைந்தா!’ எனத் தனது உரிமை தோன்ற விளித்துப் பின் சில கூறுவான். இவையெல்லாம் உலகியலிற் காணப்படுவன. இவ்வாறே, ஆலவாய் செல்லத் துணிந்த பிள்ளையாரைத் தடுக்கக் கருதிய திருநாவுக்கரசர் செப்பியதை,

“அரசருளிச் செய்கின்றார் **பிள்ளாய்** அந்த
அமண்கையர் வஞ்சனைக்கோ ரவதி யில்லை
உரைசெய்வ துளதுறுகோள் தானுந்தீய
எழுந்தருள உடன்படுவ(து) ஒண்ணாது”

என்னுஞ் செய்யுளாலே சேக்கிழார் தெரிவித்த திறமையை எங்ஙனமறிந்து எவ்வாறு புகழ்வேம்! இவ்விரண்டடிகளாலும் திருநாவுக்கரசர் சிரபுர வேந்தரை நோக்கி “நீர் நெடுநாளாக என்னை ‘அப்பர்’ என்றழைக்கின்றீர். அவ்வாறு அழைக்குங் கருத்தினையானறிவேன்; என்னைத் தந்தையென்னும் உரிமைபற்றி அழைக்கின்றீராதலின் யானும் இதுபோழ்து நீர் செல்லத்துணிந்த அவ்வழியை மைந்தன் என்னும் உரிமைபற்றி மறுக்குங் கடப்பாடுடையேன்” என்று கூறினமை புலனாதல் காண்க. இந்நுட்பத்தை நுனித்துணர்ந்த மாதவச் சிவஞான யோகிகள் தமது சோமேசர் முதுமொழி வெண்பாவில்,

“வாக்கரசர் **பிள்ளாய்** எனவலித்து மாற்றலுற்றார்
தாக்குபிள்ளை யார்செலவைச் சோமேசா—நோக்
நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் [கின்
மேற்சென் றிடித்தற் பொருட்டு”

எனச் செப்புவாராயினர். ஈண்டுச் சேக்கிழார் பெருமான் திருநாவுக்கரசர் கூற்றாகத் திருவாய்மலர்ந்தருளிய ‘பிள்ளாய்’ என்னுஞ் சொல்லையே எடுத்து வைத்தமையும், ‘வலித்து’ என்று கூறினமையும் எண்ணி இன்புறத் தக்கனவாகும்.

இனி, ‘பிள்ளையாரால் இத்துணைச் சிறப்பினராகக் கருதப்பட்ட திருநாவுக்கரையர் அப்பிள்ளையாருக்கு மிகுந்த வணக்கஞ் செலுத்துதலும், அக் காழிக் கன்று ஆரூர் அரசுக்கு அத்துணை வணக்கஞ் செலுத்தாமையும் பெரியபுராணத்துக் காணப்படுகின்றனவே’ எனின், கூறுவேம்: பிள்ளையார் தமது மூன்றாவது ஆண்டிலேயே ஆண்டவன் அருளைப் பெற்ற பின்னர், தம்மை இறைவன் திருக்குமாரராகவே கருதினாரேயன்றி, சிவபாத இருதயர் திருமகனாராகக் கருதவில்லை யென்பது தேவாரத்தையும் பெரியபுராணத்தையும் ஊன்றிப் படித்தார்க்கு நன்கு புலனாவதொன்று. இவ்வுண்மையை,

“அலைமலி தண்புனல்சூழ்ந்
தழகார்புகலிந் நகர்பேணுந்
தலைமக னாகிநின்ற
தமிழ்ஞான சம்பந்தன்”

என அப் பிள்ளையாரே கூறுவதனாலும், ஆண்டவனைப் பலவிடங்களில் ‘அப்பர்’ என்றே கூறுவது அவர் தேவாரத்தாற் பெறப்படுதலானும் நன்கு உணரலாகும். இவைபோன்ற ஆதாரவுகளைக் கொண்டே சேக்கிழார் பெருந்தகையும் திருஞான சம்பந்தரைக் கூறுமிடங்களிலெல்லாம் சிவபாத இருதயர் திருமகனெனக் கூறாமல்,

“இறைவர் திருமைந்தர்”

எனவும்,

“நஞ்சணி கண்டர்தந் திருமகனார்”

எனவும்,

“புரமெரித்தார் திருமகனார்”

எனவும்,

“செய்ய மேனியர் திருமகனார்”

எனவும்,

“சூகரமு மன்னமுமாய்த் தேடினா ரிருவர்க்குந்
தெரிவரியார் திருமகனார்”

எனவும்,

“ஆறு சூடினார் திருமகனார்”

எனவும் கூறியருளினார் என்க.

இனி, பிள்ளையார் இங்ஙனம் தம்மைச் சிவகுமாரராகவே கருதியிருந்ததனாலன்றோ திருநாவுக்கரையரை நோக்கி,

“ அப்பர் உங்கள் **தம்பிரா னுரை**நீர் பாடீர் ”

எனவும், திருநீலகண்ட யாழ்ப்பாணரை நோக்கி,

“ ஏயுமிசை யாழ்உங்கள்
இறைவர்க்கிங் கியற்றும் ”

எனவும் அருளிச்செய்தனர் என்க; என்னை? ஓர் பெருமனையின்கண் உள்ள செல்வப் புதல்வன் ஒருவன், தன் தந்தையார் கட்டளையைத் தன் கீழுள்ளவர்களிடங் கூறுங்கால் “உங்கள் தலைவர் இவ்வாறு கூறினார்” என்று சொல்வானே யன்றி “என் தந்தையார் இங்ஙனம் செப்பினார்” என இயம்புதல் உலக வழக்கு அன்று ஆதலால் என்க. பிள்ளையாரைச் சிவகுமாரராகவே கருதியதனாற்றான் அவர் தாய் தந்தையாகிய பகவதியாரும் சிவபாத இருதயரும் தமது புதல்வனை வணங்கினார்கள் என்னுஞ் செய்தி பெரியபுராணத்திற் பல விடங்களிலுங் காணப்படுகின்றது.

“ தாதையாருமங் குடன்பணிந் தணைந்திட ”

எனவும்,

“ அங்கணைந் தருமறைக் குலத்தாயார்வந்
தடிபணிந்திடத் தாமும்
துங்க நீள்பெருந் தோணியிற் றாயர்தாள்
மனங்கொளத் தொழுவாராய் ”

எனவும் வரும் பெரிய புராணத்து அடிகள் இங்கு நோக்கத்தக்கன. தாயார் வந்து தம்மை வணங்க, தாம் தோணியப்பரது இடப்பாகத்தில் வீற்றிருக்கும் உமையம்மையை வணங்கினார் என்பதும் ஈண்டுப் பெறப்படுதல் காண்க. எனவே, அப்பெருமை யொன்றினாற்றான் ஆண்ட அரசு அவரது திருவடிக்கீழ் வணங்கினாரே யன்றி மரபின் உயர்வுபற்றி அவ்வாறு வணங்கினாரெனக் கொள்ளுந் திரிபுணர்ச்சியை விடக்கடவர். என்னை? அவர்கள் ‘சாதிகுலம் பிறப்பென்னும் சுழி’யினின்றுங் கரையேறியவர்களாதலானென்க. அல்லதூஉம் திருநாவுக்கரசு கருத்து அதுவாயின், தம்மைக் குருவாகக் கருதி யொழுகிய உண்மை அந்தணர்குல திலகராகிய அப்பூதி யடிகளை அவர் தடுத்திருப்பார் என அறிக. ஆயின் ‘பிள்ளையார் ஏன் அங்ஙனம் வணங்கவில்லை’ எனின், தம்மை நாவுக்கரசர் சிவகுமாரராகவே கருதி வணங்குகின்றமையை அறிந்தவராதலின் தாமும் அவ்வாறு வணங்கினால் அவர் மிகவுந் துன்புறுவர் என்று கருதி என அறிக.

திருஞான சம்பந்தர் அடியார்களிடம் வைத்திருந்த பெருமதிப்பைக் காட்டுந் தேவாரங்கள் பல. அவற்றின் ஆதரவுகளைக் கொண்டுதான் சேக்கிழார் இங்ஙனம் உய்த்துணர வைத்தது. கட்டுரையின் விரிவை அஞ்சி அவற்றை ஈண்டுக் காட்டாது விடுக்கின்றோம். அறிஞர் நடுநிலை நின்று உண்மை காண்பாராக.

•

“ வாழிதில்லைமணி மன்றுளென் றுநட மாடுமங்கணர் மலர்ப்பதம்
வாழிகாழிநகர் வாழவந்ததிரு நெறியாதிபதி வள்ளலுன்
வாழியன்பர்திரு நீறுமிட்டதிரு முண்டமுந்துவய கவசமும்
வாழிகுன்றைமுனி சேவையாதிதிரு வாய்மலர்ந்தருள் புராணமே ”

“ முப்ப னைத்திற மூவரிற் காட்டியோர் முதலாய்க்
கப்ப னைத்துமா ருயிரெனக் கவைத்தரு வானோற்
கொப்ப னைத்திரு நாவினுக் கரசெனு மொருபேர்
அப்ப னைத்தொழு தகற்றுது மும்மலத் தவலம் ”



# சுத்தாத்துவிதம்

**கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்.**

**சுத்தாத்துவித** மென்ற சொற்றொடர் சுத்த - அத்துவிதமென்ற சொற்களாலாயது. ‘சுத்த’ என்ற சொல் புனிதத்தைக் குறிக்குமென்று ஒரு சிலர் கூறுவர்.

“பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ ”

என்ற தாயுமானவர் திருப்பாட்டில் “புனிதமெனு மத்துவித”மென்பது சுத்தாத்துவிதத்தைக் குறிக்கும். மலமற்ற மேலான நிலையில் கடவுளோடு அத்துவிதமாயிருப்பது சுத்தாத்துவிதமாகுமென்பது அவர் கொள்கை. ஆணவத்தோடு அத்துவிதமாயிருத்தல் அசுத்த அத்துவிதமாகும். சிவத்தோடு அத்துவிதமாயிருத்தல் சுத்த அத்துவிதமாகும்.

“ஆணவத்தோடத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோடத்துவிதஞ் சாருநாளெந்நாளோ ”

என்றது காண்க. கேவலம், சகலம், சுத்தம் என்ற மூன்று அவத்தையுள் சுத்தமென்பது மலம் நீங்கிய நிலையைக் குறிப்பது போல, சுத்த அத்துவிதமென்பதிலும் அப்பொருள் கொள்ளுதல் இங்கே பெறப்பட்டது. பாம்பன் குமரகுருதாச சுவாமிகளும் இப்பொருளையே வற்புறுத்தினர். அவர் கூறுங் காரணமாவது கேவலாத்துவிதம், விசிட்டாத்துவிதம் முதலிய பிற அத்துவிதக் கொள்கைகள் ஏற்படுவதற்கு முன்னேயே சுத்தாத்துவித சித்தி, மண்டலப் பிராமண உபநிடதத்திற் கூறப்பட்டிருத்தலின் “சுத்த”மென்பதற்குப் புனிதமென்ற பொருளே கொள்ளற்பாலது என்பது.

ஆசிரியர் சிவஞான யோகிகள் ‘சுத்த’ என்பது இயற்கை யடைமொழி யெனக் கொள்வர். அத்துவிதமென்பதின் உண்மையான இலக்கணத்தைச் சைவசித்தாந்த நூல் உணர்த்துதலின் அது கூறும் அத்துவிதம் சுத்தாத்துவிதமென்பர். சுத்த என்ற அடைமொழி இக்கருத்தில் வழங்குதல் தர்க்கநூலிற் காணப்படும் “சுத்த” என்பதற்கு மேற்குறித்த இருபொருளும் கொள்ளத்தக்கனவே. இனி அத்துவிதமென்ற சொல்லைப்பற்றி ஆராய்வாம்.

“ அத்துவித” மென்ற சொற்றொடர் “அத்வைத”மென்ற வடமொழித் தொடரின் திரிபு. “நஞ்+த்வைதம் “என்பது” “ அத்வைத ” மென்றாயிற்று. பாணினீய இலக்கணத்துள் இரண்டா மத்தியாயத்துள் “நஞ்” என்று தொடங்குஞ் சூத்திரத்தைப் பார்க்க. நஞ்+த்வைத மென்பது சந்திவிதிப்படி ஞகரம் கெட்டு நத்வைத மென்றாகி பின்னர், நகர மெய் கெட்டு அத்வைத மென்றாயிற்று. வீர சோழியத்துள் “சொன்ன மொழிப்பொருள் நீக்கு நகாரம் அச்சொல் முன் மெய்யேல், அந்நிலையாக உடல்கெடும், ஆவி முன்னாகில் அது—தன்னிலை மாற்றிடும்” என்று விதித்தபடி, நகர உயிர் மெய்க்குப் பின் மெய்யெழுத்து வந்தால் நகரமெய்கெடும். ந+த்வைதம்= அத்வைதம். அதற்குப் பின் உயிரெழுத்து வந்தால் நகர உயிர்மெய்யிலுள்ள உயிர், நகரமெய்க்கு முன் நிற்கும். (உதாரணம்) ந+அர்த்தம் = ந்+அ+அர்த்தம் = அந்+அர்த்தம் = அநர்த்தம். த்வைதமென்ற சொல் துவிதமென்றே தமிழில் வழங்கும். அதற்கு இருதிறன் என்று பொருள்.

நகரத்திற்கு ஆசிரியர் பதஞ்சலியார் ஆறு பொருள் கூறியுள்ளார். ஆதலால் அத்துவிதமென்ற சொல்லில் அகரத்திற்கு அந்த ஆறுபொருளுங் கொள்ளப்படும். ஆறு பொருள்களாவன : அன்மை, இன்மை, மறுதலை, வேற்றுமை, சிறுமை, பொறையின்மை என்புனவாம்.

**(1) அன்மைப் பொருளிற்கு உதாரணம்:—** “அப்பிராமணன்” என்பது. அப்பிராமணனென்ற சொல் பிராமணனல்லாத பிறிதொருவனைக் காட்டும். பிறப்பால் அப்பிராமணனென்றவிடத்துச் செயலால் பிரா

மணனுக்கு ஒப்பானவ னென்ற பொருள் தொனித்தலால் அச்சொல்லில் அகரத்திற்கு ஒப்புப் பொருள் கொள்ளுதலு முண்டு. அதனை வடமொழியில் சாமியமென்பர். முத்தன் சிவசாமிய மடைகின்ருனென்ருல் ஒருவாறு சிவத்திற்குச் சமானமான நிலையை முத்தன் அடைகின்ருனென்பதே பொருள்.

**(2) இன்மைப்பொருளிற்கு உதாரணம் :-** "அப்பிரகாசம்" அபோசனம் என்ற விடத்து அகரம் இன்மைப் பொருளில் வந்தது. அச்சொற்கள் முறையே பிரகாசமில்லாமையையும் உணவில்லாமையையும் குறிக்குமேயொழிய அப்பிராமணன் என்ற சொற்போலப் பிரகாசமல்லாத பொருளையும் உணவல்லாத பொருளையும் குறிக்க மாட்டா. இன்மையை வடநூலார் அபாவமென்பர்.

**(3) மறுதலைப்பொருளிற்கு உதாரணம் :—** "அதர்மம்," "அசுரர்" என்ற சொற்களாகும். அவைகள் தர்மத்திற்கு விரோதமானவையும் சுரர்க்கு விரோதமானவரையும் குறிக்கும். மறுதலையை விரோத மென்பர்.

**(4) வேற்றுமைப்பொருளிற்கு உதாரணம்:-** அநாகாச: பூமி: என்ற விடத்துப் பூமி ஆகாசத்தின் வேறென்பது பொருளாகும். அன்மைப் பொருள் ஒப்பினைக் காட்டும். பேதப் பொருள் வேற்றுமையைக் காட்டும். வேற்றுமையை அந்யத்வமென்பர்.

**(5) சிறுமைக்கு உதாரணம் :—** அநுதரா கன்யா = அந்+உதரா+கன்யா = சிறுத்த வயிறுடைய கன்னி. இங்கே அந் என்பது சிறுமையைக் காட்டிற்று இன்மையைக் காட்டவில்லை. அல்பமென்பர்.

**(6) பொறையின்மைக்கு உதாரணம் :—** அமரா: தேவா: =தேவர்கள் மரணத்தைத் தாங்காதவர்கள். அபார மென்ற சொல் தாங்கமுடியாத பாரத்தைக் குறிக்குமிடத்து அகரம் பொறையின்மைப் பொருளில் வந்தது காண்க. பொறையின்மையை வடமொழியில் அப்ராசஸ்த்ய மென்பர்.

இவ்வாருகிய ஆறு பொருள்களுள் எண்ணின் பெயர்க்கு முன் வருகின்ற அகரம் அன்மைப்பொருளையே குறிக்கும்; இன்மைப் பொருளைக் குறிப்பதில்லை. ஏகம் என்ற சொல் ஒருமையைக் குறிக்கும் அநேகம் என்ற விடத்து ஒன்றல்லாத இரண்டு மூன்று முதலியவைகளை அச்சொல் குறிக்குமேயொழிய ஒன்றுமில்லாத சூனியத்தைக் குறிப்பதில்லை. அதுபோல, துவிதம் என்ற சொல் இரண்டு என்னும் எண்ணைக் குறிப்பதனுல் அத்துவித மென்ற சொல் இரண்டன்மையையே குறிக்கும். அத்துவித மென்பதில் அகரத்திற்கு இன்மைப்பொருள் கொண்டால் இரண்டின்மையென்பது ஒன்றைமாத்திரமே குறிக்கும். அநேகமென்பதற்கு எவ்வாறு பொருள் கொள்ளப்பட்டதோ அவ்வாறே அத்துவிதமென்பதற்கும் பொருள் கொள்ளுவதே முறை. இரண்டல்ல என்ற விடத்து ஒன்று மூன்று முதலிய எண்கள் உய்த்துணரக் கிடத்தலின் இரண்டல்ல என்பது ஒன்றுதானென்று அறுதியிட்டுக்கூறுதல் பொருந்தாது.

ஆனல், பல மதவாதிகள் அத்துவிதமென்பதற்கு இரண்டின்மையென்ற பொருளையே மேற்கொண்டு ஒன்றென்ற கருத்தையே தத்தம் மதத்திற்கேற்றவாறு வற்புறுத்தி யிருக்கின்றார்கள். 'பிரமம் உலகத்தோ டத்துவிதமாயிருக்கின்றது' 'அது நீ ஆகின்ருய்' என்னும் உபநிடத மகா வாக்கியங்களுக்குப் பொருள் கொள்ளுமிடத்தே அத்துவித மென்பதற்கு ஒன்றென்ற பொருளைக் கொண்டு "கடவுளும் உலகமும் ஒன்றே; பொன்னனது பலவித நகைகளா யிருப்பதுபோலக் கடவுளே உலகமா யிருக்கின்ருர். கடவுளைத் தவிர வேறு பொருள் உண்மையிலில்லை" யென்று ஏகான்மவாதியர் கூறுவர். அவர்கள் கேவலாத்துவிதிக ளெனப்படுவர். கேவலம்= தனிமை. இக்கொள்கையை விரித்துரைத்தவர் ஸ்ரீ சங்கராசாரியார். உபநிடதங்களுள் ஏகமென்ற சொல்லும் அத்துவிதமென்ற சொல்லும் வழங்குதலின், இரண்டிற்கும் வெவ்வேறு பொருள் கோடலே பொருத்தம். "ஏகமேவாத்விதீயம்" என்றவிடத்து அத்துவிதீயமாயுள்ள பொருள் ஒன்றே யென்பது கருத்தாதலின் ஒன்ருயிருக்கின்ற பொருள் பிறிதொன்ருேடு அத்துவிதமாய்க் கலந்திருப்ப தென்பதே யூகிக்கப்படும். படவே, பொருள்கள் இரண்டென்பதே





அறியக் கிடப்பதன்றி "பிரமம் ஒன்றுதானுண்டு; வேறு ஒரு பொருளும் இன்று" என்று கொள்வதற் கிடமில்லை. ஏக புத்திரனென்பதை அத்துவிதபுத்திரன் என்று கூறுவதும் வழக்கிலில்லை.

"பிரமமாகிய கடவுள் ஒன்றே உள்பொருள்" என்னில் அங்ஙனம் ஒன்ருகிய பிரமப் பொருள் தன்னையே ஒன்றென்று சுட்டவேண்டிய தில்லாமையால், அங்ஙனம் பிரமப் பொருளை ஒன்றென்று சுட்டும் மற்ருெரு பொருளிருத்தல் பெறப்படுதலான், உள்பொருள் ஒன்றே என்று கொள்ளும் ஏகான்மவாதியர் கொள்கை பொருந்தாமையறிக.

சாந்தோக்கிய முதலிய உபநிடதங்களில் "அத்விதீயம் பிரமம்" என்பதற்கு "இரண்டற்ற பிரமம்", அதாவது "இணையற்ற பிரமம்" என்ற பொருளே கொள்ளற்பாலது.

இனி, இராமாநுஜர், சிவாத்துவித சைவர் முதலியவர்களும் அத்துவிதம் என்ற சொல்லில் அகரத்திற்கு இன்மைப் பொருளே கொண்டனரென்று ஆசிரியர் சிவஞான யோகிகள் தமது பாடியத்தில் குறித்துள்ளார்கள். அவர்கள் பிரமப் பொருள் ஒன்றெனக் கொள்வதுடன் கடவுட் சத்தியையும், பசு பாசங்களையும் பற்றி உபநிடதங்கள் கூறுதலால் அவற்றை இல்பொருளெனக் கொள்ளாது அவற்ருல் பிரமம் விசேடிக்கப்பட்டது எனக்கொண்டு, அப்படி "விசேடிக்கப்பட்டு நின்ற பிரமம் இரண்டல்ல ஒன்றே" யென்று கூறுதலின் அவர்கள் விசிட்டாத்துவிதிக ளெனப்படுவர். பசு பாசங்கள் இறைவனை விசேடிக்குமென்னில் அவை அவனுடைய தன்மைகளுக் கொப்பாகும். பசு பாசங்களை இறைவனின் தன்மையாமென்று கூறுதல் அளவைக்குப் பொருத்தமாகாமையின் அவர்கள் கொள்கையும் வழுவுடையனவேயாம்.

இனி, மத்துவர் முதலிய துவிதவாதிகள் அத்துவித மென்பதற்கு இரண்டின் மறுதலையாகிய ஒன்று எனப் பொருள்கொண்டு பிரமப் பொருள் ஒன்றேயெனக் கொள்ளினும், "இரண்டிற்கு மறுதலை ஒன்றெனவே ஒன்றிற்கு மறுதலையாகிய இரண்டு என்பது முளது என்பது அறியக் கிடத்தலின் உள்பொருள் ஒன்றல்ல; ஒன்ருகிய பிரமப் பொருளிற்கு வேருகவும் பொருள்களுள்ளன; அவை உயிர், மாயை யென்பன" என்று கூறுவர். அவர் கூறுகின்றபடி கடவுள் வேறு உயிர் வேறு இரண்டிற்கும் சம்பந்தமில்லை யென்ருல் கடவுள் உயிர்களுக்காக ஐந்தொழில் இயற்றுதல் முடியாது. அன்றியும் அது நீயாகின்ருய். (தத்துவமசி) முதலிய மகா வாக்கியங்களுக்குப் பொருள் கொள்ளவும் இயைபில்லை. ஆதலால் அவர் கொள்கையும் பொருந்துமாறில்லை.

கடவுள் உயிர்கள் பொருட்டு ஐந்தொழில் இயற்றுகின்ருரெனின் கடவுளுக்கும் உயிர்க்குமுள்ள சம்பந்தம் யாது? அது நீயாகின்ரு யென்றவிடத்து அது என்பது ஒரு பொருள், நீ யென்பது ஒரு பொருளாதலின் ஒரு பொருள் மற்ருெரு பொருளாவ தெப்படி? ஒரு பொருள் மற்ருெரு பொருளாக முற்றிலும் ஆவதில்லையாயின் இரண்டிற்குமுள்ள சம்பந்தம் யாது? என்னும் கேள்விகட்கு விடைகூறு முகத்தால் இறைவனுக்கும் உயிர்க்குமுள்ள சம்பந்தம் அத்துவித மெனப்பட்டது. பொருள்கள் இரண்டு சம்பந்தப்பட்டகாலை அவற்றின் சம்பந்தம் பலவகைப்படும். ஆற்று நீரும் கடல் நீரும் தம்மில் சேர்ந்தகாலை அவற்றின் சம்பந்தம் ஐக்கியமெனப்படும். இரண்டும் நீரேயாதலின் பொருள் ஒன்றென்பதே யமையும். ஆதலால் இரு பொருளுக்குள்ள சம்பந்தமென்று அதனைக் கூற முடியாது. இறைவனும் உயிரும் வெவ்வேறு பொருளாதலின் அவ்விரண்டின் சம்பந்தத்தை ஐக்கியமென்று கூற முடியாது. உயிர் கடவுளோடு ஐக்கியமாயிற்று என்றவிடத்து ஐக்கியம் என்பது ஒற்றுமை மாத்திரையைக் குறிப்பதாய்ச் சம்பந்தத்தின் உண்மை இயல்பை விளக்காது. இறைவனுக்கும் உயிர்க்குமுள்ள சம்பந்தம் குணத்திற்கும் குணிக்குமுள்ள சம்பந்தமாகிய தாதான்மிய மாகுமோயெனின், இறைவனும் உயிரும் தனித்தனிக் குணிப்பொருளாகையால் அவ்விரண்டின் சம்பந்தம் தாதான்மியமன்று. இத் தாதான்மியத்தையே நியாய நூலார் சமவாயமென்பர். ஆதலால் இறைவனுக்கும் உயிர்க்குமுள்ள சம்பந்தம் சம

வாயதுமன்று. விரலும் விரலும் சேர்ந்துள்ள சம்பந்தம் சையோக மெனப்படும். சையோக சம்பந்தம் வியாபகப் பொருள்களுக்குப் பொருந்துமாறில்லை. ஆதலால் வியாபகப் பொருள்களாகிய இறைவனுக்கும் உயிர்க்குமுள்ள சம்பந்தம் சையோகமாகாது. இனி, இறைவனின் வடிவம் உயிர்களாகும் எனில், அது சொரூப சம்பந்த மெனப்படும். அத்துவித மென்ற சொல்லிற்குச் சொரூபமென்ற பொருள் கிடையாது. மேலும் உயிர் இறைவனின் வடிவமாய் இருப்பின் அது இறைவனை அணைந்து பேரின்பம் நுகர்தல் கூடாது. இனி உயிரறிவும் கண்ணொளியும்போல இரு பொருள் ஒற்றுமைப்பட்டு நிற்குந் தன்மையே இறைவனுக்கும் உயிர்க்குமுள்ள சம்பந்தத்திற்குத்தக்க உவமையாகும். இரு பொருள் அதுவதுவாய் ஒற்றுமைப்பட்டு நிற்குந் தொடர்பையே அத்துவித சம்பந்தமென்பர். அத்தகைய சம்பந்தமே இறைவனுக்கும் உயிர்க்குமுள்ளதாகலின் அதனையே அத்துவிதமென்ற சொல்லால் ஞான நூல்கள் குறிப்பனவாயின. இறைவனுக்கும் அவனது சத்திக்குமுள்ள சம்பந்தம் தாதான்மியம் அல்லது சமவாய மெனப்படும்.

"அறிவினில் அருளால் மன்னி" என்றமையால் உயிர்களினறிவுக்கும் இறைவனது அறிவுக்கும் இறைவனது அருட்சத்தி வாயிலாக அத்துவித சம்பந்தம் ஏற்படுகின்றது. பொருட்டன்மையால் இயற்கையறிவுடைய இறைவனும் அறிவிக்க அறியும் உயிரும் வெவ்வேறென்பது தெளியப்படும். பொருள்களை உயிர் காணுமிடத்து இறைவன் உயிரோடு உடனறிந்து அறிவித்து நிற்றலின் இறைவன் உயிரோடுடனாயிருப்பதாகக் கூறுதலுமுண்டு. கதிரவனுடைய ஒளியானது கண்ணோடும் காணப்படும் பொருளோடும் கலந்தாலன்றி, கண்ணானது பொருளைக் காணாமைபோல இறைவன் உயிருக்குப் பொருளை யறிவிக்கின்ற காலத்து உயிரறிவோடு கலப்பதுமாத்திரமல்லாமல் பொருள்களைத் தானேயறிந்தும் காட்டவேண்டியது அவசியமாயிருக்கின்றது.

"காட்டக் கண்டிடுந் தன்மை யுடைய கண்ணுக்
கோருயிர் காட்டிக் கண்டிடுமா போல
வீச னுயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன்"

என்றது காண்க.

உயிரானது சார்ந்ததன் வண்ணமாகுமாதலால் பேரின்பம் நுகருங்காலை இறைவனோடு அத்துவிதமாய் நின்று நுகருந் தன்மையது. இறைவனும் உயிரும் அறிவுப் பொருளாதலின் உயிர் தன்னினமாகிய இறைவனோடு கலந்து நிற்றலை அதன் இயற்கைநிலையென்றும் மலத்தோடு கலந்து நிற்றல் அதன் செயற்கைநிலையென்றும் கூறப்படும்.

'அத்துவிதம்', 'தத்தாத்துவித' மென்ற சொற்கள் வடமொழிக் குரியனவாயினும் இறைவன் உலகத்தோடும் உயிரோடும் அத்துவிதமாய்க் கலந்து நிற்குந் தன்மையும் பொருட்டன்மையால் அவன் அவற்றின் வேறாந்தன்மையும் அவன் உயிர்களோடு உடன் நின்று அறியுந் தன்மையும் தமிழ் அருள் நூல்கள் பலவற்றுள்ளும் நன்கு கூறப்பட்டுள்ளன.

"இருநிலனாய்த் தீயாகி"
"தன்னொப்பார் பிறரன்றி நீயேயானாய்"

என்ற திருத்தாண்டகங்களுள்ளும் பிற இடங்களிலும் அத்துவிதக் கருத்து வந்தமை காண்க. இரண்டு உதாரணங்கள் வருமாறு:—

"அறிவானுந் தானே யறிவிப்பான் தானே
யறிவா யறிகின்றான் தானே—யறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர் பாராகாய
மப்பொருளுந் தானே யவன்"

—அற்புதத் திருவந்தாதி.

"ஈறாய்முத லொன்றாயிரு
பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு
பூதம்அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ
டெட்டுத்திசை தானாய்
வேறாயுடன் ஆனானிடம்
வீழிம்மிழ லையே"

—திருஞான சம்பந்தர் தேவாரம்.



# நாயன்மார் சரித்திரங்களும் கல்வெட்டுச் சாசனங்களும்

[C. M. இராமச்சந்திரம் செட்டியார், பி. எ., பி. எல்.]

முன்னுரை.

சில ஆண்டுகளுக்கு முன்வரைக்கும் நாயன்மார்களுடைய சரிதங்களை அறிய வேண்டுமானால் பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம் ஒன்றே நமக்கு முழு ஆதாரமாக இருந்துவந்தது. நாயன்மார்கள் சரித்திரங்களைச் சிற்சிலவாகக் கூறும் ஏனைய தமிழ் நூல்கள் அத்திருத்தொண்டர் புராணத்தை ஒட்டியும், ஏனைய கர்ண பரம்பரைக் கதைகள், ஆலய மான்மியக் கதைகள் முதலியவைகளைத் தழுவியும் இயற்றப்பெற்றுள்ளன. இவ்வித நூல்கள் திருவிளையாடற்புராணம், திருப்பெருந்துறைப் புராணம், நாயன்மார்கள் அவதரித்தும் சென்று தரிசித்தும் உள்ள தலங்களின் புராணங்கள் முதலியவைகளாம். மேற்கூறிய திருத்தொண்டர் புராணம் முதல் எல்லா நூல்களிலும் சரித்திரக் கதைகளும் அவைகளை ஒட்டி மானுட அனுபவத்திற்கு அப்பாற்பட்ட அற்புதச் செயல்களும் கூறப்பெற்றுள்ளன. இவ்வாறு அற்புதச் செயல்கள் கலந்த சரித்திரங்களை மேற்றிசைச் சரித்திர ஆராய்ச்சியாளர்களும் நமது நாட்டுத் தற்கால சரித்திர ஆராய்ச்சியாளர்களும் நம்புவதற்குச் சிறிது கஷ்டப்படுகிறார்கள். அவ்விதம் ஏட்டுப் பிரதிக்காவியங்களையன்றி நம்பத்தக்க வேறு சான்றுகள் கூட கிடைக்குமெனில் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் அவைகளை நம்பமுடியாது என்று சொல்லுவதற்கில்லை. அவ்விதச் சான்றுகளைத் தேடி நாயன்மார்களுடைய உண்மைச் சரித்திரங்களைத் தற்கால உலகினர்க்கு நிரூபிப்பது நம் தமிழர்களின் கடமையாகும்.

நம் முன்னோர்கள் சரித்திர ஞானங்கொண்டவர்கள். அவர்கள் காலத்தில் நடந்த செய்திகளைத் தமது பின்னோர்கள் அறிய வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு மிகவும் இருந்தது.

தாம் கண்ட விஷயங்களை ஏடுகளில் அவ்வப்போது எழுதி வைத்தார்கள். ஆனால் ஏடுகள் வெகுகாலம் நில்லாமல் சிதலம் அடைந்துவிடும் என்பதை யறிந்து அவைகள் நிரந்தரமாக இருக்கவேண்டும் என்று உத்தேசித்துச் செப்புத் தகடுகளிலும், ஆலயக் கற்சுவர்களிலும் செதுக்கி வைத்தார்கள். இதனாலேதான் "கல்மேல் எழுத்துக்கு நேர்'! என்ற பழைய வாக்கும் ஏற்பட்டுவிட்டது. நிரந்தரமாய் இருக்கவேண்டுமென்று அவர்கள் எண்ணின எண்ணம் "சந்திராதித்தர் உள்ளவரை நிலை பெறுவதாக" என்று அவர்கள் ஒவ்வொரு சாசனத்திலும் இறுதியில் எழுதும் சொற்றொடர்களினால் அறியலாம். இவ்விதச் செப்புச் சாசனங்களும் நமது நாட்டில் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவைகளைச் சில ஆண்டுகளாக ஆராய்ச்சியாளர்கள் எடுத்து ஆண்டு வருகிறார்கள்.

நாயன்மார்கள் சரித்திரங்களில் உள்ள உண்மைகளை ஆராய்ந்து அறிவதற்குக் கல் சாசனங்கள் பெரும் உதவியாக இருக்கின்றன. நாயன்மார்கள் உலகில் அவதரித்த காலத்துக்கு அண்மையிலேயே கல்வெட்டுக்கள் செதுப்பிக்கப்பட்டுள்ளன. ஆகையினாலே அவைகளிற் காணும் செய்கைகள் உண்மையாகவே இருக்கும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. நமதுநாட்டில் இருக்கும் பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுகளில் பெரும்பான்மையானவை சோழபாண்டியர்களின் ஆதிக்கம் பெருமையுடன் விளங்கி இருந்தபோதுதான் ஏற்பட்டன. அக்காலம் பெரும்பான்மை நாயன்மார்கள் அவதரித்த உடம்பத்திலேயே நேர்ந்து இருந்தது. அக்காலத்தில்தான் சைவமும் பெருகி வளர்ந்தது. நாடு முழுதும் ஆலயங்கள் ஸ்தாபிக்கப்பெற்றன. அரசர்களும் சைவத்தில் அன்புடையவர்களாக இருந்து சிவதர்மங்கள் பலவற்றைச் செய்து தாம் செய்தவைகளை ஆலயச் சுவர்களிலும், செப்பேடுகளிலும் பதிவு செய்தார்கள். ஆகவே அச்சாசனங்களில் நாம் காணக்கூடிய செய்திகளையெல்லாம் தொகுத்து எழுதினால் நாயன்

மார்களுடைய உண்மைச்சரிதங்களை நன்முக அறியக்கூடும்.

நாயன்மார்களுடைய காலங்களை ஆராய்ந்து குறிக்கும்பக்ஷத்தில் அவைகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

நாயன்மார்களின் காலப் பிரிவுகள்.

(1) **அப்பர் சம்பந்தர் காலம்:** இக்காலத்தில் அப்பர் சம்பந்தர்களோடு 9 நாயன்மார்கள் சம காலத்தவர்களாக அவதரித்து இருந்தார்கள். (2) **சுந்தரர் காலம்** :—சுந்தரர் அவதரித்த காலத்தில் மற்றும் 9 நாயன்மார்கள் தமிழ் நாட்டிலே வசித்திருந்தார்கள். (3) **ஏனைய நாயன்மார்கள்** :—மற்று எல்லா நாயன்மார்களும் சுந்தரருக்கு முந்தியே அவதரித்திருந்தார்கள். ஆகவே அத்தகைய நாயன்மார்கள் சம்பந்தருக்கும் சுந்தரருக்கும் மத்தியிலிருந்த இரண்டு நூற்றுண்டுகளிலாவது சம்பந்தருக்கு முந்திய காலத்திலாவது அவர்கள் அவதரித்திருக்க வேண்டும். சம்பந்தர் தம் திருப்பாசுரங்களில் சில நாயன்மார்களுடைய பெயர்களைக் குறித்துள்ளபடியால் அப் பெரியார்கள் சம்பந்தருக்கு முந்தியே அவதரித்திருக்கவேண்டும். உதாரணமாக, சண்டேச நாயனுர், கண்ணப்ப நாயனுர், கோச்செங்கட் சோழனுர், மெய்ப்பொருள் நாயனுர் முதலியவர்கள். மேற்கூறியபடி மூன்று பிரிவுகளாக நாம் இக்கட்டுரையில் அடியார்களைப் பிரித்தெடுத் தாளுவோம்.

## I அப்பர் சம்பந்தர் காலம்

அப்பர் சம்பந்தர் காலமும் அக் காலத்திய நாயன்மார்களும்.

அப்பர் சம்பந்தர் என்ற இரு சைவாசாரியர்களும் கி. பி. 650 அளவில் இத் தமிழ் உலகில் வாழ்ந்தனர் என அறிகிறோம். அவர்கள் காலத்தில் இருந்த ஏனைய நாயன்மார்கள், குங்கிலியக் கலயர், திருநீலநக்கர், முருக நாயனுர், அப்பூதி யடிகள், குலச்சிறை நாயனுர், நின்றசீர்நெடுமாறனுர், மங்கையர்க்கரசியார், சிறுத்தொண்ட நாயனுர், திருநீலகண்ட யாழ்ப்பாணனுர் முதலியோர்கள்.

இப்பெரியார்களின் காலத்தை நிர்ணயிக்கக் கல்வெட்டுகளே முக்கிய ஆதாரவுகளாக இருக்கின்றன. காஞ்சியில் கைலாசநாதர் ஆலயத்தை இராஜ சிம்மன் என்ற பல்லவ அரசன் கி. பி. 550-ல் கட்டினன். அவ்வாலயத்தைப்பற்றி அப்பர் சுவாமிகள் பாடியிருக்கிறார்கள். அதனுல் 550 கி. பி-க்குப் பின் இப்பெரியார்கள் இருந்திருக்க வேண்டும். கி. பி. 642-ல் பல்லவ அரசன் நரசிம்ம வர்மனிடத்தில் படைத் தலைவராக இருந்த பரஞ்சோதியார் என்று இயற் பெயர் படைத்த **சிறுத்தொண்டர்** சளுக்கிய புலிகேசி II என்பவன்மீது படை எடுத்து அவன் நகராகிய **வாதாவியைத்** துகளாக்கி விட்டார். இதனைச் சேக்கிழாரும்,

> " மன்னவர்க்குத் தண்டுபோய்
> வடபுலத்து **வாதாவித்**
> தொன்னகரந் துகளாகத்
> துணைநெடுங்கை வரையுகைத்து "

என்று பாராட்டியிருக்கின்றார். பல்லவர் சளுக்கியரை வென்று வாதாவியை அழித்த செய்தியும் காலமும் அவ்வூர்ச் சாசனங்களால் தெரியவரும். மேலும் நரசிம்மவர்மனுடைய பெயரையும் **வாதாவி கொண்ட நரசிம்மவர்மன்** என்று கல்வெட்டுகளில் சொல்லியிருப்பதைக் காணலாம். மேலும் அக்காலத்தில் பல்லவர்கள் மிகுந்த செல்வாக்குடன் காஞ்சியில் ஆண்டுவந்தனர். அவர்களில் **மகேந்திரன்** 600 முதல் 625 வரையும், அவனுக்குப் பின் அவன் மகன் 660-க்குப் பிந்தியும் ஆண்டு வந்தனர். அவன் ஆட்சியிலேதான் 640-வது கி. பி. யில் **யுவான்சுவாங்கு** என்ற சீன தேசத்து யாத்திரிகன் இந்திய யாத்திரை புரிகையில் காஞ்சிக்கு வந்தான். அப்பொழுது அங்கே புத்த ஜைனப் பள்ளிகள் இருந்ததைப் பற்றி எழுதியிருக்கிறான். சமணர்களுடைய பேச்சைக் கேட்டு அப்பர் சுவாமிகளை ஹிம்சைப்படுத்தின பல்லவன், பின்னுல் சைவ மதத்திற்கு வந்து திருவதிகையில் **குணதர வீச்சுரம்** என்னும் சிவாலயத்தைக் கட்டினுன். அவ்வாலயத்தின் வடமொழிப் பெயர் **குணபரேஸ்வரம்** என்பது. குணபரன் என்பது, மகேந்திரவர்மனுடைய ஒரு சிறப்புப் பெயர். அவன் திருச்சினப்பள்ளியின் மலைக்குகைக்கோயிலைச் செதுக்கினவன். அவன் காலத்துக் கல்





வெட்டு ஒன்று அம்மலைக்குகைக் கோயிலில் அடியில் கண்டபடி காணப்படுகின்றது.

> " குணபர நாமனி ராஜன்யனேன
> லிங்கேன லிங்கினி க்ஞானம்
> ப்ரததாஞ்சிராய் லோகே
> விபக்ஷவ்ருத்தே : பராவருத்தம் "

**गुणपरनामनि राजन्यनेन लिङ्गेन लिङ्गिनि ज्ञानम्।**
**प्रथतां चिराय लोके विपक्षवृत्तेः परावृत्तम् ॥**

இதன் பொருள் என்னவெனில் "லிங்கத்தை வழிபடும் குணபரன் என்னும் பெயரோடு கூடிய அரசன் அந்த லிங்கத்தினுல் (பெற்ற) விபக்ஷ விருத்தியிருந்து திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்ட காலம் நிலைநிற்பதாக ", என்பதாம். இதில்கண்ட விபக்ஷ விருத்தி என்பது ஜைனமதமாகும். ஆகவே இதில் குணபரன் என்ற அரசன் ஜைனத்தைவிட்டு சைவனுனதை இது குறிக்கிறது. இந்த மதமாற்றமானது, அப்பர் சுவாமிகளது தெய்வத்தன்மை கண்டு நிகழ்ந்தது. இக்கல்வெட்டு அப்பர் ஜீவிய காலத்திலே ஏற்பட்டதென்பதைக் கவனிக்க வேண்டும். மேலும் செங்கல்பட்டு ஜில்லா வல்லத்தில் உள்ள ஒரு குகைக்கோயிலில் காணும் அடியில்கண்ட கல்வெட்டினுல்,அந்தக்குணபரன் தான் மகேந்திரவர்மன் என்று அறியலாம். அக்கல்வெட்டாவது,

> " பகாப் பிடுகு லறிதாங்குரன்
> சத்துரு மல்லன் **குணபரன்**
> மயேந்திரப் போத்தரசரு அடியான்
> வயந்தப்பிரி அரசெரு மகன்கந்த சேனன்
> செய்வித்த தேவ குலம் "

என்பதாகும். ஆகவே இக்கல்வெட்டுக்களினுலும் அப்பர் சம்பந்தர் காலம் நிர்ணயிக்கப்படும்.

மகேந்திர வர்மனுக்குப் பிந்தி பல்லவ ஆட்சி செல்வாக்கில் குறைய ஆரம்பித்தது.

சோழர் ஆதிக்கத்தில் நாயன்மார்களின் பெருமை பிரவின விதம்.

மூன்று நூற்றுண்டுகள் வரை நாட்டில் அம்மன்னர்களின் சிறப்பும் குறைந்து வந்தது. சோழர்கள் தலைநிமிர ஆரம்பித்தனர். 9-வது நூற்றுண்டில் சோழர் சிறந்து விளங்கலானுர்கள். அவர்களுடைய செல்வாக்கு கடல் கடந்து சென்றது. அவர்கள் சைவத்தில் ஆழ்ந்த பற்றுடையவர்களாய் ஆலயங்களைத் தாபித்து, சைவாசாரியர்களின் பதிகங்களைச் சேகரித்து, ஆலயங்களில் ஓதச் செய்தார்கள். நாயன்மார்களின் திருவுருவங்களை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்தார்கள். அதற்கு வேண்டிய தானங்களையும் செய்தார்கள். அவ்விதம் முதல் முதல் செய்தது இராஜராஜன் I (985-1013) என்ற மன்னர். இவர் சிவபாதசேகரர் என்ற பெயரும் வகித்தவர்; தஞ்சையில் இராஜராஜேஸ்வரம் என்றபுகழ்பெற்ற ஆலயத்தை நிர்மாணித்தவர். அதில் ஆடவல்லான் மூர்த்தியைத் தாபித்து நாயன்மார்களுடைய உருவங்களையும் பிரதிஷ்டை செய்தார். அவ்வரசர் ஆணைப்படி இவ்வரிய திருப்பணிகளைச் செய்தவர், அவ்வாலயத்தை மேல் பார்வை பார்த்து வந்த "பொய்கை நாட்டுத் தலைவரான **ஆதித்த சூரியன்** என்ற தென்னவன் மூவேந்த வேளான் " என்ற ஒரு பிரபு. இவர் கி. பி. 1013-14-ல் **திருஞானசம்பந்தரடிகள், திருநாவுக்கரையர், நம்பிஆரூரனுர், நங்கை பரவையார்** முதலான அடியார்களின் மூர்த்தங்களை அக்கோயிலில் பிரதிஷ்டைசெய்தார். அக்கல்வெட்டாவது:

"ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீராஜ ராஜேசுரம் உடையார்க்கு ஸ்ரீ காரியம் செய்கின்ற பொய்கை நாடுகிழவன் ஆதித்த சூரியனை தென்னவன் மூவேந்த வேளான் ஸ்ரீராஜ ராஜேசுரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவது வரை எழுந்தருளுவித்த செப்பு பிரதிமங்கள் * * பாதாதி கேசாந்தம் பதினேழு விரலே இரண்டு தோரை உசரமும் இரண்டு திருக்கையும் உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த **நம்பிஆரூரனுர்** பிரதிமம் ஒன்று * * * பதினுறு விரல் நீளத்து இரண்டு திருக்கையுடையராகக் கனமாக எழுந்தருளுவித்த **நங்கை பரவையார்** பிரதிமம் ஒன்று * * * * பாதாதி கேசாந்தம் இருபத்திரு விரலே இரண்டு தோரை உசரத்து இரண்டு திருக்கையுடையராகக் கனமாக எழுந்தருளுவித்த **திருநாவுக்கரையர்** பிரதிமம் ஒன்று * * * * * பாதாதி கேசாந்தம் இருபத்திருவிரலே இரண்டு தோரை உசரத்து இரண்டு திருக்கையுடையராகக் கனமாக

**திருஞானசம்பந்தடிகள்** பிரதிமம் ஒன்று * * *" (S. I. I. Volume II Part II No: 38)

மேலும், கி. பி. 1014-ம் வருடத்தில் மூவருக்கும் பெரிய பெருமானுக்கும் பல தானங்கள் செய்தவர் அவ்வாதித்த சூரியன் என்பவரே. இதற்குக்கல்வெட்டு (Vol. 11-No 41-S. I. I.)

"உடையார் ஸ்ரீராஜராஜேசுவரம் உடையார்க்கு ஸ்ரீகார்யம் செய்கின்ற பொய்கை நாடுகிழவன் ஆதித்தசூர்யனை தென்னவர் மூவேந்த வேளான் தான் எழுந்தருளுவித்த நம்பியாரூரனார்க்கும், திருஞானசம்பந்தனடிகளுக்கும், திருநாவுக்கரையதேவர்க்கும், உடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவர்க்கும் யாண்டு மூன்றாவது வரை குடுத்த தரா நிலை விளக்கு ஒன்று, இரும்பு நாராசம் உட்பட நாற்பத்தொரு பலவரை * * * * * *"

மேலும், இராஜராஜேஸ்வரர் ஆலயத்தில் திருப்பதிகம் வாசிப்பதற்காக 48 பேருக்கு ஏற்பாடுகள் செய்ததாக அடியில் கண்ட கல்வெட்டில் காண்கிறோம்.

"இராஜகேசரிவர்மன் இராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது வரை உடையார் ஸ்ரீ ராஜராஜேசுவரர் உடையார்க்கு திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜதேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும் இவர்களிலே நிலையாக உடுக்கை வாசிப்பவன் ஒருவனும் * *" (Volume II No. 65)

மேலும், திருவல்லத்தில் 9-வது நூற்றாண்டில் விஜயநந்தி விக்கிரமவர்மன் காலத்துக் கல்வெட்டில் திருப்பதியம் ஓதுஞ் செய்தி கூறப்பெற்றுள்ளது. (Volume 3 Part I No. 43) திருப்பதிகங்களை ஆலயங்களில் ஓதுவதற்கு ஏற்பாடுகள் செய்ததைப்பற்றிய கல்வெட்டுகளில் இது மிகப் பழையது எனத்தெரியவருகிறது. இன்னும் நாயன்மார் திருப்பதிகங்களைப்பற்றி 11, 12, 13 நூற்றாண்டுகளில் பல் கல்வெட்டுகள் இருக்கின்றன. அவைகளில் சில கல்வெட்டுகளில் திருமுறை ஓதுவதற்காகவும் (கி. பி. 1225, 1243, 1285) திருத்தாண்டகம் ஓதுவதற்காகவும் (1207) ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருந்தன.

*சம்பந்தருடைய சரித்திர ஐதிகங்களைப் பற்றியவை.*

சம்பந்தசுவாமிகளுடைய உருவம் தாபிக்கப்பெற்ற ஆலயங்கள் 1020 கி. பி. முதல் 1296 கி. பி. வரையில் பல ஊர்களில் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் இராஜேந்திரச் சோழன் (1013 to 1045) முதல் இராஜநாராயணன் (1337)வரை பல அரசர்களால் பாராட்டப்பெற்றன. சோழ வம்சத்தினரெல்லாரும், பாண்டியரில் பின்வம்சத்தாரும், சாம்பவராயன் ஒருவரும் இந்நாயனார் திருப்பணியில் ஈடுபட்டிருந்தார்களென்று கல்வெட்டுகளைக் கொண்டு அறியலாம். சம்பந்தப்பெருமானைக் குறித்து அவர் அவதரித்த சீர்காழியிலும், முத்திபெற்ற ஆச்சாபுரத்திலும், தனி ஆலயங்களும், கல்வெட்டுகளும் இருக்கின்றன. அரசர்களேயன்றி அரச உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும் பொது ஜனங்களும், நாயனாரிடத்தில் ஈடுபட்டு பூஜைக்காக தானங்கள் செய்திருக்கிறார்கள்.

நாயனார் பெயரால் பல திருமடங்கள் 1075 கி. பி. முதற் கொண்டு கி. பி. 1391 வரை தாபிக்கப்பெற்றிருக்கின்றன. அம்மடங்கள் குரு பீடங்களாக விளங்கி வந்தன. அப்பீடங்களில் ஞானசிவம், ஸ்ரீகண்ட சிவம், உமையொருபாகம் முதலான ஆசாரியர்கள் விளங்கினார்கள். நாயனாருடைய பெயரை மக்களுக்கே யன்றி நாழி, ஊர் முதலிய அஃறிணைப்பொருள்களுக்கும் இட்டுவந்தார்கள். உதாரணமாக, திருஞானசம்பந்த நல்லூர், திருஞானசம்பந்த நாழி, திருஞானசம்பந்த வேளான் முதலியன. ஆச்சாபுரத்து ஆலயத்துக்(நல்லூர்பெருமணம்)கல்வெட்டு ஒன்றில் சம்பந்தப் பெருமானுடன் சொக்கியார் என்ற ஒரு பெண்மணியின் பெயர் சேர்த்து எழுதியிருப்பதை நோக்கி, சாசன ஆராய்ச்சியாளர் "பெரிய புராணத்தில் சம்பந்தர் மணஞ் செய்துகொண்டு தம்மோடு ஜோதியில் கலந்துகொண்ட மணமகளான நம்பாண்டார்நம்பி புதல்வியின் பெயர் காணமல் இருந்தபோதிலும், இந்தச் சாசனத்தைக் கொண்டு அப்பெண்மணியின் பெயர் சொக்கியார் என ஊகிக்கலாம்," என்கிறார். இச்செய்தி ஆராயத்தக்கது. மேலும், சம்பந்தருக்குச், சிவபெருமான்



முத்துச் சிவிகை கொடுத்த ஐதீகத்தை "முத்துச் சிவிகை கோடுத்தருளிய நாயனார்" என்று திருவரத்துறை ஆலயத்துக் கல்வெட்டினால் அறிகிறோம். அதே கல்வெட்டில் உள்ள "தாகந்தீர்த்தருளிய நாயனார்" என்ற பதப்பிரயோகமும் கவனிக்கத்தக்கது. ஸ்ரீ வில்லிபுத்தூரில் "படிக்காசு வைத்தருளிய நாயனார்" என்ற பதப்பிரயோகமும் ஆராயத்தக்கது.

*அப்பர் சரித்திர ஐதீகங்கள்.*

அப்பர் சுவாமிகளுடைய கல்வெட்டுகள் 1158 முதல் 1396வரை பிந்திய சோழர்கள் காலத்தில் கிடைக்கின்றன. எல்லாக் கல்வெட்டுகளையும் எடுத்துக் கூறினால் இராஜராஜன் I (1013) முதல் விக்கிரம பாண்டியன் (1283) வரை அவை பரவிக்கிடக்கின்றன.

பாண்டியர்களைக் காட்டிலும் சோழர்களுடைய கல்வெட்டுகள் மிகுதியாக இருக்கின்றன. ஆகவே, சைவத்தில் சோழர்களுக்கு பற்று அதிகம் இருந்திருக்கவேண்டும். சம்பந்தரைப்போலவே அப்பரைப் பற்றியும் அவரது அவதாரத் தலமாகிய திருவாமூரிலும், அவர் அருள்பெற்ற தலமாகிய திருவதிகையிலும், கல்வெட்டுகள் இருக்கின்றன. அப்பரிடத்தும் அரசர்களும், அரச உத்தியோகஸ்தர்களும், செல்வவான்களும், தேவரடியார்களும், ஈடுபட்டுத் தானங்களை அவருடைய பிரதிமங்களுக்கு வழங்கி யிருக்கின்றனர். அப்பர் சுவாமிகளுடைய மடங்கள் பல ஊர்களிலும் கி. பி. 1070 முதல் 1207 வரை ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்றுக்கு 'திருநாவுக்கரசு திருக்குகை' என்று பெயர் இடப்பட்டிருந்தது. அக்குகைக்கு வரும் "அபூர்விகளுக்கு உணவளிக்கவும், வைகாசத் திருநாள் திருவிழாவிற்கு வரும் மகேஸ்வரர்களுக்கு உணவளிக்கவும், திருத்தாண்டகம் ஓதவும், 1207-ல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சம்பந்த சுவாமிகளைப் போலவே அப்பர்சுவாமிகளுடைய பெயரையும் மக்களுக்கும் அஃறிணைப் பொருள்களுக்கும் இட்டு அழைத்தார்கள். உதாரணமாக, திருநாவுக்கரசு தேவன், வாகீஸ்வரமுதலியார், திருநாவுக்கரசன் திருவீதி முதலியன. அப்பூதியடிகள் தன் வீட்டுப் பொருள்களுக்கெல்லாம் அப்பர் சுவாமிகளுடைய பெயர் இட்டதை இங்கு ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். (அப்பூதியடிகள் புராணம் 2-ம் செய்யுள்) மாறவர்மன் வீரபாண்டியன் காலத்தில் அதாவது கி. பி. 1271ல் திருநாவுக்கரசு திருவிழா என்ற ஒரு திருவிழா நடந்ததாகவும் தெரிகிறது. சோழர்கள் க்ஷீணதிசை யடைந்த பிறகு, விஜய நகரத்தாரும் நாயக மன்னரும் ஆட்சி புரிந்த காலத்தில், அப்பர் சம்பந்தர்களைப் பற்றிய கல்வெட்டுகள் கிடைக்காததினால் அம் மன்னர்கள் இந்நாயன்மார்களுடைய கைங்கரியத்தில் ஈடுபடவில்லையென அறியலாம்.

*சம்பந்தர் காலத்து ஏனைய அடியார்கள்.*

சம்பந்தர் காலத்திலிருந்த ஏனைய நாயன்மார்கள்:—குங்கிலியக்கலயர், அப்பூதியடிகள், திருநீலநக்கர், முருக நாயனார், குலச்சிறை நாயனார், மங்கையர்க்கரசியார், நின்றசீர் நெடுமாறநாயனார், சிறுத்தொண்டர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலியவர்கள். அவர் காலத்திருந்த மற்ற அடியார்கள் சிவபாத இருதயர், பகவதியார், நம்பாண்டார், சிவநேசர், சீராள தேவர், திருவெண்காட்டு நங்கை முதலியோர்கள். இவர்களில் அடியிற்கண்ட அடியார்களைப்பற்றிக் கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. 1 கலையனார், 2 நெடுமாறர், 3 சிறுத்தொண்ட நாயனார், 4 சீராளதேவர், 5 திருவெண்காட்டு நங்கை முதலியவர்கள். இவ்வடியார்களில் சிறுத்தொண்டரைப் பற்றிச் சோழநாட்டில் பல கல்வெட்டுகள் கூறுகின்றன. சீராள தேவரைப்பற்றியும், திருவெண்காட்டு நங்கையைப் பற்றியும் சில கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. ராஜேந்திர சோழனுடைய மூன்றாவது ஆண்டு அதாவது கி. பி. 1016-ம் ஆண்டு தஞ்சை இராஜராஜேஸ்வரர் கல்வெட்டில், "பாதாதிகேசபரியந்தம் 17 விரல் உயரத்து இரண்டு கையை யுடையராகக் கனமாகச் செய்த சிறுத்தொண்ட நம்பி ஒருவர் * * பாதாதிகேசபரியந்தம் 15 விரல் உசரத்து கனமாகச் செய்த திருவெண்காட்டு நங்கை ஒருவர் * * பாதாதிகேசபரியந்தம் பன்னிரு விரல் உசரத்து இரண்டு கையை யுடையராகக் கனமாகச் செய்த சீராள தேவர் ஒரு

வர்'' என்று கண்டிருக்கிறது. நெடுமாறருடைய கல்வெட்டு திருநெல்வேலியில் ஒரு ஆலயத்தில் கிடைத்திருக்கிறது. கலையனார் பெயர் மற்றொரு கல்வெட்டில் காணப்படுகிறது.

## II சுந்தரர் காலம்

*சுந்தரர் காலத்துச் சரித்திர ஐதீகங்கள்.*

சுந்தரமூர்த்திகளுடைய காலம் சம்பந்தருக்குப் பின் இரண்டு நூற்றாண்டுகள் அளவில் உள்ளது. அவர் சேரமான்பெருமாள் காலத்தியவர். பாண்டிய வரகுணவர்மனுடைய காலமும் அதுவே என்பர். அவரை இளவயதில் ஆதரித்தவர் நரசிங்கமுனையரையர். திருநாவலூர்ச் சாசனப்படி 954-ல் குலமாணிக்கன் இராமன் என்பவன் முனையதரையனாக இருந்தான். அவனுடைய முப்பாட்டன் பெயர்நரசிம்மன் என்று ஊகிக்கப்படுகிறது. ஆகவே, அவர் காலமாகிய 850 கி. பி.யில் சுந்தரர் இருந்திருக்க வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள். இன்னமும் இம்முடிவுக்கு வர பல காரணங்கள் உள்ளன. அவைகள் இங்கே விரிக்கிற் பெருகும்; ஆதலால் விடப்பட்டன.

*சுந்தரரைப்பற்றிய சோழர்கள் கல்வெட்டுகள்.*

முன்னமே அப்பர் சம்பந்தரைப் பற்றிக் கூறியவிடத்துத் தஞ்சை இராஜராஜேஸ்வரத்து 1013-ம் ஆண்டு சாசனத்தை எடுத்தெழுதியிருக்கின்றோம். அதில் நம்பியாரூரனார், நங்கை பரவையார் என்ற இருவர்களுடைய பிரதிமங்களும் அக்கோயிலில் தாபிக்கப்பட்டதை அறிந்தோம். மேலும் திருவாரூரில் தியாகராஜ சன்னதியில் வடமொழியில் மூவருடைய பிரதிமைகளும் ஸ்தாபிக்கப்பெற்றதாக எழுதப்பெற்றிருக்கிறது. அது நடந்தது அனபாயன் என்ற குலோத்துங்கன் II என்ற அரசர் காலத்திலேயாம். அதில் மூவர்களுடைய பெயர்களை வடமொழியில் பிரமபுரியீசர் (சம்பந்தர்) வாகீசபதி (அப்பர்) ஸ்வஸ்வாமிமித்திரர் (சுந்தரர்) என்று கண்டிருப்பதோடு, சுந்தரரை ஆளுடைய நம்பி என்றும் அவர் தாயாரை மாதர்கள் இசைஞானியா என்றும் தமிழில் கண்டிருப்பதன்றி, அம்மாது சைவ சமயத்தில் ஞான சிவாசாரியார் குடும்பத்தில் கமலாபுரத்தில் (திருவாரூர்) பிறந்ததாகவும் கண்டிருக்கிறது. இசை ஞானியாருடைய பிறப்பிடம் திருவாரூர் என்ற அருஞ்செய்தியை இக் கல்வெட்டால் அறிகிறோம். இக் கல்வெட்டு ஏற்பட்ட காலத்து அரசராகிய அனபாயன் என்பவர்தான் பெரிய புராணம் இயற்றியதற்குக் காரணமாக இருந்தவர். ஆகவே, அவர் சுந்தரர் இடத்தில் ஈடுபட்டது அதிசயம் அல்ல.

*அவைகளில் காணும் சில செய்திகள்.*

சுந்தரரைப் பற்றிக் கூறும் கல்வெட்டுகள் இராஜராஜன் I (995) முதல் ஜடாவர்மன் வீரபாண்டியன் (1301) காலம்வரைகிடைக்கின்றன. சோழ பாண்டியர்கள் காலத்துக்குப் பின் 1508ல் கிடைத்த ஒரு கல்வெட்டைத் தவிர விஜயநகரத்தார், நாயன்மார் காலங்களில் சுந்தரரைப் பற்றிய கல்வெட்டுகளும் கிடைக்கவில்லை. சுந்தரர் பிறந்தவூரிலும், தடுத்தாளப்பெற்ற ஊரிலும் மணஞ்செய்து கொண்ட ஊர்களிலும், அவரைப் பற்றிய கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. முக்கியமாகச் சங்கிலியாரை மணந்த திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் ஆலயத்தில் இரண்டாவது பிரகாரத்தில் கிழக்குச் சுவற்றில் உள்ள கல்வெட்டு:

"கோவிராஜகேசரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு ஒன்பதாவது ஜயம் கொண்ட சோழ மண்டலத்துப் புழற் கோட்டத்து உடையார் திருவொற்றியூர் உடையார்கோயிலில் மடமுடைய சதுரானன பண்டிதனும் ஸ்ரீமாஹெ * * டானும் ஸ்ரீ காரியம் அரிய பிரான் பட்டனும் சோமசித்தாந்தம் வக்காணிக்கும் வாகீஸ்வர பண்டிதனும் காலும்பிடாருஞ் செயங்கொண்ட சோழமண்டல பிடாரனுந் திருவொற்றியூர்ப் பிச்சனுங் கோயில் நாயகம் படம்பக்க நாயக பட்டனும் கோயிற் கணக்குத் திரு * * * டயார் திருப்பங்குனி யுத்திரத்து ஆரூர் திருநாளான புதன்கிழமையும் ஏகாதசியும் பெற்ற ஆயிலையத்தினன்று படம் பக்க நாயக்க தேவர் திருமகிழின் கீழ் திருவோலக்கம் செய்தெழுந்தருளி இருந்து ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் கேட்டருளா நிற்க உடையார்





தேவதானம் வருகப் பெரும் பாக்கத்துக் காணி * * என்றுவிண்ணப்பம்செய்ய'' * * திருவொற்றியூரில் அவருடைய புராணம் ஓதப்பெற்றது என்றும், குறித்திருப்பதோடு, திருத்தொண்டத் தொகை பாடப்பெற்ற செய்தியையும் குறித்திருப்பது கவனிக்கத் தக்கது. நாயனார் பிள்ளைத் திருநாமமாகிய ஆரூரனார் என்பதும், முன் சென்மத்துப் பெயராகிய ஆலால சுந்தரர் என்பதும், பின்னால் வழங்கப்பெற்ற வன்றொண்டர், ஆளுடைய நம்பி, திருத்தொண்டத் தொகையான், தடுத்தாட் கொண்டான், ஸ்வஸ்வாமி மித்திரர் (தம்பிரான் தோழர்) முதலிய பெயர்களும் கல்வெட்டுகளில் காணப்பெறுகின்றன.

*சரித்திர ஐதீகங்கள்.*

சுந்தரருடைய ஆலயங்கள் 11-12-ம் நூற்றாண்டுகளில் பல இடங்களில் ஏற்பட்டுள்ளன. அவைகள் சோழநாடு, நடுநாடு, கொங்குநாடு, மலைநாடு, தொண்டை நாடு இவைகளில் எல்லாம் பரந்திருக்கக் காண்கிறோம். அவர் பெயரால் மடங்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் திருத்தொண்டத் தொகையான் மடம், திருத்தொண்டத் தொகையான் குகை என்ற பெயர்களால் குறிக்கப்பெற்றிருக்கின்றன. கி. பி. 1249 அக்டோபர் 14ல் ஏற்பட்ட திருத்தொண்டத் தொகையான் குகையை ஆனைமங்கலமுடையான் அரையன் வடுக நாதன் என்ற சென்னவரையர் தாபித்து, திருமுறை சேமித்து வைத்திருக்கும் திருப்பள்ளியறையைக் காப்பவர், திருப்பாட்டு ஓதுபவர் இவர்கள் ஜீவனத்திற்காகத் திருமுறைத் தேவாரச் செல்வன் குகையில் வசிக்கும் முதலியார் திருவையாறுடையார் வழித்தோன்றிய ஒரு பக்தனால் பூதானம் செய்யப்பட்டது என்று கண்டிருக்கிறது. சுந்தரர் பெயரை மக்கள் வைத்துக் கொண்டதன்றி அஃறிணைப் பொருள்களுக்கும் வைத்திருந்தார்கள். உதாரணமாக, வன்றொண்ட முதலியார், திருத்தொண்டத் தொகை மண்டலம், வன்றொண்டத்தாழி, ஆலால சுந்தரர் பெருந்தெரு முதலியன. சுந்தரருக்குப் பிந்தி அவருடைய திருப்பதிகம்பாடுவதற்குப் பலஆலயங்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. திருவொற்றியூரில் அவர் புராணமும் ஓதப்பட்டது. அவருடைய சரித்திர சம்பந்தமான இரண்டு அரிய விஷயங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. திருவெண்ணெய்நல்லூர்ச் சாசனத்தில் "பிச்சன் என்று பாடச் சொன்னான்" என்ற பெயரை ஒரு வெள்ளி முரசுக்கு இடப்பட்டதாகக் கண்டிருக்கிறது. இதனால் சுந்தரமூர்த்திகளை ஈசன் பிச்சன் அல்லது பித்தன் என்று பாடச் சொன்னதின் உண்மை தெரிகிறது. அதே ஊரில் மற்றொரு கல்வெட்டில் குலோத்துங்கச் சோழன் 29-வது ஆண்டில் "வழக்கு வென்ற திருஅம்பலம்" என்ற ஒரு கல் மண்டபத்தைக் கட்டுவதற்காகச் சில குடிகளுடைய வீடுகளை எடுத்துக்கொண்டு வேறு இடந் தந்ததாகக் கண்டிருக்கிறது. இதனால் சுந்தரமூர்த்திகளின்மீது ஈசன் வழக்குத் தொடுத்து வென்ற விஷயம் நிரூபிக்கப்படுகிறது. மற்றும் சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடினது திருவொற்றியூர்ச் சாசனத்தால் (1046 கி. பி.) அறிகிறோம். அதிலேயே அறுபத்துமூன்று நாயன்மார்கள் பிரதிமைகளை பிரதிஷ்டை செய்த செய்தியும் சொல்லப்பட் டிருக்கிறது. மேலும் சுந்தரமூர்த்திகள் திருவருள் பெற்ற இடமாகிய திருவெண்ணெய்நல்லூரில் கோபுரத்தின்கீழுள்ள சுவற்றில் 5 அழகிய செய்யுள்களில் சுந்தரர் தடுத்தாட் கொள்ளப்பட்ட ஐதிகம் கூறப்பெற்றுள்ளது. அச் செய்யுட்கள் பன்னிரண்டாவது நூற்றாண்டிலேயே வரையப்பட் டிருக்கலாம் என்று ஊகிக்க முடியும்.

*சுந்தரர் காலத்து நாயன்மார்கள்.*

சுந்தரமூர்த்திகள் காலத்திருந்த ஏனைய நாயன்மார்கள்:—விறன்மிண்டர், மானக்கஞ்சாரர், பெருமிழலைக் குறும்பர், ஏயர்கோன்கலிக்காமர், சோமாசியார், சேரமான் பெருமாள், நரசிங்க முனையர், கோட்புலியார், சடைய நாயனார், இசைஞானியார் முதலியவர்கள். அவர் காலத்திலிருந்த ஏனைய சிவனடியார்கள்:— குன்றையூர்க் கிழார், ஞாயிறு கிழார், பரவையார், சங்கிலியார் முதலியவர்கள். மேற்கூறிய அடியார்களில் இசைஞானியார், நரசிங்க முனையர், பரவையார், சேரமான் பெருமாள், கோட்புலியார், விறன்மிண்டர்,

மானக்கஞ்சாறர் என்ற பெரியார்களின் பெயர்கள் கல்வெட்டுகளில் வந்திருக்கின்றன. **சேரமான் பெருமாள் நாயனார்** - இவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளோடு தோழமை பூண்டு அவரைத் தம் நாட்டிற்கு இரண்டு தடவை அழைத்துச் சென்ற சேரதேசத்து மன்னர். இவ்விரண்டு தோழர்களுடைய உருவங்களும், சேரமான் பெருமாளின் தலை நகரான திருவஞ்சைக்களத்து ஆலயத்தில் காணலாம். அந்நகரில் இருந்துதான் இவ்விருவரும் கைலாயம் சென்றனர். சேரமான் பெருமாள் சிதம்பரத்தில் எழுந்தருளி யிருக்கும் நடராஜப் பெருமான்மீது பெருத்த அன்பு வாய்ந்தவர். அதற்கு அறிகுறியாக சிதம்பரத்துக் கல்வெட்டு ஒன்றில் அப்பெருமாள் பெயர் காணப்படுகிறது. அதில், சகம் 1498-ல் சேரமான்பெருமாள் நாயனார் வம்சத்தில் உதித்த இராமவர்ம மகாராஜன் தானஞ் செய்த விஷயம் கண்டிருக்கிறது. மேலும், திருச்சி லால்குடி என்ற திருத்தவத்துறையில் சேரமானார் மகன் கோக்கிழான் அடிகள் மலைநாட்டுப் புத்தூர் சங்கரன் குன்றம் போழன் என்பவன்மூலமாக நந்தா விளக்கு வைக்கப் பொன் கொடுத்ததாகக் கண்டிருக்கிறது. இவ்விரு கல்வெட்டுகளிலும், சேரமான் பெயரைக் காண்கிறோம்.

**மானக்கஞ்சாறர்** :—ஸ்ரீ முஷ்ணம் ஆலயத்தில் தம்பிரான் தோழன் மானக்கஞ்சாறன் என்பவனுடைய சிலை யொன்று ஸ்தாபிக்கப்பட் டிருப்பதாகக் கல்வெட்டில் காண்கிறோம். அவன் அவ்வாலயத்தில் திருப்பதிகம் வாசித்ததாகவும் கண்டிருக்கிறது. இவன் மானக்கஞ்சாற நாயனாரின் பெயரை வகித்த ஒருவனாக இருக்கலாம். (கல்வெட்டு எண் 255/1916)

**விறன்மிண்டர், கோட்புலியார்** :—இவ்விரு நாயன்மார்களின் பெயர்களையும் அரிவாட்டாயர், இயற்பகை நாயனார், திருத்தொண்டர், வன்றொண்டர், •சண்டீஸ்வரர் முதலான பெயர்களோடு சேர்த்து அப்பெயர் வகித்தவர்கள் திருப்புறம்பயம் உடைய ஈசுவரருக்கு ஐப்பசி பங்குனித் திருவிழாக்களில் திருவிழா நடத்த பூதானம் செய்தார்களென்று திருப்புறம்பயம் கல்வெட்டில் கண்டிருக்கிறது. இக்கல்வெட்டினால் அக்காலத்தில் இந்நாயனார்கள் பெயர்களை மக்கள் வகித்து வந்தார்கள் எனத் தெரிய வருகிறது.

**இசை ஞானியார், பரவை நங்கையார்**:—இவ்வடியார்களுடைய பெயர்களை, சோழர்கள் காலத்தில் ஏற்பட்ட கல்வெட்டுகளில் கண்ட செய்தியை முன்னமே எடுத்து எழுதி யிருக்கின்றோம். சுந்தரர் காலத்து ஏனைய அடியார்களைப்பற்றி இப்போது கிடைத்துள்ள கல்வெட்டுகளில் அதிகமாகப் புலப்படவில்லை.

## III ஏனைய நாயன்மார்கள்

முந்திய நாயன்மார்கள்.

இதுவரையில் சம்பந்தர் காலத்து நாயன்மார்களையும் சுந்தரர் காலத்து நாயன்மார்களையும் சாசனங்களில் சம்பந்தப்பட்டவரையில் எடுத்துரைத்தோம். இனி, ஏனைய நாயன்மார்கள் எதுகாறும் கல்வெட்டுகளில் குறிக்கப்பட் டுள்ளார்கள் என்பதைக் கூறுவோம் : இதுவரையில் நமது பார்வைக்கு வந்த கல்வெட்டுகளைக் குறித்து மாத்திரம் நாம் சொல்ல முடியும். நமது பார்வைக்கு வராத கல்வெட்டுகள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை ஆராய்ந்து பார்க்குமிடத்தும் இன்னும் மற்ற நாயன்மார்களுடைய பல செய்திகளையும் அறியக்கூடும். ஆகவே இப்பொழுது நாம் ஆராய்வது ஏகதேசமான ஆராய்ச்சியென்றே சொல்லவேண்டும்.

நாம் முன்னமே குறித்தபடி இனிக் கூறப்போகும் நாயன்மார்கள் எல்லாரும் சம்பந்தருக்கு முந்தியவர்களாகவும், சம்பந்தருக்கும் சுந்தரருக்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்தவர்களாகவும் உள்ளவர்கள். எல்லா நாயன்மார்களையும் சுந்தரமூர்த்திகள் தம் திருத்தொண்டத் தொகையில் கூறியுள்ளாராதலின் அவர்கள் எல்லாரும் சுந்தரமூர்த்திகள் காலத்திலாவது அவர்களுக்கு முந்தியாவது இருந்திருக்க வேண்டும். கண்ணப்பர், சண்டீசர், காரைக்காலம்மையார், கோச்செங்கணார் முதலியவர்களைச் சம்பந்தரே கூறியிருக்கிறாராகலின், அவர்கள் சம்பந்தருக்கு முந்தியே இருந்தவர்களாவார்கள். இனி, கல்வெட்டுக்களில் கிடைத்த அடியார்களின் பெயர்கள் யாதெனில், தில்லை மூவாயிரவர், திருநீலகண்டர், இயற்பகையார், அமர்நீதியார், மெய்ப்பொருள் நாயனார், (மிலாடுடையார்) ஏனாதி நாயனார், கண்ணப்ப நாயனார், சண்டேஸ்வரர், திருமூலர், தண்டியடிகள், காடவர்கோன், இடங்கழியார், நமிநந்தி யடிகள், காரைக்காலம்மையார், கோச்செங்கணார் முதலியவர்கள். இனி, இவர்களைப் பற்றி ஒரு சிறிது ஆராய்வாம்.

“ இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய் இனியுன்னை யென்னிரக் கேனே ”



தில்லை மூவாயிரவர்.

**தில்லைவாழ் அந்தணர்கள்** மூவாயிரவரைக் குறித்து சைவ ஆசாரியர்கள் கூறியிருப்பதன்றி வைஷ்ணவ சமயத்து ஆழ்வார்களில் ஒருவரான குலசேகர ஆழ்வாரும் கூறியிருக்கின்றார்.

திருக்கழுக்குன்றத்துச் சாசனம் ஒன்றில் குலோத்துங்கச் சோழன் இருபத்தைந்தாவது ஆண்டில் “தில்லைமூவாயிரவர் நம்பி” என்ற, ஒருவனும் அவன் சகோதரனும் அவ்வாலயத்திற்கு நூறு காசுக்கு வாங்கின நாலு பதக நிலத்தைத் தானஞ்செய்தார்கள் என்று கண்டிருக்கிறது. இதனால் தில்லை மூவாயிரவர் என்ற பெயரைச் சோழர் காலத்திலேயே மனிதர்கள் இட்டுக்கொண்டார்கள் என்ற செய்தி தெரிகிறது. மேலும் மதுராந்தகத்துச் சாசனத்தில் “ சீராளன் கருணாகரன் என்ற தில்லை மூவாயிரவ மங்களோத்துமன் ” என்ற ஒரு மத்தியஸ்தன் பெயரை ராஜராஜன் I காலத்திலேயே காண்கிறோம்.

திருநீலகண்டர்.

**திருநீலகண்ட நாயனார்** தில்லையில் அவதரித்தபோதிலும் அவர் பெயர் தமிழ்நாடெங்கும் வழங்கி வந்தது. அவர் பெயரால் மடங்களும் கட்டப்பெற்றன. உதாரணமாகப் பழனியில் கிடைத்த ஒரு தாமிர சாசனப்படி பழனி நகரத்தில் “திருநீலகண்டர் மடம்” என்ற ஒரு மடம் தாபிக்கப்பெற்றதையும், அதை நடத்தத் தொகைகள் தானஞ்செய்ததையும் கூறுகிறது. இது சகம் 1438-ல் ஏற்பட்டது. மேலும், சேரமாதேவி கல்வெட்டு ஒன்றில் திருநீலகண்ட செட்டி என்ற வியாபாரியின் பெயர் ஒன்று காணப்படுகிறது.

அமர்நீதியார்.

**அமர்நீதியடிகளின்**பெயரைத் திருவொற்றியூர் கோவிலில் ஜயகம்ப விக்கிரமவர்மன் என்ற கங்க பல்லவனுடைய 9-வது நூற்றாண்டுக் கல்வெட்டில்காணலாம். அதன்படி சோழநாட்டு இந்தளூர் நாட்டில் கஞ்சனூரில் இருந்த கஞ்சரன் அமர்நீதி என்ற பல்லவதிரையன் நந்தாவிளக்கு வைக்கப் பொன் உதவினதாகக் கண்டிருக்கிறது. இதனால் அமர்நீதி யென்ற அடியார் பெயரை மக்கள் இட்டுவந்தார்கள் எனத் தெரிகிறது.

மெய்ப்பொருள் நாயனார்.

**மெய்ப்பொருள்** நாயனார் சேதிநாட்டுத் திருக்கோவலூரில் ஆண்ட ஒரு மன்னர். அவரை மலாடர் கோமான் என்றும், மிலாடுடையார் என்றும் வழங்குவார்கள். முத்திநாதன் என்னும் ஒரு வஞ்சகன் அவரை நேரில் வெல்லக்கூடாததறிந்து கபடமாகச் சிவவேடம் பூண்டு வஞ்சகமாகக் குத்திவிட்டான்.

அப்போதும் அப்பெரியார் அவனை யாரும் துன்பப்படுத்தாதபடி தம் சேவகனை தத்தன் என்பவனை விளித்து “ தத்தா நமர் ” எனத்தடுத்தார். இப்பெருமை உலகெல்லாம் பரந்தது. இச்செய்தியைத் தஞ்சைப்பெரிய கோயிலில் இராஜேந்திரச் சோழன் காலத்து மூன்றாவது ஆண்டு கல்வெட்டில் காண்கிறோம். அது அடியில் கண்டபடி “கோபரகேசரி வர்மனான இராஜேந்திர சோழதேவருக்கு யாண்டு மூன்றாவது உடையார் ஸ்ரீ ராஜராஜேஸ்வரம் உடையாருக்கு ஸ்ரீகார்யம் செய்கின்ற பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியனான தென்னவன் மூவேந்தவேளான் யாண்டு மூன்றாவது வரை செய்வித்த செப்பு பிரதிமங்கள் * * * பாதாதிகேசாந்தம் இருபதிற்று விரல் உசரத்து இரண்டு கையுடையவரான கனமாகச்செய்த தத்தா நமரேகாண் என்ற மிலாடுடையார் ஒருவர்.”

இதனால், சாசனப் பதிப்பாளர்கள் எத்துணைத்திருத்தமாக வாக்குகளை எடுத்தாண்டிருக்கிறார்கள் என்றது தெரியவரும். மேலும், தஞ்சைத் திருநாகேஸ்வரத்துக் கல்வெட்டு ஒன்று “மிலாடுடையார் பள்ளி” என்ற பெயரும் திருக்கோவலூர்க்கடுத்த

“ மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம் ” 

கீழூரில் "கயிலூர் பெருமானார்" என்ற மிலாடுடையார் பெயரும் வருவதைக் காண்க.

ஏனாதிநாயனார்.

**ஏனாதி** நாயனார் பெயரைத் திருவொற்றியூர்ச் சாசனம் ஒன்றில் "ஏனாதி மேற்குடையான் பெரிய நாயன் என்ற பொத்தப்பிராயன்" என்பவன் ஒரு கதவைத் தந்ததாகக் கண்டிருக்கிறது.

கண்ணப்பர்.

**கண்ணப்ப** நாயனார் சீகாளத்தியில் பிரக்கியாதிபெற்ற போதிலும் அவருடைய பெயரை அவ்வூரில் அதிகமாகக்காண்பதில்லை. ஆனால் புதுக்கோட்டையில் திருவறங்குளை ஆலயத்தில் சகம் 1378-ல் தாது வருஷம் வைகாசி மாதம் 20 தேதியில் கண்ணப்ப நாயனார் பிரதிமை தாபித்ததாக அக்கல்வெட்டு சொல்லுகிறது. கண்ணப்பனென்ற பெயர் பலர் வகித்திருந்ததாகவும் தெரிகிறது. கோவை ஜில்லா சங்கிராம நல்லூர் ஆலயத்தில் சகம் 1265-ல் கண்ணப்பன் தென்னவதாரையன்என்ற ஒருவன் இருந்ததாகத் தெரிகிறது. மேலும், கண்ணப்பர் காலத்தில் குடுமித்தேவரை வழிபட்டிருந்த சிவகோசரியாரின் பெயர் பூண்ட "சிவகோசரி பிடாரன் தேச விடங்கன்" என்ற ஒருவன் திருப்பதிகம் வாசிக்கத் திருவரத்துறை ஆலயத்திற்குப் பூதானம் செய்ததாக இரண்டு கல்வெட்டுகளில் காண்கிறோம்.

**அரிவாட்டாயர், இயற்பகையார்,** இவ்விரண்டு அடியார்களின் பெயர்களையும் விறன்மிண்டர், கோட்புலியார் முதலான பெயர்களோடு திருப்புறம்பயத்துச் சாசனத்தில் காண்கிறோம். இப்பெயர்களைக்கொண்ட சிவபத்தர்கள் அக்காலத்தில் ஐப்பசி, பங்குனி மாதங்களில் திருவிழா நடத்துவதற்காகப் பூதானம் செய்ததாக அத்திருப்புறம்பயத்து ஆலயத்தில்காண்கிறோம்.

சண்டேஸ்வரர்.

**சண்டேஸ்வர நாயனார்,** தஞ்சை இராஜராஜேஸ்வரர் கோயிலில் இராஜராஜன் I 21-வது ஆண்டில் (கி. பி. 1006) ஏற்பட்ட சாசனத்தில் சண்டேஸ்வரர் பிரதிமையும் அவர் பிதாவின் பிரதிமையும் தாபித்ததாகக்கண்டு இருக்கிறது. அவர் பிதாவின் பெயர் எச்சதத்தன் என்று பெரிய புராணத்தினால் அறிகிறோம். மேலும், அதே ஆண்டில் "ஈராயிரவன் பல்லவயன் ஆனமும்மடி சோழன்" சண்டேஸ்வரரது பிரதிமை தாபித்தானென்றும், ராஜேந்திர சோழன் இரண்டாவது ஆண்டில் சண்டேஸ்வரர் ஆலயத்திற்கு தானஞ் செய்ததென்றும் காண்கிறோம்.

காரைக்காலம்மையார்.

**காரைக்காலம்மையார் :—** தஞ்சைப் பெரிய கோயிலில் இராஜராஜதேவர் 29 ஆண்டுச் சாசனத்தில் தேவரடியார் பெயர்களில் காரைக்கால் என்ற ஒரு பெயர் கண்டிருக்கிறது. இதனால் காரைக்காலம்மையின் பெயரைப் பெண்கள் வகித்துக்கொண்டார்கள் என்று அறிகிறோம்.

நமிநந்தி யடிகள்.

**நமிநந்தி யடிகள் :—** திருக்கழுக்குன்றத்துச் சாசனம் ஒன்றில் குலோத்துங்கன் I நாற்பத் திரண்டாவது ஆண்டில் ஒரு சாசனத்தில் நமிநந்தியடிகள் மடத்திற்காக ஒரு நிலம் வாங்கினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது வருமாறு :—

"தண்டுறை எல்லை உட்பட்ட நீர் நிலமும் புஞ்சை நிலமும் மேனோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறும் இவ்வூர் மடை விளாகத்திருக்கும் நமிநந்தியடிகள் மடத்துக்கு மடப்புறமாக நாங்கள் இறை இழிச்சி விற்றுக் கொடுத்து" என்று கண்டிருக்கிறது.

திருமூல நாயனார்.

**திருமூல நாயனார் ;—** வடஆற்காடு போளூர் தாலூக்கா கோவலூரில் இரண்டு கல்வெட்டுகளில் திருமூலநாயனார் கோயில் கூறப்பட்டிருக்கிறது. 1455 ஜூலை 21 திங்கட்கிழமை மல்லிகார்சுனராயன் காலத்தில் திருமூலநாயனார் கோயிலுக்கு ஒரு 'கணபதிமடு' என்ற கிராமத்தையும், ஆயிரத்து நானூற்று முப்பத்திரண்டு 1432 ஜனவரி பதினேழு வியாழக்கிழமை சந்திரகிரணத்தின்போது அக்கோயிலுக்குப் 'பலவரைப்பற்று' என்ற கிராமத்தையும் தானஞ் செய்தது கண்டிருக்கிறது. மேலும் தஞ்சை ஜில்லா வலிவலத்து ஆலயத்தில் திருமூலதேவர் மடத்திற்கு இராஜேந்திர சோழன் காலத்தில் நில விற்பனை செய்ததாகக் கண்டிருக்கிறது. பட்டீஸ்வர ஆலயத்தில் ஒரு கல்வெட்டில் "திருமூல தேவன் திருமடம்"





என்ற ஒருமடத்தின் பெயரைக்குறித்திருப்பதும் அன்றி அதனோடு திருஞானசம்பந்தர் மடம், திருநாவுக்கரசு மடம் என்ற இருமடங்களையும் சேர்த்துக் கூறுகிறது. ஆகவே, இக்காலத்தில் இம்மூன்று அடியார்கள் மடங்களும் ஏற்பட்டிருந்தன என அறிகிறோம்.

கோச் செங்கணான்.

**கோச்செங்கணான்** என்னும் கோச்செங்கட் சோழ நாயனார் தென்னாட்டில் முதல் முதலில் மாடக் கோயில்களைக் கட்டிய நாயனார் ஆவர். அந்த நாயனாரைப் பற்றிச் சம்பந்தர் முதலான ஆசாரியர்கள் புகழ்ந்துள்ளார்கள். அந் நாயனாரின் பெயரால் ஓர் ஆலயம் ஏற்பட்டிருந்ததாகத்தென்னாற்காடு பெண்ணாகடம் என்ற ஊரிலுள்ள பிரளயகாலேஸ்வரர் ஆலயத்தில் ஒரு கல்வெட்டில் காண்கிறோம். அதன்படி குலோத்துங்கச் சோழன் 33-வது ஆண்டில் திருத்தூங்கானைமாடம் உடைய மகாதேவர் கோச்செங்கணீஸ்வரமுடைய மகாதேவர் ஆலயங்களுக்கு முடிகொண்ட சோழ சதுர்வேதி மங்கலத்துச் சபையோர் நில விற்பனை செய்ததாகக்கண்டிருக்கிறது. ஆகவே, அவ்வூரில் கோச்செங்கட் சோழன் தாபித்த ஓர் ஆலயம் குலோத்துங்கன் காலத்திலேயே இருந்திருக்க வேண்டும்.

முடிப்புரை.

மேலே நாயன்மார்களைத் தனித்தனியாக எடுத்துக் கூறி அவர்களைப்பற்றிக் கல்வெட்டுகளில் கண்ட சில செய்திகளைக் குறிப்பிட்டோம். இனிப் பொதுவாக நாயன்மார்களைப் பற்றிச் சில கல்வெட்டுகளும் கிடைத்திருக்கின்றன. கும்பகோணம் தாலுக்கா, உடையலூர் கைலாசநாதர் ஆலயத்திலுள்ள ஒரு கல்வெட்டில் குலோத்துங்கச் சோழன் காலத்தில் சிவபாதசேகர மங்கலம் என்ற ஊரின் ஆலயத்தில் நாயன்மார் உருவங்களுக்குப் பூஜை நடத்துவதற்காக மூன்று வேலி நிலம் தந்ததாகக் கண்டிருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆலயத்திலும் 63 நாயன்மார்களுடைய சிலைகளையும் முதற் பிரகாரத்திலேயோ அல்லது முதல் மண்டபத்திலேயோ வைத்திருப்பதை நாம் அறிவோம். இக் கைங்கரியத்தை முதல் முதல் தாபித்தவர் இராஜராஜர் I ஆவர். சில ஊர்களில் நாயன்மார்களின் பிரதிஷ்டை சீர்கெட்டுப் போயிருக்கலாம். அப்போது அவைகளை மறுபடியும் பின் வந்தவர்கள் புதுப்பித்து வந்தார்கள்.

சில சமயங்களில் இராஜரீகப் புரட்சியினால் சீர்கேடு அடைந்திருக்கலாம். அவ்விதமான ஒரு சீர்கேடு நடந்ததாக ஆற்காடு தாலுக்கா கலவை என்ற ஊரில் இருக்கும் திருக்கரீஸ்வரர் ஆலயத்துக் கல்வெட்டு ஒன்றில் விஜயநகரத்துக் கம்பண உடையார் காலத்தில் நடந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளை மறுபடியும் பிரதிஷ்டை செய்ய, நிலங்களை விற்றுவந்த 520 பணங்களிலிருந்து செலவுசெய்யப்பட்டது என்று அதில் காண்கிறோம். மேலும் அறுபத்து மூவர் திருமடம் என்ற மடம் ஒன்றிருந்ததாகப் பிரான்மலை ஆலயத்துக் கல்வெட்டொன்றினால் அறிகிறோம். இவ்வாறு நாயன்மார்களைப்பற்றிப் பொதுவாகவும் கல்வெட்டுகளில் கூறியிருப்பதைக் காண்கிறோம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 JAN 1934
MADRAS

# அத்துவாக்கள்

தமிழ்ப் பண்டிதர் - வ. மு. இரத்தினேசுவரையர்

"நற்குஞ் சாக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சாக்கன்று காண்."

"உலகு குளிர எமது மதியி லொழுகு
மமுத கிரணமே
உருகு மடிய ரிதய நெகிழ
வுணர்வி லெழுந லுதயமே
கலையு நிறையு மறிவு முதிர
முதிருமதுர நறவமே
கழுவு துகளர் முழுக நெடிய
கருணை பெருகு சலதியே
அலகில் புவன முடியும் வெளியி
லளியு மொளியி னிலயமே
அறிவு ளறிவை யறியுமவரு
மறிய வரிய பிரமமே
மலையின் மகள்கண் மணியை யனைய
மதலைவருக வருகவே
வளமைதழுவு பரிதி புரியின்
மருவு குமரன் வருகவே."

**சைவசமயாபிமானச் செல்வர்காள்!**

**முன்னுரை:**—திருமந்திர நகர் என்று கூறப்பெற்ற தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையினர் அடியேனுக்கும் ஓர் அரிய பொருள்பற்றி எழுதப் பணித்தனர். அப்பொருள் "அத்துவாக்கள்" என்பதாகும். அப்பணியைப் பேரறிஞர்கள் செய்வது மரபாமாயினும், சிறியேனும் மறுக்க அஞ்சி, அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன் ஒப்பில் சீர்க்குருவாங் குமரநாயகனருள் தலைக்கொண்டு, சிற்சிலவற்றைக் கூறுகின்றேன். சபையார்க்கு எனது மனமார்ந்த நன்றி உரியதாகுக.

**உலகம்:**—காணப்படும் இவ்வுலகம் தோன்றி நின்று அழியுங் காரியமாக உள்ளது. உலகம் பஞ்சபூதக் கலப்பினால் உண்டாகியது. இவ்வுலகில் நிற்பனவும், நடப்பனவுமான இருவகைப் பொருள்களுண்டு. உயிருள்ள பொருள்கள் உடம்பால் மாத்திரமன்றி அறிவின் செறிவாலும் வேறுபாடுடையனவே! ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரையும் இருப்பதாக இலக்கண நூலுடையார் நுவன்றனர். பகுத்துணரும் பண்புடையார் மக்களேயாவர். அதனால், "மக்கள் தாமே ஆறறிவுயிரே, பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" என்று சூத்திரம் யாக்கப்பட்டிருக்கின்றது. உயிர்கள் கன்மத்திற்கேற்ப நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்துநான்கு நூறுயிர யோனி பேதமுடையனவாக உலகின், மேல் மத்திய கீழ்ப்பாகங்களில் வாழும்.

**மக்கட் பிறப்பு:**—மக்களாகப் பிறந்த உயிர்களே மிக்க புண்ணியமுடையன. மக்கட் பிறப்பு, நன்மை தீமைகளை யுணர்ந்து, தலைவராகிய கடவுளை அறிந்து வழிபட்டு இன்பப் பெருநெறி சார்தற்குச் சாதனமானது. இப்பிறவி நீங்கினால் வேறு எப்பிறவி வாய்க்கும் என்பது தெரியாது. ஆதலின், உடலுள்ள பொழுதே மனவாக்குக் காயங்களினால் இறைவரை வழிபடுதலும், சிவபுண்ணியங்களைச் செய்தலும் ஆவசியகமாகும். நரர் பயில் தேசங்களில் நான்மறை பயிலா நாட்டிற் பிறவாது, கண்ணிய மிக்க புண்ணிய பூமியாகிய பாரததேசத்துப் பிறந்த மக்கள் மாண்புடையரே! நற்குலம், சற்சமயம் முதலியவற்றிலும் சிறந்த மக்கள் உடல், உயிர், கட்டு, இறை என்ற இன்னோரன்னவற்றை ஆராய்தல்வேண்டும். ஆராய்ந்தால், உலகத்தின் தன்மையும், உயிரின் அடிமைத் தன்மையும், ஆண்டானும் இறைவனின் இயல்பும் தெளியலாம்.

**இறைவன்:**—ஒரு காரியத்திற்குக் காரணமுண்டு. முதற் காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் என முத்திறமாகக் காரணத்தைப் பாகுபாடு செய்யலாம். இந்த உலகமாகிய காரியத்திற்கு முதற்காரணம், சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி என மூன்று. துணைக்காரணஞ்சிவசத்தி; நிமித்த காரணர் சிவபெருமான்; கருணை மிகுதியால் உயிர்களுக்குஉடல்களை சிவபெருமான்போகமனுபவிப்பித்தலில், பாகம்வருவித்து இன்பமருளுதல் சமயநூற்கருத்தாகும். எனவே, உயிர்கள், மலபரிபாகம், சத்திநிபாதம் என்னும் உயர்நிலை பெறவேண்டும். இருவினைச் செயல்களொத்துக் குருவருளினால் உயிர்கள் இன்பப் பெருக்காற்றுப்படுதல் வேண்டும். முற்றறிவு முற்றுத் தொழிலுடைய முதல்வரே இன்ப உருவினராய்ச், சிற்றறிவு, சிறுதொழிலுடைய சீவர்களின்






பக்குவநாடியருள்வார். ஆதலின், மக்கள் ஒரு நிலையினின்று தெய்வம் போற்றி மாண்புசார வேண்டும்.

**சமயம்:**—சமயமாவது மக்கள் கடவுளை அறிந்து வழிபட்டுப் பிறவாப் பெருவாழ்வடைதற்குரிய வழியாம். பிறந்திறந்துழலும் தெய்வங்களை நம்பினால் உயிர்கள் உயர்கதி பெறமுடியாது. ஒவ்வொரு தெய்வ சம்பந்தமாகவே சமயங்கள் வழங்கப்படுகின்றன. சமயம் அகச்சமயம், புறச்சமயம் என இரண்டாக வகுக்கப்படும். புறச்சமயிகளுக்கும் அகச்சமயமாகிய சைவசமயக்கடவுள் அருள்வாரென்று நாம் அறிகின்றோம். நமது சமயம் சைவம். சைவம் என்பது சிவ சம்பந்தமுடையது. சிவம் மங்களகாமுடையது. சிவபிரான், கற்பித்தருளிய வேதாகம நூல்களில் விதித்தன செய்து, விலக்கியன விடுத்து நாம் நடப்பதால், சிவசீவ வேறுபாடுணர்ந்து, வீடுபேறடைய ஏதுவுண்டாகும். சரியை கிரியையோகம் என்ற பல படிகளினின்று வழிபாடு செய்ய, உயிர்களுக்கு உண்மை ஞான முண்டாகும். சிவஞானமே அத்துவிதாநந்தப் பெருமுத்தி யளிக்கும். இச்சைவ சமயம், சந்தானசாரியார், சமயாசாரியார் முதலிய சிவாநுபூதிச் செல்வர்களால் நன்கு வளர்க்கப்பெற்ற பெருமையுடையது. அன்புத் தெளிதேனொழுகும் இன்பச்சுவைப் பாடல்கள் கல்மனதையுங் கனியச் செய்யும் பான்மையி னமைந்துள்ளன. அரதத்த சிவாசாரியார் முதலிய பெரியார் ஆற்றிய அற்புதங்களும் பலவே! அன்பு குன்றி வன்புறு நெஞ்சராய்க் கடவுளைக் காட்டக் கேட்போருடைய துன்ப வாழ்க்கையும் இன்பமடைவதாக. சமீப காலத்திலிருந்த குமரகுருபர சுவாமிகள் பெருமை நம்மவரறிந்ததே! மங்கையர்க்கரசியாம் மங்கை நல்லார் அங்கயற்கணம்மை பங்கிலுறை சோமசுந்தரப் பெருமானை ஆலவாயிற் சீலமாய்ப் போற்றிப் பாலறுவாயரால் சைவம் பெருக்கிய உயரறத்தை நம் பெண்மணிகளும் சிந்தித்துச் சமயவளர்ச்சிக்கு வேண்டுவ புரியுஞ் சுதந்திரம்பெற முன் வருவார்களாக. சமயம், மொழி ஆகிய இரண்டும் பண்டைய மக்களின் அரும் பணியால் வளர்ந்தன. மன்னரும் மாதேவனருள் வழி நின்று செங்கோலோச்சினர். அன்னவர் பெருமையும் ஆங்காங்குச் சமய குரவர்களின் திருவாக்குடன் விரவி விளங்குகின்றது.

**சிவதீக்ஷை:**—சிவதீக்ஷை என்பது சைவ சமயிகள் பெறவேண்டிய ஒரு மந்திரக் கிரியை. சமயிகள் ஒவ்வொருவித சம்ஸ்காரங்களைப் பெற்றால்தான் அவ்வச்சமயிகளாவது வெளிப்படை. மலநாசத்தையும், சிவஞானப் பதிவையும் அளிக்க வல்லதே சிவ தீக்ஷையாகும். சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை என்பன ஆத்ம உஜ்ஜீவனத்திற்கு ஏற்றவை. ஆசாரியாபிஷேகம் என்றும் ஒரு தீக்ஷை உண்டு. ஆசாரியராதற் குரியவர்தான் அதனைப் பெற வேண்டும். ஏனையோர் பேரளவில் சிற்சில காரியங்களைச் செய்து பொருள் தேட விரும்பி ஆசாரியராவர். அது பயனளியாது. நிற்க, சிவதீக்ஷையில் கலாசோதனை, அத்துவ சுத்தி முதலியன செய்யப்பெறும். மாயையிலிருந்து உடல்கள் தோன்றும் முறை, ஒடுங்கும்முறைகளை நம்சைவசமயக் கிரியைகள் நன்கு விளக்கும். மாயையிலிருந்தே உலகம் தோன்றும். மாயை சுத்தமாயை, மிச்சிரமாயை, அசுத்தமாயை எனப் பிரிக்கப்படும்.



**சகலர்** :—நாம் மும்மலமுடைய சகலர் வகுப்பிலுள்ளவர்கள். சற்குரு தீக்ஷையால் சத்திநிபாதம் பெறலாம். தீக்ஷையில், நயன தீக்ஷை, பரிசதீக்ஷை, மானசதீக்ஷை, வாசகதீக்ஷை எனப் பல்வகை யுண்டு. நமது சமயாசாரியர்களும் ஒவ்வொரு வகைத் தீக்ஷையை இறைவராற் செய்யப்பெற்றே தூயராயினர்.

**தத்துவ சுத்தி** :—தத்துவங்கள் ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவதத்துவம் என்று பகுக்கப்படும். இவை, அணு பக்ஷமும், சம்புபக்ஷமும் என இரண்டி லடங்கும். சகலராகிய உயிர்களுக்கு முப்பத்தாறு அசாதாரண தத்துவங்கள் உடல்களாய் அமையுங்கால், காரிய மாயா தத்துவம் காரண சரீரமாகவும், காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்தும் கஞ்சுக சரீரமாகவும், குணதத்துவம் குண சரீரமாகவும், மனம், புத்தி, அகங்காரம் மூன்றும் தன்மாத்திரை ஐந்தும் ஆகிய எட்டும் புரியட்டக சரீரமாகவும் உண்டாம். பஞ்சபூத பரிணாமமே பருவுடலாகும். இவ்வுண்மைகள் (சைவ சமயத்தில்) சுத்தாத்துவித சைவ சித்தாந்த நெறியில் நன்கு போதரும். (நான் பிரமம் என்று தருக்கித் தீநெறி யொழுகுவோர் தப்பாது துன்புறுவர்.) தீக்ஷையில் தத்துவசுத்தி செய்யப் பெறும். இங்கே விரிப்பிற் பல்கும்.

**அத்துவாக்கள்** :—ஆன்மாக்களுக்குக் கன்மம் வளர்தற்கும், அவை பாகதி சார்தற்கும் உரிய வழி. அத்துவா=வழி. கலை= பிரிவு ; பங்கு. சற்குருநாதன் ஆறத்துவாக்களிலும் அமைந்த சஞ்சித கன்மத்தை ஒரே காலத்தில புசிக்கச்செய்து வீடளிக்கவுங் கூடும். அத்துவாக்கள்: மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என ஆறும்.

1. **மந்திரம்** :—ஈசானம் முதல் அஸ்திர மந்திரம் ஈறாகிய பதினொன்று.

2. **பதம்** :—பிரணவாதி பிரணவாந்தமாகிய - ஓம் வியோம வியாபிநே வ்யோம ரூபாய என்பது முதல் ஓம் சிவாயநம: என்பது இறுதியாகிய எண்பத்தொன்று.

3. **வன்னம்** :—அ. முதல் - க்ஷகாரம் வரையுமுள்ள ஐம்பத்தொன்று.

4. **புவனம்** :—காலாக்கினி ருத்திர புவனம் முதல் அநாசிருத புவனம் வரையுமுள்ள இருநூற்றிருபத்துநான்கு.

5. **தத்துவம்** :—பிருதுவி தத்துவ முதல் சிவ தத்துவ மீறாகிய முப்பத்தாறு.

6. **கலை** :—நிவிர்த்தி கலை முதல் சாந்தியாதீத கலை இறுதியான ஆறு.

“ ஏய்ந்தமுறை மந்திரங்கள் பதினொன் றும்
பதங்க ளெண்பத்தொன் றக்கரங்க ளைம்பத்
[தொன் றுரு
மாய்ந்தபுர மிருநூற்றே டிருபத்து நான்கா
மறிதரு தத்துவ முப்பத்தாறு கலையைந்தே ”

என்னும் செய்யுட்பாகமும் அத்துவா இவை என்பதையும், அதன் தொகையையும் புலப்படுத்துகின்றது.

இனி, ஆன்மா கலை முதலியவற்றால் கட்டப்பட்டுக் கன்மபலன்களை நுகரும்போது புருஷன் என்று அழைக்கப்படும். இது சகலர் என்ற பிரிவுடை ஆன்மாக்களுக்கே யுண்டு. சீடனது உடம்பில் கலைகள் அமையுமாற்றை விசாரிப்பாம். சிவாகம தீக்ஷையின்றிச் சைவராவதும், உயர்கதி பெறுவதும் முடியாது. தீக்ஷை பெற்றே பஞ்சாக்ஷர ஜெபஞ் செய்தல்வேண்டும் ; அதுவுங் குரு முகமாகப் பெறவேண்டும் என்று பெரியோர் விதித்தனர். தீக்ஷை பெற்று, அம்முறை தவறினோர் தீக்ஷையின் பலனை அடையமாட்டார்.

சீடனது சரீரத்து முழந்தாள் முதல் பாதம் வரையும் நிவிர்த்தி கலையும், நாபி முதல் முழந்தாள் வரையில் பிரதிட்டா கலையும், இருதய முதல் நாபிவரையில் வித்தியா கலையும், புருவ முதல் இருதயம் வரையில் சாந்தி கலையும், சிகை முதல் புருவம் வரையில் சாந்தியாதீத கலையும் வகுக்கப்பட்டுக் கலாசுத்தி செய்யப்பெறும். புருஷ தத்துவமும் மற்றைத் தத்துவங்களோடு சேர்த்துச் சுத்தி செய்யப்படும்.

கலையில் ஐவகை அத்துவாக்கள் அடங்குமாறும், தெய்வமும்.

1. **நிவிர்த்தி கலையில்** :—

தத்துவம், பிருதுவி. புவனம், காலாக்கினி ருத்திர புவனமுதல் பத்திரகாளி புவனம் வரை 108.

வன்னம், க்ஷகாரம். பதம், ஓங்கார முதல் ஹவ வரை 28.

மந்திரம், சத்தியோசாதம், இருதயம் 2.

தெய்வம், பிரமா.

2. **பிரதிட்டா கலையில்** :—

தத்துவம், அப்பு தத்துவமுதல் பிரகிருதி தத்துவம் வரையுமுள்ள ஆன்மதத்துவங்கள் 23.

புவனம், அமரேச புவனம் முதல் சீகண்ட புவனம் வரையிலுள்ள 56.

வன்னம், ஹகார முதல் டகாரம் வரை 23.

பதம், சர்வ சர்வ என்பது முதல் வயாபின் என்பது வரையில் 21.

மந்திரம், வாமதேவ மந்திரம் - சிரோமந்திரம் 2.

தெய்வம், விஷ்ணு.

3. **வித்தியா கலையில்** :—

தத்துவம், புருடதத்துவமுதல் மாயாதத்துவம் வரையில் வித்தியா தத்துவம் 7.

புவனம், வாம புவனமுதல் அங்குட்டமாத்ர புவனம் வரை 27.

வன்னம், ஞகாரமுதல் ஸகாரம் வரை 7.

பதம், வியோமின் முதல் ஓங்காரம் வரை 7.

மந்திரம், அகோரம், சிகை 2.

தெய்வம், உருத்திரமூர்த்தி.

4. **சாந்தி கலையில்** :—

தத்துவம், சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம். 3.

புவனம், வாம புவனமுதல் சதாசிவ புவனம் வரை 18.

வன்னம், ங. வ. க. 3.

பதம், நியாநாகார முதல் வியோம வியாபி வரை 11.

மந்திரம், தற்புருஷம், கவசம் 2.

தெய்வம், மகேசுவரன்.

5. **சாந்தியாதீதகலையில்** :—

தத்துவம், சத்தி, சிவம் 2.

புவனம், நிவிர்த்தி புவனமுதல் அநாசிருத புவனம் வரை 15.

வன்னம், ஔ முதல் அ வரை 16.

பதம் ஓங்காரம்.

மந்திரம், ஈசானம், அஸ்திரம், சிவமந்திரம் 3.

தெய்வம், சதாசிவம்.

இன்னும், ஆன்மாக்களுக்கு யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலை நிவிர்த்திசெய்து சம்சார பந்தத்தில் வெறுப்பையுண்டாக்கி மோக்ஷத்தில் உன்முகஞ் செய்தலால், நிவிர்த்திகலை என்றும்; இடையறுத்தியானத்தால் அநுக்கிரகிக்கப்பட்டு மோக்ஷத்தில் உன்முகமான ஆன்மாவைக் கீழத்துவாவில் சம்சாரபந்தத்தைத் தடுத்து நிறுத்தலால், பிரதிட்டாகலை என்றும்; மூவகை விடயமாகிய வாசக ஞானத்தை விடுத்துச் சாக்ஷாத்காரமான அசேஷ பதார்த்த ஞானத்தை விளக்குதலால் வித்தியாகலை என்றும்; ஆன்மாவுக்கு எல்லாத் தத்துவங்களிலும் சாந்தியைச் செய்தலால் சாந்திகலை என்றும் ; இவை யாவற்றையுங் கீழ்ப்படுத்தி ஆன்மாவை மேலே செலுத்தலால், சாந்தியாதீதகலை என்றும் அமைந்தமை யுணர்க.

**அத்துவாக்கள் கன்மம் வளர்தற்கு வைப்பிடம்** :—ஆன்மாக்கள் கன்மத்துக்கு ஈடாகப் பிறந்திறந்துழலும். கன்மம் பிரவாக அநாதியாய்ச் சீவர்களைப் பொருந்தும். இக்கன்மம் சடமாகவுள்ளது. ஆன்மாக்களுக்குச் சாதி ஆயுள் போகம் என்பன இதனாலே உண்டாம். கன்று தாய்ப்பசுவை நாடிக் கூடுமாறுபோல அவ்வவ்வுயிர்களின் கன்மங்கள் இறைவன் நியதிப்படி அவ்வவ்வுயிர்களையே சென்று சாரும். இக்கன்மம் மனம் வாக்குக் காயங்களினாலே செய்யப்பட்டு வளரும். நல்வினை தீவினை என்றும், ஆகாமியம் சஞ்சிதம் பிராரப்தம் என்றும், ஸ்தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என்றும் வன்மை மென்மை என்றும் புத்திபூர்வம், அபுத்திபூர்வம் என்றும் பலதிறப்படும். இக்கன்மம் திதி காலத்தில் புத்தியையும், மாசங்கார காலத்தில் அப்புத்தி பிரகிருதியையும் பொருந்தும். பிரகிருதி மாயையைப் பொருந்தும். சிருட்டிகாலத்தில் தேகத்தைப் பொருந்தும். திதி காலத்தில் எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதமாகப் பிறக்க இவ்வினைகளே காரணமாம். கன்மங்களைச் சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் எனப் பிரிக்கலாம். பிராரத்தம் அநுபவிக்குஞான்று அதனை இறைவன் ஊட்டுகின்றான் எனக் கொள்ளாது, யான் செய்தேன் பிறர் செய்தார் என்று கொள்ளப்படுதலினால், அது மேலைக்கு வித்தாக உற்பவிக்கும். இதனையே ஆகாமியம் என்ப. பல சனனங்களிலும் செய்த ஆகாமியக்

“ வெண்ணீறு அணிகிலா தவரைக் கண்டால் அம்மநா மஞ்சீ மாறே ”

றந்தயிலை சீரா ளமையும் அகத்தூய்மை வாய்மையாற் காணப்படும் ”

கொத்தே சஞ்சிதமாகும். கன்மம் மந்திராத்துவா முதலிய ஆறினுங் கட்டப்பட்டுச் சஞ்சிதம் என்னும் பெயர்த்தாய் நிற்கும். இதனை இன்னும் விரிப்பின், மந்திர வன்னங்கள் வாக்கினாலும், புவனங்கள் காயத்தினாலும், தத்துவங்கள் மனதினாலும் கர்மம் ஈட்டப் படற்கு வழிகளாம் என்றபடி. கலை சத்தியாய் மூவகையாலும் ஈட்டுதற் குதவியாக இருக்கும்.

"மூன்று திறத்தணுக்கள் செயுங் கன்மங்கட்கு
முன்னிலையா மூவிரண்டா மத்துவாவின்"

என்றமை பார்க்க.

**அத்துவாக்கள் ஒடுக்கப்படும் முறை:—** முதல்வராகிய சிவபிரான் ஆவேச பக்கமாக அத்துவாக்களை ஒடுக்கியருள்வார். அஃதாவது, சற்குருவாயிலானே அத்துவசுத்தி செய்து மலங்கழியச் செய்வார். அது எப்படியெனில், முற்கூறிய ஆறு அத்துவாக்களினும் சஞ்சிதமாயமைந்த கன்மங்களையெல்லாம் அழியும்படி செய்தல். கன்மம் நீங்கவே; மாயையும் நீங்கும்; ஆணவமலத் தடையும் அகலும். பின்பு சிவம் பிரகாசிக்கும். மந்திரங்கள் பதத்திலும், பதம் வன்னத்திலும், வன்னம் புவனத்திலும், புவனம் தத்துவத்திலும், தத்துவங் கலையிலும் அடங்க ஒடுக்கிக் கலையைத் திரோதான சத்தியிலும், திரோதான சத்தியைச் சிவத்திலும் ஒடுக்கப்படும்.

**முத்திக்கும் அத்துவாக்களே வித்தாகும்:—** இன்னும், அத்துவாக்களில் மந்திரமுதலிய ஐந்தும் மனவாக்குக் காயங்களாக்வும், கலை இவைகளைச் செலுத்தும் சத்தி வடிவாயும் நின்று கன்மம் ஈட்டப்படுதலின், அத்துவாக்கள் கன்மமீட்ட வழியாதலும், மனவாக்குக் காயங்களால் சிவபிரானைத் தியானித்துத் துதித்து வணங்கி முத்தியடைதற்கு வழிகளாயிருத்தலால், அவை பரகதி அடைதற்கு வழியாதலும் உணர்க.

"அத்துவா வெல்லாமடங்கச் சோதித்தபடி
சித்துருவாய் நின்றார் தெளிவறிவ தெந்நாளோ"

என்பது தாயுமானவர் அநுபூதித் திருவாக்கு.

**அத்துவாக்களின் மூன்றுவகை:—** மந்திரம் பதம் வன்னம் ஆகிய மூன்றும் சுத்தமாயா காரிய மாதலால் சுத்தாத்துவாவென்றும்; தத்துவம், சுத்தமாயை அசுத்தமாயைகளின் காரியமாதலால் மிச்சிராத்துவாவென்றும்; புவனம் சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயைகளின் காரியமாதலால் அசுத்தாத்துவா வென்றும் சொல்லப் பெறும்.

1. **மலமகலவழி:—** சரியை, கிரியை, யோகங்களை அனுட்டித்து வரின் மல வலிபோய் மகாதேவாருள் வழிகூடலாம். பதமுத்தியினும் பரமுத்தி உயர்ந்தது. உபாயச்சரியை முதல், உபாய யோகம் வரையும் ஒரு பகுதியாகவும், உண்மைச் சரியை முதல் உண்மை யோகம் வரையும் ஒரு பகுதியாகவும் பிரிப்பர். உண்மைச் சிவஞானமே வீடுபேற்றிற்கு இன்றியமையாதது. அறிவிக்க அறியுந்தன்மை யும், சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுமுடைய ஆன்மாக்கள் சிவபுண்ணியப் பேற்றானே தூய்மை யடையவேண்டும்.

2. பக்குவமுடைய ஆன்மாக்களுக்குச் சிவபிரானே குருவாக எழுந்தருளி வந்து அத்துவசுத்திசெய்து உண்மை முத்தியை யளிப்பார். அதனால், சஞ்சித வினை நீங்கும். அது நீங்க மாயா மலமுமகலும். ஆணவமலம் வலியற்றிருக்கும். பிராரத்த கன்மம் அனுபவத்தால் நீங்கும்- ஆகாமியம் வளரமாட்டாது.

3. இன்னும் சுருக்கிக்கூறில், சிவபுண்ணிய விசேடத்தினால் புத்தி இருவினைகளிடத்தும் விசாரித்து அறியாது ஒரே தன்மையாக நிற்க வேண்டும். இப்படி நிற்குமேயானால் இருவினையொப்பு உண்டாகும். பி அதனால் மலபரிபாகமாம் என்பதேயாம்.

"பிணக்கி லாத பெருந்துறைப்பெரு மானுன்
நாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோ ரின்பமேவருந் துன்பமே
துடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமலென்வினை யொத்தபின்
கணக்கி லாத்திருக் கோலநீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே."

**இருவினையொப்பு மலபரிபாகம்:—** ஓடும் பொன்னுஞ் சமமென நோக்குதலும், இன்பமுந் துன்பமும் ஒன்றெனக் கருதுதலும் இருவினை யொப்பு என்னலாம். பாவமும், புண்ணியமும் சமமாக ஒத்தல் என்பது கருத்தன்று. ஆகவே, இருவினை யொப்பு என்பதற்கு நல்வினை தீவினைகளிலும், அவற்றின் பயனாகிய புண்ணிய பாவங்களிலும், புண்ணிய பாவப் பயனாகிய இன்ப துன்பங்

"பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆருந்துறக்கை அரிதரிது"



களிலும் ஒன்றில் விருப்பும், மற்றொன்றில் வெறுப்பு மின்றி, ஆன்ம அறிவின்கண் ஒப்ப நிகழ்தலாம். இவ்விருவினை உண்டாதற்குக் காரணம் சரியை கிரியா யோகங்களாகிய சிவ புண்ணியங்களே என்க. இவற்றிற் கெதிரான யாவும் பாவங்களேயாம்.

மலபரிபாகமாவது, ஆணவ மலத்தினது சத்தி ஆன்ம அறிவை மயக்க இயலாது வலிகுன்றி நிற்கும் அவதரம். மலபரிபாகத்திற்குக் காரணம் இருவினை யொப்பாகும்.

சத்திநிபாதமாவது, சிவசத்தி பதிதல். இஃது ஆன்மாக்களின் பக்குவ வேறுபாட்டால் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்காகும். இவ்வுயரிய சத்திநிபாத நிலைக்குக் காரணம் இருவினையொப்பும் மலபரிபாகமுமாம். சகலருக்கு இந்நால்வகைச் சத்திநிபாதங்களும் எய்தும். இவரைப் பக்குவர் அபக்குவர் என்று பாகுபாடு செய்யலாம். இறைவர், அதிட்டான பக்கமாகவும், ஆவேச பக்கமாகவுந் திருவருள் பாலித்து இவ்வுயிர்களையும் இன்பமடையச் செய்வார்.

இங்ஙனம் அத்துவாக்கள் இறைவனின் நிறையருளை விளக்கும் பான்மைய. கலை, தத்துவம், புவனம் ஆகிய மூன்றும் பொருட்பிரபஞ்சம் எனவும், வன்னம், பதம், மந்திரம் ஆகிய மூன்றும் சொற்பிரபஞ்சம் எனவுங் கூறப்படும். அத்துவாக்களோடு திரோதான சக்தி சம்பந்தமுடைமைபற்றி, எல்லாமாய், அல்லவுமாய், உடனுமாய் இறைவன் விளங்குதலின், அச்சிவ பரம்பொருளை அத்துவாமூர்த்தி என்றுங் கூறுப.

**அத்துவசுத்தி:—** அத்துவ சுத்தியாவது மேலே காட்டப்பெற்ற ஆறு அத்துவாக்களிலும் கட்டப்பட்டிருக்கும் போகங்களையெல்லாம் ஏக காலத்தில் புசிப்பித்துத் தொலைத்து மோக்ஷத்தைக் கொடுத்தலாம். இதுவே, நிர்வாண தீக்ஷை எனப்படும். சத்தியோ நிர்வாணம், அசத்தியோ நிர்வாணம் என்று பாகுபாடுடன் நிர்வாண தீக்ஷை விளங்கும். நிர்வாணம்=மோக்கம். சிவோகம்பாவனையால், குரு, சீடனது ஆத்மாவைச் சிவமாக்குவர். கருடோகம் பாவனையால் மாந்திரிகன் விடந்தீர்த்தலைக் கண்டு உண்மை கடைப்பிடிக்க.

முடிப்புரை:— இதுகாறும் காட்டிப் போந்த சில வாக்கியத் தொடைகளானே, உலகம் காரியம் என்பதும், சிவபிரான் நிமித்த காரணர் என்பதும், உயிர்கள் பல என்பதும், அவைகள் இறைவனது அடிமைகள் என்பதும், உயிர்களுக்கு உடல் கன்மத்துக்கு ஈடாக எய்தும் என்பதும், ஒரு சமய வரம்புட்பட்டு உயர் பிறப்புடைய மனிதர் கடவுளை வழிபடல் வேண்டும் என்பதும், இவ்வாறு வழிபடுங்கால் தீக்ஷையாகிய சம்ஸ்காரம் வேண்டும் என்பதும், தீக்ஷையில், தத்துவசுத்தி, அத்துவசுத்திகள் குருவாற் செய்யப்பெறும் என்பதும், அத்துவாக்கள் இவை என்பதும், அத்துவாக்களின் வகை இவை என்பதும், அத்துவாக்கள் போக மோக்ஷங்களை அளிக்கும் பெற்றி இத்தன்மைத்து என்பதும் பிறவுந் தேற்றமாம். இக்கூறியவற்றுள் அடங்காதன பல. அவையிற்றைத் தத்துவப் பிரகாசிகை, மிருகேந்திரம் முதலிய சைவ நூல்களிற் கண்டு தெளிக.

**பெரியோர்களே! சிவசமயாபிமானிகளே!**

சைவசமயத்தில், சிவதீக்ஷை, சிவோகம் பாவனை, சிவாலய வழிபாடு, சிவசின்னதாரணம் என்பவைகளும், ஏனை இயம நியம நிலைகளும் விதிக்கப் பெற்றிருக்கின்றன. ஏற்ற பெற்றி உண்மை கண்டு ஆற்றி இன்பமடைய நாம் முன்னிற்போகமாக. சைவ சித்தாந்த சபையும், அங்கத்தினரும், சீரும் பேரும் பெறீஇத் திகழ்வார்களாக.

"தென்னாடுடைய சிவனே போற்றி"

"லோகா சமஸ்தா சுகினோப வந்து"

சுபமஸ்து.

# தேவார அமைப்பு

E. N. தணிகாசல முதலியார், பி. ஏ., பி. எல்.

## 1. தேவார மென்பது யாது?

“பன்மாலைத் திரளிருக்கத் தமையுணர்ந்தோர்” சிவபெருமானுக்கு ஏற்றதெனச் செய்த பாமாலையாம். இப்பெயர் அப்பர் பாடிய பதிகங்களுக்கே சிறப்புப் பெயராய் வாய்ந்தது. ஆயினும் சாதாரணமாய் அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவரும் பாடிய பதிகங்களைத் தேவார மென்றும், மணிவாசகப் பெருமான் பாடியதைத் திருவாசக மென்றும் உலகவழக்கில் கூறப்படும். திருவாசகத்தைத் தேவாரம் எனினும் பொருந்தும். அப்பர் தேவாரத்தைத் திருவாசக மெனச் சேக்கிழார் கூறுகின்றார்:—

“ மையற் றுறையேறி மகிழ்ந்தலர்சீர்
  வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய்
  விரவும் சிவசின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியாயனம ருவுணர்வும்
  ஈறின்றி எழுந்திரு வாசகமும்
கையிற்றிக ழும்உழ வாரமுடன்
  கைத்தொண்டு கலந்துக சிந்தனரே !”

—பெரிய புராணம் - திருநின்ற சருக்கம். 77.

எனவே, “எய்துற்ற தியானம் அருவுணர்வில்” வெளியாகும் பாமாலை தேவாரமாகும். ஆயினும் மணிவாசகப் பெருமான் பாடிய8-ம்திருமுறைக்குத்திருவாசகமெனச் சிறப்புப் பெயர் உலகவழக்கி லிருப்பதாலும், முதல்ஏழு சைவத்திருமுறைகளைத் தேவார மெனப் பொதுப் பெயர் தந்து வழங்குதலாலும், முதல் ஏழு திருமுறைகளின் ஒற்றுமையான பொது விலக்கணங்கள் யாவை எனவும், பேதப்படுத்தி, இது சம்பந்தர் கூற்று, இது அப்பர் கூற்று, இது சுந்தரர் கூற்று எனப் பாசுரம் பாடியவுடனே கண்டறியக் கூடிய திட்பநுட்பச் சிறப்புகள் யாவை எனவும் இனி ஆராய்வோமாக. அவ்வாறு செய்யப் புகுவதன் முன்னர், நாம் காமியார்த்த நடையிலும், நடலை வாழ்விலும், மாலைசூட்டுவது, தனக்கு முன்னின்ற மேலோன், அல்லது அன்பனுக்கு இன்பம் நேருமாறு செய்வதன்றி, முன்னில்லாத வேறோரிடத்தவனுக்கு மனோபாவனையாய் ஆகாயத்தில் இடுவது வழக்கன்றாதலால், நமது சைவகுரவர் மூவரும், பிரத்தியட்சத்தில் கண்ட சிவபெருமானுக்கு ஆர்வம் பொங்கிப் பாக்களாலிட்ட ஆரமே தேவார மென்பதும், காணாத கடவுளைப் பாடிய பதிகமாலை தேவார மன்றென்பதும், மாணவருணர்வது அவசியம்.

## 2. தேவார காலமும் அவற்றின் யாப்பும்

கடைச் சங்கத்தார் காலத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தேவாரகால மென்பது திண்ணம். அப்பரும், சம்பந்தரும் ஒரே காலத்தவ ரென்பதும், இவர்களுக்குச் சுமார் 150-வருடங்களுக்குப் பின்னர் சுந்தரர் பாடினாரென்பதும் நாம் அறிகின்றோம். சங்க இலக்கணமான தொல்காப்பியத்தில், மூவர் பாடிய விருத்தங்களுக்கும், சந்த விருத்தங்களுக்கும் யாப்பிலக்கணமில்லை. கடைச்சங்க அழிவையும் அப்பர் தமது திருபாசுரங்களி லொன்றில் ஒருவாறு குறிப்பிடுகின்றார்:—

மின்னூட்டுங் கொடி மருங்கு லுமையாட் கென்றும்
  விருப்பவன்காண் பொருப்புவலி சிலைக்கை யோ
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி [ன்காண்
  நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
  புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவில் திருப்புத் தூரில்
  திருத்தளியான் காணவனென் சிந்தையானே”

—திருப்புத்தூர் - திருத்தாண்டகம். 3.

கடைச் சங்கம் அழிந்த பிறகு உண்டாகிய விருத்த இலக்கியத்திற்கு நமது முன்னோர் யாப்பிலக்கணங் கூறவில்லை. கட்டளைக்கலித்துறையே முதல் முதல் வெளிவந்த விருத்த மாதலால், அதைத் திருவிருத்த மென்று அக்காலத்திய புறச்சமய நூல்களில் காணப்படுவது போல், அப்பர் 4-ம் திருமுறையிலும் பல பதிகங்கள் திருவிருத்தமெனக் காண்கின்றோம். விருத்தங்களுக்கு யாப்பு மாத்திரம் அளவினால் ஏற்பட்டிருப்பினும், அவ்வடிப்படைநோக்குடன் தளையும், கட்டளையும் கவனிப்பது அப்பர் காலத்தில் வழக்கமாயிருந்தது. 5-ம் திருமுறை முற்றும் “நேர் பதினொன்றே, நிரை பனிரெண்டு” என்னும் கட்டளையுடன் பாடிய விருத்தங்களாய்க்காணப்படுகின்றன. இசைத்தமி ழிலக்கணத்தை இயற்றமிழிலக்கணத்துடன் பிணையவைத்து நாடக நடையில் பாடியவை மூவர் தேவாரங்களுமாம். எனவே, இவ்விலக்கியத்திற்குத் தனிஇலக்கணம் இயம்புவது அவசியம். இசையில் முன்னோர் கேட்டிராத யாழ்மூரிப்பண் சம்பந்தர் பாடியது போல், மூவர் தேவாரச் செய்யுட்கள், யாப்பிலக்கணம் அறியாத துறைகளில் பாடப்பட்டன. ஆகையால் இனி, தமிழாராய்ச்சியில் செல்லும் அறிஞர் மூவர் தேவாரத்திற்கெனத் தனியே இலக்கண விளக்க மொன்று எழுதுவாராக.

## 3. மூவர் தேவாரப் பொது மண்டலம்

சிவபெருமானைப் பிரத்தியட்சத்தில் நோக்கிப் பாடியவை மூவர் தேவாரமென முன்னமே கண்டோம். அதற்குச் சான்று பொய்ம்மொழி பகரா அப்புலவர்கள் மாற்றமேயாம்:—

தஞ்சே கண்டேன் தரிக்கிலா தாரென்றேன்
அஞ்சே லுன்னை யழைக்கவந் தேனென்றார்
உஞ்சே னென்னுகந் தேயெழுந் தோட்டந்தேன்
வஞ்சே வல்லரே வாய்மூ ரடிகளே.! (3)

கழியக் கண்டிலன் கண்ணே நீரேகண்டேன்
ஒழியப் போந்திலே னெக்கவே யோட்டந்தென்
வழியிற் கண்டிலன் வாய்மூ ரடிகள்தம்
சுழியிற் பட்டு சுழல்கின்ற தென்கொலோ. (4)

—அப்பர்: திருவாய்மூர் - திருக்குறுந்தொகை.

திருஞான சம்பந்தரோ, ஞானப்பாலுண்ட அக்கணமே, “பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே” வெனத் தந்தைக்கு அம்மையப்பர் தோன்றுவதைக் காட்டித் “தோடுடைய செவியன்” பாடினார். வன்றொண்டருக்கோ, சிவபெருமான் தோழனும் துணைவனுமாய், உடன்படத் தகாத காரியத்திற்கும் உடன் பட்டார்:—

“ ஏழிசையாய் இசைப்பயனாய்
  இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும்
  துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந்
  தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
  என்னாரூர் இறைவனையே”

—சுந்தரர்: திருவாரூர் - பண் - பழம்பஞ்சுரம் 10.

என்பதை நோக்குக. ஜீவன் முத்தராய் நின்ற இம்மூவர் சிவசம்பந்தம் பெற்ற நிலை மாசற்ற அத்துவித நிலையாகும். அதைச் சம்பந்தர்,

“ குற்றநீ! குணங்கள்நீ!
  கூடலால வாயிலாய்!
சுற்றநீ! பிரானுநீ!
  தொடர்ந்தி லங்கு சோதிநீ!
கற்ற நூற்க ருத்துநீ!
  யருத்த மின்ப மென்றிவை
முற்று நீபு கழ்ந்துமுன்
  னுரைப்ப தென்மு கம்மனே?

—சம்பந்தர்: திருவாலவாய் - திருவிராகம் - பண்-
[கௌசிகம் 3.

என்னும் பாசுரத்தில் வெளியிடுகின்றார். இம்மூவரையும் சிவசோதி, மண்டலமாய்ச் சுற்றி என்றும் தொடரா நின்றது. எனவே, அவர் பாடிய பாடல்கள் யாவும் அச்சோதியின் சுவாநுபவமேயாம். செய்யுட் பேதம், சந்த பேதம், மொழிப்பேதம், நடை பேதம் இம்மூவர் தேவாரத்தில் ஒன்றுக்கொன்று ஏற்படினும், வெளிவரும் பாக்களின் ஞான ரசம் பேதப்படுவதில்லை. அச் சிவஞான ரச வொளியே மூவர் தேவாரப் பொது மண்டலமாய்க் காணப்படும்.

## 4. முத்தேவார வேற்றுமையில் ஒற்றுமை

மூவர் தேவார வேற்றுமையாவது யாதெனில், திருஞானசம்பந்தர் பாடல்கள் பால்ய தேவார மெனவும், வன்றொண்டர் தேவாரம் யௌவன தேவார மெனவும், அப்பர் தேவாரம் விருத்தாப்பிய தேவார மெனவும் விளங்குதலாம். திருஞான சம்பந்தர் “வழுதிக்கு மாபெருந் தேவி”யை நோக்கி “பானல் வாயொரு பாலன் ஈங்கிவனென்று

நீ பரிவெய்திடேல்'' என்று கூறியது மாத்திரமன்று, அவர் தேவார முற்றும், யௌவனபருவ இன்ப அனுபவம் சற்றும் காட்டவில்லை. ஆதலால் யௌவன பருவமடைவதற்கு முன்னரே சோதியிற் கலந்தனரென்பது அகச்சான்றுகளால் காட்டக் கூடும். அவர்பாடல்களில் வருத்த மென்பது சற்றும் காணப்படவில்லை. சிறுபிள்ளைகள் தமது தந்தையிடத்து மகிழ்ச்சியுடன் பிறரை அழைப்பதுபோலவும், துன்பத்திலாழ்ந்து வருந்தும் மானிடரைக் கைபற்றி இழுப்பதுபோலவும்,

"ஏவமிக்க சிந்தையோ டின்பமெய்த லாமெனப்
பாவமெத்த னையும்நீர் செய்தொரு பயனிலைக்
காவன்மிக்க மாநகர் காய்ந்து வெங்கனல்படக்
கோவமிக்க நெற்றியான் கோடிகாவு சேர்மினே''

எனத் திருக்கோடிக்கா பதிகத்தி லழைக்கின்றார். அவர் பாடல்கள் எவ்வகையில் நோக்கினும் இன்பச்சார லடிக்கின்றன. ஒரே பாசுரத்தில், தனது பிறவியைப்பற்றி வருந்துகின்றார். அதாவது,

" துறக்குமா சொலப்படாய்
 துருத்தியாய் ! திருந்தடி
மறக்குமா றிலாதவென்னை
 மையல்செய்திம் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய்!
 பிணிப்படு முடம்புவிட்
டிறக்குமாறு காட்டினாய்க்
 கிழுக்குகின்ற தென்னையே?''

—சம்பந்தர் : திருத்துருத்தி - பண் - நட்டராகம்.

இதுவும் தன் தந்தை முதலானோர் தனக்கு உத்தேசித்திருந்த திருமண வினையில் சந்தோஷமின்மையோ, அல்லது வேறு யாது காரணத்தாலோ மொழிந்தனரெனினும், இத்தகைய பதிகம் அல்லது செய்யுள் வேறு இடத்தில் அவர் திருமுறைகளில் காணப்படவில்லை. அவர் பாடும் போதெல்லாம், உளங்குளிர்ந்த உவகையுண்டென்பது திண்ணம். அதை அத்தலப் பதிகத்திலேயே,

" துளங்கிளம் பிறைச்சென்னித்
 துருத்தியாய் திருந்தடி
உளங்குளிர்ந்த போதெலாம்
 உகந்துகந் துரைப்பனே?''

—ஷை—9. வரி 3 - 4.

என்பர். ஆகையால் புகலிவேந்தர் தேவாரம், இன்பத் "திமிதமிட்டுத்திரியும் திரைகடல்'' என்னலாம்.

நம்பியாரூரர் தேவாரமோ, யௌவனப் பருவத் தேவாரமாய் விளங்குகின்றது. திருஞானசம்பந்தர் திருவாக்கில் கேட்கக் கூடாமையான்,

" வேலங் காடு தடங்கண்ணார்
 வலையுட் பட்டுன் னெறிமறந்து
மாலங் காடி மறந்தொழிந்தேன்
 மணியே! முத்தே! மரகதமே!
பாலங் காடீ நெய்யாடீ
 படர்புன் சடையாய் பழையனூர்
ஆலங் காடா! உன்னுடைய
 அடியார்க் கடியே னாவேனே!''

—சுந்தரர்: திருவாலங்காடு-பண் பழம்பஞ்சுரம் 5.

என்பதைப்போன்ற திருப்பாசுரங்கள் வன்றொண்டர் தேவாரத்தில் அதிகமாய்க் காணலாம். கொள்ளிடம் முதலிய நதிக்கரைகளில் உள்ள வேத முதல்வனை ஏத்தும் போது, அக்கரைகளில் மடவார் தமது உடையவிழ, குழல் அவிழக் குடைந்தாடும் அழகிய தோற்றம், சுந்தரர் பாசுரங்களில் விரவிவருவதைக் காணலாம். (உ-ம்)

" விடையரவக் கொடியேந்தும்
 விண்ணவர்தங் கோனை
வெள்ளத்து மாலவனும்
 வேதமுத லானும்
அடியிணையுந் திருமுடியுங்
 காணவரி தாய
சங்கரனைத் தத்துவனைத்
 தையல்மட வார்கள்
உடையவிழக் குழலவிழக்
 கோதை குடைந்தாடக்
குங்குமங்க ளுந்திவருங்
 கொள்ளிடத்தின் கரைமேல்
கடைகள்விடு வார்குவளை
 களைவாருங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற்
 கண்டுதொழு தேனே ''

—சுந்தரர் - திருக்கானாட்டுமுள்ளூர் பதிகம் - 6.

மடவார்களின் இயற்கை யழகை வர்ணிக்கும் பதிகங்கள் நம்பியாரூரர் பதிகத்தில் ஆங்காங்கு காண்கிறோம். அவற்றில் தற்கால நாகரிகப் பார்வை இடக்கரெனத் தக்கனவும் உள. ஆயினும் அவற்றில் எச்செய்யுளும் இவர் காமக்கண்ணால் பாடினாரென்பதற்குச் சிறிதும் இடமில்லை. இவர்

" உளவ றிந்தெலா னின்செய லாமென வுணர்ந்தோர்க் - களவி லானீந்தம் அளித்தனை ''



தேவாரம் பாடிய இரண்டு வருடங்களில் ஒருவாரமே இல்லறத்துறையில் நின்றது. அக்காலத்தில் இவர் மணக்கோலத்துடன் திரிந்தாராயினும், இல்லறம் நடத்திப் பின்னர் துறவியாய்ச் சில காலம் தேவாரம் பாடினாரென்பது சேக்கிழார் கூறுவிடினும், அவ்விஷயம் அவர் தேவார அகச்சான்றுகளால் ஏற்படுவதை நாம் உரையிற்கோடல் பொருந்தாததன்று. சிலகாலம் துறவறம் வன்றொண்டர் நடத்தினாரென்பது பின் பாசுரங்களால் அறியலாம்.

" வெறுத்தேன் மனைவாழ்க்கையை
 விட்டொழிந்தேன்
விளங்குங் குழைக்
 காதுடை வேதியனே !''

—சுந்தரர் - திருவஞ்சைக்களத் திருப்பதிகம் - 7.

என்றும், தான் மணக்கோலம் நீக்கி, கீளார் கோவணந்தரித்து சந்நியாசியாய்த்திரிந்ததை முன்னர் "பண்மயத்த மொழிப் பரவை சங்கிலிக்கும் எனக்கும், பற்றாய பெருமானே மற்றாரை யுடையேன் '' என்ற மாற்றத்திற்குப் பதிலாய்,

" கீளார் கோவணமுந் திருநீறு
 மெய் பூசியுன்றன்
தாளே வந்தடைந்தேன், தலைவா !
 எனை என்று கொள்நீ !
வாளார் கண்ணி பங்கா !
• மழபாடியுள் மாணிக்கமே !
ஆளாய் நின்னையல்லால் இனி
 யாரை நினைக்கேனே.''

—சுந்தரர் - திருமழபாடி - பண் - நட்டராகம் 2.

என்னும் திருமொழி வருதலால், இவர் தேவாரம் பருவத்திற் கேற்றவாறு இயற்கை யழகைச் சிவபெருமானே யெனக் காட்டுவதுடன், நம்மைப் போலவே தானும் யாதொன்று மறியாது வருந்துவதுபோல் நமது கையைப் பற்றி, நமது குற்றங்களைத் தன்பேரில் ஆரோபித்துப் பாடுவது இவர் தேவார இலக்கணங்களில் ஒன்றாம்,

" பரவும் பரிசொன் றறியேன்நான்
 பண்டே யும்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும்
 எய்த நினைய மாட்டேன்நான் ''

என்பர், இம்மேலோர் !

திருநாவுக்கரசு நாயனார் தேவாரமோ விருத்தாப்பிய தேவாரமாய், அதற்குள்ள இலக்கணங்கள் பொருந்தி நிற்கும் :—

விளைக்கின்ற வினையை நோக்கி
 வெண்மயிர் விரவி மேலும்
முளைக்கின்ற வினையைப் போக
 முயல்கிலே னியல வெள்ளத்
திளைக்கின்ற முடியி னான்தன்
 திருவடி பரவ மாட்டா
திளைக்கின்றேன் இருமி யூன்றி
 என் செய்வான் தோன்றினேனே.

விளைவறி விலாமை யாலே
 வேதனைக் குழியி லாழ்ந்து
களைகணு மில்லே னெந்தாய் !
 காமரங் கற்று மில்லேன்
தளையவிழ் கோதை நல்லார்
 தங்களோ டின்ப மெய்த
இளையனு மல்லே னெந்தாய் !
 யென்செய்வான் றோன்றி னேனே.

—அப்பர் : குறைந்த திருநேரிசை. 8, 9.

அப்பர் வயது முதிர்ந்தவ ராதலால் உலகத்தவருக்குப் புத்தி புகட்டுவது சற்று கடூரமாயிருக்கும்,

" விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப்
படுத்த போது பயனில பாவிகாள்
அடுத்த இன்னரங் கேட்கும் வாட்போக்கியை
எடுத்து மேத்தியு மின்புறு மின்களே ''

—திருவாட்போக்கி - திருக்குறுந்தொகை 2.

என்றும், செய்யுள் நடை வையும் நடை. இத்தகைய சொற்றொடர்கள் சம்பந்தர், சுந்தரர் பதிகங்களிலிரா. இதையே சம்பந்தர் கூற்றாயின்,

" இன்றுநன்று நாளைநன்
 றென்றுநின்ற விச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப்
 போகவிட்டுப் போதுமின்''

—திருக்கோடிகா - திருப்பதிகம்.

என்று பகரப்படும், சுந்தரர் கூற்றோ, இதினும் சற்று வற்புறுத்திய நடையில் காணப்படும். (உ-ம்)

"வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறி
 [தான்

"ஆமாத்தூர் அழகனை நெஞ்சினால் நினைந்தேன் நினைவெய்தலும்-வஞ்ச ஆறுகள் வற்றின காண்மினே"

"தாழாதறஞ் செய்மின் தடங் கண்ணன்மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக் கேதார மென்னீரே"

**—சுந்தரர் : திருக்கேதாரம் - பண்-நட்டபாடை. 1.**

ஆகையால் அப்பர் தேவாரமானது "புளியம் வளரால் அடிப்பது போல்" புத்திபுகட்டும்; மற்றிருவர் தேவாரம் அவ்வாறே செய்வதில்லை. மிகவும் வெளிப்படையான நடையில் பாடுவது அப்பர் செய்கையாதலால் சைவத்தின் தத்துவவிளக்கம் உணர, அப்பர் தேவாரமே நம் போலிகளுக்கு மிக்க பயன்படு கருவியாம். பஞ்சாட்சர மந்திரத்தைப் பற்றி மூவரும் பாடுகின்றனர். ஆயினும் அப்பர் சுட்டிக்காட்டுவதுபோல், மற்றிருவர் சிற்றறிவுடையோர்க்குக் காட்டுவதில்லை.

"நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே"

**—தனித்திருக்குறுந்தொகை 2.**

என்று கிரியாமார்க்க வகையில் ஞானயோக சாதனங்காட்டுவார். அஷ்டாங்க யோகத்தில் பிராணயாம நிலையின் பரிபக்குவத்தை,

"உயிரா வணமிருந்து உற்று நோக்கி
உள்ளக்கிழியின் உருவெழுதி
உயிராவணஞ் செய்திட்டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி"

**—திருவாரூர் - திருத்தாண்டகம் 1.**

என்றும்,

"தன்னிற் றன்னை யறியுந் தலைமகன்
தன்னிற் றன்னை யறியிற் றலைப்படும்
தன்னிற் றன்னை யறிவில ளுயிடில்
தன்னிற் றன்னையுஞ் சார்தற் கரியனே"

**—சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 29.**

எனச் சமாதியின் ஞான விலக்கணம் காட்டுவார். ஆகையால் அப்பர் தேவாரக் கூற்று கருத்தில் மிக்க ஆழ்ந்திருப்பினும் நடை மிகவும் வெளிப்படையான தாகும்.

---

"வெம்பந்தர் தீர்த்துலகாள் வேந்தன் திருஞான
சம்பந் தனையருளாற் சாருநாள் எந்நாளோ.

ஏரின் சிவபோகம் இங்கிவற்கே யென்னவுழ
வாரங்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்ப தெந்நாளோ.

பித்தரிறை யென்றறிந்து பேதைபால் தூதனுப்பு
வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வ தெந்நாளோ.

போதவூர் நாடறியப் புத்தர்தமை வாதில்வென்ற
வாதவூர் ஐயன்அன்பை வாஞ்சிப்ப தெந்நாளோ."



# தொகைநூற் சங்கப் புலவர்கள் அகராதி

ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல்.

சங்கப் புலவர்கள் யாவர் என்பதுபற்றிப் பழைய வரலாறுகளும் புதிய ஆராய்ச்சியும் பெரிதும் மாறுபடுகின்றன. இறையனார் அகப்பொருள் உரைப் பாயிரத்தில் மூன்று சங்கங்கள் இருந்தமையும் அவற்றுள் விளங்கிய சிறந்த புலவர்கள் பெயரும் கொடுக்கப்பட்டுள்ளன. திருவிளையாடற் புராணத்திலும், உரையாசிரியர்கள் காலத்திலும் இவ்வரலாறு மெய்யென்றே எண்ணப்பட்டது. இப்போது நடைபெறும் ஆராய்ச்சியில் சங்கமொன்றேனும் இருந்ததாகக் கூறுவதே பழங்கதை யென்றும், புலவர்கள் பாடிய நூல்களின் தொகையே சங்கமென்றும் கூறப்படுகிறது. இம்மாறுபட்ட கருத்துக்களின் உண்மை யறிவது இக்கட்டுரையின் நோக்கமல்ல; சங்க நூல்கள் என்று கூறப்படுவன எல்லாவற்றிலுமுள்ள ஆசிரியர்கள் பெயரைத் தொகுத்துக் கூறுவதும் இக் கட்டுரையின் நோக்கமல்ல. சங்க நூல்கள் என்று பொதுவாகக் கூறப்படுவன ஐந்து பெருங் காப்பியங்களாகிய சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி; எட்டுத் தொகையாகிய நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் எட்டுத் தொகைநூல்கள்; பத்துப் பாட்டாகிய திருமுருகாற்றுப்படை முதல் மலைபடுகடாம் ஈறாகவுள்ள பத்துப் பாட்டுகள் ஆகிய இவைகளே. சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கு என்பன திருக்குறள், நாலடியார் முதலிய பதினெட்டு நூல்கள். இவைகளைத் தவிர ஐந்து சிறு காப்பியங்களும் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களும் உள்ளன.

இந்நூல்கள் எல்லாவற்றின் ஆசிரியன்மார் அனைவரையும் இவ்வகராதியிற் கொடுப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. பத்துப் பாட்டு எட்டுத்தொகை என்ற தொகைகளிற் காணப்படும் ஆசிரியன்மார் இன்னரென்பதை மட்டும் அகர வரிசைப்படுத்தி ஒவ்வொரு தொகையிலும் ஒவ்வொரு புலவர் இன்ன இன்ன பாடல்களைப் பாடியுள்ளார் என்பதைக் குறிப்பதே இக் கட்டுரையின் நோக்கம். உதாரணமாகக் கபிலர் என்ற புலவர் பத்துப் பாட்டிலும், பரிபாடல் நீங்கலாக ஏனைய ஏழு தொகைகளிலும் பல பாடல்கள் பாடியுள்ளார். அவைகள் இன்னவென்பதை ஏழு நூல்களைப் புரட்டிப் பார்த்தாலன்றி விளங்காது. இவ் வட்டவணையில் ஒவ்வொரு தொகையிலும் அவர் பாடியுள்ள பாடல்களின் எண்கள் கொடுக்கப்பட் டிருத்தலால் கபிலர் பாடல்களைப் பயில விரும்புவோர் சுலபமாக ஷெ நூல்களில் கபிலர் பாடல்களை எடுத்துப் படிக்கலாம்.

பத்துப் பாட்டு எட்டுத் தொகை என்ற தொகைகள் பழைய காலத்தில் அரசர்களால் பெரும் புலவர்களைக்கொண்டு ஒருங்கு சேர்த்துத் தொகுக்கப்பட்டன. அவை புலவர் வரிசையாகவோ கால வரிசையாகவோ தொகுக்கப்படவில்லை. அகம் புறம் என்ற இரண்டு பகுதிகளாகவும், ஒவ்வொரு பகுதியில் இத்தனை அடிமுதல் இத்தனை அடிவரை உள்ளவை இந்தத் தொகையென்ற நியமப்படியும் தொகுக்கப்பட்டன. அவ்விவரங்களெல்லாம் மேற்கூறிய நூல்களின் முகவுரையிற் காணக் கிடைக்கும்.

இவ்வகராதியில் கூறப்படும் புலவர்கள் பலதிறப்பட்டவர்கள். அவர்களுள் வேளாளர், வணிகர், அரசர், அந்தணர், ஆண்பாலார், பெண்பாலார் என்றெல்லாம் பலவகையான பாகுபாடுகள் செய்யலாம். பல புலவர்கட்குக் காரணப் பெயர்களே கூறப்பட்டுள்ளன. உதாரணமாக, குப்பைக்கோழியார், விட்ட குதிரையார் என்ற பெயர்கள் இயற் பெயர்களல்ல. அப்புலவர்கள் பாடல்களில் குப்பைக்கோழி யென்றும் விட்ட குதிரை யென்றும் வருதலால் இப்புலவர்களைச் சுட்டுவதற்கு இப்பெயர்கள் தரப்பட்.

டுள்ளன. அவர்கள் இயற்பெயராவது அவர்கள் ஆண்களா பெண்களா என்பதாவது தெரிய வழியில்லை. இவ்வாறே ஏனைய காரணப் பெயரினருக்கும் கொள்க. பல புலவர்களின் பெயர்களில் ஒற்றுமை வேற்றுமைகள் காணப்படுகின்றன. உதாரணமாகக் கதப்பிள்ளை, கதப்பிள்ளையார், கருவூர் கதப்பிள்ளை, கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனார், கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார் என்று பலவாறாகப் பாடல்களின் இறுதியில் எழுதப்பட்டுள்ளன. பிரதி பேதங்களாக மேற்கொண்டு சில திரிந்த பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூல்களைப் பதிப்பித்த பெரும்பண்டிதர்களும் தங்கள் முகவுரை, பாடினோர் வரலாறு முதலியவற்றில் பலவாறாகக் கூறுகின்றார்கள். நற்றிணைப்பதிப்பாசிரியர் மேற்கூறிய பெயர்களெல்லாம் ஒரு புலவரையே குறிக்குமென்கிறார். புறநானூற்றுப் பதிப்பாசிரியர் தந்தையும் மகனும் ஆக இரு புலவர்கள் என்கிறார். இத்தகைய கருத்து வேற்றுமைகளினிடையே ஒவ்வொருவரும் பாடல்களை ஊன்றிநோக்கி, வேறு பலவகையான கருவி கொண்டு ஆராய்ந்தாலன்றி உண்மை எளிதிற் புலப்படாது. இவ்வகராதியில் அத்தகைய ஆராய்ச்சி நடைபெறவில்லை. பெயரொற்றுமைகளெல்லாம் கூடியவரை குறிக்கப்பட்டுள்ளன. ஒரே இடத்தில் பாடல் எண்கள் கொடுத்தல் சௌகரியமென்ற ஒரு காரணத்துக்காக மட்டும் பாடல் எண்கள் ஒரே இடத்திற் குறிக்கப்பட்டுள்ளனவேயன்றிப் புலவர்பெயர்களின் ஒற்றுமைகருதி புலவர் ஒருவரே என்ற முடிபு கண்டன்று. உதாரணமாகக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், நக்கீரர், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், மதுரை நக்கீரர் என்ற நான்கு பெயர்கள் காணப்படுகின்றன. ஒரே தொகையில் சில விடங்களில் ஒன்றும் சில விடங்களில் மற்றொன்றும் காணப்படுகின்றன. உதாரணமாக அகநானூற்றுள் 57-ம் பாட்டு நக்கீரர் என்றும், 36-ம் பாட்டு மதுரை நக்கீரர் என்றும், 93-ம் பாட்டு கணக்காயனார் மகனார் நக்கீரர் என்றும் கூறுகின்றன. இம்மூன்று பாடல்களைப் பாடியவர் ஒருவரா இருவரா மூவரா என்ற ஐயம் எழும். இந்நூல்களை அச்சிட்டுப் பதிப்பித்த பெரியார்களுள் கருத்து வேறுபாடுளது. ஒருவர் நக்கீரர் என்ற ஒருவரே நான்கு வகையாகக்கூறப்படுகிறாரென்கிறார்; மற்றொருவர் மதுரை நக்கீரரை வேறாகவும் ஏனைய மூன்று பெயருடையவரை ஒருவராகவும் கருதுகிறார். இவ்வட்டவணையில் மேற்கூறிய நான்கு பெயர்களால் குறிக்கப்படும் பாடல்கள் முழுமையும் நக்கீரர் என்ற தலைப்பில் ஒரே யிடத்தில் குறிக்கப்பட்டு, ஏனைய மூன்று பெயர்களும் வருமிடங்களில் ‘நக்கீரர் பார்க்க’

என்று எழுதப்பட்டுள்ளது. ஒரே புலவர் பல பெயர்களால் பல விடங்களில் குறிக்கப்பட்டிருக்கிறதை யொட்டி எந்தெந்த பாடல்களில் எவ்வெப்படி குறிக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் ஒவ்வொரு பாட்டையும் பாடிய புலவர் பெயரைப்பற்றி பிரதிகளில் காணப்படும் பிரதி பேதங்களையும் பாடபேதங்களையும் காட்டும் அட்டவணை மிகப் பெருகுமென அஞ்சி இதில் சேர்க்கப்படவில்லை. அத்தகைய அட்டவணையும் இவ்வகராதியும் சேர்த்து ஒழுங்கு செய்யப் பெற்ற ஒரு அகராதியைத் தனியே ஒரு துண்டுப் பிரசுரமாக விரைவில் வெளியிட எண்ணியுள்ளேன். இவ்வட்டவணை முடிதற்குப் பெரிதும் துணைபுரிந்த நண்பர்கள் திருவாளர்கள் - எஸ். வையாபுரி பிள்ளை, பி. என். அப்புஸ்வாமி ஐயர், தி. கி. நாராயணசாமி நாயடு ஆகிய மூவர்க்கும் எனது நன்றி பெரிதும் உரித்து.

[குறிப்பு :—அக=அகநானூறு. ஐங்=ஐங்குறுநூறு, கலி=கலித்தொகை, குறு=குறுந்தொகை, நற்=நற்றிணை, பதி=பதிற்றுப்பத்து, பத்=பத்துப்பாட்டு, பரி=பரிபாடல், புற=புறநானூறு. எண் - பாட்டின் எண்.]

அகம்பன் மாலாதனார் நற். ௮௧
அஞ்சி யத்தைமகள் நாகையார் அக. ௩௫௨.
அஞ்சில் அஞ்சியார் நற். ௯௦
அஞ்சில் ஆந்தையார் குறு. ௨௯௪, நற். ௨௩௩
அடைநெடுங் கல்லியார் புற ௨௮௩, ௩௪௪, ௩௪௫
அணிலாடு முன்றிலார் குறு. ௪௧
அண்டர்மகன் குறுவழுதியார் அக. ௧௫௦, ௨௨௮ (குறுவழுதியார் பார்க்க.) குறு. ௩௪௫, புற. ௩௪௬
அதியன் விண்ணத்தனார் அக. ௩௦௧
அந்திஇளங் கீரனார் அக. ௭௧
அம்மள்ளனார் நற். ௮௨ (மதுரை அளக்கர்.......... பார்க்க.)





அம்மூவனார் அக. ௧௦, ௩௫, ௧௪௦, ௨௮௦, ௩௭௦, ௩௯௦, ஐங். ௧௦௧ - ௨௦௦, குறு. ௪௯, ௧௨௫, ௧௬௩, ௩௦௩, ௩௦௬, ௩௧௮, ௩௨௭, ௩௪௦, ௩௫௧, ௩௯௭, ௪௦௧, நற். ௪, ௩௫, ௭௬, ௧௩௮, ௨௭௫, ௩௦௭, ௩௧௫, ௩௨௭, ௩௯௫, ௩௯௭
அம்மெய்யனாகனார் நற். ௨௫௨
அரிசில்கிழார் குறு. ௧௯௩, பதி. ௭௧ - ௮௦, புற. ௧௪௬, ௨௩௦, ௨௮௧, ௨௮௫, ௩௦௦, ௩௦௪, ௩௪௨
அல்லங்கீரனார் நற். ௨௪௫
அழிசிநச் சாத்தனார் குறு. ௨௭௧
அள்ளூர் நன்முல்லையார் அக. ௪௬, குறு. ௩௨, ௬௭, ௬௮, ௯௩, ௯௬, ௧௪௦, ௨௦௨, ௨௩௭, புற. ௩௦௬
அள்ளூர்நன் மூலனார் குறு. ௧௫௭
அறிவுடை நம்பி (பாண்டியன் அறிவுடை நம்பி பார்க்க.)
ஆசிரியன் பெருங்கண்ணன் குறு. ௨௩௯
ஆசிரியன் நல்லந்துவனார் (நல்லந்துவனார் பார்க்க.)
ஆடுதுறை மாசாத்தனார் புற. ௨௨௭
ஆதிமந்தி குறு. ௩௧
ஆமூர்க் கவுதமன் சாதேவனார் அக. ௧௫௯
ஆரிய அரசன் யாழ்ப்பிரம தத்தன் குறு. ௧௮௪
ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக்கண்ணத்தனார் அக. ௯௪
ஆலங்குடி வங்கனார் அக. ௧௦௬, குறு. ௮, ௪௫, நற். ௨௩௦, ௩௩௦, ௪௦௦, புற. ௩௧௯
ஆலத்தூர் கிழார் குறு. ௧௧௨, ௩௫௦, புற. ௩௪, ௩௬, ௬௯, ௨௨௫, ௩௨௪
ஆலம் பேரிசாத்தனார் அக. ௪௭, ௮௧, ௧௪௩, ௧௭௫, நற். ௧௫௨, ௨௫௫, ௩௦௩, ௩௩௮ (மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார் பார்க்க.)
ஆவியார் புற. ௨௯௮
ஆவூர் கிழார் புற. ௩௨௨
ஆவூர் கிழார் மகனார் கண்ணனார் அக. ௨௦௨
ஆவூர்க் காவிதிகள் சாதேவனார் நற். ௨௬௪ .
ஆவூர் மூலங்கிழார் அக. ௨௪, ௧௫௬, ௩௪௧, புற. ௩௮, ௪௦, ௧௬௬, ௧௭௭, ௧௭௮, ௧௯௬, ௨௬௧, ௩௦௧
ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார் அக. ௧௩, ௨௨௪ (பெருந்தலைச் சாத்தனார் பார்க்க.)
இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பத் - சிறுபாணாற்றுப்படை
இடைக்காடனார் அக. ௧௩௯, ௧௯௪, ௨௭௪, ௨௮௪, ௩௦௪, ௩௭௪, குறு. ௨௫௧, நற். ௧௪௨, ௩௧௬, புற. ௪௨
இடைக்குன்றூர் கிழார் புற. ௭௬, ௭௭, ௭௮, ௭௯
இடையன் சேந்தன் கொற்றனார் அக. ௩௭௫
இடையன் நெடுங்கீரனார் அக. ௧௬௬
இம்மென் கீரனார் அக. ௩௯௮
இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பத். மலைபடுகடாம்
இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார் அக. ௨௭௯
இருந்தையூர்க் கொற்றன் புலவன் குறு. ௩௩௫
இரும்பிடர்த் தலையார் புற. ௩
இளங்கீரந்தையார் குறு. ௧௪௮
இளங்கீரனார் (எயினந்தை மகன் இளங்கீரனார் பார்க்க.)
இளநாகனார் நற். ௧௫௧, ௨௦௫, ௨௩௧
இளந்திரையன் (தொண்டைமான் இளந்திரையன் பார்க்க.)
இளந்தேவனார் நற். ௪௧
இளம்புல்லூர்க் காவிதி நற். ௮௯
இளம்பூதனார் குறு. ௩௩௪
இளம்பெருவழுதி (கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பார்க்க.)
இளம்போதியார் நற். ௭௨
இளவெயினனார் நற். ௨௬௩
இளவேட்டனார் நற். ௩௩, ௧௫௭, ௨௨௧ (மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் பார்க்க.)
இறங்கு குடிக்குன்ற நாடன் அக. ௨௧௫
இறையனார் குறு. ௨
இனிசந்த நாகனார் நற். ௬௬
ஈழத்துப்பூதன் தேவனார் (மதுரை ஈழத்துப் பூதன் தேவனார் பார்க்க.)
உகாய்க்குடி கிழார் குறு. ௬௩
உக்கிரப்பெருவழுதி நற். ௯௮ (பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி பார்க்க.)
உமட்டூர்க் கிழார் மகனார் பரங்கொற்றனார் அக. ௬௯
உம்பர்க்காட்டு இளங்கண்ணனார் அக. ௨௬௪
உருத்திரனார் குறு. ௨௭௪
உரோடோகத்துக்கந்தரத்தனார் - அக. ௨௩, ௯௫, ௧௯௧, குறு. ௧௫௫, நற். ௧௧௬, ௧௪௬, ௨௩௮, ௩௦௬
உலோச்சனார் - அக. ௨௦, ௧௦௦. ௧௯௦, ௨௦௦, ௨௧௦. ௩௦௦, ௩௩௦, ௪௦௦, குறு. ௧௭௫, ௧௭௭, ௨௦௫, ௨௪௮, நற். ௧௧, ௩௮, ௬௩, ௭௪, ௧௩௧, ௧௪௯, ௧௯௧, ௨௦௩, ௨௨௩, ௨௪௯, ௨௫௪, ௨௭௮, ௨௮௭, ௩௧௧, ௩௩௧, ௩௫௪, ௩௬௩, ௩௭௨, ௩௯௮, புற. ௨௫௮, ௨௭௪, ௩௭௭
உவர்க்கண்ணூர்ப் புல்லங்கீரனார் - அக. ௧௪௯
உழுந்தினம்புலவர் குறு. ௩௩௩
உறையனார் குறு. ௨௦௭.
உறையூர் இளம்பொன் வாணிகனார் - புற. ௨௬௪
உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் - புற. ௧௩, ௧௨௭ - ௧௩௫, ௨௪௧, ௩௭௪, ௩௭௫
உறையூர்க்கதுவாய்ச் சாத்தனார் - நற்- ௩௭௦
உறையூர்ச் சல்லியன் குமாரனார் - குறு. ௩௦௯. (சல்லியன் குமாரனார் பார்க்க.)
உறையூர்ச்சிறு கந்தனார் குறு. ௨௫௭
உறையூர்ப்பாரயனார் - குறு. ௩௭௪

உறையூர் மருத்துவன் தாமோதரனார் - அக. ௧௩௩, ௨௫௭, புற. ௬0, ௧௭0, ௩௨௧
உறையூர் முதுகூத்தனார் - அக. ௧௩௭, ௩௨௯, குறு. ௩௫௩, ௩௭௧, நற். ௨௮, ௫௮, புற. ௩௩௧
உறையூர் முதுகூற்றனார் (உறையூர் முதுகூத்தனார் பார்க்க)
உறையூர் முதுகொற்றனார் - குறு. ௨௨௧, ௩௯0
ஊட்டியார் - அக. ௬௮, ௩௮௮
ஊண்பித்தை - குறு. ௨௩௨
ஊன்பொதி பசுங்குடையார் - புற. ௧0, ௨0௩, ௩௭0, ௩௭௮
எயிற்றியனார் - குறு. ௨௮௬
எயினந்தையார் - நற். ௪௩
எயினந்தை மகனார் இளங்கீரனார் அக. ௩, ௨௨௫, ௨௩௯, ௨௮௯, ௨௯௯, ௩௬௧, ௩௭௧, ௩௯௫, ௩௯௯, குறு. ௧௧௬, நற். ௩, ௬௨, ௧௧௩, ௨௬௯, ௩0௮, ௩௪௬, ௩௭௧
எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் அக. ௧0௫, ௧௬௨, ௧௪௯, ௨௧௩, ௨௩௭, ௩௧௯, ௩௫௭, குறு. ௩௧௯, நற். ௨௧௯, புற. ௩௯௭ (தாயங் கண்ணனார் பார்க்க)
எருமை வெளியனார் அக. ௭௩, புற. ௨௭௩, ௩0௩
எருமைவெளியனார் மகனார் கடலனார் அக. ௭௨
எழூஉப்பன்றி நாகன் குமரனார் அக. ௧௩௮, ௨௪0
ஐயாதிச் சிறு வெண்டேரையார் புற. ௩௬௩.
ஐயூர்முடவனார் அக. ௨௧௬, குறு. ௧௨௩, ௨0௬, ௩௨௨, நற். ௨0௬, ௩௩௪, புற. ௫௧, ௨௨௮, ௩௧௪, ௩௯௯
ஐயூர் மூலங்கிழார் புற. ௨௧
ஒக்கூர் மாசாத்தனார் அக. ௧௪, புற. ௨௪௮
ஒக்கூர் மாசாத்தியார் அக. ௩௨௪, ௩௮௪, குறு. ௧௨௬, ௧௩௯, ௧௮௬, ௨௨0, ௨௭௫, புற. ௨௭௯
ஒருசிறைப் பெரியனார் குறு. ௨௭௨, நற். ௧௨௧, புற. ௧௩௭
ஒரூஉத்தனார் புற. ௨௭௫
ஒரோடோத்துக் கந்தரத்தனார் (உரோடோகத்துக் கந்தரத்தனார் பார்க்க)
ஒரோடோகத்துக் கந்தரத்தனார் (உரோடோகத்துக் கந்தரத்தனார் பார்க்க)
ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் அக. ௨௫, புற. ௭௧
ஓதஞானி குறு. ௨௨௭ (கருவூர் ஓதஞானி பார்க்க)
ஓதலாந்தையார் ஐங். ௩0௧-௪00 குறு. ௧௨, ௨௧, ௩௨௯
ஓரம்போகியார் அக. ௨௮௬, ௩௧௬, ஐங். ௧-௧00 குறு. ௧0, ௭0, ௧௨௨, ௧௨௭, ௩௮௪, நற். ௨0, ௩௬0, புற. ௨௮௪
ஓரிற் பிச்சையார் குறு. ௨௭௭
ஓரேருழவர் புற. ௧௯௩.
ஔவையார் அக. ௧௧, ௧௪௭, ௨௭௩, ௩0௩, குறு. ௧௫, ௨௩, ௨௮, ௨௯, ௩௯, ௪௩, ௮0, ௯௧, ௯௯, ௧0௨, ௧௫௮, ௧௮௩, ௨00, ௩௬௪, ௩௮௮, நற். ௧௨௯, ௧௮௭, ௨௯௫, ௩௭௧, ௩௮௧, ௩௯0, ௩௯௪, புற. ௮௭ - ௧0௪, ௧௪0, ௧௮௭, ௨0௬, ௨௩௧, ௨௩௨, ௨௩௫, ௨௬௯, ௨௮௬, ௨௯0, ௨௯௫, ௩௧௧, ௩௧௫, ௩௬௭, ௩௯0, ௩௯௨
கங்குல் வெள்ளத்தார் குறு. ௩௮௭
கச்சிப் பேட்டு இளந்தச்சனார் நற். ௨௬௬
கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார் குறு. ௨௧௩, ௨௧௬
கச்சிப்பேட்டு நன்னாகையார் குறு. ௩0, ௧௭௨, ௧௮0, ௧௯௨, ௧௯௭, ௨௮௭ (நன்னாகையார் பார்க்க.)
கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார் நற். ௧௪௪, ௨௧௩
கடம்பனூர்ச் சாண்டிலியன் குறு. ௩0௭
கடலுண்மாய்ந்த இளம்பெரு வழுதி பரி. ௧௫, புற. ௧௮௨
கடியலூர் உருத்திரங் கண்ணனார் அக. ௧௬௭, குறு. ௩௫௨, பத். பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை
கடுகுபெருந்தேவனார் குறு. ௨௫௫
கடுந்தொடைக் காவினார் அக. ௧0௯
கடுந்தோட்காவீரன் குறு. ௬௯
கடுவனிளமள்ளனார் நற். ௧௫0
கடுவனிள வெயினனார் பரி. ௩, ௪, ௫
கடுவன் மள்ளனார் (மதுரைத் தமிழக் கூத்தன் கடுவன் மள்ளனார் பார்க்க)
கணக்காயனார் (மதுரைக் கணக்காயனார் பார்க்க)
கணக்காயனார் மகனார் நக்கீரர் (நக்கீரர் பார்க்க)
கணக்காயன் தத்தனார் குறு. ௩0௪
கணிபுன் குன்றன் (கணியன்பூங்குன்றனார் பார்க்க)
கணியன் பூங்குன்றனார் நற். ௨௨௬, புற. ௧௯௨
கண்ணகனார் நற். ௭௯, புற. ௨௧௮
கண்ணகாரன் கொற்றனார் நற். ௧௪௩.
கண்ணங் கொற்றனார் நற். ௧௫௬
கண்ணம்புல்லனார் (கருவூர்க் கண்ணம்புல்லனார் பார்க்க.)
கண்ணனார் குறு. ௨௪௪ (மதுரைக் கண்ணனார் பார்க்க.)
கதக்கண்ணனார் குறு. ௯௪ (மதுரைக் கதக்கண்ணனார் பார்க்க)
கதப்பிள்ளையார் (கருவூர் கதப்பிள்ளை பார்க்க.)
கதையங்கண்ணனார் புற. ௩௫௬
கந்தரத்தனார் (உரோடோகத்துக் கந்தரத்தனார் பார்க்க.)
கபிலர் அக. ௨, ௧௨, ௧௮, ௪௨, ௮௨, ௧௧௮, ௧௨௮, ௧௫௮, ௧௮௨, ௨0௩, ௨௧௮, ௨௩௮, ௨௪௮, ௨௭௮, ௨௯௨, ௩௧௮, ௩௩௨, ௩௮௨, ஐங். ௨0௧-௩00, கலி. ௩௭ - ௬௫, குறு. ௧௩, ௧௮, ௨௫, ௩௮, ௪௨, ௮௭, ௯௫, ௧00, ௧0௬, ௧௧௫, ௧௨௧, ௧௪௨, ௧௫௩, ௧௮௭, ௧௯௮, ௨0௮, ௨௨௫, ௨௪௧, ௨௪௬, ௨௪௯, ௨௫௯, ௨௬௪, ௨௮௮, ௨௯௧, ௩௧௨, ௩௫௫, ௩௫௭, ௩௬௧, ௩௮௫, நற். ௧, ௧௩, ௩௨, ௫௯, ௬௫, ௭௭, ௨௧௭, ௨௨௨, ௨௨௫, ௨௫௩, ௨௬௭, ௨௯௧, ௩0௯, ௩௨0, ௩௩௬, ௩௫௩, ௩௫௯, ௩௬௮, ௩௭௩, ௩௭௬, பதி. ௬௧ - ௭0, பத் - குறிஞ்சிப் பாட்டு புற. ௮, ௧௪, ௧0௫ - ௧௧௧, ௧௧௩ - ௧௨௪, ௧௪௩, ௨00, ௨0௧, ௨0௨, ௨௩௬, ௩௩௭, ௩௪௭
கயத்தூர் கிழார் குறு. ௩௫௪
கயமனார் அக. ௭, ௧௭, ௧௪௫, ௧௮௯, ௧௯௫, ௨௧௯, ௨௨௧, ௨௫௯, ௨௭௫, ௩௨௧, ௩௮௩, ௩௯௭, குறு. ௯, ௩௫௬, ௩௭௮, ௩௯௬, நற். ௧௨, ௧௯௮, ௨௭௯, ௨௯௩, ௩0௫, ௩௨௪, புற. ௨௫௪
கருங்குழலாதனார் புற. ௭, ௨௨௪
கரும்பிள்ளைப் பூதனார் பரி. ௧0
கருவூர் ஓதஞானி குறு. ௭௧ (ஓதஞானி பார்க்க.)
கருவூர்க் கண்ணம்பாளனார் அக. ௧௮0, ௨௬௩
கருவூர்க் கண்ணம்புல்லனார் அக. ௬௩, நற். ௧௫௯ (கண்ணம்புல்லனார் பார்க்க.)
கருவூர்க் கதப்பிள்ளை அக. ௩0௯, குறு. ௬௪, ௨௬௫, ௩௮0, நற். ௧௩௫, ௩௪௩, புற. ௧௬௮, ௩௮0
கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் (கருவூர்க் கதப் பிள்ளை பார்க்க.)
கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார் (கருவூர்க் கதப் பிள்ளை பார்க்க.)
கருவூர்க் கலிங்கத்தார் அக. ௧௮௩
கருவூர் கிழார் குறு. ௧௭0
கருவூர்க் கோசனார் நற். ௨௧௪
கருவூர்ச் சேரமான் சாத்தன் குறு. ௨௬௮
கருவூர் நன்மார்பனார் அக. ௨௭௭
கருவூர்ப் பவுத்திரனார் குறு. ௧௬௨
கருவூர் பூதஞ்சாத்தனார் அக. ௫0
கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் புற. ௨௧௯
கல்பொரு சிறுநுரையார் குறு. ௨௯0
கல்லாடனார் அக. ௯, ௮௩, ௧௧௩, ௧௭௧, ௧௯௯, ௨0௯, ௩௩௩, குறு. ௨௬0, ௨௬௯, புற. ௨௩, ௨௫, ௩௭௧, ௩௮௫, ௩௯௧
கவைமகன் குறு. ௩௨௪
கழாத்தலையார் புற. ௬௨, ௬௫, ௨௭0, ௨௮௮, ௨௮௯, ௩௬௮
கழார்க்கீர னெயிற்றி (கழார்க்கீர னெயிற்றியார் பார்க்க.)
கழார்க்கீர னெயிற்றியனார் குறு. ௩௩0
கழார்க்கீர னெயிற்றியார் அக. ௧௬௩, ௨௧௭, ௨௩௫, ௨௯௪, குறு. ௩௫, ௨௬௧, நற். ௨௮௧, ௩௧௨
கழைதின் யானையார் புற. ௨0௪
கள்ளம்பாளனார் நற். ௧௪௮
கள்ளிக்குடிப் பூதம்புல்லனார் நற். ௩௩௩
கள்ளில் ஆத்திரையனார் குறு. ௨௯௩, புற. ௧௭௫, ௩௮௯
காக்கைபாடினியார் நச்செள்ளையார் குறு. ௨௧0, பதி. ௫௧ - ௬0, புற. ௨௭௮
காசிபன்கீரன் நற். ௨௪௮
காஞ்சிப்புலவன் (மாங்குடி மருதனார் பார்க்க.)
காட்டூர் கிழார் மகனார் கண்ணனார் அக. ௮௫
காப்பியஞ் சேந்தனார் நற். ௨௪௬
காப்பியாற்றுக் காப்பியனார் பதி. ௩௧ - ௪0
காமக்கணிப்பசலையார் (மதுரைக் காமக்கணி நப் பசலையார் பார்க்க.)
காமஞ்சோகுளத்தார் குறு. ௪
காரிகிழார் புற. ௬
காலரிகடிகையார் குறு. ௨௬௭
காவட்டனார் அக. ௩௭௮, புற. ௩௫௯
காவற்பெண்டு புற. ௮௬
காவன்முல்லைப் பூதனார் அக. ௨௧, ௧௫௧, ௨௪௧, ௨௯௩, ௩௯௧, குறு. ௧0௪, ௨௧௧, நற். ௨௭௪
காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் குறு. ௩௪௨.
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் அக. ௧0௭, ௧௨௩, ௨௮௫, குறு. ௨௯௭, நற். ௨௩௭, புற. ௫௭, ௫௮, ௧௬௯, ௧௭௧, ௩௫௩
காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார் அக. ௧0௩, ௨௭௧, நற். ௩௮௯
காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன் குறு. ௩௪௭
காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் பத் - முல்லைப்பாட்டு
கிடங்கில்காவிதி கீரங்கண்ணனார் நற். ௨௧௮
கிடங்கில்காவிதிப் பெருங்கொற்றனார் நற். ௩௬௪
கிடங்கில் குலபதிளைக் கண்ணனார் குறு. ௨௫௨
கிள்ளி மங்கலங்கிழார் குறு. ௭௬, ௧௧0, ௧௫௨, ௧௮௧
கிள்ளிமங்கலங்கிழார் மகனார் சோகோவனார் நற். ௩௬௫
கீரங்கீரனார் நற். ௭௮
கீரந்தையார் பரி. ௨
குடபுலவியனார் புற. ௧௮, ௧௯
குடவாயிற் கீரத்தனார் அக. ௪௪, ௬0, ௭௯, ௧௧௯, ௧௨௯, ௨௮௭, ௩௧௫, ௩௪௫, ௩௬௬, ௩௮௫, குறு. ௭௯, ௨௮௧, ௩௬௯, நற். ௨௭, ௪௨, ௨௧௨, ௩௭௯, புற. ௨௪௨
குட்டுவன் கண்ணனார் குறு. ௧௭௯
குட்டுவன் கீரனார் புற. ௨௪0
குண்டுகட்பாலியாதனார் நற். ௨௨0, புற. ௩௮௭
குதிரைத்தறியனார் நற். ௨௯௬
குப்பைக்கோழியார் குறு. ௩0௫
குமட்டூர்க் கண்ணனார் பதி. ௧௧ - ௨0
குமிழி ஞாழலார் நப்பசலையார் அக. ௧௬0
குழற்றத்தனார் குறு. ௨௪௨
குளம்பனார் நற். ௨௮௮
குளம்பாதாயனார் புற. ௨௫௩.
குறமகள் இளவெயினி புற. ௧௫௭

குறமகள் குறியெயினி நற். ௩௫௭
குறியிறையார் குறு. ௩௯௪
குறுங்கீரனார் குறு. ௩௮௨
குறுங்குடி மருதனார் அக. ௪, குறு. ௩௪௪
குறுங்கோழியூர்க்கிழார் புற. ௧௭, ௨௦, ௨௨
குறுவழுதி (அண்டர்மகன் குறுவழுதியார் பார்க்க)
குன்றம்பூதனார் பரி. ௯, ௧௮
குன்றியனார் அக. ௪௦, ௪௧, குறு. ௫௦, ௫௧. ௧௧௭, ௨௩௮, ௩௦௧, ௩௩௬, நற். ௧௧௭, ௨௯௧
குன்றூர் கிழார் மகனார் புற. ௩௩௮
குன்றூர் கிழார்மகனார் கண்ணத்தனார் நற். ௩௩௨
கூகைக்கோழியார் புற. ௩௬௪
கூடலூர்கிழார் குறு. ௧௬௬, ௧௬௭, ௨௧௪, புற. ௨௨௯
கூடலூர்ப் பல்கண்ணனார் நற். ௨௦௦, ௩௮௦
கூவன்மைந்தன் குறு. ௨௨௪
கூற்றங் குமரனார் நற். ௨௪௪
கேசவனார் பரி. ௧௪
கொடிமங்கலத்து வாதுளிநற்சேந்தனார் அக. ௧௭௯, ௨௩௨
கொடியூர் கிழார் மகனார் நெய்தற்றத்தனார் அக. ௨௪௩ (நெய்தற்றத்தனார் பார்க்க.)
கொட்டம்பலவனார் நற். ௯௫
கொல்லன் அழிசி குறு. ௨௭, ௧௩௮. ௧௪௫, ௨௪௦
கொல்லிக் கண்ணன் குறு. ௩௪
கொள்ளம்பக்கனார் நற். ௧௪௭
கொற்றங் கொற்றனார் (மாற்றூர் கிழார்மகனார் கொற்றங் கொற்றனார் பார்க்க.)
கொற்றனார் (செல்லூர்க் கிழார்மகனார் பெரும்பூதங் கொற்றனார் பார்க்க.)
கோக்குளமுற்றனார் குறு. ௯௮, நற். ௯௬
கோடைபாடிய பெரும்பூதனார் புற. ௨௫௯
கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் அக. ௧௬௮
கோட்டியூர் நல்லந்தையார் நற். ௨௧௧
கோண்மா நெடுங்கோட்டனார் நற். ௪௦
கோதமனார் (பாலைக் கௌதமனார் பார்க்க.)
கோப்பெருஞ்சோழன் குறு. ௨௦, ௫௩, ௧௨௯, ௧௪௭, புற. ௨௧௪, ௨௧௫, ௨௧௬
கோவத்தனார் குறு. ௬௬, ௧௯௪
கோவூர் கிழார் குறு. ௬௫, நற். ௩௯௩, புற. ௩௧, ௩௨, ௩௩, ௪௧, ௪௪, ௪௫, ௪௬, ௪௭, ௬௮; ௭௦, ௩௦௮, ௩௭௩, ௩௮௨, ௩௮௬. ௪௦௦
கோவேங்கைப் பெருங்கதவனார் குறு. ௧௩௪
கோழிக்கொற்றனார் குறு. ௨௭௬
கோளியூர் கிழார் மகனார் செழியனார் நற். ௩௮௩
கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் புற. ௫௪, ௬௧, ௧௬௭, ௧௮௦, ௧௯௭, ௩௯௪
சங்கவருணர் என்னும் நாகரியர் புற. ௩௬௦
சத்திநாதனார் குறு. ௧௧௯
சல்லியங் குமரனார் நற். ௧௪௧
சாகலாசனார் அக. ௧௬, ௨௭௦
சாத்தந்தையார் நற். ௨௬, புற. ௮௦, ௮௧, ௮௨, ௨௮௭
சாத்தனார் குறு. ௩௪௯
சிறுமோலிகனார் நற். ௬௧
சிறுவெண்டேரையார் புற. ௩௬௨
சிறைக்குடி ஆந்தையார் குறு. ௫௬, ௫௭, ௬௨, ௧௩௨, ௧௬௮, ௨௨௨, ௨௭௩, ௩௦௦, நற். ௧௬
சீத்தலைச்சாத்தனார் (மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் பார்க்க.)
செங்கண்ணனார் (மதுரைச் செங்கண்ணனார் பார்க்க.)
செம்பியனார் நற். ௧௦௨
செம்புலப் பெயனீரார் குறு. ௪௦
செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார் அக. ௧௭௭
செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தன் குறு. ௨௨௮
செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார் அக. ௨௫௦, குறு. ௨௧௮, ௩௫௮, ௩௯௩, நற். ௩௦ (கொற்றனார் பார்க்க.)
செல்லூர் கொற்றனார் (செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங் கொற்றனார் பார்க்க.)
செல்லூர்க் கோசிகன் கண்ணனார் அக. ௬௬
சேகம்பூதனார் (மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார் பார்க்க.)
சேந்தங் கண்ணனார் அக. ௩௫௦, நற். ௫௪
சேந்தம்பூதனார் (மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார் பார்க்க.)
சேந்தன் கீரனார் குறு. ௩௧௧
சேரமான் இளங்குட்டுவன் அக. ௧௫௩
சேரமானெந்தை குறு. ௨௨
சேரமான் கணைக்காலிரும்பொறை புற. ௭௪
சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை புற. ௨௪௫
சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் புற. ௧௮௧. ௨௬௫
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் புற. ௧௭௩
சோழன் நலங்கிள்ளி புற. ௭௩, ௭௫
சோழன் நல்லுருத்திரன் புற. ௧௯௦
தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார் நற். ௩௮௬
தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் அக. ௪௮, ௧௦௮, ௩௫௫, குறு. ௨௧௭, நற். ௩௧௩, புற. ௩௨௬
தங்கால் பொற்கொல்லனார்
தங்கால் முடக்கொற்றனார்
தங்கால் முடக்கோவலனார்
தண்காற் பூட்கொல்லனார்
(தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார், பார்க்க.)
தனிமகனார் நற். ௧௫௩
தாமப்பல்கண்ணனார் புற. ௪௩
தாமோதரனார் குறு. ௯௨, ௧௯௫
தாயங்கண்ணனார் (எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பார்க்க.)





தாயங்கண்ணியார் புற. ௨௫௦
திப்புத் தோளார் குறு. ௧
திருத்தாமனார் புற. ௩௯௮
தீன்மதி நாகனார் குறு. ௧௧௧
தும்பிசேர் கீரனார் குறு. ௬௧, ௯௫, ௩௧௬, ௩௨௦, ௩௯௨, நற், ௨௭௭, புற. ௨௪௯.
தும்பிசொகினனார் (தும்பிசேர்கீரனார் பார்க்க.)
தும்பிசோகீரனார் ( ஷ )
துறைக்குறு மாவிற்பாலங் கொற்றனார் நற். ௨௮௬
துறையூர் ஓடைகிழார் புற. ௧௩௬
தூங்கலோரியார் குறு. ௧௫௧, ௨௯௫, நற். ௬௦
தேய்புரிப்பழங் கயிற்றினார் நற். ௨௮௪
தேவகுலத்தார் குறு. ௩
தேவனார் நற். ௨௨௭
தொடித்தலை விழுத்தண்டினார் புற. ௨௪௩
தொண்டி ஆமூர்ச் சாத்தனார் அக. ௧௬௯
தொண்டைமான் இளந்திரையன் நற். ௯௪, ௯௯, ௧௦௬, புற. ௧௮௫ (இளந்திரையன் பார்க்க.)
தொல்கபிலர் அக. ௨௮௨, குறு. ௧௪, நற். ௧௧௪, ௨௭௬, ௩௨௮, ௩௯௯
நக்கண்ணையார் அக. ௨௫௨, நற். ௧௯, ௮௭ (பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் பார்க்க.)
நக்கீரர் அக. ௩௬, ௫௭, ௭௮, ௯௩, ௧௨௦, ௧௨௬, ௧௪௧, ௨௦௫, ௨௨௭, ௨௪௯. ௨௫௩, ௨௯௦, ௩௧௦, ௩௪௦, ௩௪௯, ௩௧௯, ௩௮௯, குறு. ௭௮, ௧௦௫, ௧௩௧, ௧௪௩, ௧௬௧, ௨௬௬, ௨௮௦, ௩௬௮, நற். ௩௧, ௮௬, ௧௯௭, ௨௫௮, ௩௪௦, ௩௫௮, ௩௬௭, பத். திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, புற. ௫௬, ௧௮௯, ௩௯௫.
நப்பண்ணனார் பரி. ௧௯
நப்பாலத்தனார் நற். ௨௪௦
நம்பிகுட்டுவன் குறு. ௧௦௯, ௨௪௩, நற். ௧௪௫, ௨௩௬, ௩௪௫
நரிவெரூஉத்தலையார் குறு. ௫,௨௩௬, புற. ௫, ௧௯௫
நரைமுடி நெட்டையார் அக. ௩௩௯
நல்லச்சுதனார் பரி. ௨௧
நல்லந்துவனார் அக. ௪௩, கலி. கடவுள் வாழ்த்து, ௧௧௮ - ௧௫௦, நற். ௮௮, பரி. ௬, ௮, ௧௧, ௨௦
நல்லழுசியார் பரி. ௧௬, ௧௭
நல்லாவூர் கிழார் அக. ௮௬, நற். ௧௫௪
நல்லிறையனார் புற. ௩௯௩
நல்லுருத்திரனார் கலி. ௧௦௧ - ௧௧௭
நல்லூர்ச்சிறுமேதாவியார் நற். ௨௮௨
நல்லெழுநியார் பரி. ௧௩
நல்வழுதியார் பரி. ௧௨
நல்விளக்கனார் நற். ௮௫
நல்வெள்ளியார் அக. ௩௨, நற். ௭, ௪௭ (மதுரை நல்வெள்ளியார் பார்க்க.)
நல்வேட்டனார் (மிளைகிழான் நல்வேட்டனார் பார்க்க.)
நற்சேந்தனார் நற். ௧௨௮
நற்றங்கொற்றனார் நற். ௧௩௬
நற்றமனார் நற். ௧௩௩
நன்பலூர்ச்சிறு மேதாவியார் அக- ௯௪, ௩௯௪
நன்னாகனார் (புறத்திணை நன்னாகனார் பார்க்க.)
நன்னாகையார் குறு. ௧௧௮, ௩௨௫ (கச்சிப்பேட்டு நன்னாகையார் பார்க்க.)
நாகம்போத்தன் குறு. ௨௮௨
நாமலார் மகன் இளங்கண்ணன் குறு. ௨௫௦
நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார் நற். ௩௮௨
நெடுங்கழுத்துப் பரணர் புற. ௨௯௧
நெடும்பல்லியத்தனார் புற. ௬௪
நெடும்பல்லியத்தை குறு. ௧௭௮, ௨௦௩
நெடுவெண்ணிலவினார் குறு. ௪௭
நெட்டிமையார் புற. ௯, ௧௨, ௧௫
நெய்தற் கார்க்கியார் குறு. ௫௫, ௨௧௨
நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர்கிழார் அக. ௧௧௨
நெய்தற்றத்தனார் நற். ௪௯, ௧௩௦ (கொடியூர் கிழார் மகனார் நெய்தற்றத்தனார் பார்க்க.)
நொச்சி நியமங்கிழார் அக. ௫௨, நற். ௧௭, ௨௦௮, ௨௦௯, புற. ௨௯௩
நோய்பாடியார் அக. ௬௭
பக்குடுக்கை நன்கணியார் புற. ௧௯௪
படிமத்து மோசிகீரனார் குறு. ௩௩, ௭௫, ௩௮௩
படுமாற்றூர் மோசிகீரன் கொற்றனார் குறு. ௩௭௬
பதடிவைகலார் குறு. ௩௨௩
பதுமனார் குறு. ௬
பரணர் அக. ௬, ௬௨, ௭௬, ௧௧௬. ௧௨௨, ௧௨௫, ௧௩௫, ௧௪௨, ௧௪௮, ௧௫௨, ௧௬௨, ௧௭௮, ௧௮௧, ௧௮௬, ௧௯௬, ௧௯௮, ௨௦௮, ௨௧௨, ௨௨௨, ௨௨௬, ௨௩௬, ௨௪௬, ௨௫௮, ௨௯௨, ௨௬௬, ௨௭௬, ௩௨௨, ௩௨௬, ௩௫௬, ௩௬௭, ௩௭௨, ௩௭௬, ௩௮௬, ௩௯௬, குறு. ௧௯, ௨௪, ௩௬, ௬௦, ௭௩, ௮௯, ௧௨௦, ௧௨௮, ௧௬௫, ௧௯௯, ௨௫௮, ௨௯௨, ௨௯௮, ௩௨௮, ௩௯௩, ௩௯௯, நற். ௬, ௧௦௦, ௨௦௧. ௨௪௭, ௨௬௦, ௨௬௫, ௨௭௦, ௨௮௦, ௩௦௦, ௩௧௦, ௩௫௦, ௩௫௬, பதி. ௪௧—௫௦, புற. ௪, ௬௩, ௧௪௧, ௧௪௨, ௧௪௩, ௧௪௪, ௩௩௬, ௩௪௧, ௩௪௩, ௩௪௮, ௩௫௨, ௩௫௪ ௩௬௯
பாரயனார் நற். ௧௫௫
பரூஉமோவாய்ப் பதுமனார் குறு. ௧௦௧
பறநாட்டுப் பெருங்கொற்றனார் அக. ௩௨௩
பனம்பாரனார் குறு. ௫௨
பாண்டரங்கண்ணனார் புற. ௧௬
பாண்டியன் அறிவுடை நம்பி அக. ௨௮, குறு. ௨௩௦, நற். ௧௫, புற. ௧௮௮
பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் புற ௧௮௩
பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன் அக. ௩௭௩, குறு. ௧௫௬
பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி அக. ௨௬ (உக்கிரப் பெருவழுதி பார்க்க.)

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் புற. ௭௨
பாண்டியன் பன்னாடு தந்தான் குறு. ௨௭0
பாண்டியன் மாறன்வழுதி நற். ௯௭, ௩0௧ (மாறன் வழுதி பார்க்க.)
பார்காப்பான் குறு. ௨௫௪
பாரதம் பாடிய பெருந்தேவனார் அக., ஐங்., குறு., நற். புற. கடவுள் வாழ்த்து
பாரிமகளிர் புற. ௧௧௨
பாலத்தனார் நற். ௫௨
பாலைக் கௌதமனார் பதி. ௨௧ - ௩0, புற. ௩௬௬ (கோதமனார் பார்க்க.)
பாலை பாடிய பெருங்கடுங்கோ அக. ௫, ௯௯, ௧௧௧, ௧௫௫, ௧௮௫, ௨௨௩, ௨௧௯, ௨௬௭, ௨௯௧, ௩௧௩, ௩௩௭, ௩௭௯, கலி. ௨ - ௩௬, குறு. ௧௬, ௩௭, ௧௨௪, ௧௩௫, ௧௩௭, ௨0௯, ௨௩௧, ௨௬௨, ௨௮௩, ௩௯௮, நற். ௯, ௪௮, ௧௧௮, ௨௭௨, ௨௨௪, ௨௫௬, ௩௧௮, ௩௩௭, ௩௮௪, ௩௯௧, புற. ௨௮௨
பாவைக் கொட்டிலார் அக. ௩௩௯
பிசிராந்தையார் அக. ௩0௮, நற். ௯௧, புற. ௬௭, ௧௮௪, ௧௯௧, ௨௧௨
பிரமசாரி நற். ௩௪
பிரமனார் புற. ௩௫௭
பிரான் சாத்தனார் நற். ௬௮
புதுக்கயத்துவண்ணக்கன்கம்பூர்கிழான் நற். ௨௯௪
புல்லாற்றூர் எயிற்றியனார் புற. ௨௧௩
புறத்திணை நன்னாகனார் புற. ௧௭௬, ௩௭௬, ௩௭௯, ௩௮௧, ௩௮௪ (நன்னாகனார் பார்க்க.)
பூங்கணுத்திரையார் குறு. ௪௮, ௧௭௧, புற. ௨௭௭
பூங்கண்ணன் குறு. ௨௫௩
பூதங்கண்ணனார் நற். ௧௪0
பூதத்தேவன் குறு. ௨௮௫
பூதபாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு புற. ௨௪௬
பூதம்புல்லனார் குறு. ௧௯0
பூதனார் நற். ௨௯
பூதன் தேவனார் நற் ௮0 (ஈழத்துப்பூதன் தேவனார் பார்க்க.)
பெருங்கண்ணனார் குறு. ௨௮௯, ௩௧0, நற். ௧௩௭
பெருங்குன்றூர் கிழார் அக. ௮, குறு. ௩௩௮, நற். ௫, ௧௧௨, ௧௧௯, ௩௪௭, பதி. ௮௧ - ௯0, புற. ௧௪௭, ௨௧0, ௨௧௧, ௨௬௬, ௩௧௮
பெருங்கோழி நாயகன் மகள் நக்கண்ணையார் புற. ௮௩, ௮௪, ௮௫ (நக்கண்ணையார் பார்க்க.)
பெருங்கௌசிகனார் நற். ௪௪, ௧௩௯
பருஞ்சாத்தனார் குறு. ௨௬௩
பெருஞ்சித்திரனார் புற. ௧௫௮-௧௬௩, ௨0௭, ௨0௮, ௨௩௭, ௨௩௮
பெருந்தலைச் சாத்தனார் அக. ௧௩, நற். ௨௬௨, புற. ௧௫௧, ௧௬௪, ௧௬௫, ௨0௫, ௨0௯, ௨௯௪ ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார் பார்க்க.
பெருந்தேவனார் அக. ௫௧, நற். ௮௩
பெருந்தோட் குறுஞ்சாத்தன் குறு. ௩0௮
பெரும்பதுமனார் குறு. ௭, நற். ௨, ௧0௯, புற. ௧௯௯ (மீளிப்பெரும்பதுமனார் பார்க்க.)
பெரும்பாக்கன் குறு. ௨௯௬
பெருவழுதி நற். ௫௫, ௫௬
பேயனார் அக. ௨௩௪, ஐங். ௪0௧ - ௫00, குறு. ௨௩௩, ௩௩௯, ௩௫௯, ௪00
பேய்மகள் இளவெயினி புற. ௧௧
பேரி சாத்தனார் அக. ௨௪௨, குறு. ௨௭௮, ௩௧௪, ௩௯௯ (வடம வண்ணக்கன்பேரி சாத்தனார் பார்க்க.)
பேரெயின் முறுவலார் குறு. ௧௭, புற. ௨௩௯
பொதுக்கயத்துக் கீரந்தை குறு. ௩௩௭
பொதும்பில் கிழார் நற். ௫௭
பொதும்பில் கிழார் வெண்கண்ணனார் அக. ௧௩0, ௧௯௨
பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார் நற். ௩௭௫, ௩௮௭
பொதும்பிற் புல்லாளங் கண்ணியார் அக. ௧௫௪
பொத்தியார் புற. ௨௧௭, ௨௨0 - ௨௨௩
பொய்கையார் நற். ௧௮, புற. ௪௮, ௪௯
பொருந்தில்இளங்கீரனார் அக. ௧௯, ௩௫௧, புற.௫௩
பொன்மணியார் குறு. ௩௯௧
பொன்முடியார் புற. ௨௯௯, ௩௧0, ௩௧௨
பொன்னாகன் குறு. ௧௧௪
போதனார் நற். ௧௧0
போந்தைப்பசலையார் அக. ௧௧0
மடல்பாடிய மாதங்கீரனார் குறு. ௧௮௨, நற். ௩௭௭
மதுரை............மள்ளனார் (மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் பார்க்க.)
மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் அக. ௩௩, ௧௪௪, ௧௭௪, ௨௪௪, ௩௧௪, ௩௪௪, ௩௫௩, குறு.௧௮௮, ௨௧௫, நற். ௨௯௭, ௩௨௧, புற.௩௯௮
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் அக. ௫௬, ௧௨௪, ௨௩0, ௨௫௪, ௨௭௨, ௩0௨, குறு. ௧௮௫, நற். ௩௪௪, புற. ௩௨௯ (இளவேட்டனார் பார்க்க.)
மதுரை ஆசிரியர் கோடங்கொற்றனார் குறு. ௧௪௪
மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் (நல்லந்துவனார் பார்க்க.)
மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரிசாத்தனார் (ஆலம்பேரிசாத்தனார் பார்க்க.)
மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார் புற. ௩0௯
மதுரை இளங் கௌசிகனார் அக. ௩௮௧.
மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார் அக. ௧0௨, ௩௪௮, நற். ௨௭௩
மதுரை ஈழத்துப் பூதன்தேவனார் அக. ௮௮, ௨௩௧, ௩0௭, குறு. ௧௮௯, ௩௪௩, ௩௬0, நற். ௩௬௬ (பூதன் தேவன், ஈழத்துப்பூதன் தேவன் பார்க்க.)
மதுரை எழுத்தாளனார் அக. ௮௪





மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார் அக. ௨0௭, குறு. ௯0, ௨௨௬, ௨௪௭, நற். ௬௯, ௨௬௧
மதுரை ஓலைக்கடைக்கண்ணம் புகுந்தாராயத்தனார் புற. ௩௫0
மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார் நற். ௨௫0, ௩௬௯
மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகனார் குறு. ௨௨௩.
மதுரைக் கணக்காயனார் அக. ௨௭, ௩௩௮, ௩௪௨ நற். ௨௩, புற. ௩௩0 (கணக்காயனார் பார்க்க.)
மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் (நக்கீரர் பார்க்க.)
மதுரைக் கண்டாதத்தனார் குறு. ௩௧௭
மதுரைக் கண்ணத்தனார் அக. ௩௬0, நற். ௩௫௧
மதுரைக் கண்ணனார் குறு. ௧0௭, (கண்ணனார் பார்க்க)
மதுரைக் கதக்கண்ணனார் குறு. ௮௮ (கதக்கண்ணனார் பார்க்க.)
மதுரைக் கவுணியன் பூதத்தனார் அக. ௭௪
மதுரைக் கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார் அக. ௧௭0, புற. ௩௧௬
மதுரைக் காஞ்சிப்புலவர் (மாங்குடி மருதனார் பார்க்க.)
மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார் அக. ௨0௪
மதுரைக் காமக்கணி நப்பசலையார் நற். ௨௪௩
மதுரைக் காருலவியங் கூத்தனார் நற். ௩௨௫
மதுரைக் கூத்தனார் அக. ௩௩௪
மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் அக. ௫௩, ௧௩௪, ௨௨௯, ௩0௬, ௩௨0, குறு. ௧௫௪, நற். ௩௬, ௧௨௭, ௩௩௯. புற. ௫௯
மதுரைக் கொல்லம்புல்லன் குறு. ௩௭௩
மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் அக. ௩௧௩, நற். ௨௮௫ (மதுரைப் பொன் செய் கொல்லன் வெண்ணாகனார் பார்க்க.)
மதுரைச் சள்ளம்போதனார் நற். ௨௧௫
மதுரைச் செங்கண்ணனார் அக. ௩௯, நற். ௧௨௨
மதுரைத் தத்தங் கண்ணனார் அக. ௩௩௫
மதுரைத் தமிழக்கூத்தனார் கடுவன் மள்ளனார் அக. ௭0, ௨௫௬, ௩௫௪, குறு. ௮௨
மதுரைத் தமிழக் கூத்தனார் புற. ௩௩௪
மதுரைத் தமிழக் கூத்தன் நாகன் தேவனார் அக. ௧௬௪
மதுரை நக்கீரர் (நக்கீரர் பார்க்க.)
மதுரைநல் வெள்ளியார் அக. ௩௨, குறு. ௩௬௫ (நல்வெள்ளியார் பார்க்க.)
மதுரைப் படைமங்க மன்னியார் புற. ௩௫௧
மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார் அக. ௫௮, ௨௯௮, ௩௨௮
மதுரைப்பள்ளிமருதங்கிழார் மகனார் சொகுத்தனார் நற். ௩௨௯, ௩௫௨
மதுரைப் பாலாசிரியர் சேந்தன் கொற்றனார் நற். ௩௨௨
மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார் அக. ௧௭௨
மதுரைப்பாலாசிரியர் நற்றாமனார் அக. ௯௨
மதுரைப் புல்லங்கண்ணனார் அக. ௧௬௧
மதுரைப் பூதனிள நாகனார் புற. ௨௭௬
மதுரைப் பூவண்டநாகன் வேட்டனார் நற். ௩௧௭
மதுரைப் பெருங்கொல்லன் குறு. ௧௪௧
மதுரைப் பெருமருதனார் நற். ௨௪௧
மதுரைப் பெருமருதிள நாகனார் நற். ௨௫௧
மதுரைப் போாலவாயார் அக. ௮௭. ௨௯௬, நற். ௫௧, ௩௯௧, புற. ௨௪௭, ௨௬௨
மதுரைப் பொன்செய் கொல்லன் வெண்ணாகனார் (மதுரைக்கொல்லன் வெண்ணாகனார் பார்க்க.)
மதுரைப் போத்தனார் அக. ௭௫
மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன் குறு. ௩௩௨
மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார் அக. ௨௪௭, ௩௬௪, நற். ௩௮௮
மதுரை மருதனிளநாகனார் அக. ௩௪, ௫௯, ௭௭, ௯0, ௧0௪, ௧௨௧, ௧௩௧, ௧௮௪, ௧௯௩, ௨0௬, ௨௨0, ௨௪௫, ௨௫௫, ௨௬௯, ௨௮௩, ௨௯௭, ௩௧௨, ௩௪௩, ௩௫௮, ௩௬௫, ௩௯௮, ௩௮0, ௩௮௭, கலி. ௬௬ - ௧00, குறு. ௭௭, ௧௬0, ௨௭௯, ௩௬௭, நற். ௨௧, ௩௯, ௧0௩, ௧௯௪, ௨௧௬, ௨௮௩, ௨௯0, ௩0௨, ௩௨௬, ௩௪௧, ௩௬௨, ௩௯௨, புற. ௫௨, ௫௫, ௧௩௮, ௧௩௯, ௩௪௯
மதுரை வேளாசான் புற. ௩0௫
மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார் அக. ௮0
மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமாரனார் நற். ௨௮௯
மருங்கூர்ப்பாகை சாத்தன் பூதனார் அக. ௩௨௭
மருதம்பாடியஇளங்கடுங்கோ அக.௯௬,௧௭௬, நற்.௫0
மருதனிள நாகனார் (மதுரை மருதனிள நாகனார் பார்க்க.)
மலையனார் நற். ௯௩
மள்ளனார் குறு. ௭௨, நற். ௨0௪
மாங்குடி கிழார் (மாங்குடி மருதனார் பார்க்க.)
மாங்குடி மருதனார் அக. ௮௯, குறு. ௧௬௪, ௧௭௩, ௩0௨, நற். ௧௨0, ௧௨௩, பத். மதுரைக் காஞ்சி, புற. ௨௪, ௨௬, ௩௧௩, ௩௩௫, ௩௭௨, ௩௯௬
மாடலூர் கிழார் குறு. ௧௫0
மாதீர்த்தன் குறு. ௧௧௩
மாமிலாடன் குறு. ௪௬
மாமூலனார் அக. ௧, ௧௫, ௩௧, ௫௫, ௬௧, ௬௫, ௯௧, ௯௭, ௧0௧, ௧௧௫, ௧௨௭, ௧௮௭, ௧௯௭, ௨0௧, ௨௧௧, ௨௩௩, ௨௫௧, ௨௬௫, ௨௮௧, ௨௯௫, ௩௧௧, ௩௨௫, ௩௩௧, ௩௪௭, ௩௪௯, ௩௫௯, ௩௯௩, குறு. ௧௧, நற். ௧௪, ௭௫
மாயேண்டன் குறு. ௨௩௫
மார்க்கண்டேயனார் புற. ௩௬௫
மாலைமாறன் குறு. ௨௪௫
மாவளத்தன் குறு. ௩௪௮
மாறன்வழுதி (பாண்டியன் மாறன்வழுதி பார்க்க.)

மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார் அக. ௩௭௭
மாறோக்கத்து நப்பசலையார் நற். ௩௦௪, புற. ௩௭, ௩௯, ௧௨௬, ௧௭௪, ௨௨௬, ௨௮௦, ௩௮௩
மாற்பித்தியார் புற. ௨௫௧, ௨௫௨
மாற்றூர் கிழார் மகனார் கொற்றங்கொற்றனார் அக. ௫௪. நற். ௨௫௯ (கொற்றங் கொற்றனார் பார்க்க.)
மிளைகிழான் நல்வேட்டனார் குறு. ௩௪௧, நற். ௫௩, ௨௧௦, ௨௯௨, ௩௪௯
மிளைக்கந்தன் குறு. ௧௯௬
மிளைப்பெருங் கந்தன் குறு. ௧௩௬, ௨௦௪, ௨௩௪
மிளைவேள் தித்தன் குறு. ௨௮௪
மீளிப்பெரும் பதுமனார் (பெரும்பதுமனார்பார்க்க.)
மீனெறி தூண்டிலார் குறு. ௫௪
முக்கல் ஆசான் நல்வெள்ளையார் நற். ௨௭௨
முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன் அக. ௩௦
முடத்தாமக் கண்ணியார் பத். பொருநராற்றுப் படை
முடத்திருமாறன் நற். ௧௦௫, ௨௨௮
முப்பேர் நாகனார் நற். ௩௧௪
முரஞ்சியூர் முடிநாகராயர் புற. ௨
முள்ளியூர்ப் பூதியார் அக. ௧௭௩
முறுவெங் கண்ணனார் நற். ௨௯௨
மூலங்கீரனார் நற். ௭௩
மையோடக் கோவனார் பரி. ௭
மோசிகண்ணத்தனார் நற். ௧௨௪
மோசிகீரனார் அக. ௩௯௨, குறு. ௫௯, ௮௪, நற். ௩௪௨, புற. ௫௦, ௧௫௪, ௧௫௫, ௧௫௬, ௧௮௬
மோசி கொற்றன் குறு. ௩௭௭
மோசிக்கரையனார் அக. ௨௬௦
மோசி சாத்தனார் புற. ௨௭௨
மோதாசனார் குறு. ௨௨௯
வடநெடுந்தத்தனார் புற. ௧௭௯
வடம வண்ணக்கன் குறு. ௮௧
வடம வண்ணக்கன் தாமோதரன் குறு. ௮௫, புற. ௧௭௨
வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் புற. ௧௨௫
வடம வண்ணக்கன் பேரி சாத்தனார் அக. ௩௮, ௨௧௪, ௨௪௨, ௨௬௮, ௩௦௫ - குறு. ௧௫௯ - நற். ௨௫, ௩௭, ௬௭, ௧௦௪, ௧௯௯, ௨௯௯, ௩௨௩, ௩௭௮, புற. ௧௯௮ (பேரிசாத்தனார் பார்க்க)
வடமோதங்கிழார் அக. ௩௧௭ - புற. ௨௬௦
வண்ணக்கன் சொருமருங்குமரனார் நற். ௨௫௭
வண்ணப்புறக்கந்தரத்தனார் அக. ௪௯, நற். ௭௧
வருமுலையாரித்தி குறு. ௧௭௬
வன்பரணர் நற். ௩௭௪, புற. ௧௪௮, ௧௪௯, ௧௫௦, ௧௫௨, ௧௫௩, ௨௫௫
வாடாப்பிரமந்தன் குறு. ௩௩௧
வாயிலான் தேவன் குறு. ௧௦௩, ௧௦௮
வாயிலிளங்கண்ணன் குறு. ௩௪௯
வான்மீகியார் புற. ௩௫௮
விட்டகுதிரையார் குறு. ௭௪
விரிச்சியூர் நன்னாகனார் புற. ௨௯௩
விரியூர்நக்கனார் புற. ௩௩௨
வில்லக விரலினார் குறு. ௩௭௦
விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார் நற். ௨௪௨
விற்றூற்று மூதெயினனார் அக. ௩௭, ௧௩௬, ௨௮௮ - குறு. ௩௭௨
விற்றூற்று வண்ணக்கன் தத்தனார் நற். ௨௯௮
வினைத்தொழில் சோகீரனார் நற். ௩௧௯
வீரைவெளியனார் புற. ௩௨௦
வீரைவெளியன் தித்தனார் அக. ௧௮௮
வெண்கண்ணனார் அக. ௧௩௦
வெண்கொற்றன் குறு. ௮௬
வெண்ணிக்குயத்தியார் புற. ௬௬
வெண்பூகன் குறு. ௮௩
வெண்பூதி குறு. ௯௭, ௧௭௪ (வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார் பார்க்க)
வெண்மணிப்பூதி குறு. ௨௯௯
வெள்ளாடியனார் அக. ௨௯
வெள்ளியந்தின்னனார் நற். ௧௦௧
வெள்ளிவீதியார் அக. ௪௫, ௩௬௨, குறு. ௨௬, ௪௪, ௫௮, ௧௩௦, ௧௪௬, ௧௪௯, ௧௬௯, ௩௮௬, நற். ௭௦, ௩௩௫, ௩௪௮
வெள்ளூர்கிழார் மகனார் வெண்பூதியார் குறு. ௨௧௯ (வெண்பூதியார் பார்க்க.)
வெள்வெருக்கிலையார் புற. ௨௩௩, ௨௩௪
வெள்ளைக்குடிநாகனார் நற். ௧௫௮, ௧௯௬ - புற. ௩௫
வெள்ளைமாளர் புற. ௨௯௬
வெறிபாடியகாமக் கண்ணியார் அக. ௨௨, ௯௮, நற். ௨௬௮, புற. ௨௭௧, ௩௦௨
வேட்டகண்ணன் குறு ௩௮௯
வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன் குறு. ௩௬௨
வேம்பற்றூர்க் குமரனார் அக. ௧௫௭ - புற. ௩௧௭

**மூலம் கிடைக்காத பாட்டெண்கள்** ஐங். ௧௨௯, ௧௩௦, நற். ௨௩௪ - பதி, ௧—௧௦, ௯௧—௧௦௦. புற. ௨௬௭, ௨௬௮ பரி. ௨௩ - ௭௦

**பாடினோர் பெயர் கிடைக்காத பாட்டெண்கள்**

அக. ௧௧௪, ௧௧௭, ௧௬௫ குறு. ௧௧௧, ௨௦௧, ௨௫௬, ௩௧௩, ௩௨௧, ௩௨௬, ௩௭௫, ௩௭௯, ௩௮௧, ௩௯௫
நற். ௮, ௧௦, ௨௨, ௨௪. ௪௫, ௪௯, ௮௪, ௯௨, ௧௦௭, ௧௦௮, ௧௧௧, ௧௧௫, ௧௨௫, ௧௨௬, ௧௩௨, ௧௩௪, ௧௬௦ - ௧௮௬, ௧௮௮, ௧௮௯, ௧௯௦, ௧௯௨, ௧௯௩, ௧௯௫, ௨௦௭, ௨௨௯, ௨௩௫, ௩௭௧, ௩௫௫, ௩௮௫, ௩௯௬
பரி. ௧, *௨௨. ௨௩, ௨௪, *௨௫ - ௨௮
புற. ௨௪௪, ௨௫௬, ௨௫௭, ௨௬௩, *௨௬௭, *௨௬௮, ௨௯௭, ௩௦௭, ௩௨௩, ௩௨௭, ௩௨௮, ௩௩௩, ௩௩௯, ௩௪௦, ௩௫௫, ௩௬௧

இவற்றுள் *என்ற குறியுள்ளன சிதைந்த பாடல்கள்.



# சத்தியும் சிவமும்

ஈ. த. இராஜேஸ்வரியம்மாள், எம். ஏ., எல். டி.

" தானலா துலகமில்லை சகமலா தடிமையில்லை
கானலா தாடலில்லை கருதுவார் தங்களுக்கு
வானலா தருளுமில்லை வார்குழல் மங்கையோடும்
ஆனலா தூர்வதில்லை யையனை யாற னார்க்கே."

" சகமலா தடிமை யில்லை
தானலாற் றுணையு மில்லை
நகமெலாந் தேயக் கையால்
நாண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் மல்க
முன்பணிந் தேத்துந் தொண்டர்
அகமலாற் கோயிலில்லை
யையனை யாற னார்க்கே "—அப்பர்.

உலகத்திலுள்ள எல்லாப்பொருள்களும் ஓதரிய துவித வடிவாய்க் காணப்படுகின்றன. " சுன்னம், " என்னும் ஒருபொருளை எடுப்போமாயின், அது, வெண்மை என்னும் குணத்தோடு கலந்திருக்கின்றது. வெண்மை என்னும் குணத்தை நீங்கலாகப் பொருள் உண்டோ எனின், பொருள் காணக் கூடாமையா யிருக்கின்றது. ஆயினும், பொருள் வேறு; குணம் வேறு என்பது திண்ணம். வெண்மை என்னும் குணம் சுன்னத்தில் மாத்திரம் இராமல் பலவகைப் பொருள்களிலும் காணப்படுகின்றது. ஆயினும்பொருளைநீக்கி அக்குணத்தைத்தனியே காணொணாது என்பது யாவரும் அறிந்ததே. இவ்வாறு பொருளும் குணமும் தனித்தனி அறியப்படினும், ஒன்றை நீக்கி மற்றொன்றை நிறுத்த யாவராலும் இயலாது.

குணமானது பல்வகைத் தத்துவங்களில் வெளியாம். வெண்மையைப் போல் காணக் கூடியவான குணங்கள் சில உள. கண்ணாற் காணக் கூடாதனவாய்ப் பரிச உணர்ச்சியால் (Touch) மட்டும் காணக் கூடியனவும் பல உள. அவற்றில் ஒன்று உஷ்ணம், அல்லது சூடு. சூடானது பனிக்கட்டியிலும் உண்டு. உலகத்தில் எல்லாப் பதார்த்தங்களிலும் அதைக் காணலாம். அது குணமாயினும் அளவையால் அளக்கக் கூடியதும், ஒரு பொருளினின்று மற்றொன்றுக்கு மாற்றக் கூடியதுமாயு மிருக்கிறது. ஆகையால் அக்குணமானது ஸ்தூலத் தன்மை பெறுவிடினும், சூக்குமத் தன்மையில் பிரத்தியட்சத்தில் இயங்குவதாம். சூடானது பொருளின் உண்மை, அல்லது இருப்புக்கு, முக்கியமாகும். ஒரு பொருளினிடத்திலுள்ள உஷ்ணம் முற்றும் எடுக்கப்படுமாயின் அப்பொருள் அழிவது திண்ணம். அழிவதென்றால் ஒருபொருள் மற்றொன்றாய் மாறுதலன்று. எவ்விதத்திலும் அபாவமாய்ச் சூனியமாய் போவது (non-existent) இதை அப்பர்,

"பிரியாத குணமுயிர்கட் கஞ்சோடஞ்சாய்ப்
பிரிவுடைய குணம்பேசிற் பத்தோடொன்றாய்
விரியாத குணமொருகா னன்கே யென்பர்
விரிவிலாக் குணநாட்டத் தாறே யென்பர்
தெரிவாய குணமஞ்சுஞ் சமிதை யஞ்சும்
பதமஞ்சுங் கதியஞ்சுஞ் செப்பி னாரும்
எரியாய தாமரைமே லியங்கினாரும்
இடைமருது மேவிய வீசனாரே"

என்னும் பாசுரத்தில் ஒருவாறு காட்டுகின்றார்.

மேல்நாட்டு இயற்கைத் தத்துவ சாஸ்திரிகள் ஒரு பொருளைப் பனிக்கட்டியின் உஷ்ணத்திற்குக் கீழ் இருநூற்றி எழுபத்து மூன்று டிக்கிரி ($-273^\circ$ c) இறக்கலாமெனின் அப்பொருள் மீண்டும் உலகத்திற் காணமற்போய்விடும் என்கிறார்கள். ஆனால் அத்தன்மை ஏதோ ஒரு வகையில் உத்தேசமாய்க் கற்பித்துக் கொண்ட தன்று. சூரிய வாயு (Helium) $-268^\circ$ இல் அதாவது மேற்சொன்ன அந்தஸ்துக்கு நாலு டிக்கிரியில் ($4^\circ$ absolute) ஜலவடிவம் பெறுகின்றது. அது பனிக்கட்டிபோல் உறைவதற்கு$-272^\circ$ c இல் ஆகும். அத்தன்மையிலே சூரிய வாயு குணம் முழுதும் மாறி குணம் யாவும் அழிந்துபோய் விடுகின்றது. அப்போது அது உயிர் இழந்த மெய்யைப்போ லிருக்கிறது. எனவே, பலவித வாயுப்பொருள்களில் ஒரு பொருளை மாத்திரம் ஏறக்குறைய அழிவுபெறும் அந்தஸ்திற்கு யந்திரக் கருவிகளால் நூதனமான இயற்கைத் தத்துவசாஸ்திரிகள் மிகவும் அற்புதமான அதிசயங்களை

சிறிது காலத்திற்கு முன்னர் காட்டியிருக்கின்றனர்.

ஆகையால் ஒரு பொருளானது உலகத்தில் வழங்க, அதற்கேற்ற உஷ்ணம் முதலிய சக்திகளைப் பெற்றிருக்க வேண்டும். மனிததேகத்தில் சக்தி குறையக் குறைய தேக அழிவு எவ்வாறு நேர்கின்றதோ அவ்வாறே நாம் உயிர்அற்ற தெனக்கொள்ளும் ஒவ்வொருபொருளிலும் சாதாரணமாயுள்ள சக்தி நீங்குமாயின் அதற்கு அழிவு நேருமென்பது திண்ணம். அம்மாதிரி அழிவு நேரல் பிரளய காலத்தில் உண்டென்று ஆன்றோர் கூறுவர். ஆனால் யந்திரம் முதலிய கருவிகளால் பூத தத்துவத்தை ஒன்றைவிட்டு ஒன்றாக மாறச் செய்வோமாயின் அப்பொருளுக்கு பிரத்தியட்சத்தில் பிரளய ஹானி நேர, ரசாயன சாலையில் காட்டக் கூடும். இதை எண்ணியே தாயுமானவர்:—

" தெரிவாக ஊர்வன நடப்பன பறப்பன
செயற்கொண் டிருப்பனமுதல்
தேகங்கள் அத்தனையும் மோகங்கொள் பௌதிக
சென்மித்த ஆங்கிறக்கும் [ஞ்
விரிவாய பூதங்கள் ஒன்றொடொன் றாயழியும்
மேற்கொண்ட சேடம் அதுவே
வெறுவெளி நிராலம்ப நிறைசூன்யம் உபசாந்த
வேத வேதாந்த ஞானம்."

என்றார். தேகங்கள் ஒவ்வொன்றும் உயிருள்ள காலங்களில் உலகத்தில் வெகு வேகமாக தமது ராஜச குணத்தைக் காட்டி, இயங்குவதின் அடிப்படை யாதென்று ஆராயின், அதன் முடிவு மோகமே என்பது திண்ணம். மோகமென்பது ஆண், பெண் ஒன்றை ஒன்று அவாவும் இச்சை மாத்திரமன்று; அதைப் போன்ற எல்லா வகை இயக்கமுமாம். எனவே உயிருள்ள பொருள்கள் யாவும், எவ்வாறு ஜென்மிக்கின்றவோ அவ்வாறே இறக்கின்றன. பஞ்ச பூதங்களை ஆராயுங்காலை வாயுவடிவுள்ளதை ஜலவடிவாக மாற்றிப் பிரிதிவு அந்தஸ்துக்கு முன் கண்டவாறு எடுத்துச் செல்வோமாயின் பிரிதிவுநிலை தாண்டி சூனியமாய் அபாவநிலை அடைய நேரும். இதை மேல்நாட்டு இயற்கைத் தத்துவ சாஸ்திரிகள் நிரூபித்து விட்டனர். அம்மாதிரியே பிரிதிவு அப்பு வடிவப் பொருள்களையும் வாயுப் பொருள்களையும் அதிக உஷ்ணப் பொருளாக மாற்றுங்காலை அதுவே ஆகாயமாய்ச் சூனியமாய் முடியும் என்பது நமது ஆன்றோர் துணிபு. இதை இன்னும் மேல்நாட்டு தத்துவ சாஸ்திரிகள் தக்க கருவிகள் இன்மையால் நிரூபிக்கவில்லை. எனவே, ஸ்தூல உலகத்தில் அழியாதிருக்குமென்று எண்ணத்தக்க கற்பாறைகளும் கனவின் காட்சிபோல் சூனியமாவதென்பது திண்ணம்.

இவ்வகைத் தோற்றங்களை நாம் உற்று நோக்கின், அனுமானிக்க வேண்டியது யாது என ஆராய்வோம். ஒவ்வொரு பொருளினும் குணாதீதமான ஒருவகைச் சத்தின் பாகம் உண்டென்றும், அச்சத்தை இடைவிடாது கவர்ந்து கொண்டு அப்போதைக்கப்போது மாறுதலடையும் குணபாகம் மற்றொன்று உண்டென்றும் தெரிய வருகின்றது. இக்குண பாகம் சத்தின்றி தனியே இருப்பதற்கு முடியாமை யுடையது. அச்சத்து பாகமோ இக்குணமின்றி நாம் அறியொணாததாய் இருக்கின்றது.

" இரண்டு கடாவுண்டு இவ்வூரி னுள்ளே;
இரண்டு கடாவுக்கும் ஒன்றே தொழும்பன் ;
இரண்டு கடாவும் இருத்திப் பிடிக்கில்
இரண்டு கடாவும் ஒருகடா வாமே!"

—திருமந்திரம் - 2889.

என்பர் திருமூலர். நாம் மேல்விட்ட கடாக்களும் இவர்காட்டும் கடாக்களும், ஆராய்ச்சியில் ஒன்றாகவே முடிகின்றது. குணத்தை விட்டு, குணி உண்டென்பதற்குப் பிரத்தியட்ச அநுபவம் இல்லை. ஆயினும் ஒவ்வொரு பொருள்களிலும் உள்ள குணங்கள் யாவையும் நீக்கிவிடின் எஞ்சி நின்ற சேடம் ஒரே தன்மையதாகிய சத்தென்றே கொள்ளல் வேண்டும். இவ்வாறு நிற்கும் தன்னந்தனிச்சத்தை முதல்வன் என்பர் மேலோர். எவ்வெவ்வகைச் சத்தி அல்லது குணம் இம்மூல சத்துடன் சம்பந்தப்பட்டிருக்கின்றதோ, அவ்வக் குணத்திற்குத்தக்கவாறு பொருள் பரிணமிக்கின்றது.

இதற்கு அத்தாட்சியாக பரமாணுக்களின் தன்மை காண்போமாக. நம்மவர் அணுக்களை மூவகையில் பிரித்தவாறு மேல்நாட்டு இயற்கைத் தத்துவ சாஸ்திரிகளும் பிரித்துள்ளார். நாம் ஸ்தூல அணு





என்று கூறுவது ஆங்கிலத்தில் மாலிகியூல் (Molecule) சொல்லும் அணுவாகும். அது ஒரு இல்லத்தில் கதிரவன் ஒளி பாயும் போது அவ்வொளியில் பறக்கும் ஒரு தூசியில் ஒரு சிறிய பாகமாம். கண்ணால் காணக் கூடாதது. பல்லாயிர மடங்கு பெருக்கிக்காட்டும் பூதக்கண்ணாடியால் காணக் கூடியதே இவ்வணு வாகும். இவ்வகைத் தூலஅணு ஒவ்வொன்றும் ரசாயன வகையில் இரண்டுக்கு மேற்பட்ட அணுக்களாய்ப் பிரிக்கக் கூடும். அவையே சூக்கும அணுக்களாம். ஒவ்வொரு சூக்கும அணுவும், வஸ்துக்கு ஏற்றவாறு பல பரமாணுக்கள் கட்டடமாய் நிற்கின்றது. அக்கட்டட ரூபம் மாற்றப் படுமாயின் பொருள் ரூபம் மாற்றப் படுமென்பர் ரசாயன சாஸ்திரிகள். ஆதலால் பரமாணு அடிப்படையிலேயே வஸ்துவின் குணங்கள் சம்பந்தமாய் நிற்கின்றது. அங்கு, குணபேதம் ஏற்பட, பொருள் பேதமும் ஏற்படும். ஆகையால் குணங்களான சக்தி பேதங்களால் பொருட் பேதங்கள் உலகத்தில் ஏற்பட்டு இருக்கின்றன. இதையே திருமூலர் திருமந்திரத்தில்,

" இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே"

என்றார். மாயாசம்பந்தமான சத்தியானவள், சத்துப் பொருளுடன் சையோகப்பட்டுப் பற்பல குணங்களால் பற்பல வகையாய் உலகத்தை வெளியிட்டுவருகின்றனள். "சத்திதான் என்றுஞ் சமைந்துரு வாகும்" என்பர் திருமூலர். நாமரூபங்களாய்க் காணப்படும் இயற்கைப் பொருள்கள் யாவும் சத்தியின் வடிவேயாம். ஆதலால், பிருங்கி ரிஷி போல், உமையவளை நீக்கி, உடையவனைத் துதித்தல் நம்போன்றவர்க் கியலாத காரியம். ஆதலால் உலக மாதாவைப் பிதாவிடமிருந்து பிரிக்காது வணங்கும் வழிபாடே நமது வாழ்நாட்களுக்கு ஒத்த வழிபாடாய் நிற்கின்றது.

பொருளும், குணமும், என்னும் இருவகைப் பேதங்களை நீக்கி குணத்தை மாத்திரம் பகுத்தறியும் ஆராய்ச்சிகளிற் புகுவோமாயின் அங்கும் ஆண், பெண் என்னும் சிவசக்தி வடிவ துவிதபாவனையை நீக்கக் கூடாமையா யிருக்கின்றது. தற்காலத்தில் நாம் பயன்படுத்தும் மின்சார சக்தியை எடுத்து ஆராய்வோமாயின், அதனுள்ளும் இருவகைச் சக்திகளைக் காண்கின்றோம். (Positive rays and negative rays). ஏன் இருவகையாய் இருப்பதென்பதற்குக் காரணம் எத்தத்துவ சாஸ்திரியும் கண்டறிந்ததில்லை. யந்திரங்களால் உண்டாக்கப்படும் மின்சார பெண் தத்துவமே ஆண் தத்துவத்தைக் காட்டிலும் அதிக வேலையும் மிக்க பயனும் தருவதாகும். நமது இல்லத்திலும் ஆண்மக்களைக் காட்டிலும் பெண் மக்களே மொத்தத்தில் அதிக வேலைசெய்கின்றார்கள் அன்றோ?

உலகமானது சத்தியின் வடிவமாயின், அதில் புல் பூண்டு முதலிய தாவரங்களையும், அதன் வழி பற்பல ஜீவன்களையும் உண்டாக்கும் மழையானது சிவ வடிவமாகும்,

" மன்னனவன் னுலகிற்கொரு
மழையானவன், பிழையில்
பொன்னனவன், முதலானவன்
பொழில்சூழ் புளமங்கை
என்னனவன், இசையானவ
னிளஞாயிறின் சோதி
அன்னனவ னுறையும்மிட
மாலந்துறை யதுவே."

எனப் புகலி வேந்தர் கூறியதுபோல் சிவபெருமான் உலகத்துக்கு வேந்தனும், மழையாயும், இளஞாயிறாயும், திகழ்கின்றான். மழையின்றி மாநிலத்தார்க்கு யாதுமில்லை என்பது நாம் அறிந்ததே. மழை பெய்து இளஞாயிறின் கிரணங்கள் தாக்கிய அக்கணமே உலகம் மரகதப் போர்வை பெற்று எங்கும் பச்சென்ற நிறமாய் விளங்கும். உலகத்தில் நமக்கு வேண்டிய பொருள்களை விதைகளிட்டு பயிர்செய்கின்றோம். மனிதன் உற்பத்தி யாகாத காலத்துக்கு முன்னரே விருட்ச வர்க்கங்களும் பல்வகைச் செடிகளும் உண்டாயிருந்தன. அவற்றிற்கு வித்து யாது? வித்து முதலா? மரம் முதலா? என்று கேட்கும் கேள்வி சாதாரணமாக தருக்க வாதிகள் கேட்பார். " வித்து முதலாயின், மரம் அல்லது செடியில்லாமல்

வித்து எப்படி வந்தது?" என்னும் வினா எழும். மரம் செடி முதல் எனின் வித்தில்லாமல் அவை எவ்வாறு விளைந்தன என்னும் வினாவும் எழும். இதற்கு மணிவாசகப் பெருமான் மூலமுதற் கருவாகிய அண்ணலைத் துதிக்கும்பொழுது,

"விச்சு தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் ; வஞ்சகப் பெரும்
புலைய னேனையும் கோயில் வாயிலில்
பிச்சன் ஆக்கினாய் ; பெரிய அன்பருக்
குரியன் ஆக்கினாய்! - தாம் வளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயினுங் கொலார் -
நானும் அங்ஙனே உடைய நாதனே !

—திருச்சதகம். 96.

என்றார். அதுபோல் வித்து சிவம், மண் சக்தி ; மழை சிவம், மண் சக்தி ; ஞாயிறு சிவம், மண் சக்தி ; ஆக சக்தி சிவத்தின் திருவிளையாட்டாய் உலக சிருஷ்டி ஏற்படுகின்றது. சக்தி பேதங்களைத் திருமந்திரம் நாலாந் தந்திரத்தில் திருமூலர் விளக்குவது காண்க. நெல்லும் மண்ணும் என்று எடுப்போமாயின் நெல் சிவமாயும், மண் சக்தியாயும் இருக்கின்றது. நெல்லை மாத்திரம் தனியே எடுத்துப் பிரித்து ஆராய்வோமாயின் உமி சிவமாயும், அரிசி சக்தியாயும் இருக்கின்றது. எவ்வஸ்துவை எடுத்து ஆராயுங் காலத்திலும் சக்தி சிவம் என்கின்ற இருபாகங்கள் ஏற்படுகின்றன. சக்தி பாகத்தை எடுத்தால் அதிலும் சிவன் சக்தி பாகங்கள் உள. சிவன் பாகத்தை எடுத்தால் அதிலும் சக்தி சிவன் பாகங்கள் உள. ஆண் பெண் என்னும் தத்துவங்களை எடுத்துப் பார்க்கில் ஆண் தேகத்திலும் வலப்பாகம் ஆண்பாகம் என்றும், இடப்பாகம் பெண் பாகம் என்றும் கொள்ளப்படும். அங்ஙனம் பெண்ணிலும் ஆண் பாகம் வலப்பாகம் என்றும், பெண் பாகம் இடப்பாகம் என்றும் சொல்லப்படும். இதனாலே வைத்திய சாஸ்திரிகள் ஆண் மக்களுக்கு வலது பாரிசத்தில் வரும் நோயும், பெண் மக்களுக்கு இடதுபாரிசத்தில் வரும் நோயும் தீர்ப்பது கடினம் என்பர். கூன் பாண்டியன் வெப்பு நோயில் பீடிக்கப்பட்ட போது சமணர் இடது பாரிசத்தைத் தீர்ப்பதாகவும், சம்பந்தர் வலதுபாரிச நோயைத் தீர்க்கவேண்டுமென்றும் சூழ்ச்சி செய்தது யாவரும் அறிந்ததே. ஆகையால் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களிடத்தும் ஆண் பெண் என்ற இரு பாகங்கள் உள என்றும், அப்பாகங்களையே மறுபடியும் பகுக்குங்காலை ஆண் பெண் என்னும் பாகங்கள் ஏற்படுமென்றும், ஆண் என்பது சிவம் என்றும், பெண் என்பது சக்தி என்றும் மேலோர் விரிப்பது காண்க. இத்தகைய தத்துவம் அணுவுக்குள் அணுவிலும், மகத்துக்குள் மகத்திலும் உண்மையா யிருக்கக் காண்கின்றோம்.

சூரிய மண்டல ஆட்சியை நாம் உற்று நோக்கின் இடையேயுள்ள சூரியன் சிவமாயும் சுற்றி ஓடும் கோளங்கள் சக்திகளாயும் திகழக் காண்கின்றோம். ஒரு சூரியமண்டல லட்சணமே வெகு சிறு அளவையில் பரமாணுவின் லட்சணமாம். ஒவ்வொரு சூக்குமஅணுவும் இடையே ஒரு சூரியனையும், அதைச்சுற்றி வெகு வேகமாய் ஓடும் கோளங்களையும் பரமாணுவான அளவையில் பெற்று இருக்கின்றது. சூரியனைச் சுற்றி ஓடும் கோளங்களில் யாதேனும் ஒன்று தன் நிலைதப்பி வேறு நிலை அல்லது அந்தஸ்துக்கு வருமாயின், எவ்வளவு பிரமாதமான காரியங்கள் சம்பவிக்குமோ, அம்மாதிரியே ஒரு சூக்கும அணுக் சட்டடமாய் நிற்கும் பரமாணு கோள மண்டலங்களில் ஒரு அணுவானது தனது துறை தப்பி, வேறு மண்டலத்திற்குச் செல்லுமாயின், நாம் உலகத்திற் காணாத அபூர்வ சக்தி உண்டாகின்றது. இதையே (X-Rays) எக்ஸ்ரேஸ் என்றும், ஒளிகளென்றும், காளவிஷ சக்தி ஒளிகளென்றும், சஞ்சீவி ஒளிகளென்றும் பெயரிட்டு பெருத்த ஸ்தூல வஸ்துக்களாலும் யந்திரங்களாலும் ஆக்கக்கூடாத அரிய பெரிய காரியங்களைத் தற்காலங்களில் இயற்கைத் தத்துவசாஸ்திரிகள் பயன்படுத்துவதுடன், வைத்தியரும் ரணசிகிச்சை, மருத்துவம் முதலிய கலைகளிலும் பயன்படுத்துவதைக் காண்கிறோம் அன்றோ? இவ்வாறு காணப்படும் சக்தி சிவத்தில், எது பெரியது, எது சிறியது, எது வலியது,





எது எளியது என்று சொல்ல இடமில்லை. இதையே,

"உன்னிலையும் என்னிலையும் ஒருநிலையெனக்கி
துளறிடும் அவத்தையாகி [டந்
உருவுதான் காட்டாத ஆணவமும் ஒளிகண்
டொளிக்கின்ற இருளென்னவே
தன்னிலைமை காட்டா தொருங்கஇரு வினையி
தாவுசுக துக்கவேலை [னல்
தட்டழிய முற்றுமில் லாமாயை யதனால்
தடித்தகில பேதமான
முன்னிலை யொழிந்திட அகண்டிதா காரமாய்
மூதறிவு மேலுதிப்ப
முன்பினொடு கீழ்மேல் நடுப்பக்கம் என்னாமல்
முற்றுமா னந்த நிறைவே
என்னிலைமை யாய்நிற்க இயல்புகூ ரருள்வடிவம்
எந்நாளும் வாழி! வாழி!
இகபர மிரண்டிலும் உயிரினுக் குயிராகி
யெங்கு நிறைகின்ற பொருளே!"

—தாயுமானவர்.

என்றார். இமையளவு பொழுதை ஒரு கற்பகாலமாக்கும் இவ்வுலகத்திலே, சிறியது தன் சக்தியால் மிகவும் பெரிதாயும், மிகப்பெரிது சிறிதினும் பயனற்றதாயும், போவதைக் காண்கிறோம். ஒரு சிறு தூசானது நமது கண்ணில் விழுமாயின் அது நமது கண்ணை என்னபாடு படுத்துகின்றது? சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தூமகேதுவானது (Halley's Comet), மூன்றுநாள் இவ்வுலகத்தை மூடியிருந்ததாம். அத்தகைய நெருப்புலகம் நம்மைக் கவர்ந்தும் அது யாதும் துன்பம் செய்யவில்லை. ஆதலால் சிவசத்தி சொரூபமானது அந்தந்த அளவுக்குத் தக்கவாறு இயங்கும்போது அவற்றின் சொரூபம் விளங்குமன்றி ஜீவர்கள் அநுபவ எல்லைக்கு இருவகையிலும் அதீதமான அளவைகளில் உணரப்படா. ஆகையால் சிவசத்தி சொரூபம் ஆங்காங்குள்ள ஜீவனுக்குத் தக்கவாறும் அவற்றின் புலன்களுக்குத் தக்கவாறும் பேதமாய் நிற்கும். திருப்பனந்தாள் சிவலிங்கம், தாடகை என்னும் சிறுமிக்கு இரங்கித் தலைசாய்த்துக் கொடுத்த வண்ணமும் ; குங்கிலியக் கலைய நாயனார் தமது கழுத்தில் கயிறுகட்டி இழுத்தபோது நிமிர்ந்தவாறும், ஏனையோர்க்கு நேரக்கூடியனவோ? ஆதலால் அச்சிவலிங்கத்திற்குத் தக்க சத்திகள், வளைக்கவும், நிமிர்த்தவும், முறையே தாடகைச் சிறுமியும் குங்குலியக் கலய நாயனாருமாம்!!

"அறிய வொண் ணாதவ் வுடம்பின் பயனை
அறியவொண் ணாத அறுவகை யாக்கி
அறியவொண் ணாத அறுவகைக் கோசத்
தறியவொண் ணாததோர் அண்டம் பதிந்ததே"

—திருமூலர் - திருமந்திரம் - 1572.

" சத்திதா னாத மாதி தானாகுஞ் சிவமு மந்தச்
சத்திதா னாதி யாகுந் தரும்வடி வான வெல்லாஞ்
சத்தியுஞ் சிவமு மாகுஞ் சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாஞ் சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சத்தி தானே "

" சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்று
முவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிரம சாரி யாகும் பான்மொழி கன்னியாகுந்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் றெரியு மன்றே "

—சிவஞானசித்தியார்.

# பழந் தமிழ்நூற் சிவப்பண்பு

திருவள்ளுவரகம் - ப. இராமநாத பிள்ளை

"உற்ற ஆக்கையி னுறுபொருள்
நறுமல ரெழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையிலாப்
பரம்பொரு ளப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயனது
நுகர்ந்திடும் பித்தர்சொற் றெளியாமே
அத்த னுண்டுதன் னடியரிற்
கூட்டிய அதிசயங் கண்டாமே"

—ஆளுடைய அடிகள்.

தொன்மைத் தமிழ்நூற்கண்
தோன்றும் சிவமுதலின்
தன்மையெலா நாயினேன்
சாற்றியிடப்—புன்மையெலாம்
போக்கும் மலையாண்டிப்
பிள்ளையார் பொற்கழல்கள்
ஆக்கும் வலியென் றறி.

தொண்ட ருயர்மக்கள்
தோழர் தலைவியெனக்
கண்ட திருநெறிநாட்
காட்சியினைப்—பண்டருள்செய்
ஆளுடைய மன்னர்
அருட்பிள்ளை நம்பிநல்
ஆளடிகள் தாடலையே லாம்.

சீரார் திருமந் திரநகர்வாழ் செல்வரெலாம்
ஏரார்கண் ணுக இயற்றிவரும்—பேராரும்
சைவசித் தாந்தசபை சாரைம்பான் யாண்டுநிறை
வுய்வுமலர்க் கோரிதழாம் ஒப்பு.

## க. பண்டை நூற்கண் காணப்பெறுங் கடவுட் பெயர்

செந்தமிழ்க் கடவுளும், சிறப்பு, செம்பொருள், இயவுள், இறை, பெரியோன், கடவுள், முதல்வன், முன்னவன், முனைவன், முனிவன், பகவன், அண்ணல், அறிவன், அறவோன், தலைவன், ஐயன், மெய்ப்பொருள் முதலியனவாகத் தனித்தும்; நுதல்விழி நாட்டத்திறையோன், பிறவா யாக்கைப் பெரியோன், பிறை சூடும் பெம்மான், தெண்ணீர் கரந்த செம்மல், பெண்ணொரு கூற்றுப் பண்ணவன், ஏற்றுவலனுயரிய எந்தல், மூவெயில் செற்ற மொய்ம்பினன், நஞ்சுண்டுகறுத்த கண்டன், சூலம்பிடித்த சுடர்க் கடவுள், கார்விரிகொன்றைத் தாரன் முதலிய அடைபெற்றும் தொன்றுதொட்டு வழங்கி வருவதுமாயுள்ள முழுமுதற் பொருள் சிவம் ஒன்றே.

அக்குறிப்பைப் பல்லாயிரயாண்டுகளுக்கு முற்றோன்றியதும், தனித் தமிழ் இயல் நூலாயுள்ளதும், ஈடும் எடுப்புமில் பீடுடையதுமாகிய தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி முதலிய பழந் தமிழ் நூற்கண் குறிப்பாகவும், வெளிப்படையாகவும், ஒப்பாகவும், உய்த்துணர்வைப்பாகவும் தோன்றச் செய்துள்ளார்கள்.

அவற்றுட் சிலவற்றை என் சிற்றறிவிற் கெட்டியவரை இக்கட்டுரையிற் செப்புவல். முற்றறிவுடையோர் குற்ற நீக்கிக் குணஞ் செய்யவேண்டுவது அவர் தம் கற்றறிவின் பாலதாம்.

## உ. நிலம்

பண்டைத் தமிழ்மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத, உறையுள், உணவு, ஒழுக்கம், இம்மூன்றையும் பெரும்பாலும் முதல், கரு, உரி, என்ற மூன்று பாகுபாட்டில் அடக்கி மேற்கொண்டனர்.

முதல் :—நிலம், பொழுது என இரு வகைப்படும்.

நிலம்:—முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், என நான்கு வகைப்படும்.

ஒவ்வொரு நிலத்தும், காடு, நாடு, ஊர் எனவும், படைத்தல், காத்தல், பயன்பெறுதல் எனவும், களவு, கற்பு, கழிபேரின்பம் எனவும் கூறப்பெறுகின்ற முக்கூற்றுமுறை மூன்று உள்ளன.

பொழுது பெரும் பொழுதாறு சிறுபொழுது ஆறு எனப் பிரிக்கப்படும்.

"கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக் கற்றோர்கள் உற்றோரும் காதலானை"



## ௩. ஒழுக்கம்

கரு :—தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ் என எட்டு வகைப்படும்.

உரி :—புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐவகைப்படும். இவ்வைந்தும் முறையே, படைத்தல், துடைத்தல், காத்தல், மறைத்தல், அருளல் என்னும் இறைவன் ஐந்தொழிலையும் குறிப்பாலுணர்த்தும்.

## ச. தெய்வம்

கருப்பொருள் எட்டனுள்ளுந் தலையாயது தெய்வமே யாம். அதனாலேதான் தெய்வத்தை முதற்கண் வைத்து எண்ணினார்கள் போலும். "தெய்வ நாட்டமில்லாத் தீயோர்க் குய்வகை யின்று" என்பது பழமொழி. நந்தமிழ் முன்னோர் தெய்வத்தினிடங் கொண்டுள்ள அன்பும், அச்சமும், அவற்றான் விளையும் இன்பும், எழிலும், இத்துணைய என்பது விளங்கும்.

அத்தெய்வம் நிலத்தெய்வம், நலத்தெய்வம் என இருவகைப்படும். நிலத்தெய்வமாவது, நானிலத்து வாழும் மக்களால் அவ்வந்நிலத்துக்குரியவாய் வழிபடப்பெறுங் குல தெய்வமாகும். அவை, மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்ப.

நலத்தெய்வமாவது:—எங்கும் நிறைந்த தாய்ப் பேராற்றலுடையதாய்த் தன் ஆற்றலை அவ்வந்நிலத் தெய்வவழிச் செலுத்திப் பயன் அருள்வதாய் உள்ள பெரும்பொருள். அப்பொருளே செம்பொருள். அதுவே சிறந்தது. அதுவே சிவம். அதுவே பிறப்பில் பெருந்தெய்வம்.

மக்கள் கொள்கைக்குத் தக்கவாறு தெய்வம் நான்கு வகையாகும். அவை,

"சிறப்பே பிறப்பு வருகை பிறவாமையென்
றுறப்பெறுந் தெய்வ மோர்நான் கென்ப"

சிறப்புத் தெய்வமாவது: மக்களுள் வீரம், மெய்யுணர்வு முதலியவற்றான் மேம்பட்டு, ஒளியுடையராய் விளங்குவது. மக்கள் அத்தெய்வத்துக்கு நடுகல் நட்டுச் சிறப்புச் செய்வர்.

பிறப்புத் தெய்வமாவது:-அருங்கதிரோர் பன்னிருவர், அரனுருவர் பன்னொருவர் வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர் என்கிற நால்வேறியற்கைப் பதினொரு மூவரும் என்க. (முப்பத்து முக்கோடி தேவர்.)

வருகைத் தெய்வமாவது :—முழுமுதற் றெய்வத்தின் விழுமியவாற்றல் உயிர்கள் உய்வதற்காகக் கீழிறங்கி வரும். அவ்வருகையை அவதாரம் என்ப. அவ்வவதாரத் தெய்வ மென்க.

இத்தெய்வம், அருளைச் சார்ந்து வருதல், விண்ணுலகைச் சார்ந்து வருதல் மண்ணுலகைச் சார்ந்து வருதல் எனச் சார்பினால் மூன்று வகையாகும்.

அருளைச் சார்ந்து வருதல், பிள்ளையார், செவ்வேள் முதலிய சிவபெருமானின் மக்களாகும்.

விண்ணுலகைச் சார்ந்து வருதல், படைப்போன், காப்போன், துடைப்போன், வானவர்கோன் முதலிய விண்ணவராகும்.

மண்ணுலகைச் சார்ந்து வருதல், காப்போனாகிய திருமால் முதலாயினாரின் கூறாய் மண்ணிடைப் பிறந்து மக்கட்குண்டாம் ஊறகற்றி உறுதிகாட்டு மொளியுடையவராகும்.

பிறவாத் தெய்வமாவது:—வாய்மையால் மெய்யால் மனத்தால் அறிய முடியாததாய்ச் சார்பினால் தோன்றாது தான் அருவாய் எப்பொருட்கும் சார்பென நின்று என்ஞான்றும் இன்பவுருவாய் விளங்கு முழுமுதலாகும். இவ்வுண்மைகளைக் கீழ்வரும் செய்யுட்களும் உணர்த்து மென்க.

முக்கூற்று நானிலத்தைந் திணைமுதலும்
கருவுரியும் மூவா மேன்மைத்
தக்கதொடி நிலையிறையும் தாவில்புகழ்
தருமமரர் தன்கட் சாரும்
மிக்கவறு முறைவாழ்த்து மிகுவளனும்
பெறுமாறு மேவிப் பின்னும்
எக்கணமும் வாழ்த்தின்பு மிங்குணரின்
திருநெறியின் இயல்பா மாதோ.

சாற்றுஞ் சிவபெருமான் தன்னிற் பிரிப்பிலா
ஆற்றல் பலபெயராம் அன்னதுவே—தோற்று
நிலத்தெய்வ மாகும் நிறுத்தமுன் பின்னை
நலத்தாற் கிவையின்று நாடு.

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குறைத்துந் தானடங்காப் பேதையிற் பேதையாரில்"

நாடுமிவ் வாற்றல் நணுகியருள் தன்மையினால்
கூடுவதோர் மூவகையாக் கூறுவரால்—நீடருளின்
சேர்வருதல் செவ்வேள் நிலைவிண்ணு மான்முத
பேர்மண் அரிபிறப்பாம் பேசு. [லோர்

இந்நாற்பாற் றெய்வத்துள் இங்கு மேற்கொண்டு ஆய்ந்துரைக்கப் பெறுவது பிறவா யாக்கைப் பெருந்தெய்வமாகிய சிவபெருமானாகும். சிவத்துடன் தொடர்புடைமையால் திருநெறியைச் சைவ மார்க்கமென்ப.

## ரு. திருநெறியின் சிறந்த கோள்கை

இறை, உயிர், தளை, என்னும் முப்பொருளும் என்றுமுள்ள பொன்றாப் பெரும்பொருள் என்பதாகும். இம்மூன்றனுள்,

இறையாகிய கடவுள் ஒருவனே ; அவன் கட்டில்லாதவன், பிறப்பில்லாதவன். உயிர்கள் பல ; அவை கட்டுடையன, பிறப்புடையன. பிறப்பு வினைக்கீடாய் வருவது.

தளை மூவகைப்படும் ; அவை, இருள், வினை, பொருள் (மாயை) என்பன.

இருள், செம்பிற் களிம்புபோல் உயிரோடொட்டிய கறை.

வினை :—பொருளின் புடைபெயர்ச்சித் தன்மை.

பொருள் :—உயிர்களுக்கு வேண்டிய உடலாய், உறுப்பாய், உறையுளாய் உண்பொருளாய் விளங்கித்தோன்றுவது. இப்பொருள் நல்வினை தீவினை என்கிற வினையுடன் கூடி உயிர்களின் கறை யொழிப்பதற்குத் துணையாவது. இவ்வுண்மை,

ஒன்றே கடவுள் உயிர்கள் பலபிறப்பாம் [மலச்
நின்றசிவன் கட்டிலான் நேருமுயிர்க்—கொன்று
சார்பகற்ற மாயைவினைச் சார்புண்டாம் ஆசானால்
சார்பகலும் பேரின்பாம் சாற்று.

என்பதனால் விளங்கும்.

## சு. முப்பொருளுண்மை

தமிழ் மக்கள், வாழ்க்கைக்கு இன்றியமையாததாய்ப் பொருளாராய்ச்சிக்குத் துணையாஞ் சொல்லுக்கு முதலாய் விளங்கும் எழுத்துக்களுக்குப் பெயரிடுங்கால், முப்பொருட்கொள்கைக்கு முரணாகாமல் அரண் செய்வதாயுள்ள உயிர், மெய், சார்பு, எனக் குறியிட்டுள்ளார்கள். இக்குறியீட்டை உணருங்கால், உயிர் பன்னிரண்டனுள் அகரமாகிய தனி யுயிர் கடவுளாகவும், ஏனைய கடவுளடி சார்ந்த நானெறி மூவகை உயிராகவும், மெய் அறிவில் பொருளாகவும், சார்புயி ரிரண்டும் இம்மைக்கண் விளங்கும் நல்லார், பொல்லார் என்னும் இருவகை உயிராகவும், ஆய்தம் மெய்யின் நுட்பமாகிய நுண் உடலாகவும் கொள்வது பொருத்தமுடைத்தென்பது விளங்கும்.

இதனால் நீண்ட காலத்துக்கு முன்னரே பழந்தமிழ் மக்களால் இவ்வுண்மைகள், உணரப்பட்டு உலக வழக்கிலும், நூல் வழக்கிலும் ஆளப்பட்டு வந்தன என்பது விளங்கும்.

இதனை ஆசிரியர் நச்சினார்க்கினியர், நூன் மரபிலும் மொழி மரபிலும் தடை விடைகளாலும் விளக்கியுள்ளார். அது,

தொல்காப்பியம் : நூன்மரபு :—அ.

"ஔகார விறுவாய்ப்
பன்னீ ரெழுத்து முயிரென மொழிப"

என்னும் சூத்திரவுரையுள்,

"இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கியதோர் குறி. மெய்பதினெட்டினையும் இயக்கித் தான் அருவாய் வடிவின்றி நிற்றலின் உயிராயிற்று. இவை மெய்க்கு உயிராய் நின்று மெய்களை இயக்குமேல் உயிரென வேறோர் எழுத்தின்றாம் பிறவெனின், மெய்யினிற்கும் உயிருந் தனியே நிற்கும் உயிரும் வேறென உணர்க. என்னை? அகர முதல் (குறள்-க.) என்புழி அகரந் தனி உயிருமாய்க் ககரவொற்றுமுதலியவற்றிற்கு உயிருமாய் வேறு நிற்றலின். அவ்வகரந் தனியே நிற்றலானும் பல மெய்க்கண் நின்று அவ்வம்மெய்கட் கிசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்டதாகலின் ஒன்றேயாயும் பலவேயாயும் நிற்பதோர் தன்மையுடைத்தென்று கோடும் ; இறைவன் ஒன்றேயாய் நிற்குந் தன்மையும், பல்லுயிர்க்குந் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்குந் தன்மையும்போல. அது, அ என்ற வழியும், ஊர என விளியேற்ற வழியும் 'அகரமுதல' என்ற வழியும் மூவினங்களில் ஏறின வழியும் ஓசை வேறுபட்டவாற்றான் உணர்க. இங்ஙனம் இசைத்துழியும் மாத்திரை ஒன்றேயாம். இஃது ஏனையுயிர்கட்கும் ஒக்கும்" என்பதனானும்,

" ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென் ஆலவாயில் உறையும்எம் ஆதியே "



தொல்காப்பியம் : மொழிமரபு:—கரு.

"மெய்யி னியக்க மகரமொடு சிவணும்"

இதன் கருத்து, தனிமெய்யைச் சொல்லுமிடத்தும் எழுதுமிடத்தும் அகரவுயிரோடு சேர்த்தே வழங்குவர் என்பதாம்.

"இங்ஙனம் மெய்க்கண் அகரங் கலந்து நிற்குமாறு கூறினாற்போலப் பதினோருயிர்க்கண்ணும் அகரங் கலந்து நிற்குமென்பது ஆசிரியர் கூறாராயினார். அந்நிலைமை தமக்கே புலப்படுதலானும் பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதல் அரிதாகலானுமென்றுணர்க. இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்பமுடிந்தது. 'அகரமுதல' என்னுங் குறளான் அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம்; அதுபோல இறைவனையாகிய முதலையுடைத்து உலகமென வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும், கண்ணன் எழுத்துக்களில் 'அகரமாகின்றேன்' யானே எனக் கூறியவாற்றானும் பிறநூல்களானுமுணர்க" என்பதனாலும் விளங்கும்.

ஐந்தெழில் ஆண்டான் அகரமாம் ஏனையவை
செம்பொருள்சேர் நானெறிமுச் சீருயிராம்--இம்
கட்டி லுயிரிகரம் கட்டா முயிருகரம் [பரச்சார்
ஒட்டுநுண்மெய் ஆய்தமென வோர்.

## எ. சிவம் எனுஞ் சொற்குறிப்பு

மிகப் பழந்தமிழ் நூற்கண் சிவம் என்னுஞ் சொல் நேரே காணப்படாவிட்டாலும் அச்சொற் பொருளினைக் குறிப்பனவாகிய செம்பொருள், சிறப்பு, மெய்ப்பொருள், சார்பு முதலிய சொற்கள் யாண்டும் பரக்கக் காணலாம். அவை

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்
செம்பொருள் காண்ப தறிவு. [னும்

எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்
சார்தரா சார்தரு நோய்" [துச்

என்னுந் திருக்குறள்களான் விளங்கும்.

## அ. ஐந்தொழிற்றலைமை

எட்டுத்தொகையுள் ஐந்தாவதாக எண்ணப்பெறும் பரிபாடல் திருநெறித் தமிழ் போன்று தெய்வ வழுத்துதலுமாய்ப் பண்முறையோடு கூடியது. அஃதொழிந்த தொகை ஏழனுள், நற்றிணைக்கண் மாயோனுக்கும், குறுந்தொகைக்கண் சேயோனுக்கும், ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறும் ஆகிய நான்கு தொகைக்கண்ணும் சிவபெருமானுக்கும் கடவுள் வாழ்த்து காணப்பெறுகிறது. பதிற்றுப்பத்து நூலில் கடவுள் வாழ்த்துக் காணப்பெறவில்லை. ஆனால் தொல்காப்பியம் புறத்திணை இயல் உசு, அக-ம் நூற்பாவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியரால் காட்டப்பெற்ற "எரி யெள்ளுவன நிறத்தன்" என்னுங் கடவுள் வாழ்த்துச் செய்யுள் இப்பதிற்றுப் பத்துக்குள்ளதென்று ஆன்றோர் பலர்க்குந் தோன்றிய கருத்தாகும். அங்ஙனமாயின், சிவபெருமானுக்கு ஐந்து வாழ்த்துக் காணப்பெறும் ; இவ்வமைவின் குறிப்பு, ஐந்தொழிற்கும் உரியான் சிவபெருமான் என்பதும் அவன் ஆணையால் ஏனையர் ஒவ்வோர் தொழிற்றலைமை பூண்டு செய்வர் என்பதும் விளங்கும்.

நற்றிணைக்கண் மாயோற்கு
நல்ல குறுந்தொகைக்கண்
பற்றொழிவே லோற்கும்
பரிபாட்டில்—சொற்றிவர்க்கும்
ஐந்தொழிற்கும் வல்ல
அரற்கைந் தொகைக்கண்ணும்
முந்தையோர் வாழ்த்
துரைத்தார் முன்.

அவ் வைந்து வாழ்த்து முறையே வருமாறு :—

ஐங்குறுநூற்றின் வாழ்த்து : பாரதம் பாடிய பெருந்தேவனார் செய்தது.

"நீல மேனி வாலிழை பாகத்
தொருவ னிருதா ணிழற்கீழ்
மூவகை யுலகு முகிழ்த்தன முறையே" க

பதிற்றுப்பத்து :

"எரியெள் ளுவன நிறத்தன் விரியிணர்க்
கொன்றையம் பைந்தா ரகலத்தன் பொன்னு
ரெயிலெரி யூட்டிய வில்லன் பயிலிருட்
காடமர்ந் தாடிய வாட னீடிப்

" வெண்காட்டு முக்குளநீர் தோய் வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே "

புறம்புதை தாழ்ந்த சடையன் குறங்கறைந்து
வெண்மணி யார்க்கும் விழவின னுண்ணூற்
சிரந்தை யிரட்டும் விரல னிரண்டுருவா
யீரணி பெற்ற வெழிற்றகைய னேரு
மிளம்பிறை சேர்ந்த நுதலன் களங்கனி
மாறேற்கும் பண்பின் மறுமிடற்றன் றேறிச்
சூலம் பிடித்த சுடர்ப்படைக்
காலக் கடவுட் குயர்கமா வலனே" ௨

**கலித்தொகை :** கடவுள் வாழ்த்து, நல்வந்துவனார் பாடியது.

ஆறறி யந்தணர்க்
கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து
திரிபுரந் தீமடுத்துக்
கூறாமற் குறித்ததன்மேற்
செல்லுங் கடுங்கூளி
மாறுப்போர் மணிமிடற்
றெண்கையாய் கேளினி ;
படுபறை பலவியம்பப்
பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்காற்
கோடுய ரகலல்குற்
கொடிபுரை நுசுப்பினாள்
கொண்டசீர் தருவாளோ ;
மண்டமர் பலகடந்து
மதுகையா னீறணிந்து
பண்டரங்க மாடுங்காற்
பணையெழி லணைமென்றோள்
வண்டாற்றுங் கூந்தலாள்
வளர்தூக்குத் தருவாளோ ;
கொலையுழுவைத் தோலசைஇக்
கொன்றைத்தார் சுவல்புரளத்
தலையங்கை கொண்டுநீ
காபால மாடுங்கால்
முலையணிந்த முறுவலாண்
முற்பாணி தருவாளோ ;
எனவாங்கு,
பாணியுந் தூக்குஞ்
சீரு மென்றிவை
மாணிழை யரிவை காப்ப
வாணமில் பொருளெமக்
கமர்ந்தனை யாடி." ௩

**அகநானூறு :**—கடவுள் வாழ்த்து, பாரதம் பாடிய பெருந்தேவனார் செய்தது.

கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்
மார்பி னஃதே மையி லுண்ணூ
லுதல திமையா நாட்ட மிகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலு முண்டத் தோலா தோற்கே
யூர்ந்த தேறே சேர்ந்தோ ளுமையே
செவ்வா னன்ன மேனி யவ்வா
னிலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயி
றெரியகைந் தன்ன வவிர்ந்து விளங்குபுரிசடை [ற்
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி [டை
மூவா வமரரு முனிவரும் பிறரும்
யாவரு மறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமா னுரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
றாவி றாணிழற் றவிர்ந் தன்றா லுலகே."

**புறநானூறு :**—கடவுள் வாழ்த்து. ௧

கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை
யூர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப
கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்
பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே
யெல்லா வுயிர்க்கு மேம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே.

## ௯. அரனுருவம்.

கோவலனுக்குக் காதற் கணிகை மாதவியினிடந் தோன்றிய மணிமேகலை, சமயங்கள் பலவற்றையும் அவ்வச் சமயத் தலைவர்பாற் கேட்டனள். அது, மணிமேகலையில் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனரால் "சமயக் கணக்கர் தந்திறங் கேட்ட காதையில் விளக்கப் பெற்றிருக்கின்றது. ஆங்கு, முதற்கண் மறையொடு பட்ட அளவை வாதிகள், பத்தும் எட்டும், ஆறும் ஆகிய அளவைகளைப் பகர்ந்தனர். அடுத்துத் தலையாக ஆய்ந்தது சிவநெறியே என்க.

"..........................................
இவையே யிப்போ தியன்றுள வளவைக
ளென்றவன் றன்னைவிட் டிறைவ னீசனென
நின்ற சைவ வாதிநேர் படுதலும்
பரசுநின் தெய்வ மெப்படித் தென்ன
விருசுட ரோடிய மானனைம் பூதமென்
றெட்டு வகையு முயிரும் யாக்கையுமாய்க்
கட்டிநிற் போனுங் கலையுருவி னோனும்
படைத்து விளையாடும் பண்பி னோனுந்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனுந்
தன்னில் வேறு தானொன் றிலோனு
மன்னோ னிறைவ னாகுமென் றுரைத்தனன்"





இதில், இறைவன் எட்டிடங்களிலும், உயிரும், உடலும் போன்று கலப்பால் ஒன்றாய்ப் பொருட்டன்மையால் கண்ணுங் கதிரவனும் போன்று வேறாய் படைப்பு முறையில் நிற்பன் என்பதும் துடைத்துத் துயர்தீர்க்கு முறையில் இவற்றுடன் உயிர்க்கு உயிராதற் றன்மையால் கண்ணொளியும் கதிரொளியும் அறிவொளியும் போன்று உடனுமாய் நிற்பன் என்பதுங் காணப் பெறும்.

இவையே புணர்ப்பு நிலை என்கின்ற அத்துவிதமாகும். மேலும் இறைவன்றன் அறிவுருவும் படைத்தல் துடைத்தலாகிய தொழிலும் ஒப்பின்மையும், நிறைவும் ஆகிய பெருந்தன்மைகளும் காணப்பெறுகின்றன. ஐம்பெருந் தொழில்களுள்ளும் படைத்தல் துடைத்தலாகிய முதலும் ஈறுங் கூறவே ஏனை காத்தல், மறைத்தல், அருளல் என்னு மூன்றும் அதன்கண் அடங்குமென்பது சொல்லாமலே யமையும். படைத்தலும் துடைத்தலும் ஒருங்கு நிகழ்த்தும் ஆற்றலுள்ளான் எவனோ அவனே பரம்பொருளுமாவன்.

இக்கருத்துப்பற்றியே செம் பொருட்டுணிவின் சீரிய ஆசிரியர் மெய்கண்ட நாயனார், தானருளிய தனித்தமிழ்ச் சிவஞான போத முழுமுதல் நூற்கண்,

"அவனவ ளதுவெனு மவைமூ வினைமையின்
தோற்றிய திதியே யொடுங்கி மலத்துள தாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்"

என முதலிற் கூறியருளினர். இதன் கருத்து,

உயர்திணை, அஃறிணை என்று சொல்லப் பெறுகிற உயிர்ப் பொருள்களும் உயிரில் பொருள்களும், தோன்றி, நின்று, அழிவன ஆதலால், அவைகள் ஒரு முழுமுதலால் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருள்களே. ஒரு காலத்து அவைகளை அம்முழுமுதல் ஒடுக்குவிப்பன். மீட்டுமலநீக்கத்தின் பொருட்டுத் தோற்றுவிப்பன். அங்ஙனம் ஒடுக்கத்தைச் செய்கின்ற கடவுளே தோற்றத்தைச் செய்வதற்கும் உரியன் என்பதாகும்.

இக்கருத்துப் பண்டுள்ள சான்றோர்களாலும் இங்ஙனமே கொள்ளப்பட்டுள்ளது.

அது, கலித்தொகை நூற்கண், முதலாவது பாலைக்கலி முதற் செய்யுளில் படைப்பின் குறிப்பும், ஐந்தாவது நெய்தற்கலி இறுதிச் செய்யுளில் துடைப்பின் குறிப்பும் ஆசிரியர் நவ்வந்துவனரால் பாடப் பெற்றமையாலும் விளங்கும்.

**பாலைக்கலி : க.**

"தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந் திரத்தலின்
மடங்கல்போற் சினைஇ மாயஞ்செ யவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலு
முடன்றக்கான் முகம்போல வொண்கதிர் தெறுதர
சிறருங் கணிச்சியோன் சினவலி னவ்வெயி [லிற்
லேறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந் தியங்குந
ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை
மறப்பருங் காத லிவளீண் டொழிய
விறப்பத் துணிந்தனிர் கேண்மற் றைஇய"

இதன்கண், படைப்போன் முதலாகிய விண்ணவர்கள், தன் பகைவர்களாகிய அவுணர்களால் படுந் துன்பம் பொறுக்க முடியாது சிவபெருமானிடஞ் சென்று முறையிட்டனர். சிவபெருமான் இரங்கி மூவெயிலும் செற்று முறை செய்தருளினர். அங்ஙனந் திரிபுரம் செற்ற காலத்துச் சிவபெருமான் திருமுகம் தெறுமாறுபோலக் கதிரவன் சுடுதலும், அதனுல் மலைகள் பொடிபட்டு வழியெல்லாம் விழுந்து போவார்க்குத் துன்பத்தைத் தருவது பாலை நிலம் என்பது குறிக்கப்பட்டுள்ளது. இப்பாலை குறிஞ்சி திரிந்தபாலை

**நெய்தற்கலி : ௧௫௦.**

" அலர்ந்திகழ் நறுங்கொன்றை
யலங்கலந் தெரியலா
னிலங்கெயி லெய்ப்பிறந்த
வெரிபோல வெவ்வாயுங்
கனைகதிர் தெறுதலிற்
கடுத்தெழுந்த காமத்தீ
மலைபரந்து தலைக்கொண்டு
முழங்கிய முழங்கழன்
மயங்கதர் மறுகலின்
மலைதலைக் கொண்டென
விசும்புற நிவந்தழலும்
விலங்கரு வெஞ்சுரம் ;
இறந்துதா மெண்ணிய
வெய்துதல் வேட்கையா
னறந்துறந் தாயிழா
யாக்கத்திற் பிரிந்தவர்

பிறங்குநீர் சடைக்கரந்தா
 னணியன்ன நின்னிறம்
பசந்துநீ யினையையாய்
 நீக்கலும் நீப்பவோ ;
கரிகாய்ந்த கவலைத்தாய்க்
 கல்காய்ந்த காட்டகம்
வெருவந்த வாறென்னார்
 விழுப்பொருட் ககன்றவர்
உருவவேற் றார்தியா
 ளெண்ணக்க வளையனநின்
னுருவிழந் தினையையா
 யுள்ளலு முள்ளுபவோ ;
கொதித்தூராய்க் குன்றிவர்ந்து
 கொடிக்கொண்ட கோடையா
லொதுக்கரிய நெறியென்னு
 ரொண்பொருட் ககன்றவர்
புதுத்திங்கட் கண்ணியான்
 பொற்பூண் ஞான்றன்னநின்
கதுப்புலருங் கவினையாய்க்
 காண்டலுங் காண்பவோ ;
  ஆங்கு
அரும்பெற லாதிரையா
 னணிபெற மலர்ந்த
பெருந்தண் சண்பகம்
 போல வொருங்கவர்
பொய்யா ராகுத றெளிந்தன
மையீ ரோதி மடமொழி யோயே''

ஈண்டும், முக்கணான் மூவெயிலும் செற்ற காலத்துத் தோன்றுந் தீயே உவமிக்கப் பெற்றுள்ளது.

தலைவியது நிறமும், உருவும், உடலுங் கெட, நீர்க்கரந்தான், ஏற்றூர்தியான், திங்கள் சூடியானாகிய சிவபெருமானை ஒத்த பொருளை வேட்கையால் நினைத்தலும், காண்டலும் தலைவர் செய்யாரென்று இச்செய்யுளின்கண் தோழி வற்புறுத்துகின்றாள். இறைவனையொத்த பொருள் என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் "பொருள் நின்றுழி நில்லாது பலரிடத்தும் சென்றதேனும் ஒன்றானும் தனக்குக் கேடின்றியிருத்தல்" என உரை கூறியுள்ளார். இதனால் கேடுடையது மும்மலம் என்பதும், அம்மலங்களுடன் சார்ந்த வுயிர் கேடின்றி என்றும் மாறாத் தன்மையாகிய சார்பு முறையால் இறைவனைச் சாரும் என்பதும், அச்சார்பே மெய்ச்சார்பாய்ப் பேரின்பாய் மிளிர்வதென்பதும் விளங்கும்.

நிறம், உரு, உடல் மூன்றும் மும்மலக் குறிப்பாகவும், தலைவன் இறைவனாகவும், தலைவன் நாடும் பொருள் இறைவனடிப் பேரின்பமாகவும், தலைவி உயிராகவும், தலைவன் பொய்யாது வருதல் மெய்ச் சார்பாகவும் உள்ளுறை கொள்ளலாம்.

### கO. ஆலமர் செல்வன்

இறைவன் தென்முகச் செல்வராய் ஆலின்கீழ் எழுந்தருளி நால்வர்க்கும் அறமுரைத்து மறையருளி, அறிவார்க்குப் பொருள் பாடி நூலீந்து தன் திருவடியின்பம் காலம் பெற்றினிதிறைஞ்சிக் கைதொழுவார்க்கு நல்குங் குறிப்பை இருந்து காட்டிக் குருவுருவாய் ஆண்டருள்வன். இத்திருவுருவை நெய்தற் கலி கங, 'மாமலர்,' என்று தொடங்குஞ் செய்யுளில்,

"சீர்மிகு சிறப்பினோன் மரமுதற் கைசேர்த்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத்தாழை"

புறநானூறு : கசுக.

"நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டி
னாறுணர்ந்த வொருமுதுநூல்"

தொல்காப்பியம் மரபியல் : கூச.

"வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்"

என்பனவற்றால் குருவுருவும், மறைநூல் பாடியருளலும் விளங்கும்.

### கக. எல்லாம் வாலிழைபாகன் மாட்டுவந் தோடுங்கல்

உயிரும், உலகமும் படைத்தான் மாட்டே மீண்டும் ஒடுங்கும் என்னுந் திருநெறிக் கொள்கையை, கதிரவன் தோன்றுங்காலத்து யாண்டும் பரந்து விரிந்த பல் கதிர்களும் அவன் மறையுங் காலத்து அவனிடத்து வந்து ஒடுங்கும் மெய் உவமையால் கூறியுள்ளார்கள். அது,

நெய்தற்கலி : கஉசு.

"தொல்லூழி தடுமாறித்
 தொகல்வேண்டும் பருவத்தாற்
பல்வயி னுயிரெல்லாம்
 படைத்தான்கட் பெயர்ப்பான்போ





லெல்லுறு தெறுகதிர்
 மடங்கித்தன் கதிர்மாய''

என்பதாகும்.

### கஉ. பெண்ணொரு கூறன்

இறைவியும், இறைவனும் ஈருருவும் ஒருடலுமாய் விளங்குவது. படைத்தல், துடைத்தல், இல்லறம், துறவறம், சிற்றின்பம், பேரின்பம் முதலியன ஒன்றோடொன்றிணைந்து, வித்தும் விளைவுமாயிருப்பதன் குறிப்பாகும். இத்திருவுருவைச் சிலப்பதிகாரம் : உஅ. நடுகற்காதை கூஎ.

"...........................................
திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவுஞ்
செங்க ணாயிரந் திருக்குறிப் பருளவுஞ்
எO செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும்
பாடகம் பதையாது சூடகந் துளங்காது
மேகலை யொலியாது மென்முலை யசையாது
வார்குழை யாடாது மணிக்குழ லவிழா
துமையவ ளொருதிற னாக வோங்கிய
எரு இமையவ னாடிய கொட்டிச் சேதம்''

என்னும் வரிகளால் நன்குணரலாம்.

### கங. நஞ்சுண்ட கண்டன்

இறைவன் விண்ணவர்பொருட்டு உண்ணு நஞ்சமுண்டு கண்டங் கறுத்து மணிகண்டன் என்னுந் திருப்பெயர் பெற்றனன். இக்குறிப்பு மலைபடுகடாத்து வரி அக.

"நீரகம் பனிக்கு மஞ்சுவரு கடுந்திறற்
பேரிசை நவிர மேஎ யுறையுங்
காரி யுண்டிக் கடவுள தியற்கையும்''

என்பனவற்றால் விளங்கும். இந்நஞ்சத்தின் வரலாறு வருமாறு :—

விண்ணவர், திருமால் தலைமையில், நெடுநாள் வாழ, மலை மத்தாய் அரவு கயிறாய் விண்ணவரும் அவுணரும் இருபுறமும் பற்றியிழுக்கும் பண்பினராய், இறைவனை மறந்து அமிழ்துண்ணத் திருப்பாற்கடலைக் கடைந்தனர். ஆங்கு இறைவனை மறந்த தீமையால் பெருநஞ்சு தோன்றிற்று ; அது கண்டு அஞ்சி அரன்பால் அமரரெல்லாம் முறையிட்டனர். தேவதேவனாய் மூவர்கோனாய் நின்ற முதல்வனும் சிவபெருமான் அந்நஞ்சையுண்டு கண்டத் தடக்கிக் காத்தருளினன்.

இதன் குறிப்புப் பொருள் வருமாறு ; நல்லுயிர்கள் மெய்யுணர்வாம் அமிழ்தம் உண்ண, அறிவு முனைப்பாம் இறைமறப்பால், ஒடுக்கமாந் திருப்பாற்கடலை, மிடுக்கினால் மாயையாம் மாயோன் தலைமையில், அறிவாம் மத்திட்டுப், பற்றும் அரவினை, நல்லுயிர் அல்லுயிராம் விண்ணவர் அவுணர் இருபுறம் பற்றிக் கடைய யோகிருத்தலாகும். இவ்வியோகம் சிவயோகமாகாமையால் அறியாமை முனைப்பாம் பெருநஞ்சு முற்றோன்றிற்று ; அதன் கொடுமை பொறுக்காது முறையிட, அறிவுருவாம் இறைவன் அந்நஞ்சையுண்டருளினன். அந்நஞ்சாகிய பழமலம் அழியாப் பொருளாதலின் கண்டத் தடக்கி நீலகண்டன் என்னுந் திருப்பெயர் பெற்றனன்.

நல்லுயிராம் விண்ணவர்கள் நாடுமெய்
 யுணர்வமிழ்த நண்ண வேண்டிச்
செல்லுளத்தின் ஒடுக்கமெனுந் திருக்கடலை
 மாயைமால் செப்பு மாற்றால்
வல்லரவாம் வினைக்கயிற்றால் வாளவுணர்
 சுராரிழுப்ப வந்த நஞ்சாம்
அல்லலெனு மலமகற்றி யறிவமிழ்த
 மிறையருளுங் குறிப்பா மன்றே.

### கச. சிவபெருமானின் சீரியதலைமை

பலவேறு வகையான கோயில்களும் வழிபாடுகளுங் காணப்பட்டாலும் சிவபெருமானையே முதன்மையாக மக்கள் கொண்டுள்ளார்கள் என்பதற்குச் சிலப்பதிகாரமும், மணிமேகலையுமே தக்க சான்று பகரும். சிலப்பதிகாரம் : இந்திரவிழவூ ரெடுத்த காதை :—

"...........................................
கசுஅ விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டி
பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலு
கஎO மறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலு
நீல மேனி நெடியோன் கோயிலு
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்''

என்பனவற்றுள்ளும், மணிமேகலை : விழாவறைகாதை,

இச "நுதல்விழிநாட்டத்து இறையோன்முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ றாக [னை
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வி
யாறறி மரபி னறிந்தோர் செய்யுமின்''

என்பனவற்றுள்ளும், மதுரைக்காஞ்சி :

சஙுஉ "நீரு நிலனுந் தீயும் வளியு
மாக விசும்போ டைந்துட னியற்றிய

சருரு "மழுவா ளெடியோன் றலைவ னாக"

என்பதனுள்ளு முதன்மையாகக் கூறப்பெற்றது காண்க.

சமணர்களும் தங்களது உயரிய நிலையினைக் கூறுங்கால் சிவகதியெனவும் அதன் தலைவனைக் கூறுங்கால் சிவகதி நாயகன் எனவுங் கூறியுள்ளார்கள். அது,

**சிலப்பதிகாரம்** : நாடுகாண் காதை :—

கஅO "சினவரன் றேவன் சிவகதி நாயகன்
கஅகூ சங்கர னீசன் சயம்பு சதுமுகன்"

என்பவற்றுள்ளும், **சிந்தாமணி** : முத்தியிலம்பகம் ருப௭.

"இன்பமற் றென்னும் பேரான்
எழுந்தபுற் கற்றை தீற்றித்
துன்பத்தைச் சுரக்கு நான்கு
கதியெனுந் தொழுவிற் சேர்ந்து
நின்றபற் றூர்வ நீக்கி
நிருமலன் பாதஞ் சேரின்
அன்புவிற் றுண்டு போகிச்
சிவகதி யடைய லாமே"

என்பதனுள்ளும் காணலாகும்.

## கரு. சிவனடியார் பிற கடவுளரை வணங்கார்

சிவபெருமானை உயிர்த் தலைவனாகக் கொண்டு வாழும், திருநெறியாளர்கள் கனவினும் வேறு கடவுளரைத் தலைவராகக் கொள்ளார் என்பதும், அவர்க்கு வணங்கார் என்பதும், சேரன் செங்குட்டுவன் வாடா வஞ்சி மாலையுடன் பீடார் இறைவன் சேவடி முடிமிசைக் கொண்டமையால், திருமால் திருக்கொடைப் பொருளைப் பெற்றுத் தோண்மிசைக் கொண்டனன் என்பதனால் விளங்கும். அது,

**சிலப்பதிகாரம்** : கால்கோட் காதை :—

"........................................
நிலவுக் கதிர்முடித்த நீளிருஞ் சென்னி
ருரு உலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து
இறைஞ்சாச்சென்னி யிறைஞ்சிவலங்கொண்டு
மறையோ ரேந்திய ஆவுதி நறும்புகை
நறைகெழு மாலையி னல்லகம் வருத்தக்
கூO கடக்களி யானைப் பிடர்த்தலை யேறினன்
குடக்கோக் குட்டுவன் கொற்றங் கொள்கென
வாடக மாடத் தறிதுயி லமர்ந்தோன்
சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
கூரு வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலி
னங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்
தாங்கின னாகித் தகைமையிற் செல்வுழி"

என்பனவற்றுள்ளும்,

கூஅ "செஞ்சடை வானவ னருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்"

என்பனவற்றுள்ளும், **புறநானூறு** : 'வடாஅது' என்னுஞ் செய்யுளில்,

"பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே"

என்பனவற்றுள்ளும் வருதலா னுணரலாம்.

## கசு. மந்திரம்

திருநெறியாளர்களால் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி யோதுந் திருவெழுத் தைந்தும் (சிவயநம) எட்டும் (ஓம் நீலகண்டாய நம :) **சிலப்பதிகாரம்** : நாடுகாண் காதை,

கஉஅ அருமறை மருங்கி னைந்தினு மெட்டினும்
வருமுறை யெழுத்தின் மந்திர மிரண்டு
கநO மொருமுறை யாக வளங்கொண் டோதி"

என்பனவற்றுள் குறிக்கப்பெற்றுள்ளன.

**தொல்காப்பியம்** :—செய்யுளியல் களஅ.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப."

**திருக்குறள்**:—நீத்தார் பெருமை அ.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து.
மறைமொழி காட்டி விடும்."

## கஎ. அருளுடைமை

திருநெறிக் கொள்கையாகிய அருளுடைமை உலகெல்லாம் வாழவேண்டு மென்னும் உயரிய வுள்ளத்தால் நிலைபெறும். அக் குறிப்பு தொல்காப்பியம் புறத்திணையியல் அக.

"அமரர்கண் முடியு மறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினு
மொன்றன் பகுதி யொன்று மென்ப."

என்னும் நூற்பாவினுள் தெய்வத்துடன் ஒத்து முடியும் ஆறு பகுதிகள் கூறப்பெற்றுள்ளன. அவை, முனிவர், பார்ப்பார், ஆனிரை மழை, வேந்தர், உலகு என்பன ; இவற்றுள் உலகை வாழ்த்து முறையான் அஃதுணரப்பெறும்.





## கஅ. பிறவாத் தெய்வம்

**தொல்காப்பியம்** :—புறத்திணை அஅ.

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

இதன் கருத்து, வெஞ்சுடர் மண்டிலம், தண்சுடர் மண்டிலம், அருவாம் ஒளி மண்டிலம் ஆகிய மூன்றும் கடவுள் வாழ்த்துடன் கருதப்படும் என்பது. ஏனெனில் உள்ளமும் உரையும் உறு வோங்கிய பொருளைப் பற்றி யுரைப்பதாற் கருதப்படுமெனக் கூறுவாராயினர் ஆசிரியர் தொல்காப்பியனார். இப் பொருளையே திருநெறியாளர் அம்மையப்ப பிள்ளையாரத் திருவுருவில் வைத்து வழிபடுகின்றனர். வெஞ்சுடர் மண்டிலம். தண்சுடர் மண்டிலம் என்னும் இரண்டும் ஞாயிறு திங்கள் என்னும் கோள்களையன்று ; என்னை ? ஞாயிறு அமரர் வரிசையில் வைத்தெண்ணப் படுதலாலும், திங்கள் தனக்கென வோர் ஒளியின்மையாலும், இவையிரண்டும் இறைவன் எட்டுருவுள் அடங்குகின்றமையாலும் என்க.

கொடி என்பதன் பொருள் அருளாகும் ; நிலை என்பது அவ்வருளைத் தாங்கி நிற்கும் சிவம். கந்தழி என்பது உயிர்களின் மும்மலப் பற்றை யழித்துத் திருவடியை நல்கு நிலையிலுண்டாம் வீட்டின்பம். வள்ளி என்பது சிவத்தின் அருள் உயிர்களுக்குதவு நிலை. எனவே முப்பொருளுண்மை நாட்டப் பெறும் முதுமொழியு மாமிது.

அப்பன் கொடிநிலையாம்
அன்னேன் அடியின்பாய்ச்
செப்புமகன் கந்தழியாம்
சீர்வள்ளி—யொப்பிலா
அம்மையா மெய்ப்பொருளை
யார்ந்த வுளத்தமிழர்
செம்மைநல மென்றூர்
சிறப்பு.

## ககூ. கடவுட் குறிப்பைக் காவலன் சீர்த்தியிற் காண்டல்

இக்கந்தழியைப் பெறுமாறும் பிறவுந் தொல்காப்பியத்துக் கூறப்பட்டுள்ளது. அது, **தொல்காப்பியம்** புறத்திணை, கூக.

"தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூத ரேத்திய துயிலெடை நிலையுங்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமுஞ்
சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமு
நடைமிகுத் தேத்திய குடைநிழன் மரபு
மாணார்ச் சுட்டிய வாண்மங் கலமு
மன்னெயி லழித்த மண்ணுமங் கலமு
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவள னேத்தி
நடைவயிற் றோன்று மிருவகை விடையு
மச்சமும் முவகையு மெச்ச மின்றி
நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமுங்
காலங் கண்ணிய வோம்படை யுளப்பட
ஞாலத்து வரூஉ நடக்கையது குறிப்பிற்
கால மூன்றொடு கண்ணிய வருமே"

இதன் கருத்து : மறத்துறை விளக்கிய அறப்போர் மன்னர் தம்வலியாற் பாசறைக் கண் கவலின்றித் துயில்பவர். அம்மன்னர் தம் புகழெல்லாம் செப்பிச் சூதர் துயிலெழுப்புவர். அத்துயிலெடையே இறைவனுக்குச் செய்யும் திருப்பள்ளி எழுச்சியாகும். துயிலெழுந்த மன்னன், பிறந்த நாள் கொண்டாட்டம், முடிசூட்டுக் கொண்டாட்டம், படை எழுச்சி, போர் வென்றி முதலியன நிகழ்த்திப் புகழ் பெறுவன். அம்மன்னன்பால் கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகிய பரிசிலர் சென்று வாயிலோன் விடுக்க உட்புகுந்து பெருவளன் பெற்று மீள்வர். அம்மீட்சி மன்னன் தானே விடுக்க வருதலும், பரிசிலர் தானே வேண்டி மீடலும் என இருவகைப்படும். அங்ஙன மீள்வோர் ஏனையார்க்கும் அறிவுறுத்தி வளன்பெறச் செய்வர். தாங்களும் பரிசில் தந்த மன்னவனை என்றும் வாழ்த்தியின்புறுவர் என்பதே யாம். இஃது உலகியல் முறையாகும்.

இந்நூற்பாவையே வீட்டியன் முறையில் அமைத்துக் கோடல் சான்றோர் கருத்தாம். அஃது,

"ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

என்ற விடத்து ஆசிரியர் நச்சினார்க்கினியர், ஆற்றிடை = துறவற நெறியிடத்து, காட்சி = இல்லற நெறியிற் கண்டவுணர்வு, உறழ = மாறுபட, தோன்றி = விளங்கி,

பெற்ற=இறைவன்பாற் கிடைத்த, பெரு வளம்=வீட்டின்பமாகிய கந்தழியை, பெறு அர்க்கு=கிடையாது வருந்து மேனேயார்க்கு, அறிவுறீஇ=தெளிய வுணர்த்தி, சென்று= முறையாகப்போய், பயனெதிர=இன்பம் எய்த, சொன்ன=கூறிய, பக்கமும்=பகுதி யும், என்னுங் கருத்துப்பட உரை கூறி, மேற்கோளாகத் திருமுருகாற்றுப் படை யைக் காட்டியுள்ளார். இதனல் வீடு பேற் றிற்கு முதலாகிய நெறி கூறி வீட்டின்பம் உணர்த்தப்பட்ட தென்பதும் விளங்கும்.

இந்நூற் பாவை வீட்டியதுடன் பொருத் துங்கால், மன்னன் இறையாகவும், சூதர் இறையின் போராற்றலாகவும், கூத்தர், பாணர், பொருநர், ஒருமலம், இருமலம், மும்மலம் உடையவராகிய மூவுயிர் எனவும் விறலி தலைவனைச் சாரும் பருவம் வாய்ந்த விழுமிய உயிராகவும், பெருவளன் திருவடி யின்பமாகவும், பெருமங்கலம் அருட் டோற்றமாகவும், குடைநிழன் மரபுபடைத்த லாகவும், மன்னெயிலழித்த மண்ணு மங் கலம் துடைத்தலாகவும், கடைக்கூட்டு நிலை மறைத்தலாகவும், இருவகை விடையும் அருளலாகவும், ஓம்படை அடியவ ரேத்த லாகவும் கொள்ளல் வேண்டும்.

ஒருமுதலு மிருவலியு மூவுயிரு
நானெறியு மோய்வி லாமல்
தருமிறைவன் ஐந்தொழிலுந் தாள்வாழ்த்துந்
தாவினல் விசைப்பா தன்னுள்
பெருமுன்பிற் கிடந்தோரும் பிரிசூதர்
கூத்தர்பாண் பொருநர் பேண
வருமின்ப விறலியொடு மங்கலமும்
வளனேத்தும் வகுக்கு மாதோ

சூதர் இறைவலியாம்
சொல்கூத்தர் பாண்பொருநர்
நீதிலா மூவுயிராம்
சேர்விறலி—ஓதுநெறி
நான்காம் விடையருள்நல்
லைந்தாம் வளனின்பாம்
னோன்மைவாழ்த் தோம்படையா
னோக்கு

## உ0. திருப்பள்ளி எழுச்சி

திருப்பள்ளி எழுச்சி முரசம் சிவபெரு மான் திருக்கோவிலிலும், மன்னவன் திருக் கோவிலிலு மட்டுமே முழங்கும். இதனு லும் மேலது வலியுறுத்தப் படுதல் காண்க. சிலப்பதிகாரம் : புறஞ்சேரி யிறுத்த காதை

"............................
கஅ அருந்தெறற் கடவுளகன்பெருங் கோயிலும்
பெரும்பெயர்மன்னவன்பேரிசைக்கோயிலும்
பால்கெழு சிறப்பிற் பல்லியஞ் சிறந்த
கசo காலை முரசக் கனைகுர லோதையும்"

## உக. திருவெண்ணீறு

திருநெறியாளர்களின் சிறந்த அடை யாளமாகக் கொள்ளும் திருவெண்ணீறு, கலித்தொகை : கடவுள் வாழ்த்து, ஆறறி:-
"மண்டமர் பலகடந்து மதுகையா னீறணிந்து"
எனவும், சிலப்பதிகாரம் : கால்கோட் காதை உஉரு,
"சடையினருடையினர் சாம்பற் பூச்சினர்"
எனவும் வருவனவற்றால் விளங்கும்.

## உஉ. ஆனேற்றவிர்பூண்

சிவபெருமானிடத்தும் அவனருளிய அற நெறியிடத்து மிக்க பற்றுடையார் என்ப தன் அடையாளமாக, அவனது கொடியும் ஊர்தியும் அறமுமாகிய ஆனேறு பொறித்த பொலம்பூணணியை நலங்கிளரத் தாங்கியுள் ளார்கள். இது, கலித்தொகை : மருதக்கலி,
கள "மருப்பூண் கையுறை யாக வணிந்து"
உ0 "பூண்டவை எறியா வாளு மெற்று மழுவுஞ்
செறியக் கட்டி யீரிடைத் தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய வானேற் றவிர்பூண்"
உக "பொலஞ்செய் மழுவொடு வாளணி கொண்ட
நலங்கிள ரொண்பூ ணனைத்தரு மவ்வாய்"
என்பனவற்றால் விளங்கும்.

## உரு. வாழ்த்து முறை

கடவுளைத் தொழுதற்கு மனைவியும் மக்க களும் ஒக்கலும் சேர்ந்து செல்லுதலாகிய மரபும், அனைவர்க்குஞ் சேர்த்து வேண்டுத லும் பரிபாடற்கண் குறிக்கப்பட்டுள்ளன. அவை,
கஙு "தைய லவரொடுந் தந்தா ரவரொடும்
கைம்மக வோடுங் காத லவரொடுந் [மின்"
தெய்வம் பேணித் திசை தொழுதனிர் சென்
கச "அவை யாமுமெஞ் சுற்றமும் பரவுதும்
மேம வைகல் பெறுகயா மெனவே"
என வருவனவற்றால் விளங்கும். அதுவு

"சந்தாநபூதி பெற்றுக் கந்தாநபூதி சொன்ன எந்தை யருள்நாடி யிருக்கநா ளெந்நாளோ"



மன்றி மேலாகிய வீட்டின்ப நெறி வேண்டி யும் வழிபடப்பெறும். அது, பரிபாடல் : ரு செய்யுள் வரி,

எஅ "சேர்வ ராதலின் யாஅ மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமு மல்லநின்பா
லருளு மன்பு மறனு மூன்று
முருளிணர்க் கடம்பி னொலிதா ரோயே"
என வருதலா னுணர்க.

## உச. வீட்டு நெறி

வீட்டின்ப நெறி புறப்பொருள் பற்றியும் அகப்பொருள் பற்றியும் உண்டாம். புறப் பொருள்பற்றி வருவது, நுகர்பொருள் அற நிலையாமை தோன்றித் துறப்பது. அது, தொல்காப்பியம் : புறத்திணையியல் உரு-ம் சூத்திரம்.

"பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே"
என்பதனுல் விளங்கும்.

அகப்பொருள் பற்றி வருவது நுகர் பொருள் அறுது பேரின்ப வேட்கையால் துறப்பது. அது, தொல்காப்பியம் கற்பியல் ருக,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்பதனுல் உணரலாம். இதன் கருத்து: இல்லறத்தின் பயன் வீடுபேற்று நெறிக் கண் பழகுதல் என்பதாம். ஆசிரியர் நச்சி னர்க்கினியர் இந்நூற்பா நிலையாமைக் கூறிப் புணர்த்துவதால் காஞ்சி யாகாதோவென்று தடையெழுப்பி விடையிறுக்கின்றார். அது வருமாறு :—

"தங்குறிப்பினுனன்றி நிலையாமைதானே வருவதுதான் சிறந்து நிலைபெற்று நிற்கு மெனச் சான்றோர் கூறுதலும் அதுதானே வந்து நிற்றலுங் காஞ்சி; இஃது அன்ன தன்றிச் சிறந்த வீட்டின்ப வேட்கையால் தாமே எல்லாவற்றையும் பற்றறத்துறத்த லின் அகப்பொருட்பகுதியாம். இதனுனே இவ்வோத்தினுட் பலவழியுங் கூறிய காமம் நிலையின்மையின்மேல் இன்பத்தை விளைத் தே வருதலிற் காஞ்சி யாகாமை யுணர்க.

## உரு. எய்தற்கரியன இறைவற்காம்

"எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்."
என்னுந் திருக்குறட் குறியாய்,
"விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய வன்பின் வரகுண தேவரைப்போல"

ஆய் என்னும் பெருவள்ளல் தான்பெற்ற பெறுதற்கரிய பாம்பீன்று கொடுத்த நீல வுடையினை ஆலமர்செல்வற்கு அகமுவந்து அன்புடன் அளித்தனன்.

அது, பத்துப்பாட்டின்கண் சிறுபாணாற் றுப் படையுள்,

கூ. "........கிழறிகழ்
நீல நாக நல்கிய கலிங்க
மாலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோ
ளார்வ நன்மொழி யாயு மால்வரை"
என்பதால் விளங்கும்.

## உசு. திருமணம்

இறைவன் உயிர்களெல்லாம் இல்லறம் நிகழ்த்தி நல்லற நெறியால் வீடெய்தற்குத் தான் வழி காட்டியாய் மணமுடித்தருள் வன்.

அது, பரிபாடல் : ரு. 'பாயிரும் பனிக் கடல்' என்பதனுள்,
உஎ. "பாக முண்ட பைங்கட் பார்ப்பா
னுமையொடு புணர்ந்த காம வதுவையு
ளமையாப் புணர்ச்சி யமைய நெற்றி"
என்பதனுல் விளங்கும்.

## உஎ. திருவெள்ளிமலை

இறைவன் திருக்கயிலையாகிய வெள்ளி மலையில் வீற்றிருந்தருளுதல்
கலித்தொகை : குறிஞ்சிக்கலி உ.
"இமயவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தண
னுமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக
வையிரு தலையி னரக்கர் கோமான்
றொடிபொலி தடக்கையிற் கீழ்புகுந் தம்மலை
யெடுக்கல் செல்லா துழப்பவன் போல"
என்பதனுனும்,

"சமன்வரின் ஞானவாள் கொண்டே யெறிவன்-சிவன்வரி னுனுடன் போவது திண்ணம்"

சிலப்பதிகாரம் : நடுகற்காதை கழஉ.

" இமையச் சிமையத் திருங்குயி லாலுவத்
துமையொரு பாகத் தொருவனை வணங்கி "

என்பதனானும் விளங்கும்.

### உஅ. திருவடி

செம்பொருட் டுணிவின் செல்வர்களால் 'சிவனடியைச் சேரு முத்தி' 'இறைவனடி ஞானமே ஞானம்' எனச் சிறந்தோதப் பெறும் திருவடியைப் பண்டுள்ளாரும் அங்ஙனே கொண்டுள்ளார்.

அது, திருமுருகாற்றுப் படை க : திருப் பரங்குன்றம்.

கஉ. "சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன் "

என்பதனானும்,

(இதன் கருத்து : இறைவன் திருவடியில் மெய்ஞ்ஞானத்தான் அறிதலைக் கைவிட்டுத் தங்குமாறு பண்டைப் பெருந்தவத்தால் சிறந்த வுள்ளத்தோடு செல்லுஞ் செலவை நீ விரும்பினையாயின் என்பதே.)

ஆசிரியர் நச்சினார்க்கினியர் இங்கு மேற் கோளாக, "திருவடியே வீடாயிருக்குமென் றார்; அது "தென்னன் பெருந்துறையான், காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட் டித், தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன்காட்டி" என்பதனானும், பிறரும் திரு வடியைக் கூறுமாற்றானு முணர்க எனக் காட்டினர்.

திருவள்ளுவப் பெருந்தகையாரும் கட வுள் வாழ்த்தின்கண், முதற் குறளான் இறையுண்மையும், ஐந்தாங் குறளான் இரு வுண்மையும், ஆறாங்குறளான் உயிருண்மை யுங் கூறியருளி, எழுவகைப் பிறப்பு மீடேற வேனை வெழு திருக்குறளானுந் திருவடியும், பண்பும் அறிவுறுத்தருளினர்.

அங்ஙனங் குறித்த திருவடி ஏழனுள், அடி என்னுஞ் சொல் மூன்று திருக்குற ளினும், தாள் என்னுஞ் சொல் நான்கு திருக்குறளினும் காணப் பெறுகின்றது. இதனால் மூவகை உயிரும் நால்வகை நெறி யும் குறிப்பானுணர்த்திச் சிவநெறிப் பெருமையை விளக்கி யருளினர். நால்வகை நெறியாவது சங்கரனை யடையுஞ் சன்மார்க் கம் சகமார்க்கம் சற்புத்திரமார்க்கம் தாச மார்க்க மென்பதே.

ஒன்றைந்தோ டாறில் உடையான்தளையுயிர்கள்
நின்றகுறள் ஏழினிலும் நீளடிதாள்—நன்றருளி
முப்பொருளு நானெறியு மூவுயிரு முள்ளுறத்
செப்புஞ் சிவநெறியைச் சேர்ந்து [தார்

எழுவகைப் பிறப்பு முய்ய
இயம்பிய கழல்கள் ஏழில்
தொழுபவர் நெறியா நான்கு
தாள்களுந் தோன்றச் செய்து
வழுவிலா வுயிர்கள் மூன்று
வகையெனும் வாய்மை தோன்ற
விழுமிய அடிகள் மூன்றும்
வள்ளுவர் விதித்திட் டாரே

"செம்பொருட்டுணிவின் உள்ளுறை"

அன்பும் அருளும் திருநெறி யடிப்படை
ஆண்டவன் எண்குணன் ஆகு முழுமுதல்
இறைவன் பிறவா யாக்கை எழிலினன்
ஈண்டிய வுயிர்ப்பொருட் டியற்றுவ னைந்தொழில்
உண்மை யறிவின்ப வுருவினன் இறைவன்
ஊழ்துணையாக வூட்டுவன் வினையினை
என்றும் அடிமையா யியங்கு முயிர்கள்
ஏத்தல் எண்ணல் இறைஞ்ச லுயிர்ச்செயல்
ஐந்தெழுத் தாயி மூன்று முப்பொருள்
ஒட்டிய கட்டோ டிறும்வினை மாயை
ஓதும் அருளா லோட்டுவன் மும்மலம்
ஔவிய மிலாவரு ளாதி யெனப்பெறும்
அஃகா இன்பம் அரனடிக் கன்பே

சீரார் திருவள் ளுவரகத்தோன் செப்பினன்
ஏரார் எழுநான் கினியமுறை—பேரார்
பழந்தமிழ் நூற்சிவப் பண்பா மூலகம்
பழம்பொருளால் வாழ்க பரிந்து.



# சித்தாந்தச் செந்நெறி

அல்லது

# காட்டிக்காணும் பேரருட்டிறன்

ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளை

### க. படைப்பின் வகை

நமது வாழ்க்கைக்கிடனாகிய இவ்வுலகம், சரம், அசரம் என்னும் இருவகைப்பொருட் களால் ஆகியது. சரப்பொருளனைத்தும் உயிருள்ளவை. அசரங்களுள் ஓரறி வுயிர்களாகவுள்ள கொடி செடி முதலி யன நீங்கலாக ஏனையன உயிரற்றவை. உயிர்ப் பொருட்கள் தமக் கேற்றவகையில் கையாண்டு பயன் கொள்ளற்கென்றே உயி ரில் பொருட்கள் படைக்கப்பட் டுள்ளன. ஆகலின், உயிருடைப் பொருட்களே பிரபஞ் சத்தில்முதன்மை யெய்தி நிற்பனவாம்.

### உ. உயிரின் பாதபாடுகள்

ஒன்றை அறிதலும், அடைய விரும்புத லும், விரும்பியவற்றைப் பெறற்கேற்ற தொழில் புரிதலும் உயிர்ப் பொருள்களுக் குரிய இயல்புகளாம். இவ்வுயிர்ப்பொருட் களுப் மெய், வாய், மூக்கு, கண், செவி, மனம் என்னும் ஆறுவகை அறிவினையும் அடைவே ஒன்றினொன் றேற்றமாகக் கொள்ளும் தகுதி அமைப்புகளுக் கேற்ப ஓரறிவுயிர் முதலாக ஆறறிவுயிர் ஈறாகஎண் ணிப் பகுக்கப்பட்டு ஒன்றினொன்று சிறப் பெய்தும். ஆறறிவின் மேலும் போதரும் அறிவொன்றின்மையின் ஆறறிவு மொருங் குடைய உயிர்களே படைப்பிற்கு நாயகமாக நனி சிறந்து விளங்கும் பெருமையினவாம். இஃது, உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்கிற்கும் ஒப்ப முடிந்ததொன்றாம்.

ஆசிரியர் தொல்காப்பியனார், இதனை,

" ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
யிரண்டறி வதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
யைந்தறி வதுவே யவற்றொடு செவியே
யாறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே "

—தொல். பொருள். மரபியல். சூ - உஎ.

என அறிவின் கூறுபாட்டால் உயிர்கள் ஒன்றினொன்று சிறந்தனவாதலை முற்படப் பொதுமையிற் கூறிப் பின்,

" புல்லுமரனு மோரறி வினவே..."
" நந்து முரளு மீரறி வினவே..."
" சிதலு மெறும்பு மூவறி வினவே..."
" நண்டுந் தும்பியு நான்கறி வினவே..."
" மாவு மாக்களு மையறி வினவே..."
" மக்க டாமே யாறறி வுயிரே..."

—தொல். பொருள் மரபியல் சூ - 28-33

எனச் சிறப்புவகையால் விரித்தும் ஓதினர். ஒவ்வோரினத்தும் கிளையும் பிறப்புமுள. அவையும் அவ்வப் பகுதிக்கண் அடங்கும் என்பார். " பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே " என ஒவ்வொன்றற்கும் புற னடை கொடுத்தார். கிளை என்றது - இன மொத்தவற்றை. பிறப்பென்றது - அறிவா லொத்த பிறவினங்களை.

எல்லாப் பிறப்பினுள்ளும் மக்கட் பிறப் பே ஆறறிவு முடைமையாற் சிறந்ததென் பார் " மக்கடாமே...." எனப் பிரிநிலையுந் தேற்றமுங் கொடுத்துரைத்தார். அற்றா யின், இச்சூத்திரமும், ஏனையவற்றைப் போலப் "பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே" என்னும் புறனடை பெறுதலால், மக்கட் பிறப்பல்லாத பிற இனங்களினும், ஆறறிவு பெறுவனவு முளவாதல் வேண்டுமன்றோ வெனின், ஆம். கீழினப் பிறப்பினவேனும் அறிவான் மக்களோ டொக்கும் உயிர்களு முள. அவையிற்றைப் பிறப்பு நோக்காது அறிவின் பெருமை நோக்கி, உயரினத்தோ டெண்ணலே முறையாம் என்க. எனவே,

உடல் பொறி யமைப்புக்களை நோக்கி ஏற்றத் தாழ்வு கோடல் சாலாது. அறிவொன்றனையே முதன்மையாகக் கோடல் வேண்டுமென்பது மேலோராகிய நூலோர் கருத்தாதல் பெறும்.

கவியரசராகிய கம்பரும், இராமாவதாரம் கிட்கிந்தா காண்டத்து, வாலிக்கு இராமன் கூறும் சமாதானப் பேச்சுகட்கிடையே இக் கருத்தைப் புணர்த்தி,

“ தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறிப்
புக்க வேலவ் விலங்கும்புத் தேளிரே ”

“ மாடு பற்றி யிடங்கர் வலித்திடக்
கோடு பற்றிய கொற்றவற் கூயதோர்
பாடு பெற்ற வுணர்வின் பயத்தினால்
வீடு பெற்ற விலங்கும் விலங்கரோ ”

“ சிந்தை நல்லறத் தின்வழிச் சேர்தலாற்
பைந்தொ டித்திரு வினபரி வாற்றுவான்
வெந்தொ ழிற்றிறல் வீடுபெற் றெய்திய
வெந்தை யும்மெரு வைக்கர சல்லனோ ”

“ மனிதப் பிறப்பை நோக்கியே மனவுணர்வு சிறந்திருக்குமெனக் கோடல் ஒவ்வாது. இது அறநெறிக் கேற்றது, இஃது அறத்தின்பாற் படாதது என ஆராய்ந்துணரும் பகுத்தறிவில் வழி மக்களே யாயினும் விலங்கோ டொப்பர். விலங்கு முதலாய பிறப்புற்றனவேனும், நலந் தீங்குகளை நாடி யுணரும் மனவுணர்வு நிரம்பின் அவைகளும் மனிதரினும் மிக்குயர்ந்த தேவரோடு வைத்தெண்ணத் தக்கனவாம். எங்ஙனமெனிற் கூறுதும். முதலைவாயில் அகப்பட்டுத்தவித் திளைக்குந் தறுவாயில், ஆதிமூலமே எனக் காக்குங் கடவுளைக் கூவி இடர் நீங்கி வீடு பெற்ற நுண்ணிய பேரறிவிற் சிறந்த கஜேந்திராழ்வாரையும் உருவ நோக்கி விலங்கென் றெண்ணலாமோ? மேலும், சீதையின் பெருந்துயர் காணப்பொறாது பொங்கிய பேரருளால் இராவணனோடு பொருது புகழின் பொருட்டுத் தனதுயிரைக் கொடுத்து வீடெய்திய எந்தையாராம் சடாயுவும் கழுகாகிய பறவை யுருவுடையரல்லரோ? இவ்வாற்றால், வாலி! நீ “யாங் குரங்குருவ மாக்கள், எமக்கு, மனிதருக்குப் போந்த அறநெறியும், தன் மனைவி பிறர் மனைவி என்னும் வேற்றுமையும் கிடையா. வேத விதிகள் எம்மைக் கட்டுப் படுத்தவுமாட்டா ” என நீதிநூல் அட்ப முணர்ந்து பேசுவதனாலேயே மனிதரோ டொப்ப மதிக்கத்தக்கோ னாயினை!

“ பொறியின் யாக்கைய தோபுல னுக்கிய
வறிவின் மேலதன் றோவறத் தாறுதான்...”

அறநெறி ஆணைகள், உயிர்களின் பகுத்துணர்வின் மேலனவாமே யன்றி உடலை நோக்கியனவல்ல” எனக் கூறியதாக உரைத்தனர்.

“ அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர் ”

எனத் தமிழ் மறையும் சாற்றுகின்றது.

அங்ஙனமாயின், ஐயறிவினவாகிய விலங்கு முதலியவற்றுள்ளும் சில மனவுணர்வு பெற்றுச் சிறப்புறுதற்கும், ஆறறிவுடையனவென விதக்கப்படும் மக்கட் பிறப்பினும் சிலர்க்கு அவ்வகவுணர்வு வாரா திழிவெய்துவதற்கும் ஏதுவென்னை? எனின், அஃது, அவ்வெவ்வுயிர்கள் சென்றட்றப்பிற் பயின்ற பயிற்சி வயத்தால் ஆமெதென விடுக்க.

## ௩. அறிவின் வகையும் அறிகருவிகளின் இயல்பும்

இனி, உயிர்கள் உலக விடயங்களை எவ்வகையான் அறிகின்றன? என்பதைநோக்குவோம். வெளி யுலகப்பொருட்களை, முதலில் கண்முதலிய ஞானேந்திரியங்களால், பெயர் சாதி, குணம், கன்மம், பொருள் என்னும் விசேடண விசேடியம் யாதும் விளங்காமல் “யாதோ ஒரு பொருள் இஃது” என்னும் மாத்திரையே (நிர்விகற்பமாக) அறிவதாகிய இந்திரியக் காட்சியும், அவ்வாறுணர்ந்ததனை மனமுதலாய அந்தக் கரணங்களால், இஃது யாது? எனக் கருதி இன்ன பொருள்தானோ? அன்றோ? என ஐயுற்றுப் பின் நிச்சயிக்க ஒருப்பட்டு, ஆய்ந்து இஃது குடம்,இஃது ஆடை எனத் துணிந்து சவிகற்பமாயுணரும் மானதக் காட்சியும், உணர்ந்தபின் அதனை யெய்தும் இன்ப துன்பங்களை உணரும் தன் வேதனைக்காட்சி





யும், இயமம் நியமம் முதலிய எண்வகை யோகம் பயின்று பெற்ற சித்தியால் எல்லாப் பொருட்களின் உண்மைகளையும் விளங்க வுணரும் யோகக்காட்சியும் என ஆன்மா விடயங்களை யுணரும் வகை நான்கென்று நூற்கள் கூறும்.

இக்காட்சி நான்கனுள், யோகசமாதி நிலையுற்றோர்க்கன்றி மற்றோர்க்கு அறியவும் உரைக்கவும் அரிய யோகக்காட்சியை நீக்கி, ஏனை மூன்று காட்சிகளையும் அறிதற்குக் கருவிகளாகவுள்ள ஞானேந்திரிய முதலாயவற்றின் இயல்பைச் சிறிது கவனிப்போம்.

உலகம் பஞ்சபூதத்தா லுருப்பெற்றது. ஆகாய முதல் நிலம் ஈறாகிய ஐம்பூதங்களும், சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் என்னும் தன் மாத்திரைகளாந்தினின்றும் முறையே தோன்றியவை. கீழ் நிற்கும் பூதங்கள், மேல் நிற்கும் பூதங்கட்குரிய தன் மாத்திரைகளையும் ஏற்பனவாகலின், ஆகாயம் சத்தமொன்றையே உடைத்து. வாயு, சத்தம், பரிசம் எனும் இரண்டுமுடைத்து. தேயு, அவ்விரண்டுடன் உருவமுமுடைத்து. அப்பு, அம்மூன்றோடு இரதமுமுடைத்து. பிருதிவி, அந்நான்குடன் கந்தமுமுடைத்து. இவ்வாற்றால் உலகப் பொருட்கள் எவையும், ஐந்து தன்மாத்திரையின் மயமாகவுள்ளன. இவற்றை அறியும் ஞானேந்திரியங்களில், செவிப்புலன் ஓசையையும், துவக்கு பரிசத்தையும், விழி, உருவத்தையும், நாக்கு, இரதத்தையும் மூக்கு கந்தத்தையும் தனித்தனி அறியும். இப் புலன்களாகிய ஞானேந்திரியங்கள், சாத்துவிக முதலாய முக்குணங்களில், சாத்துவிகக் கூறுமிக்கு, ஏனை இராசத தாமதக் கூறுகளிரண்டுங் குறையக்கூடிய தைசத்வாங்காரத்தினின்று மனத்தின் பின்றோன்றுவனவாகலின், அறியுந் தன்மையடுப்ப, வெளிப் பொருட்களைத் தோற்ற மாத்திரையாக (முற் கூறியவாறு) நிருவிகற்பமா யறியுந் தன்மையவாம்.

இனி, அந்தக் கரணங்களி னியல்பை விசாரிப்பாம். இந்திரியங்களாற் பொதுமையின் அறிந்த பொருளைச் சிறப்பு வகையால் தெளியக் கருதி, இஃது யாதாம்? எனச் சிந்திப்பது சித்தம். இஃது இன்னதாமோ? அன்றி வேறோமோ என ஐயுறுவதும் அங்ஙனம் ஐயுறுமுன் இஃதின்னதாம் என்றோராற்றால் சங்கற்பிப்பதும் மனமாம். இம் மனத்தின் விருத்தியே சித்தமென்பர் மாபாடிய வுரை கண்ட நம்மாதவச் சிவஞான யோகிகள். (இம்மனம் தைசதவாங்காரத்தினின்று இந்திரியங்களின் முற்றோன்றியதென்பது முன்னுங் கூறினும்.) மனத்தின் ஐயுறவை யகற்றி இஃதை இன்னதென நிச்சயிப்பாமென்றொருப்படுதற்குக் கருவி ஆங்காரமாம். பொருட்களை ஆய்ந்து இஃது குடம், இஃது ஆடை, இஃது குற்றி, இவன் மகன், எனப் பெயர் சாதி முதலிய விசேடணங்கள் விளங்க நிச்சயித் துணர்வது புத்தி யெனப்படும். சித்தமுதலிய நான்கும், அந்தக் கரணம், அகக்கருவி, உட்கருவி எனப்பல பெயர் பெறுவனவாம். குணதத்துவத்தினின்றும், சாத்துவிகக் கூறு மிக்கும், ஏனை இராசத தாமதகுணக் கூறுகள் குறைந்தும், பரிணமித்துத் தோன்றும் புத்தியும், அப்புத்தி தத்துவத்தினின்றே இராசதக் கூறு மிக, ஏனையிரண்டு குணக் கூறுங் குறைவுறத் தோன்றும் ஆங்காரமும் வேறுமெனவும், இவை மனமும் சித்தமும்போல் நேரொப்பனவல்லவெனவும் அறிக.

இந்திரியங்களும் அகக்கரணங்களும் இங்ஙன் அறிவதனைத்தும், அறியுமியல்பைத் தனதாகவுரிய வுயிரின் சம்பந்தமிருந்தாலன்றி முடியாவாம். என்னை? ஆன்மா புலன் கரணங்களோடு கூடாது மூர்ச்சையுற்றவழி, இவ்வறி கருவிகளிருந்தும் அறிதல் நிகழாமையான் என்க. உயிரின் முன்னிலையில் அதன் அதிட்டித்தலைத் துணைக்கொண்டு அகப்புறக் கருவிகள் அறிந்து, கன்மேந்திரியங்களாகிய வாக்கு முதலாமைந்தும் தொழில் புரிந்துவரும் அதிசயத்தை விளக்க, உயிரை ஓர் முடியுடை மன்னர். பிராணகவும், அகக்கருவிகளை அவன் துணைவராகிய மதிவல்ல அமைச்சர்களாகவும், வாயில்களாகிய புறக்கருவிகளை வெளியேறிச் சென்று செய்தி கொண்டுவரும் ஒற்றர் தூதர் சாரணராகவும், அறிவித்தவாறு தொழில்மேற் செல்லும் கன்மேந்திரி

பங்களைப் போர்வீரர்களாகவும் உருவகித்து,
'ஞானமிர்த' நூலாசிரியர்,

“..............................
செவிமெய் கண்வாய் மூக்கெனப் பெயரிய
வாயின் மிலேச்சர் சாரணர் தூதர்...
...வாக்கொடு பதங்கை பாயுவு பத்தமென்
னிவுளி மறவரும் யானை வீரரும்
திகிரி தூண்டிய திறுக ளுளரும்
வன்கண் மள்ளருந் தந்திரத் தலைவரு
மென்கரு மேந்தியத் திறனும்...
...சிந்தித் தாய்ந்து துணிந்து செயப்படு
மந்தக் கரண வமைச்சருந் தந்த
முறையுளி வழாது துறைதோ றீண்டி
...போதத் தாணி சீர்பெறத் துன்னி
வீசுப வீசி விரும்புவ விரும்பி
மாசில் காட்சி மன்னன்......... ”

எனத் திறம்பட வுரைத்தனர்.

இங்ஙனமே, உயிர்கள் ஒன்றை அறிதற்கு
வேண்டிய சாதனங்கள் இவை எனக் கூறு
மிடத்து,

“மருவிய பொறியி லொன்று
மாபூத மைந்தி லொன்றுங்
கருவிக ளன்கு நீங்காக்
கலாதிக ளேந்துங் கூடி
யொருபுல னுகரும்........”

எனச் சிவப்பிரகாச நூலுடையாரும் விளக்
கினர்.

### ச. உயிர்க்கறிவு விளங்கும் முறை

இதுகாறும் ஆய்ந்ததினின்றும் அகப்
புறக் கருவிகளைச் சாதனமாகக் கொண்டு
ஆன்மா, பொருட்களையறிந்து அநுபவித்து
வரும் உண்மை தென்பட்டது. இனி ஆன்
மாவுக்கு அத்தகைய அறிவு சுதந்தரமோ ?
வேறு துணைவலியான் வரும் பரதந்தரமோ?
என்பதையும் சிறிது சிந்திப்பாம்.

சென்ற காலத்தறிந்த செய்திகளை நிகழ்
காலத்தே மறத்தலானும், வருங்கால
நிகழ்ச்சிகளை அறியாமையானும், கருவி கர
ணங்களின் துணை வேண்டி• நிற்றலானும்,
தான் துச்சிலிருக்கும் உடம்பையேனும்
சுயமாய்ப் படைத்துக்கொள்ள இயலாமை
யானும், உடலோடு கூடாவழித் தன்தோற்
றமே பயன்படாது அவமெய்து மாகலானும்,
ஆன்மா ஒருபோதும் சுயமாக அறிவுடைய
தாமாறில்லை என்பது மிகத் தெளிவாய்
விளங்குகின்றது.

கனவு காணும்போது அதனை நன
வென்றே நம்பி நனவுற்றபின் உணரும்
அத்துணை மதியீனம் வாய்ந்த ஆன்மாவின்
நிலை மிகவும் இரங்கத்தக்கதே. அற்றன்று.
வானகத் தியங்கும் ஊர்தியையும், நீரினும்
நிலத்திலும் விரைந்தோடும் நீராவிக் கலங்
களையும், நிலத்து விரைந்து ஓடும்வண்டிகளை
யும், மற்றும் மின்சாரப் பொருள் கொண்டு
மிகப் பயன்படுவனவும் வியக்கத்தக்கனவு
மாகிய பல பொறிகளையும் இயற்றியும், இன்
னும் அரிய செயல்களைப் புதிதாகக் கண்டு
பிடிக்க முயற்சித்தும் வருகின்ற மேனாட்டு
விஞ்ஞானிகளின் பொறிவு, திறல் சான்ற
தெய்வீக அறிவெனக் கொள்ளலாமோ
எனின், கொள்ளலாம். என்னை ? முற்றறி
வுடைய முதல்வனால் படைக்கப்பெற்றுத்
தம் ஆற்றல் கரந்துள்ள சடப் பொருள்களி
னுடன் கலப்புற் றுருச்சமைந்த சேர்க்கை
களி னியல்பை யறிந்து, அளவோடு
ஒன்றுபடப் பிற பொருட்களி னியல்
புணர்ந்து கலப்புழித் தோன்றும் ஆற்றலை
ஏற்றவாறு பயன் படுத்திக் கொள்ளுந்
துணைக்கே நன்கு மதிப்பு வேண்டுமேல்,
இங்ஙனம் பல்கோடிப் பொருட்களைப் பற்
பல கோடி பயன் தரும்வகை படைத்து
அவற்றி னாற்றல்களை அறிவும் பயிற்சியு
முதிருந் துணைக்கேற்பப் பையப்பைய உணர்
ந்துகொள்ளக் கரந்துவைத்த பரம்பொரு
ளின் பேரறிவை, அவனது பேராற்றலை,
பெருங்கருணைப் பெருக்கை எத்தனை கோடி
நாக்களால் எத்தனை யூழிகாலம் புகழ்ந்து
நன்கு மதித்து நன்றிசெலுத்துதலமையும்?
இயற்கைப் படைப்புப் பொருட்களைச்
செயற்கையாற் பயன்கொள்ளும் அவ்வறி
வும் அவனால் விளங்கியதாகலின் என்க.

எத்துணைக் கண்கள் ஒருங்கு தொக்கு
நோக்கினும் ஒளிப்பொருளின் உதவியின்றி
இருட்டிலுள்ள பொருள் புலப்படுவ துண்
டோ? அவ்வாறே, இறைவன் படைத்த உல
கத்தே அவன் படைத்த உடம்பில் நின்று
அவன் பயந்த போக நுகர்தற்கு அவ
னளித்த அறிவு விளக்கத்தால் தொழில்
புரிந்துவரும் நம்மனோர் அறிவின் மதிப்பும்
மதிப்பாமோ ? இதுபற்றியே,





“நாமல்ல விந்திரியம் நல்வழியி னல்லவழி
நாமல்ல நாமுமா னுடைமை ”

என உயிர்கட்கொரு சுதந்தரமுமில்லா
மையை விளக்குந் திருவாக்கெழுந்தது.

இனி ஆன்மாவின் இயல்பு, சித்தாந்த
நூலிற் கூறியவாறு,

“அசித்தரு வியாப கம்போல்
வியாபக மருவ மின்றாய்
வசித்திட வரும்வி யாபி
யெனும்வழக் குடைய தாகி
நசித்திடா ஞானச் செய்தி
யநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடைய தாகிப்
பசுவென நிற்கு மான்மா.

—சிவஞான சித்தி ச. சூ உ. அதி உ௦.

“ஆன்மா, தன்னை அநாதியே பற்றிய
இருண்மலத்தோடு கூடியதாய்ச் சிற்றறிவும்
சிறு தொழிலும் விளங்கப் பெரிதும் துணை
வேண்டுவதாய்ச் சார்ந்ததன் வண்ணமாம்
தன்மைத்தா யுள்ளது” என்பதாம்.

இருட்டறையிற் கிடக்கும் கண்ணிலாக்
குழவியேபோற் கேவல நிலையிற் கிடந்த
ஆன்மாக்களுக்கு மாயா மலத்தாற் றனு
கரண புவன போகங்களை உதவிப் பரம
காருண்யனான முதல்வன் சகல நிலையில்
நிறுத்துகின்றான். கேவலம். சகலம் என்
னும் இரண்டும் உயிர்களுக்குப் பெத்த நிலை
களேயாயினும், சகல நிலையினின்றே (வீடு
பேற்றைய்தும்) சுத்த நிலையை அடையவேண்
டுதலின், பின்னது பயன்றரும் சாதனமா
மெனக் கொள்க.

உயிர்க்குலங்கள், எதிர்ப்படும் பொருட்
களின் உயர்வு தாழ்வுகளைக் கருதி அறித
லும், அறிந்தவற்றில் தகுதியுடையவற்றை
அடைய விரும்புதலும், விரும்பியவற்றைப்
பெற்று நுகர முயன்று தொழில் புரிதலு
முடைமையின், அவற்றிற் கியல்பாகவே
அறிவு, இச்சை, தொழில் என்னும் மூவ
கைத் தன்மைகளு முளவாதல் பெறுதும்.
இவ்வறிவு முதலாயவைகளும் உண்மையில்
தாமே விளங்குவனவல்ல. இவற்றைத்
தூண்டி நிற்கும் துணையும் வேண்டும். வித்
தியா தத்துவம் ஆன்மாக்களின் இயல்பாய
ஆணவ மலத்தைச் சிறிது நீக்கி அறிவை
விளக்கும். அராகதத்துவம் விழைவைத்
தூண்டும். கலாதத்துவம் தொழிலை எழுப்
பும். செய்த வினைப்பயன்களை அவ்வவ்
வுயிர்க்கு மாறாது நியதிதத்துவங் கொண்
டுய்க்கும். வினைப்போகங்களைக் காலதத்து
வம் வரையறுத்தூட்டும். இங்ஙனம் முதல்வ
னாணைவழித் தத்துவங்கள் இயக்கினும்,
உயிர் முதல்வனையின்றியமைந்தொன்றையும்
அறிந்தியற்றும் ஆற்றல் பெறாது. ஒருதேர்,
அச்சாணியும் உருளைகளு முடையதா
யமைந்து, ஈர்த்துச்செல்லும் புரவிகள்
பூண்டதாயினும் மத்திகைக்கோல்கொண்டு
செலுத்தும் பாகனில்வழி நன்கு வழிச்
செல்லாமைபோல வென்க.

இத்துணை அற்பமாகிய ஆன்மாக்களோடு
அத்துவிதமாய்க் கலந்து நிலைபெறுவித்தும்,
அவற்றின் வேறாய் நின்று பொருட்களை
அறிவித்தும் உடனாய் நின்று போகநுகர்
வித்தும் இறைவன் ஆற்றிவரும் பேருபகா
ரம் எண்ணிலடங்குவன வல்ல.

இங்ஙனம் உயிர்க்கு இறைவன் செய்து
வரும் பரமோபகாரத்தை ‘காணுந் தன்மை
யுடைய கண்ணுக்கு எதிர்ப்படும் பொருட்
களை, ஆன்மா, காட்டித்தானும் கண்டு வரு
தலை யொக்கும்’ என உவமான முகத்தாற்
சித்தாந்த ஞான நூற்கள் செப்புகின்றன.
இதனை விரிப்பின் ஆன்மா வேறு, கண்
வேறு. ஆன்மா சித்து; கண் அதனை
நோக்கச்சடம். ஆயினும், கண், காட்டினாற்
காணும் தன்மையுடையது. முதலில் ஆன்மா
வின் சிற்சத்தி, கண்ணொளியோடு பிரிப்ப
றக் கலந்து கண்ணுக்குக்காட்டக் கண் காண்
கின்றது. அங்ஙனம் கண் . காணும்போதே
கண்ணே கண்டதோ, ஆன்மாவே கண்
டதோ எனப் பிரித்தறிய முடியாத வண்
ணம் ஒருங்கே தானும் காண்கின்றது. இவ்
வுவமையைப் பொருளினும் வைத்து அறி
தல் வேண்டும். முதல்வன் சித்து, ஆன்மா
முதல்வனை நோக்கச்சடம். ஆதலின் பதி-பசு
வல்லன். பசு - பதியாகாது. இவ்விரண்டும்
வேறு பொருட்களே. ஆயினும் ஆன்மா -
அறிவித்தால் அறியுந் தகுதியது. முதல்
வன் சிற்சத்தி, ஆன்மசிற்சத்தியோடு இரண்
டறக் கலந்து விடயத்தை ஆன்மாவிற்கு
அறிவித் துபகரிக்கின்றது. ஆன்மா அக்க
ணமே அறியும். ஆன்மா அறிந்ததோ, ஆன்

மாவை அதிட்டித்து நின்ற தலைவன் அறிந்தனனே எனப் பிரித்தறியவாராத நிலையில் இறைவனும் அறிகின்றான். இறைவன் உயிர்கட்குத் தநுகரணபுவன போகங்களைப் படைத்தளித்து வளர்த்துவரும் உபகாரங்களெவற்றினும் இங்ஙனம் காட்டி நடாத்தும் அருட்செயலே பெரிதும் நன்றி பாராட்டற்குரிய நற்செயலாகும். என்னை? எத்துணைப் பொருட்களை உதவினும் அவற்றை அறிந்து பயன் கோடல் இயலாவழிப் பயனிலவாயொழிதலான் என்க.

இத்துணைப்பொருளே, சித்தாந்தசைவத்தின் சிறந்த சாரமாய் நின்று நிலவுவதாம். பதி, பசு, பாசவியல்புகளை நன்கெடுத் தியம்பிச் சிவபெருமான் திருவடியை அடையும் பயனைக் கூறும் இறுதிக்கண்,

> "காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போற்
> காணவுள் ளத்தைக் கண்டு காட்டலின்
> அயரா அன்பின் அரன்கழல் செலுமே"

என நம்மெய்கண்ட சிவத்தின் பேரநுபவம் வாய்த்த திருவாக்குத் திகழ்ந்ததனை ஓர்ந்து தெளிக. இதனைச் சிந்தித்தலே சிவஞானமடைதற்குப் பொருட்டாமாறும் சிறிது கூறுவாம்.

### ௫. அறிவாலய பெரும்பயன்

மேற் கூறியவாறு ஆன்மாக்களாகிய தம்மியல்புகளையும் தமக்கு எல்லா வகையானும் ஆதரவாகத் துணைநின்றருள் செய்துவரும் இறைவனது கைம்மாறறியாப் பெருங் கருணைத் திறத்தையும் நன்குணர்ந்து தேறிய பேரறிவாளராய பெரியோர்கள், எப்பொருளைக் காணினும் முதல்வன் காட்டுகின்றானென்றும், எதை அறியினும் அப்பெருமானே அறிவிக்கின்றானென்றும், எப்பக்கம் நோக்கினும் அவனது அறிவு முதிர்ந்த அருள் நிறைந்த இன்பமயமான அதி விசித்திரவேலைப்பாடுகளே தம்மைச்சூழ்ந்துநிலவுகின்றனவென்றும், இன்ப துன்பத் தொடக்கெய்தியவழியும், தமதுமுற்பவவினைக்கேடாய பயன்களை நுகர்விக்கின்றானென்றும் கருதி இங்ஙனம் எல்லாம் அவன்செயலாகவேமுடிதலின் அவனை ஒருவாற்றானும் மறத்தற்கியலாதவர்களாய்க் "குணங்காதமில்லா இன்பமே உன்னைக் குறுகினேற் கினியென்ன குறையே" என மனங்களிப்பப் பொங்கும் அன்பு மேன்மேல் மிக, அங்கம் புளகிப்ப, ஆனந்தக் கண்ணீர் சுரந்து பெருக்கெடுப்ப, நாத்தழு தழுப்ப, மெய்ந்நடுக்க முறப் புன் முறுவல் பூப்பத் தம் வசமழிந்து பரவசமெய்தி,

> "என்னில் யாரும்எனக் கினியாரிலை
> என்னினும் இனியான் ஒருவன் உளன்"

என்றவாறு தம்மினுமினிய தயாநிதிபாற் சாரும் வேட்கை மீதூர நின்று, உயிர்களின் பொருட்டாகவன்றித் தன்பொருட்டொன்றும் வேண்டாத அத்தலைவற்கே தமது உடல் பொருள் ஆவிகளைத் தத்தம்செய்து,

> "நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
> நானோ இதற்கு நாயகமே"

எனத் தமது பொறுப்பனைத்தும் அப்பரமனுக்கேற்றி *இருவினை ஒப்பு நிகழ நின்ற நிலையில் மலபரிபாக முறை, இறைவன் கடைக் கணித்தருளி "தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த" என்றவாறே குருவடிவாய்ப் போந்து ஞானோபதேசம் செய்து இனிப்பிறவா நெறியாம் தன்பொன்னடிப் பேற்றை வழங்கியருளக் கட்டறுத்து வீடுபெறுவார்கள். இஃதே அறிவின்பெருக்காலாய பெறலரும் சீரிய பெரும்பயனும்.

> "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅ ரெனின்"

> "கற்றாரை யான்வேண்டேன்
> கற்பனவும் இனியமையும்
> குற்றாலத் தமர்ந்துறையுங்
> கூத்தாவுன் குரைகழற்கே
> கற்றாவின் மனம்போலக்
> கசிந்துருக வேண்டுவனே"

என்று புகன்றவாற்றானும் கல்வி கேள்விகளாற் பெறும் அறிவின் பயன் இஃதே எனத் தெளிக. விரிவஞ்சி இம்மட்டில் முடிக்கின்றோம்.

இதுகாறும் கூறியவாற்றால், உலகப் படைப்புப் பொருட்கள் சரம் அசரம் என இரு பிரிவினவாகு மென்பதும், அவற்றுட் சரமாகிய உயிர்ப் பொருட்களே சிறந்தனவென்பதும், அவ்வுயிர்ப் பொருட்களும் ஓரறிவுமுதல் ஆறறிவுவரை ஒன்றினொன்று உயர்வுடையு மென்பதும், உருவத்தாலன்றி அறிவாலேயே உயர்வுளதா மென்பதும், உயிர்கள் புலன்களாலும் அந்தக் கரணங்களாலும் அறிதலைச் செய்யுமென்பதும், அவ்வாற்றால், தூதர், அமைச்சர்களைக் கொண்டு தொழில் நிகழ்த்தும் அரசனை ஒக்குமென்பதும், அவ்வுயிர்களின் இயல்பை நோக்கின் அவை, இறைவனது பேரருளுதவி யின்றி யாதும் அறியவோ விரும்பவோ தொழில் புரியவோ இயலாத சதசத்துப் பொருட்களா மென்பதும், இவ்வியல் புணர்ந்த பெரியோர், உயிர்களுடன் பிரிப்பின்றி ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கும் இறைவன் திருவருளை மறவாது நினைத்து வீடுபேறெய்துகின்றார்களென்பதும், ஆன்மா, கண்ணுக்குப் பொருளைக் காட்டுமாறுபோல் இறைவன் ஆன்மாவை அதிட்டித்துக் காட்டுமுபகாரமே சீரிய பேருதவிஎன்பதும், இன்னோரன்ன பிறவும் அறியக் கிடந்தமை காண்க.

> கூறுநாவே முதலாகக்
> கூறுங் கரண மெல்லாநீ
> தேறும் வகைநீ திகைப்புநீ
> தீமை நன்மை முழுதுநீ
> வேறோர் பரிசொன் றிங்கில்லை
> மெய்ம்மை யுன்னை விரித்துரைப்பிற்
> றேறும் வகையென் சிவலோகா
> திகைத்தாற் றேற்ற வேண்டாவோ.
>
> —திருவாசகம்.

---

* இருவினை ஒப்பாவது அறம்பாவமென்னுமிரண்டினும் விருப்பு வெறுப்பற நிற்கை.

" தானம் தவமிரண்டுந் தங்கா வியனுலகம் வானம் வழங்காதெனின் "



# சிவாலய பூஜை விளக்கம்

திருமயிலை - சுவாமிநாத சிவாசாரியர்

(உரிமையுடையது)

> " மதிதருவ னெஞ்சமே யுஞ்சு போக
> வழியாவ திதுகண்டாய் வானோர்க் கெல்லாம்
> அதிபதியே ஆரமுதே ஆதீ என்றும்
> அம்மானே ஆரூரெம் மையா வென்றுந்
> துதிசெய்து துன்றுமலர் கொண்டு தூவிச்
> சூழும் வலஞ்செய்து தொண்டு பாடிக்
> கதிர்மதிசேர் சென்னியனே கால காலா
> கற்பகமே யென்றென்றே கதறு நில்லே"
>
> —அப்பர் தேவாரம்.

உலகிலுள்ள சமயங்கள் எல்லாவற்றையும் கடந்து சிரம்போல் விளங்குவதும், தானே முடிந்த முடிபானதுமாகிய சமயம் சைவசித்தாந்தமேயாகும். சைவசித்தாந்தத்தில் மோக்ஷமாகிய வீடடைவதற்கு, சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு மார்க்கங்கள் உள்ளன. அவை, தாசமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனப் பெயர் பெறும்.

சரியை :—புறத்தொழில் மாத்திரையாற் சிவபெருமானுடைய உருவத் திருமேனியை வழிபடுதல்.

கிரியை :—அகத்தொழில், புறத்தொழில் இரண்டாலும் சிவபெருமானுடைய அருவுருவத் திருமேனியை வழிபடுதல்.

யோகம்:—அகத்தொழில் மாத்திரத்தால் சிவபெருமானுடைய அருவத்திருமேனியை வழிபடுதல்.

ஞானம் :— அறிவு மாத்திரத்தினால் உருவம், அருவுருவம், அருவம் என்னும் மூவிதத் திருமேனிகளையுங் கடந்து நிற்கும் அகண்டாகார ஜோதி மயமான சிவபெருமானை நோக்கிச் செய்யும் வழிபாடாகும். இம் மார்க்கங்கள் நான்கும்,

> "விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
> அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே"

என்றபடி மோக்ஷ சாதனமாய் நிற்கும்.

" தெய்வ நல்லருள் படைத்த அன்பரொடு சேரவுங் கருணை கூர்வையோ "

சரியை இல்லாமல் கிரியையும், கிரியை இல்லாமல் யோகமும், யோகமில்லாமல் ஞானமும், ஞானமில்லாமல் இறைவனுடைய திருவடிப்பேருகிய மோக்ஷமும் கைகூடா.

சரியை கிரியைகளைப் பயனற்றவை என இகழ்ந்து ஞானத்திஞலேயே முத்தியடைய விரும்புவோர், படிவழி ஏறிச் செல்லாது, கீழ் நின்று மலையிஞுச்சிக்குப் பாய விரும்புவோரை ஒத்தவராவர். ஆதலால், பேராநந்தப் பிறவா வீடடைய விரும்பினோர், புறத்தும் அகத்தும் சிவபெருமானை வழிபடல் இன்றியமையாததாகும். சிவபெருமான் புறத்தே சிவாலயங்களிலுள்ள சிவலிங்கமுதலிய வடிவங்களையும், சிவஞானிகளுடைய சரீரங்களையும் ஆதாரமாகக் கொண்டும், அகத்தே உயிரிடம் பிரேரகனாய் இருந்துகொண்டும், மக்களாற் செய்யப்படும் வழிபாட்டை ஏற்றருளுகின்ருர். அகத்தே செய்யப்படும் வழிபாட்டிற்குக் கண் முதலிய பொறிகளும், கை முதலிய அங்கங்களும் தொழிற்பட மாட்டா. இவை சிவத்தொண்டிலே சென்ருல் மாத்திரம் தீய வழியிற் செல்லாது நிற்கும்; இன்றேல், தம் மிஷ்டப்படி சஞ்சரிக்கும். நமக்குள்ள எந்தக் கருவியையும் தீயவழியிலிருந்து நேரே அடக்குவதரிதாதலால், அதற்கு நல் வழியைக் காட்டவேண்டும் என்பதுபற்றி தான்,

"பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்ருர் திருவள்ளுவரும்.

ஆதலால், புறக் கரணங்களை முதலில் செந்நெறிப் படுத்தாவிடின், அகப்பூஜை செய்வது இயலாததாகும். சிவஞானிகளுடைய திருமேனியைக் காண்பது மிகவுமரிது. அதை இப்பிறவியிலே, ஒரு முறையேனும் காண முடியாது போகவும் கூடும். ஆதலால், கண் முதலிய பொறிகளும் அங்கங்களும் பயன்படுதற்குக் கோயில் வழிபாடே மக்கட்கு மிகப் பொருத்தமானதாகும். கோயில் அறிவிலிகள்முதல் சிவஞானிகள் ஈறுகஉள்ள யாவர்க்கும் அவசியமாகும். சரியையாளர் முதலிய நால்வர்க்கும் சிவாலய வழிபாடு பயன்படும் என்பதை,

"திருக்கோயில் உள்ளிருக்கும்
திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச்
சிவனுறைவன் ஆங்கே
உருக்கோலி மந்திரத்தா
லெனநினையு மவர்க்கு
முளனெங்கு மிலனிங்கு
முளனென் பார்க்கும்
விருப்பாய வடிவாகி
யிந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தின் வந்துதித்து
மிகுஞ்சுரபிக் கெங்கும்
உருக்காண வொண்ணுத
பான்முலைப்பால் விம்மி
யொழுகுவது போல்வெளிப்பட்
டருளுவன் அன்பர்க்கே"

என்று சிவஞானசித்தியார் வலியுறுத்துகின்றது. சிவபெருமான், ஆலயத்துள்ள சிவலிங்கத்திலேசரியையாளர்க்குமறைந்துநின்றும், கிரியாவான்களுக்கும்யோகிகட்கும்பூஜிக்கும் போது மாத்திரம் தோன்றியும், ஞானவான்களுக்கு அன்பே தாமாய் எப்போதும் விளங்கித் தோன்றியும் அருள்புரிகின்ருர் என்பதன்ரே இதன் கருத்து. இங்ஙன மிருக்க, தற்காலத்தில் நாத்திகம் படிந்த மனத்தினர் சிலர், பட்டினத்தடிகள், தாயுமானவர், சிவவாக்கியர் முதலிய மஹான்களுடைய வாக்கியங்களில்,

"சிற்றம் பலமும் சிவனு மருகிருக்க
வெற்றம் பலந்தேடி விட்டோமே"

"பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே"

"தீர்த்தலிங்கமூர்த்திஎன் றுதேடியோடுந்தீயரே"

என்பன போன்ற சில வாக்கியங்களைப் பொறுக்கிக் கொண்டு, சிவாலய சேவை, வழிபாடு முதலியவற்றைப் பயனற்றவை என இகழ்ந்து, தாங்கள் கெடுவதுமன்றிப் பிறரையும்கெடுக்கமுயல்கின்றனர். அந்தோ! என்னே! இவர்கள் அறியாமை! சிவஞானச் செல்வர்களாய அவர்கட்குச் சிவாலய வழிபாடு சம்மதமில்லையேல்,

"காலையு மாலையுங் கால்பெயர்த் திடுவதன்
ஆலயம் வலம்வரு வதற்கே சால்பினின்





கைகொடு குயிற்று வதேய
தின்னது கோயிற் பல்பணி குறித்தே"

என்றும்,

"பஞ்சசுத்தி செய்துநின்னைப்
பாவித்துப் பூசைசெய்தால்
விஞ்சிய ஞானம்
விளங்கும் பராபரமே"

என்றும்,

"தீர்த்தலிங்க மும்முளே
தெளிந்துகாண வல்லிரேல்
தீர்த்தலிங்கர் தானதாய்த்
தெளிந்ததே சிவாயமே"

என்றும் ஏன் கூறல்வேண்டும்? அவர்கள் சிவாலய வழிபாட்டை இழித்துக் கூறியது, சிவாலய வழிபாட்டின் தத்துவார்த்தத்தை உணராது செய்கின்ற கிரியைகள் சீக்கிரம் பயன் தராவாதலால், அவைகளின் உண்மைகளை மக்கள் அறியவேண்டும் என்பதை வற்புறுத்தவே யாகும்.

நோய்களை நீக்கும் வைத்தியன் எவர்க்கும் இனிமை பயக்கும் தேன் பால்சர்க்கரை முதலிய பொருளினுள்ளே மருந்தைப் பொதிந் தூட்டுவதுபோ லன்ரே மலப்பிணியகற்றும் பரம வைத்தியனுகிய சிவபெருமான், சிற்றறிவினர்களாகிய ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு எளிதில் ஞானமடைவதற்காக சைவசித்தாந்த தத்துவ உண்மைகள் நிறைந்திருக்கும் சிவாலயங்களையும் வழிபாட்டையும் விதித்திருக்கின்ருர். சிவாலயம் சிவலிங்கம் பூஜை முதலியவைகளின் உண்மைகள் யாவும் சிவனருள் பெற்ற சிவஞானிகளேயல்லாமல் ஏனையோர் அறிய முடியாதனவாகும் என்பதை,

"குறிகளும் அடையாளமுங் கோயிலும்
நெறிகளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம்ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம்என் கொள்புகாததே"

என்னும்தேவாரம் உணர்த்துகின்றமையால், அவைகளின் உண்மைகளில் சிலவற்றை மாத்திரம் ஈண்டு எடுத்துக் காட்டுவாம்.

## ஆலயம்

நம் நாட்டிலுள்ள சிவாலயங்களும் அங்கு நடக்கும் ஆசாரங்களும், பிறமதத்தினர் தத்தம் மனப்போக்கின்படியே கட்டப்பட்ட கோயில்கள் போலவும், அங்கு நடக்கும் சடங்குகள் போலவும் அல்லாது, ஒவ்வொன்றும், முதல் நூல்கள் விதித்த படியே இயற்றுதல், சித்தாந்த உண்மைகளை உணர்தற்கும் சாதித்தற்கும் ஏற்றனவாக விருக்கின்றன.

ஆலயங்கள் எல்லாவற்றினும், கர்ப்பக்கிரஹம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஸ்தூபி, பிராகாரம், கோபுரம் முதலியன ஒரே தன்மையாக அமைக்கப்பட் டிருக்கின்றன.

ஆலயம் சரீரபிரஸ்தாரம் (சரீரத்தைக் குறிப்பது) இருதய பிரஸ்தாரம் (ஹிருதயத்தைக் குறிப்பது) என இருவகைப்படும். அவற்றுள் ஹிருதய பிரஸ்தாரம் சிதம்பரம் முதலிய க்ஷேத்திரங்களாகும்; சரீரபிரஸ்தாரம் மற்றைய ஆலயங்களாகும்.

ஆலயங்களிலுள்ள கர்ப்பக் கிரஹம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம் மூன்றும் ஆன்ம தத்துவம், வித்யாதத்துவம், சிவதத்துவம் முதலியவைகளைக்குறிக்கின்றன.

கர்ப்பக்கிரஹம் என்பது,பிரதானமூர்த்தியாகிய சிவலிங்கத்தை வைத்து வணங்கப்படும் இடம். அதற்கு மூலஸ்தானம் என்னும் பெயரும் உண்டு. இதனுண்மை பிரபஞ்ச சிருஷ்டிக்குக் காரணமான மூலப்பிராகிருதியின் இடம் என்பதாம். அதாவது, சிவபெருமான் உலகைச் சிருஷ்டிக்க இச்சித்தகாலத்து அவரது அருட்சக்தியை மாயையினிடத்தே அதிட்டிக்கச் செய்கின்ருர் என்பது. அது, அப்போது அரூபியா (நிஷ்களமா) யிருக்கும் சிவபெருமான் ரூபாரூபி (சகள நிஷ்களரா) யாகிருர் என்பதைக் குறிப்பிடுகின்றது.

கர்ப்பக்கிரஹத்துக்குமேல் இருதயகமலாகாரமாக விளங்கும் தூபியானது,இருதயமே ஆன்மாவிற் கிருப்பிடமென்பதையும், ஆன்மாவிற்குப் பிரேரகனாய் இருப்பவரும், இருதயத்திலிருக்கும் சிதாகாசத்தில், விளங்குபவரும் சிவபெருமானே என்பதையும் உணர்த்துகின்றது.

அர்த்தமண்டபம், மஹாமண்டபம்,ஸ்நபநமண்டபம், அலங்காரமண்டபம், சபாமண்டபம் என்னும் மண்டபங்கள் நிவிருத்தி, பிர

திஷ்டை, வித்தியை, சாந்தி, சாந்தியாதீதம் என்னும் கலைகளை உணர்த்துகின்றன.

சிவபெருமானைச் சூழ்ந்திருக்கும் ஐந்து பிராகாரங்கள், அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயம் என்னும் ஐந்துவித கோசங்களையும் குறிக்கின்றன. மூன்று பிராகாரங்கள் ஐந்து கோசங்களினால் ஆன ஸ்தூல ஸூக்ஷ்ம காரணம் என்னும் மூவகைச் சரீரங்களை விளக்குகின்றன,

ஆலயங்களில் அமைக்கப்பட்டிருக்கும் கோபுரங்களைப் பிரம்ஹரந்திர மத்யகபால த்வாரம் என்று யோகிகள் கூறுகின்றனர்.

மூலஸ்தானமூர்த்திக்கு நேராக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் துவஜஸ்தம்பம், யோகியானவன் பிராணவாயுவை நடுநாடியாகி ஸுஷும்னையில் அசைவற்று நிறுத்திக் கொண்டு தியானிக்கில், மனம் முதலிய கரணங்கள் யாவும் நின்று பிரபஞ்சமே தோன்றாது சிவதரிசனம் உண்டாகும் என்னும் உண்மையை அறிவிக்கின்றது.

> " தறிபோ லுடல நேரிருந்து
> தயங்கு மருங்கி னிருநாடி
> செறிபோய் மீளும் வலியதனை
> நிறுவி நடுநா டியிற்செலுத்தி
> யறிவோர் சிறிதுஞ் சலியாம
> லன்னப் பெயர்மந் திரமாறிக்
> குறியோ யிருந்த வொருகுறியைக்
> குறித்துக் கொண்டங் கிருந்தனரால் "
>
> " வாயு நிற்ப மனநின்று
> மனந்தா னிற்பப் பொறிநின்று
> பாய பொறிக ணிற்பவிடர்
> படுபுன் புலன்க ணின்றனவா
> மாய புலன்க ணின்றமையா
> லகிலந் தோன்றா துள்ளத்தே
> தூய பரமா னந்தபரஞ்
> சோதி தோன்றக் கண்டிருந்தார் "
>
> —சிவப்பிரகாசர் பிரபுலிங்கலீலை.

ஆலயங்களில் சிவலிங்க மூர்த்தியைத் தெரியவொட்டாது மறைத்து நின்று நீக்கிய வழி, சிவபெருமானைக் காட்டி நிற்கும் கதவுகள், ராகம், த்வேஷம், லோபம், மோஹம், மதம், மாற்சரியம் என்பவைகட்குக் காரணமாகிய அவித்தையை உணர்த்துகின்றன.

## சிவலிங்கம்

> " ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
> ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
> ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
> ஆய வரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே "

என்று திருமூலர் கூறியபடி, சிவலிங்கம் சிவாநந்தத்தைக் கொடுக்கும் சிவத்தையும், எதிரே இருக்கும் நந்தி முக்தியடைந்த ஆன்மாவையும், பலிபீடம் மலத்தை நீக்கும் சிவ சக்தியையும் குறிக்கும். பலிபீடம் பத்திர (மங்களத்தை உண்டாக்கும்) லிங்கமெனப்படும்.

> " தூலலிங்க மாந்தூபி சூக்குமமாம் உள்ளிலிங்க
> மேலும்பலிபத் திரம் "
>
> —சைவசமயநெறி.

மேலும், சிவசாதாக்கியம், அமூர்த்தி ஸாதாக்கியம், மூர்த்தி ஸாதாக்கியம், கர்த்துரு ஸாதாக்கியம், கர்ம ஸாதாக்கியம் என்பவைகளில் சிவலிங்கமானது கர்ம ஸாதாக்கியம் என்று சொல்லப்படுகின்றது. ஸாதாக்கியம் என்பது பிருதுவி தத்துவத்திலிருந்து 34-வதும், சிவ தத்துவத்திலிருந்து 3-வதுமான தத்துவமாகும்.

சிவபெருமான் ஆன்மாக்களுடைய தியான பாவனையின் நிமித்தமாக நிட்கள சகள (அருவுருவ) திருவுருவங்கொண்ட நிலையே ஆவுடையாளுடன் கூடிய இலிங்கமாம்.

> " நிட்களன்றா னன்பால் நினைந்தருச்சிக் கச்சகள
> நிட்களனா னனிமல னே "
>
> —சைவசமயநெறி.

ஞானசக்தியாகிய சிவலிங்கத்தில் காணப்படும் ஆவுடையாள் கிரியாசக்தியைக் குறிக்கும். இலிங்கத்தில் பிரமபாகம், விஷ்ணு பாகம், ருத்திரபாகம் என மூன்று பாகங்கள் உள. அவற்றுள் பிரமபாகம் நபும்சக லிங்கமும், விஷ்ணு பாகம் ஸ்திரீ லிங்கமும், ருத்திரபாகம் பும்லிங்கமுமாக (ஆண் பெண் அலி ரூபமாக) இருப்பது. அவன், அவள், அதுவாக இருக்கும் உலகத்திலே உயர்திணைப் பொருளும் அஃறிணைப் பொருளும் தம்மிடத்தே தோன்றி யொடுங்குகின்றன வென்பதை இவை உணர்த்துகின்றன.

அகரம் கண்டமும், உகரம் கோமுகமும், மகரம் வட்டமும், பிரணவம் இலிங்கமுமா

" சாதலும் பிறத்தலுந் தவிர்த்தெனை வகுத்துத் தன்னருள் தந்த எந்தலைவனை "



யிருப்பன. இது சிவபெருமானே பிரணவ முதற் பொருள் என்பதையும், எல்லாச் சுருதிகளும் பிரணவத்திடமிருந்து தோன்றி யொடுங்குவதுபோலவே எல்லாத் தேவர்கட்கும் பிறப்பிடமாய்,

> " சமயகோ டிகளெல்லாந்
> தந்தெய்வ மெந்தெய்வமென்
> றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிட "

நிற்பவரும் சிவபெருமானே என்பதையும் உணர்த்துகின்றது.

சிவலிங்கத்தின் தத்துவார்த்தங்களை விரித்து எழுதப் புகின் தனிப் புத்தகமாகி விடும் ஆதலால் இத்துடன் விடுத்தனம்.

சிவலிங்கத்திற்கு நேராக வைக்கப்பட்டிருக்கும் நந்தி பலிபீடம் இரண்டும்,

> " பதிபசு பாச மெனப் பகர்மூன்றிற்
> பதியினைப்போல் பசுபாச மநாதி "

என்று கூறியபடி பதியாகிய சிவம் எப்போழ்துண்டோ அப்போழ்தே பசு பாசங்களும் உள. இம்மூன்றும் அநாதி நித்யம் என்பது சித்தாந்த உண்மை. இன்னும் ஆலயங்களில் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு மூர்த்தியும் சைவசித்தாந்த தத்துவ உண்மைகளை விளக்கவே ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை விரிவஞ்சி விடுத்தனம்.

## பூஜை

இனி, பூஜைகளைப்பற்றிக் கவனிப்பாம். பூஜை என்பதற்கு ஞானத்தை உண்டாக்கக் கூடிய சாதனம் என்று பொருள்.

அத்தகைய பூஜை, ஆன்மார்த்தம் (தான் மாத்திரம் உய்வதற்காகச் செய்வது) பரார்த்தம் (பிறர் உய்வதற்காகச் செய்வது) என இருவகைப்படும். ஆன்மார்த்தமாவது சிவதீக்ஷை செய்யுங் காலத்தில் ஆசாரியனால் கொடுக்கப்பட்ட இலிங்க முதலியவைகளைப் பூஜித்தல். பரார்த்தமாவது உலகினர் வழிபட்டுய்வதற்காகத் தேவர்கள் இருஷிகள் அரசர் முதலியவர்களால் தாபிக்கப்பட்ட ஆலயங்களில் பூஜிப்பது. ஆன்மார்த்தத்திற்கும், பரார்த்தத்திற்கும் பூஜை முறைகளில் அதிக வித்தியாசம் இல்லையேனும், பரார்த்தபூஜையில் ஆவரணபூஜை, உபசாரங்கள், தீபாராதனை, உற்சவம், பிராயச்சித்தம் முதலியவைகள் அதிகமாக விதிக்கப்பட்டிருக்கின்றன. ஈண்டு பூஜையைப்பற்றி மாத்திரம் கவனிப்போம்.

ஆகமங்களின் பேதத்தினால் சில ஆலயங்களில் சிற்சில ஆசார அநுஷ்டானங்கள் மாறுபட்டபோதிலும், பிரதானமான பஞ்ச சுத்தி, பூஜை, நைவேத்யம், தீபாராதனை முதலியன ஒன்றுபோலவே காணப்படும்.

பஞ்சசுத்தியாவது, ஆன்மசுத்தி, ஸ்தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திரசுத்தி, இலிங்க சுத்தி என்பனவாம். பஞ்சசுத்தி செய்த பிறகுதான் சிவபெருமானைப் பூஜிக்கவேண்டும் என்பது ஆகமங்களின் கட்டளை.

முதலாவதான ஆன்ம சுத்தியானது பூத சுத்தி, அந்தரியாகம், சமாதி என்பனவற்றின் தொகுதியாகும். பூதசுத்தி என்பது சரீரங்கட்குக் காரணமான ஐவகைப் பூதங்களையும் சுத்தி செய்தலாகும். இதில், சூட்சும சரீரசுத்தி, தூலசரீரசுத்தி என இரண்டு பகுதிகள் உண்டு. சரீரத்தைச் சுத்திசெய்வதற்காக அதனோடு சம்பந்தப்பட்டுள்ள ஆன்மாவைப் பிராணாயாமத்தினால், த்வாத சாந்தத்தில் இருக்கும் சிவபெருமானிடத்தில் சேர்ப்பித்து, தத்துவங்களை மகா மாயையிலும், புரியஷ்டகங்களை - சூக்கும சரீரங்களை (சப்த பரிச ரூப கந்த மனசு புத்தி அகங்காரம்) பிரமா முதல் சிவமீறாகவுள்ள மூர்த்திகளிலும் ஒடுங்கினதாகப்பாவித்தல் சூட்சுமதேக சுத்தியாகும். நிவிருத்தி முதலியவைகளின் பீஜாக்ஷரங்களை உச்சரித்து அவைகளின் வலிகெடச் செய்து, தன் சரீரத்தை ஊர்த்துவமூலமான (மேலே வேரும், கீழே கிளைகளுமுள்ள) ஆலமரமாகப் பாவித்து, அதனைத் தனது வலக்கால் பெருவிரலிலிருந்து உண்டான அக்கினியினால் தகித்து, திருவருட் சத்தியாகிய அமிர்தத்தினால் நனைத்துச் சுத்தமானதாகப் பாவித்தல் ஸ்தூல தேக சுத்தியாகும். இதனுண்மை பிருதிவி முதலிய தத்துவங்கள் ஜடங்களானபடியால் அவைகள் தாமாகக் காரியப்படமாட்டாவெனக் கண்டு அவைகளினின்றும் நீங்கும் பாவனையாம்.

> " பாங்குபடத் தத்துவங்கள் நீங்கப் பூதசுத்தி "
>
> —சிவப்பிரகாசம்.

" நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த - ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய் "

**அந்தரியாகம் :** வெளியே செய்யும் முறை போலவே இருதய கமலத்தில் சிவபெருமானைப் பூஜித்துப் பூஜையின் பலனை அவரிடத்தே ஒப்புவித்தலாகும்.

**சமாதி :** அகண்டாகாரமான சிவபெருமானை விந்து தானத்தில் தீப ஜ்வாலை போன்றவராய்த் தியானித்துப் புறப் பூஜைக்கு அநுமதி பெறுதல்.

“ காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலாய்நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே ”
—**அப்பர் தேவாரம்.**

“ நாபியழ றனிலோமஞ் செய்ததற்பின்
புருவநடு வதனி னன்காத்
தீபசிகை போலுறையுஞ் சிவன்றன்னை
நினைந்தகத்துட் பூசை தன்னை
மாபவந் தீர்ந்திட முடித்தபின் னிலிங்கத்
தனிற்றழலில் வயங்கு மண்ணில்
தூபமுத லியவேந்திச் சிவபூசை தனையியற்றத்
தொடுக்க வேண்டும் ” —**வாயு சங்கிதை.**

**ஸ்தான சுத்தி :** அசுரர்கள் உட்பிரவேசியாதிருப்பதற்காக அஸ்திர மந்திரத்தினால் திக்பந்தனம் செய்வதால் பூஜை செய்யுமிடத்தைச் சுற்றி நாற்புறமும் அக்னி வடிவாகிய மதிலும், கவச மந்திரத்தை உச்சரித்து அவகுண்டனம் செய்வதால் மூன்றகழும், சக்தி மந்திரத்தைச் சொல்லி தேநுமுத்திரை காட்டுவதால் திருவருட் சத்தியாகிய வலை மேலும் கீழும் உண்டானதாகப் பாவித்தல். இதனுண்மை, பூஜாஸ்தானத்தைச் சிவனுறைகின்ற சிவதத்துவமாக்குதல்.

“ பகர்சிவ தத்துவ மாக்கற் றவசுத்தி ”
—**தத்துவப்பிரகாசம்.**

**திரவிய சுத்தி :** புஷ்பம் முதலிய பூஜா திரவியங்களை நிரீக்ஷணம் (பார்த்தல்) முதலிய ஸம்ஸ்காரங்களினால் சுத்தி செய்தல்.

இதன் தத்துவமாவது • திரவியங்கள் யாவும் மாயையினிடத்திருந்து தோன்றி மாயாசம்பந்தம் பெற்றிருப்பதால் சுத்தனாகிய சிவபெருமானுக்கு அவை உரியனவாகாவாதலால், நிரீக்ஷணை (சிவமந்திரத்தைச் சொல்லிக்கொண்டு பார்த்தல் முதலியன) திகளினால் சிவசக்தியை அதிற் பதியும்படி செய்யின் அவை சுத்தமாகி, சிவபெருமானுக் குகந்தனவாகும். அதாவது, பூஜாத் திரவியங்களும் சிவபெருமானுடைய எண்வகைச் சரீரங்களுள் அடங்கினவை என்றறிவதாம்.

“ நாலிரண்டு திருவுருவ நோக்கி நோக்கால்
நலங்கொள் திரவிய சுத்தி நயந்து ”
—**ஞானபூஜைத் திருவிருத்தம்.**

“ பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகிப்
புக்குளால் வாசமாய் நின்றா னாகி ”
—**அப்பர் தேவாரம்.**

**மந்திரசுத்தி :** தன்னுடைய ஆஸனத்திலே சிவாஸனத்தையும், தன் இருதயத்திலே சிவமூர்த்தியையும் பூஜித்துத் தன்னைச் சிவரூபமாகப் பாவித்துக்கொண்டு மந்திரங்களை ஹ்ரச்வ தீர்க ப்லுதக் கிரமமாக உச்சரித்தலாகும். இதனுண்மையாதெனின், பஞ்சாக்ஷரத்தைச் சாதாரண ஐந்தெழுத்தாகக்கொள்ளாமல் சிவ்விலே சிவமும், வவ்விலே திருவருட்சக்தியும்,யவ்விலே ஆன்மாவும், நவ்விலே திரோதானசக்தியும், மவ்விலே மலமும் ஆகிய ஐந்து முதலையுடையதாகக் காண்பதாகும்.

**இலிங்கசுத்தி :** சிவலிங்கத்தின் பேரில் இருந்த நிருமாலியங்களைக் களைந்து இலிங்கத்தையும் பீடத்தையும் அர்க்கிய ஜலத்தினாலபிஷேகித்தல். சித்பிரபஞ்சம், அசித் பிரபஞ்சம் என்னும் இரண்டினும் பிரிவறச் சேஷ்டித்து நிற்கும் சிவபெருமான் இலிங்கத்திடத்தேயும் இருக்கின்றார் என்றுணர்தலே இலிங்கசுத்தியின் உண்மையாகும்.

“ நாதன்மே லுகந்தமல ரொருக்கி யுருவநோக்கி
விமலனிறை யுணர்ந்தெ வையுமே னியான
சீலமுமங் கருவுதிரு வுருவுமான சிறப்புமுணர்ந்
திலிங்க சுத்தி சேர்த் திடாயே ”
—**ஞானபூஜைத் திருவிருத்தம்.**

இத்தகைய ஐந்துவித சுத்திகளையுஞ் செய்வது ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம் என்னும் ஐவகைப் பாசங்களைக் களைதல் என்னும் கருத்துப்பற்றியேயாம் என்பதை,

“ பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காகப்
பஞ்சவிதப் பாசம றப்பார் ”

என்னும் சைவசமயநெறிச் செய்யுளாலறிக.

“ ஓதியே கழிக்கின் றீர்கள் உலகத்தீர் ஒருவன் தன்னை நீதியால் நினைய மாட்டீர் ”



இதற்குப் பிறகு செய்யப்படுவது அபிஷேகம். அஃதாவது வடித்தெடுத்த நீரில் புஷ்பங்களையும் வாசனைத் திரவியங்களையும் சேர்த்து, சிவபெருமானை அபிஷேகித்தலாகும். இதனுண்மை “அருளொனும் புற விளையாட்டி” என்று காசிகாண்டத்திற் கூறியபடி திருவருள் ஞானமே நீரெனப் பாவித்து அபிஷேகஞ் செய்யின், மலநிவாரணம் ஏற்படும் என்பதாம்.

“தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர் தாமாட்டி ”

என்றபடி மருட்போதமே மலமாதலால் அம்மலவசத்தத்தை அன்பெனும் அருள் நீர்கொண்டு சுத்திசெய்தலென்னும் பாவனையாம்.

**வஸ்திரம் :** சிவபெருமானுக்கு மெல்லிய இழைகளையுடையதும் நுரைபோல் வெண்மையுடையதுமான பட்டு வஸ்திரஞ் சாத்துவது, திரோதான சக்தி நீங்குதலென்னும் பாவனையாகும்.

**ஆசனபூசை :** (சிவபெருமானுக்கு ஆசனமிடுதல்) அதாவது, ஆதாரசக்தி முதற் குடிலசக்தி யந்தமாகவுள்ளதும், முப்பத்தாறு தத்துவங்களையும் இருநூற்றிருபத்து நான்கு புவனங்களையு முறுப்புகளாகவுடையதும அநந்தாஸனம், ஸிம்ஹாஸனம், யோகாசனம், பத்மாஸனம், விமலாஸனம் என்னும் ஐந்து பிரிவினையுடையதுமான ஆசனங்களைச் சிவபெருமானுக்கு இட்டதாகப் பாவித்தல்.

“ ஆலவித் தென்னக்கோடி
பொருளெலா மடங்கவைகு
மூலமா யுறைந்து மன்னி
முக்குணங் கடந்துவெய்ய
காலனுருயிரை யுண்ட
கனைகழற்கடவுள் மூர்த்தி
மேலதாங் குடிலைதன்னின்
மேவிவீற் றிருக்கு மன்றே”
—**வாயு சங்கிதை.**

இத்தகைய ஆஸனம் சிவபெருமானுக்கு இடுவது சிவபெருமான் தத்துவாதீதர் என்பதை உணர்தற்கேயாகும். வித்தியாதேகம் (சிவபெருமானுக்கு பஞ்ச பிரம்ஹஷடங்க மந்திரங்களினலாய சரீரம்) கற்பித்தல். இதனுண்மை நிஷ்கள (அரூபியாயிருக்கிற) சிவபெருமான் உலகைச் சிருஷ்டிக்க இச்சித்த காலத்தில் அவரிடத்தேயுள்ள சக்திகளே சிரம் முதலியனவாகின்றன. அதாவது எல்லாவற்றிற்கும் அப்பாலாய் எல்லாவற்றிற்கும் மேலாய் விளங்கும் ஈசானசக்தி தலையாகவும், ஆன்மாக்களுக்கு ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்து மலத்தை நீக்குதற்குரிய புருஷசக்தி முகமாகவும், கோரமாகிய மலத்திற்கு விரோதியாயிருந்து அதனைச் சாந்தப்படுத்துதற்குரிய அகோர சக்தி இருதயமாகவும், ஆன்மாக்களது கன்மத்துக்கேற்ப தநுகரண புவனபோகங்களை அளித்துத் தருமம் முதலியவைகளை அநுபவிக்கச் செய்தற்குரிய வாமதேவ சக்தி குஹ்ய (தொப்பூழ்)மாகவும், இச்சாமாத்திரத்தினால் தநுகரண புவனங்களென்னும் சாதனமின்றி சகல பிரளயாகலர்க்குச் சரீரங்களையும், விஞ்ஞானகலர்க்கு வைந்தவ சரீரத்தையு முண்டுபண்ணக்கூடிய ஸத்யோ ஜாத சக்தியானது பாதமாகவும், முக்தாத்மாக்களுக்கு உணர்த்தப்படும் திருவருட் சக்தியே இருதயமாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக விருத்தலாகிய ஈச சக்தியே சிரஸாகவும், எல்லா ஆன்மாக்களையும் வசப்படுத்தும் அநாதிஸித்தமான வசித்வமே சிகையாகவும், ஆன்மாக்களை எக்காலத்தும் இரக்ஷிக்கும் சக்தியே கவசமாகவும், ஸர்வஞ்ஞத்துவமே நேத்திரங்களாகவும், யாவராலும் ஆற்ற முடியாத பராக்கிரமமே அஸ்திரமாகவும் இருந்து பிரபஞ்ச காரியங்களை நடத்துகின்றனவென்பதாம். இதன் உண்மையைப் பௌட்கரம் - மிருகேந்திரம்- பதிபடலத்தில் காணலாம்.

பூஜையில் பதினறுவித உபசாரங்கள் விதிக்கப்பட் டிருக்கின்றன. அவையாவன:- ஆவாகனம், தாபனம், ஸந்நிதானம், ஸந்நிரோதனம், அவகுண்டனம், தேநுமுத்திரை, பாத்தியம், ஆசமநீயம், அருக்கியம், புஷ்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பாநீயம், செப சமர்ப்பணை, ஆராத்திரிகம், (தீபாராதனை) என்பனவாம்.

**ஆவாகனம் :** பூஜையின் பொருட்டுச் சிவபெருமானைச் சிவலிங்க வடிவத்தில் மூல மந்திரத்தைச் சொல்லி வரவழைத்து அபி

“ எரியாற் சுடப்படினு மெய்யுண்டா மெய்யார் பெரியார்ப் பிழைத் தொழுகுவார் ”

முகமாகச் செய்தல் ஆவாகனமாகும். இதனுண்மை சிவபெருமானுடைய பரிபூரணத்தைச் சிவப்பிரசாதமாகிய அருளினலறிந்து அதிலழுந்துதலென்னும் பாவனையாம்.

“ இப்படித் தரைமுதற் சமனை யீறுய்ச்
செப்ப வியாபிக்கும் பரம சிவனது
பொருவி லுயர்பரி பூரணந் தன்னை
யறிவி லழுந்துத லாவா கனமே ”

—சதாசிவரூபம்.

**தாபனம்:** ‘தயாநிதியே! அடியேனை அநுக்கிரஹிப்பதற்காக இலிங்கத்தில் எழுந்தருளி இருக்கவேண்டு’மென்று அன்புடன் யாசிப்பது தாபனம். ஆன்மா சிவபெருமானை அருளினலறிந்து அதிலழுந்துதலை நிலைபெறச் செய்தலே இதன் கருத்தாகும்.

“ அலையா தழுந்த நிலைபெறல் தாபநம் ”

**ஸந்நிதானம் :** பூஜிக்கப் படுபவனாகிய கடவுள், அநுக்கிரஹிக்கும் தன்மையையும் பூஜிக்கின்றவனாகிய தான் அநுக்கிரஹிக்கப் படும் தன்மையையும் உண்டுபண்ணுவதே ஸந்நிதானமாகும். (ஸந்நிதானம்-ஸமீபித்த சம்பந்தம்).

“ நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்காக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே ”

என்றும்,

“ இவன்றன தறிவு சிவன்பூ ரணத்திலும்
சிவபூ ரணத்தவ மிவன்றன தறிவிலும்
ஒன்றை யொன்றகலா துறவு செய்திருப்ப
தொன்றிய சந்நி தானமென் றுரைப்பர் ”

என்றும் கூறியபடி, கடவுள் ஆண்டவன், நாம் அடிமை என்னும் உணர்வு மனதில் பதிவதே இதனுண்மை யாகும்.

**ஸந்நிரோதனம் :** ‘ பகவானே ! எப்போதும் என்னிடத்தில் அநுக்கிரஹத்தோடு இருக்க வேண்டும்’ என்று பிரார்த்திப்பதே ஸந்நிரோதனமாகும். முற்கூறிய ஆண்டான் அடிமை என்னும் உணர்வு எக்காலத்திலும் மனதை விட்டகலாமல் சமைவதே இதன் பொருளாம்.

“ இவனிடத் துறமறி வென்று மொழியாச்
சமைவது தானே ஸந்நிரோ தனமாம் ”

**அவகுண்டனம் :** சிவலிங்கத்தைச் சுற்றிக் கவச மந்திரத்தினல் மூன்றகழ் உண்டானதாகப் பாவித்தல். இதன் கருத்து தரிசிக்கும் பக்தர்கட்குச் சிவத்தை அறிவிப்பதே யாகும்.

**தேனுமுத்திரை :** சிவ பெருமானுக்கு முன்பாகப் பசுவின் மடிபோன்றதோர் முத்திரை காட்டுதலே தேனுமுத்திரை யாகும். இலிங்கத்தையும் சிவபெருமானையும் அபின்னமாகப் பாவித்தலே இதனுண்மையாகும்.

**பாத்தியம் :** மூலமந்திரத்தை ‘நம:’ என்னும் இறுதியை உடையதாக உச்சரித்து ஜலத்தைத் திருவடிகளில் சமர்ப்பித்தல்.

**ஆசமநீயம்:**—மூலமந்திரத்தை ‘ஸ்வதா’ என்னும் இறுதியை உடையதாக உச்சரித்துச் சிவபெருமானுடைய ஐந்து முகங்களிலும் மும்மூன்றுதரம் ஜலத்தைச் சமர்ப்பித்தல்.

**அர்க்கியம் :** ஸ்வாஹாந்தமாக மூலமந்திரத்தை யுச்சரித்துச் சிவபெருமானுடைய ஈசானம் முதலிய சிரசுகளில் ஜலத்தைச் சமர்ப்பித்தல். இவைகளி னுண்மையாவது, ஆன்மாவானது தநுகரண புவனபோகங்களாகிய குற்றங்களினின்றும் நீங்கிப் பரிசுத்தமாகிச் சிவபெருமானுடைய பிரகாசமாகிய இச்சாஞானக்கிரியைகள் [illegible] ஸ்தான[illegible] திருவடியை அடைந்து சக்திகளுடைய விளக்கத்திலே திருவருள் என்னும் தன்மை பொருந்திய திருமுகத்திற் பொருந்தி, அருள் விளக்கத்திலே நிஷ்களமாகிப் திருமுடியடைதலென்னும் பாவனையாம்.

“ பாத்தியா சமனர்க்கியம் பழுதக
லான்ம சுத்தி நிமித்தமாகவும் ”

**புஷ்பதானம் :** சிவமந்திரத்தை வௌஷடந்தமாக உச்சரித்துப் புஷ்பங்களைச் சாத்துதலாகும். இதனுண்மை சுத்த சைதந்யமாகிய மோக்ஷத்தைப் பெறுதலாகும்.

“ சதாசிவரூபம் நறுமலர் தனை நல்வீட்டின்பம்
குறுகுத லேதுவாகவும் கொடுத்து ”

**தத்துவத்திரய பூஜை :** ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவம் இம்மூன்றிற்கும் சிவபெருமானே அதிபதி என்று அருச்சித்தல். இதனுண்மை ஆன்மபோதம்





நீங்கிச் சிவபோதம் பதியும் காலத்து மனம் வாக்கு காயத்தான் வந்த வினைகளும், சஞ்சிதம் ஆகாமியம் பிராரத்தம் என்னும் வினைகளும் நீங்குதல் என்னும் பாவனையாம்.

“ நீங்கருங் கருமசுத்தி நிமித்தம்
நீங்கறுந் தத்துவத் திரயஞ்சாத்தி.”

இதற்குப் பிறகு இலயாங்கம். பஞ்சபிரம்ஹஷடங்க மந்திரங்களை அவ்வவ் அவயவங்களில் பூஜித்தல்.

**போகாங்கம் :** பஞ்சபிரம்ஹஷடங்க மந்திரங்களை எட்டு மூலைகளிலும் பூஜித்தல். இதனுண்மை, சிவயோகத்திற்குரிய சர்வஞ்ஞத்துவம், நித்திய பரிபூரணம், அநாதி போதம், சுதந்திரம், அலுப்தசக்தி, அனந்த சக்தி என்னும் ஆறு குணங்களையும் ஆன்மா பெறுதலென்னும் பாவனையாம்.

**தூபம் :** கிரியாசக்தி ரூபமாகிய தூபத்தைச் சிவசந்நிதானத்திலிடுதலின் உண்மையாவது, ஆணவமலமாகிய அறியாமையைக் கிரியாசக்தியைக் கொண்டு சிவபெருமான் நீக்குதலெனும் குறிப்பேயாகும்.

**தீபம் :** சிவபெருமானுக்குத் தீபம் சமர்ப்பித்தலின் கருத்து : சிற்சக்தியாகிய தீபம் ஆன்மாவினது மலத்தைப்போக்கி ஞானத்தை விளக்குதலென்பதாம்.

“ஞானவிளக்கம் நண்ணுதற் பொருட்டு
தூபதீபந் தலைதந்தினி தளித்து ”

**நைவேத்தியம் :** ஆன்மகுணமாகிய அகங்காரம், சங்கற்பம், குரோதம், மோகமும் என்பவைகளையே அமுதாகச் சமர்ப்பித்தலென்னும் பாவனையாகும். பிரமாணம்,

“ பாட்டிற் கின்புறு குருபரன்
பாதமேற் கண்ணீ
ராட்டிச் சொன்மல ரணிந்துதற்
போதவின் னமுதை
யூட்டித் தற்பரஞானமா
மோமவெங்கனலை
மூட்டிச்சம்புவின் பூசைமேன்
முயற்சியாளுர் ”

—திருவிளையாடற் புராணம்.

**பானீயம் :**—வாசனை பொருந்திய தீர்த்தத்தைச் சிவபெருமானுடைய திருப்திக்காகச் சமர்ப்பிப்பது.

**ஜெபசமர்ப்பணம்:**—சிவமூல மந்திரத்தை நூற்றெட்டு உருஜெபித்து அதைச் சிவத்தினிடத்திலேயே ஒப்புவித்தல். இதன் உண்மையாவது: ஆன்மா சர்வ குணங்களும் கழன்று மோக்ஷமடைதலென்பதே யாகும்.

“எல்லா நன்மையு மெய்துதற் பொருட்டு
நல்ல ஜெபத்தை நயந்து நிவேதித்து ”

**ஆராத்ரிகம் :** அதாவது தீபாராதனை. இஃது எல்லாக் கோயில்களிலும் பெரும்பாலும் சாயங்காலத்திலே நடைபெறும். அதாவது, பலவகையான தீபங்களைச் சிவபெருமான் முன்பாகக் காட்டுதல்; ஒவ்வொரு தீபத்துக்கும் ஒவ்வொருகருத்துண்டு. அவற்றுள் முக்கியமானவை ஐந்து தட்டுகளும் குடமும். இவற்றின் கருத்தாவது : ஐந்து தட்டுகள் ஈசானமுதலியவைகளையும், குடம் சாதாக்கியதத்துவத்தையும் குறிக்கின்றமையால், ஈசாநம் முதலியன ஸாதாக்கியத்தில் ஒடுங்குகின்றன. அச்சாதாக்கியமும் சிவத்திடத்தே ஒடுங்குகின்றதென்பதாகும்.

கடைசியாகக் காட்டப்படுவது கர்ப்பூரம். இதன் கருத்தாவது : கர்ப்பூரம் வெண்மை நிறத்தைப் பொருந்தி, அக்நி பற்றிய விடத்தே அதன் வடிவமாக விளங்கி, ஒரு பற்றுமில்லாமல் முற்றுங் கரையப்பெற்று ஆகாயத்துடன் கலந்துவிடுவது போல், ஆன்மாவானது சத்துவ குணத்தை அடைந்து ஞாநமாகிய அக்நியுடன் சம்பந்தம்பெற்று மூவகைச் சரீரங்களும் எல்லாப் பற்றுக்களும் நீங்கப்பெற்று, பரமுத்தியடைதல் என்னும் பாவனையாம்.

“ அக்கினிகர்ப் பூரத்தை
அறவிழுங்கிக் கொண்டாற்போல்
மக்கினம் பட்டுள்ளே
மருவி இருந்தாண்டி ”

—பட்டினத்தடிகள்.

“ தீதனையாக் கர்ப்பூர தீபமென நான்கண்ட
ஜோதியுடனென்றித் துரிசறப்ப தெந்நாளோ”

—தாயுமான சுவாமிகள்.

பிறகு, சிவபெருமானுக்கு அஷ்டபுஷ்பம் சாத்தல் : கொல்லாமை, ஐம்பொறி யடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பவைகளே சிவபெருமானுக்குகந்த மலர்கள் என்னும் பாவனையாம்.

பிரதக்ஷிணம்செய்தல் : பிரதக்ஷிணம் என்னும் சொல்லுக்குக்கோபமுதலியனவற்றின் நீக்கம், மோக்ஷஸித்தி, மலநிவாரணம், திருவருட்செல்வப் பேறு என்பவைகள் பொருளானபடியால், ஆன்மா அருள் வாயிலாக யாண்டும் சிவபெருமானோடு வியாபித்தலென்னும் பாவனையாகும்.

பூஜையின் முடிவில் சிவபெருமான் முன்னிலையில் செய்யப்படும் நமஸ்காரம்: ஆன்மா பிரம விஷ்ணுக்களது தொழிலையும், அவர்களை அதிஷ்டித்து நிற்கும் ஞானக் கிரியைகளையும் விட்டு நீங்கி, சிவத்திடத்தே சேரும் பாவனையாகும்.

> " அயன்மா லிருவர் கீழாகையின்
> பொருட் டுச்சதா சிவரூபம்
> சயமாண் புறவெதிர் தண்டம் பண்ணி "

இவ்விதமாக ஆலயங்களில் நடத்தப்படும் தரிசனம், யாகம், உற்சவம் முதலான ஒவ்வொன்றும் சமய உண்மைகளை உட்கொண்டே விளங்குகின்றன. ஆதலாற்றான் சைவ சமயத்திற்கு முக்கிய பிரமாணமான சிவஞானபோதமும்

> " செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
> அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
> மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
> ஆலயந் தானும் அரனெனத் தொழுமே "

என்று ஆலய வழிபாட்டை முடிவான அபிப்பிராயமாகக் கூறியிருக்கின்றது.

மேலும், ஆலயங்கள் இத்துணை விசேஷமுடையனவா யிருப்பதாலன்றோ நமது சமயாசாரியர்கள் யாவரும் ஆலய வழிபாட்டை மேற்கொண்டனர். இவற்றால் சிவாலயங்களுடையவும், சிவ பூஜைகளுடையவும் உண்மைகளை உணர்ந்தும், பிறருக்கு உணர்வித்தும் சிவாலயங்கட்குச் சென்று சிவத்தொண்டு புரிவதுமே நாம் எடுத்த ஜென்மத்தின் பயனாகும்.

அது பற்றியன்றோ திருநாவுக்கரசு சுவாமிகள்,

> " ஆக்கை யாற்பயனென் அரன்
> கோயில் வலம்வந்து
> பூக்கை யால்அட்டிப் போற்றிஎன் னாதஇவ்
> வாக்கை யாற்பயனென் "

என்றும், ஔவைப் பிராட்டியார்,

> " ஆலயந் தொழுவது சாலவு நன்று "

என்றும் கூறியிருக்கின்றனர்.

# சேக்கிழார் நூல் நயம்

T. S. கந்தசாமி முதலியார், பி. ஏ.

செந்தமிழணங்கு செய்த தவப் பயனாய்த் தோன்றிய கவிகள் பலருள்ளும் சேக்கிழார் 'தெய்வமணக்கும் செய்யுள்' பாடிய தெய்வ அருட் கவிஞர்; செந்தமிழ்த் தேனில் அன்பைக் குழைத் தருமருந்தாக்கி அமுதினளித்த அருட் கவிஞர் ; அன்பாங் கடலைஅளந் ததன் அகலமும் ஆழமும் யாருமறிய அருள் செய்தளித்தவள்ளல். அவர் பாடியருளிய ' திருத்தொண்டர் புராணம்' ஈடும் எடுப்புமற்ற ஒரு மெய்ந்நூல். அந்நூலின் நயத்தை உள்ளவாறறிந் தின்புறுதல் தமிழ் மக்கள் தலையாய கடனாம். பயில்வார்க்குப் பயிலுந்தொறும் அதன் நயம் ஒருகாலைக் கொருகால் மிகும். அதனைக் கற்போர் அதன் செந்தமிழ்ச் சுவையினில் இன்புறுவர்; கவிநயத்தில் களித்துத் திளைப்பர்; சமய அறிவில் அமைதியடைவர். பிறவிக் கடலைக்கடக்க விரும்புவார்க்கது பெருந்தோணி; கவிநயம் தேடுவார்க்குக் கவிநலப் பேழை ; ஊனமில் ஞானம் தேடுவார்க்கு ஞானக் கருவூலம். ' வான்மீகி பகவனு மொப்பல்ல' வென உமாபதி சிவாசாரியரே நம்தாசிரியரைப் புகழ்ந்துள்ளா ரெனின், அப்பெரியார் செய்த பெரிய புராணத்தின் பெருமையை

" ஊனமாம் உடம்பினில் உறுபிணி கெடஎண்ணில் - ஞானமா மலர்கொடு நணுகுதல் நன்மையே "



யாரே கணித்தற்குரியர் ? சிவாசாரியார் கூறிய உரை வெறும் புகழுரை யன்று ; பொருள்சேர் புகழுரையாம். கவிகளில் வான்மீகிக்கு மிக்ககவி ஒருவருமில்லை யென்பர் வடமொழி யறிஞர். வான்மீகியின் கவிகள் எளிதில் பொருள் பயக்குந் தன்மையன ; ஆழ்ந்தகன்ற நுண்பொருளன ; நுணுகிக் கற்பார்க்குக் கற்குந்தோறும் ஆழ்ந்த நுண்பொருள் தருவன ; செவ்விய எளிய தீஞ்சொற்களாற் றொடுக்கப்பட்டன. வான்மீகியின் கவிகள் தழுவிய நலன்களும் பிறநலன்களும் நம் சேக்கிழார் கவிகளில் காணலாகுமென்பது உண்மையாதலின், உமாபதி சிவாசாரியர் அங்ஙனம் கூறினர். இருமொழியையும் மறுவறவுணர்ந்த பெரியாராய சிவாசாரியர் அங்ஙனம் கூறியிருக்கவும், இக்காலத்துச் சிலபுலவர் சேக்கிழார் பெருங் கவிகளோடு ஒருங்கு வைத்தெண்ணற் குரியரல்லரென வாய் கூசாது விளம்புவர். அவர், சேக்கிழார் செய்துள்ள கவிக்கடலின் கரை விளிம்பிற்கும் செல்லாதவர் எனத் துணிந்து கூறலாம்.

வளவன் தமிழ்ச்சுவையறிந்த தமிழரசன். 'சீவகசிந்தாமணி' அவன் நெஞ்சைக் கவர்ந்தள்ளிக் கொள்ளை கொண்டது. அது மத்தயானை போன்ற கம்பீரத் தோற்றமுடையது; அதனையொத்த நடையை யுடையது; ஐம்புலன்களைக் கலருமழகை விரிப்பதில் இணையற்றது ; தமிழ்ச் சுவையறிந்த நச்சினார்க்கினியரை உரையெழுதத் தூண்டியநலத்தது. அத்தகைய 'சிந்தாமணி'யின் நயமறிந்தவளவனும், 'திருத்தொண்டர் புராணம்' கேட்டபின், முன்னையதில் வைத்த ஆசை நீத்தான் என்ப. காமச் சுவையும், சமண வாசனையும் மிதப்ப உடையது அச் 'சிந்தாமணி': நம் சேக்கிழார் வாக்கில்,காமச் சுவையும் தெய்வ மணங்கமழும்.

> " கற்பகத்தின் பூங்கொம்போ!
> காமன்றன் பெருவாழ்வோ!
> பொற்புடைய புண்ணியத்தின்
> புண்ணியமோ! புயல்சுமந்து
> விற்குவளை பவளமலர்
> மதிபூத்தவிரைக் கொடியோ !
> அற்புதமோ சிவனருளோ !
> அறியேன்என் றதிசயித்தார் "

என்ற பாட்டில் வன்தொண்டர்க்குப்பரவையாரைக் கண்டபோது எழுந்த காதலை ஆசிரியர் கூறியிருக்கும் நயத்தை நோக்குக. காதலும், தெய்வப் போர்வை கொண்டுலவுவது காண்க. செஞ்சடை வானவர்க்கு மீளா அடிமையாய வன்றொண்டர் காதல் சேக்கிழார் கூறியதுபோற் றாய்தாதலன்றிப் பிறிதாமா றெங்ஙனம்? பரவையார் வடிவில் பறிகொடுத்த நெஞ்சுடையாராய வன்றொண்டர், அவரைக் கண்டதும், அவரை வெவ்வேறு பொருளாகக் கருதி, இறுதியில் ' சிவனருளோ' என அதிசயித்தார் என்று ஆசிரியர் கூறியிருப்பதின் நுண்மை மிகவுமழகியது. வன்றொண்டரைப் பரவையார் கண்ணுற்றஞான்று, பரவையார்க்கு விளைந்த காதலை உரைக்கப் புகுந்த விடத்தும் நமதாசிரியர் பாடிய செய்யுளும், அதுபோன்றே நுண்பொருளுடையது.

> " முன்னேவந் தெதிர்தோன்றும்
> முருகனோ ! பெருகொளியாற்
> றன்னேரில் மாரனோ !
> தார்மார்பின் விஞ்சையனோ !
> மின்னேர்செஞ் சடையண்ணல்
> மெய்யருள்பெற் றுடையவனோ
> என்னேஎன் மனந்திரித்த
> இவன்யாரோ எனநினைந்தார் "

சிவன் கழலன்றி அயலறியா மனத்தராய அவ்விருவருள் ஒருவர்பால் மற்றொருவர்க்கு விளைந்த விழைவு, சிவனருளின் வழித்தாயதெனக் 'காதலிருவரும் கண்டனர்' என்று ஆசிரியர் கூறியிருப்பதின் உண்மை கற்போருளத்தைப் பிணிக்கும் தகையது.

'திருத்தொண்டர் புராண'த்திற்கு முதல் நூல்களாவன, திருத்தொண்டத் தொகையும், திருத்தொண்டர் திருவந்தாதியுமாம். அடியார் சரிதவரலாற்றுண்மைகள் விரிவாக அந்நூல்களிற் காணப்படவில்லை. அந்நூல்களிற் கண்ட வரலாற்றுண்மைகளை விரித்துச் சேக்கிழார் நூல் செய்துள்ளார். அடியாருள் அடியாரானமையாலும், திருவருட்டுணை யுடையூராதலாலும், ஆசிரியர் அந்நூல் செய்துள்ளா ரென்பது அந்நூலைக் கற்போர்க்கு விளங்கும். 'முன்னோர் மொழி பொருளை' நமதாசிரியர் எங்ஙனம் போற்றியுள்ளாரென்று, மூந்து நூல்களை நம்பெரிய புராணத்தோடு ஒருங்கு கற்று நோக்கு

"கருவிகா ளங்களோய்ந்த தொண்டர்க ளிடத்திலோ நீவீற்றிருப்பது கொம்பனேற் குளவ பகலாய்"

வார்க்குப் புலப்படும். 'இலைமலிந்த வேல் நம்பி எறிபத்தர்' என்ற திருத்தொண்டத் தொகைச் சொற்றொடர்ப் பொருளை, நமதாசிரியர் போற்றியுள்ள திறம் மிகமிக அழகிது. இச்சொற்றொடர்ப் பொருள் 'பழமறை பரசும் தூயபாசு முன்னெடுக்கப் பெற்றார்' எனவும், 'மங்கலமழு' எனவும் புராணத்துட் கூறப்பட்டுளது. மழுவால் யானையை எறிபத்தர் துணித்தாராயினும், அடியாரல்லல் நீக்கற்பொருட்டு அது செய்தாராதலால், அம்மழு தூயவினை செய்ததாம். ஆதலினால் அது மங்கல மழுவுமாம். அக்காரணம் பற்றியே தமிழ் மறையில் 'பரசுபாணியர்' என்றும், 'இலைமலிந்தவேல் நம்பி' என்றும் நம்மாசாரியர்களாற் பரவப் பெற்றுளது என்றும், தமிழ்மறையே பழமறையென்றும், அஃதின்றேல் அம்மறை பழமறை முழங்கியதையே மீண்டும் முழக்கிற்றென்றும் ஆசிரியர் கருதுகின்றார் என்பது புராணத்தில் நன்கு விளங்கும். இக்கருத்தே பற்றிப் பெரியாரானார்க்குச் 'செய்தனவே தவமாம்' என்றும், அத்தகைய 'தவத் தொழில் செய்பவரே தவஞ்செய்வாருள் 'நற்றவம்' செய்வாரென்றும், நமதாசிரியர் குறிப்பாகக் கூறி மழுவினால் வினை செய்தார் நற்றவஞ் செய்தவரானார் என்றும் காட்டி,

'மற்றவ ரினைய வான
வன்பெருந் தொண்டு மண்மேல்
உற்றிடத் தடியார் முன்சென்
றுதவியே நாளும் நாளு
நற்றவக் கொள்கை தாங்கி
நலமிகு கைலை வெற்பிற்
கொற்றவர் கணத்தின் முன்னும்
கோமுதல் தலைமை பெற்றார்'

என்று செய்யுள் செய்துள்ளார். ஈண்டு 'நற்றவஞ் செய்வார்க்கிடம் தவம் செய்வார்க்குமஃதிடம்' என்ற திருத்தக்கதேவர் வாக்கு சிந்திக்கப்படற்குரியது.

'வெல்லு மாமிகவல்ல' என்ற தொடரின் பொருளழகைச் சேக்கிழார் மெய்ப்பொருள் நாயனார் சரிதத்தில்,

'கைத்தலத் திருந்த வஞ்சக்
கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தக மவிழ்ப்பான் போன்று
புரிந்தவர் வணங்கும் போதிற்
பத்திரம் வாங்கித் தான்முன்
னினைந்தஅப் பரிசே செய்ய
மெய்த்தவ வேட மேமெய்ப்
பொருளெனத் தொழுது வென்றார்'

என்ற திருவிருத்தத்தில் விளக்கியுள்ளார். முத்திநாதன் தான் கருதியது செய்ய, மெய்ப்பொருள் நாயனார் வீழ்ந்தாரேனும, தம்மை அது செய்தவனை நோவாது, அவன் தாங்கிய வேடத்தைக் கருத்திருத்தி, அவ்வேடமே மெய்ப்பொருளெனக் கண்டு தொழுதார். தொழுதபோது வென்றவர் மெய்ப்பொருளாரே, தோற்றவன் முத்திநாதனே. ஆதலால் மெய்ப்பொருளார் உடல் நீத்தஞான்றும் வெற்றியே பெற்றார். இக்கருத்தைத் திருத்தொண்டத் தொகையில் வந்துள சொற்றொடரிற்கண்டு அக்கருத்தை யாண்டுவந்த சொற்றுணைகொண்டு சேக்கிழார் வனப்புற விளக்கியுள்ளார்.

## II

'திருத்தொண்டர் புராணத்தில்' அடியார் தனிச்சரிதங்கள் 'பத்திச்சுவைநனி சொட்டச்சொட்ட' கவிநயம் கனிந்தொழுகக் கூறப்பட்டுள்ளன. அப்பெரியார் சரிதங்களுட் காப்பிய ஒருமையைச்சேக்கிழாரன்றிப்பிறர் யாரே காணவல்லார். அடியார் பத்தியில் ஆழ்ந்து நின்று அருள்கூர்ந்து திருத்தொண்டத் தொகையைத் திருவாய் மலர்ந்தருளிய வன்றொண்டரைத் தனிநாயகராம் காப்பியத் தலைவராக ஆக்கிக் காப்பியம் இயற்றி, வன்றொண்டரால் பரவப்பெற்ற அடியமர்களின் சரிதங்களை அவர் கூறிய முறையிற் கூறி அவைகளை அக்காப்பியத்திற் கங்கங்களாக வாக்கி, உலகிற்கு ஓங்கிய உதவி செய்த வள்ளன்மை சேக்கிழார்க்கேயுரியது. காவியச் சுவைகலந்து, ஓவிய நலம் கலந்து, ஆசிரியர் அடியார் சரிதங்களைக் கூறுகின்றாராதலின், அம்மெய்யன்பர் சரிதங்களைப் படிப்போர், கவியின் நயமும், பத்திச்சுவையுமொருங்கே நுகர்ந்து இன்புறுகின்றனர். சேக்கிழார் கூறியுள்ள அடியார் சரிதங்களைக் கற்போர், சேக்கிழார் இருதய உலகிற் கலந்து கற்பின், தம்மைச் சூழ்ந்து நிற்கும் பொய்யுலக வாசனைத் தொடக்கற்று பொய்யிலா மெய்யுலகத்தில் சஞ்சரிப்பர் என்பது திண்ணம். அங்ஙனம் ஒருவர்





அடிக்கடி அம்மெய்யுலகிற் சஞ்சரிக்க நேர்ந்தால், அம்மெய்யுலகம் அவர்க்குடைமையாக வந்து வாய்க்கும்.

நம்பெருங் காப்பியத்திற்கு மன்னர் திருவும், வைதிகத் திருவும் ஒருங்கே சேரப்பெற்றுப், பரவையாரையும் சங்கிலியாரையும் முறைப்படி மணந்து, அடியார்கள் திறத்தன்பு கொண்டு, அவர் சரிதநுட்பங்களாய நன்மணிகளை இடையிடைத் திருத்தொண்டத் தொகையிற் கோத்து, தனிமணிவடமாச் செய்து, உலகிற்கு வுள்ளற்றன்மையோடு வழங்கி, சேரர்பெருமான் தோழராகி, உமை கேள்வரனுப்பிய வெள்ளானை மீதிவர்ந்து, கைலைபுக்க பெருஞ் செல்வராம் சுந்தரர் நம் பெருங்காப்பியத்திற் கேற்ற தனிப் பெருங் காப்பியத் தலைவராவர். 'திருத்தொண்டர் புராண'த்தைக் கவின் பெருங்காப்பியமாக வாசிரியர் அருளிச்செய்தாராதலின், காப்பிய உறுப்புகளாய நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்புகளைப் புராணத் தொடக்கத்தில் கூறியுள்ளார். மனுநீதிகண்ட புராணம் கூறு முகத்தால், நகரச் சிறப்பை ஆசிரியர் கூறியுள்ளார். 'திருத்தொண்டத் தொகை' ஓதப்பெற்ற நகரமும், அதனையுடைய நாடும், காப்பியத்திற்கு முறையே நகர நாடுகளாமாதலின், புனனாட்டையும் ஆரூரையும் ஆசிரியர் வர்ணித்துள்ளார். 'மனுநீதிகண்ட புராணம்' என்ற தலையங்கத்திற்குப் பதிலாக 'திருநகரச் சிறப்'பெனத் தலைப்புப் பெயர் கொடுத்துத் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் பதிப்பித்து வரும் பெரிய புராணத்தில் அச்சிடப்பட்டுள்ளது. சில ஏட்டுப் பிரதிகளிலும் 'நகரச் சிறப்பெனும் பெயர்காணப்படுகின்றது. 'மனுநீதிகண்ட புராண'த்தின் ஈற்றுச்செய்யுளில், ஆசிரியர் அச்சருக்கத்தைக்கூறியதன் நோக்கம் புலப்படுகின்றது. அச்செய்யுள் வருமாறு:—

இனையவகை யறநெறியி
லெண்ணிறந்தோர்க் கருள்புரிந்து
முனைவரவர் மகிழ்ந்தருளப்
பெற்றுடைய மூதூர்மேற்
புனையுமுரை நம்மளவிற்
புகலலாம் தகைமையதோ
அனையதனுக் ககமலரா
மறவனார் பூங்கோயில்.

நகரச் சிறப்பு அரசின் நலம் கூறாது முற்றுப் பெறாதெனக் கருதி, மனுச்சோழன், நீதித்திறங் கூறுமுகத்தால் அரசின் நலம் கூறி, ஆசிரியர், நகரச் சிறப்பை முழுதுற விரித்தாராவர்.

நமது திருத்தொண்டர்புராணம் பெருங் காப்பியமாமாறு யாங்ஙனமெனிற் காட்டுதும்: கவி, கடவுள் வாழ்த்துக் கூறி காவியத்தைத் தொடங்குகிறார். வாழ்த்தப்பட்ட கடவுள் ஏற்புடைக் கடவுளுமாவர்; கவிக்கு வழிபடு கடவுளுமாவர். மன்னர் திருவுடையவரும், உலகை வென்ற வீரருமாய வன்றொண்டரைத் தனிநாயகராகக் கொண்டுளது இந்நூல். கவிகூறியுள்ள கடவுள் வாழ்த்து, அம்பலவாணரா லடியெடுத்துக் கொடுக்கப்பெற்ற பெருமை யுடையதுடன், மாண்புமிக்க நுண்பொருள்கள் பலவும் தன்னகத்தே கொண்டது. அவ்வாழ்த்தைக் கூறக்கூற எல்லையிலின்பம் பெருகும். காப்பிய முழுதிலும், வீரச்சுவையின்பாலதாகிய பத்திச்சுவை யூடுருவியுள்ளது. பத்திச்சுவையின் பல பேதங்களும் இந்நூலகத்தே மிளிர்கின்றன. நூலிடையி லாங்காங்கே பிற சுவைகளும் கவிநயத்தோடு கூறப்பட்டுள்ளன. தொண்டர் கூட்டத்துட் சார்ந்த பல அடியார் சரிதங்கள் தொண்டர்க்குத் தொண்டராம் வன்றொண்டர் சரிதம் கூறு முகத்தால் கூறப்பட்டுள்ளன., புராணத்துக் கூறப்படும் சரிதங்கள் பண்டைப் பெருமக்களாலும், நாயன்மார்களாலும் போற்றப்பட்டவைகள். காப்பியத் தலைவர் பெயரேனும் ஆக்கியோர் பெயரேனும் இந்நூலுக்குச் சூட்டப்படாமல், 'ரகுவம்சம்' என்றாற்போல், காப்பியத் தலைவர் சார்ந்த வகுப்பாம் 'தொண்டர்' என்னும் பெயர் கொண்டு 'திருத்தொண்டர் புராணம்' என்று பெயர் சூட்டப்பட்டுளது. இந்நூல் 'வீடடைதலை' விழுப்பயனுக் கொண்டெழுந்துளது. புராணத்துள் ஆங்காங்கே வைகறையும், காலையும், மாலையும், இரவும், பகலும், ஞாயிறும், மதியமும் அழகாக வருணனை செய்யப்பட்டுள்ளன. குறிஞ்சியும், முல்லையும், மருதமும், நெய்தலும் அணிபெறப்புனைந்து கூறப்பட்டுள்ளன. இளவேனில், முதுவேனில், கார் முதலிய பருவங்களும், வேட்டைமேற் சேறலும், போர் மேற்கொண்டெழலும்,

வீரச் செயல்களும், மந்திரமும் புராணத்தில் விளக்குமுற விரிக்கப்பட்டுள்ளன. காதலர் கூடலும், பிரிதலும், மகிழலும், புலத்தலும் சுவையுடன் கூறப்பட்டுள்ளன. பெரியார் செயல்கள் பெரிதும் புகழப்படுகின்றன. புலவகைச் சுவையும் பண்புடன் நிறைந்துள்ளன. ஆதலின், திருத்தொண்டர் புராணத்தை ஒரு செந்தமிழ்ப் பெருங்காப்பியமாகச் சேக்கிழார் பெருமான் செய்து உலகிற் களித்துளாரென்பது தெள்ளிதில் விளங்கும். சேக்கிழார் முனிவரின் கவிகள், சொல்லின்பமும் பொருளின்பமும், ஓசைஇன்பமும், தொடையின்பமும் நிறைந்துள்ளன. செந்தமிழ்ச் சொற்களே பெரிதுந் தழுவப்பெற்றுள்ளன ; ஆழ்ந்தகன்ற நுண்பொருளன ; கண்ணுதலார்பாலும், அண்ணலா ரடியார்பாலும் மெய்க் காதலை விழைவிக்கும் தன்மையன ; மங்கலச் சொற்களே தழுவப்பெற்றன ; செஞ்சொற்கள் மருவப்பெற்றன ; கற்போர் உள்ளத்தைக் குழைவிக்கும் தன்மையன.

நீறணிந்தார் அகத்திருளும்
' நிறைகங்குற் புறத்திருளும்
மாறவருந் திருப்பள்ளி
யெழுச்சியினின் மாதவம்செய்
சேறடியார் திருவலகும்
திருமெழுக்கும் தோண்டியுங்கொண்
டாறணிந்தார் கோயிலினுள்
ளண்டர்தவரைக் கொடுபுக்கார்.

—திருநாவு - 68.

மாலை யாமம் புலர்வுறும் வைகறை
வேலை செய்வினை முற்றிவெண் ணீறணி
கோல மேனிய ராய்க்கைம் மலர்குவித்
தேல அஞ்செழுத் தோதி எழுந்தனர்.

—திருஞான - 201.

என்ற திருவிருத்தங்கள் வைகறையின் அழகைப் புலப்படுத்திச் சிவநன்னெறி மணம் பரப்புவதைக் கண்டு மகிழ்க. சொல்வேந்தர் சமண்விட்டுச் சைவம்புக்கு நீறணிந்ததும், அரத்துறைவள்ளல், முத்தின் சிவிகையும், குடையும் சின்னங்களும், அளித்தமையைச் சம்பந்தர்க்குணர்த்த அவர் உணர்ந்து, தம் தந்தையார்க்குந் தொண்டர்கட்கும்தெரிவித்து, தாம் வெண்ணீறணிந்த கோலமேனியராய் அஞ்செழுத்தோதி எழுந்ததும் வைகறையாதலை ஆசிரியர் கூறும் முறை அறிஞர் போற்றும் அழகுடையது.

'செய்ய மேனியர் திருமக னுருறை மடத்தில்
வையுமுள்ளத்த ராயமண் கையர்தா நணுகிக்
கையி னல்எரியிடவுடன் படும்எல்லி கரப்ப
வெய்ய வன்குண கடலிடை எழுந்தனன் மீது'

இத்திருவிருத்தத்திலும் (திருஞா-209)ம் திருவிருத்தத்திலும ஞாயிறு விசும்பிடை எழுந்த செவ்வி கூறப்பட்டுள்ளது.

நிலவின் அழகை யாசிரியர்,

மறுவில் சிந்தைவன் றொண்டர் வருந்தினால்
இறும ருங்குலார்க் கியார்பிழைப் பாரென்று
நறும லர்க்கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவ லென்ன முகிழ்த்தது வெண்ணிலா.

—தடு - 160.

என்ற செய்புளில் கங்குலழகொடு சேர்த்துக் கூறுகிறார். இச்செய்யுளிலுள்ள உவமை மிகவும் இன்பம் தருவதொன்று. கங்குலை நங்கையாக்கலில் கவிகட்குப் பெருவிருப்பு. கங்குற்குள்ள வடமொழிச் சொற்கள் எல்லாம் பெண்பாற் பெயர்கள். அவ்வழக்குப் பற்றியும் கவி, கங்குலை நங்கையாக்கினார் என்று கூறலும் ஏற்புடைத்து. மலர்மணம் மிக்குக்கொண்ட நங்கை யாவாள் கங்குல். வன்றொண்டர் சிந்தாகுலம் பெண்குலத்திற்கு வெற்றி என்றும், ஆடவர் குலத்திற்குத் தோல்விஎன்றும் உட்கொண்டு, தரளம் பெண்ணுதலில் கங்குல் நங்கை அவ்வெற்றியிற்றிளைத்து ஆடவரிழிவைக் குறிப்பாலுணர்த்துவாள்போல், நிலவைத் தோற்றுவித்து முறுவலித்தாள் எனக் கவி பாடியிருப்பது ஆசியர் கவி சாதுரியத்தைக் காட்டும்.

ஏனாதிநாதரும், அதிசூரனும், படைவகுத்துப் போர்செய்த தன்மையை ஏனாதிநாதர் புராணத்துள் ஆசிரியர் கூறியுள்ள செய்யுட்கள் சந்தப்பொலிவுடன் கூடிப் பேரொலியை எதிரொலித்துக் காட்டுவன போல் ஒழுகுகின்றன. அச்செய்யுள்களில்,

' அடன்முனை மறவர் மடிந்தவ
ரலர்முக முயிருள வென்றுறு
படர்சிறை சுலவு கருங்கொடி
படர்வன சுழல்வன துன்றலில்

" ஐயனே புனை யன்றி யொருதெய்வங் - கையினால் தொழவுங் கருதேன் கண்டாய் "



விடுசுடர் விழிக ளிரும்புசெய்
வினைஞர்தம் உலையின் முகம்பொதி
புடையிடை கரியிடை தங்கிய
புகைவிடு தழலை நிகர்த்தன '

என்ற செய்புளும் ஒன்று. உயிர்விட்டும் வீரம்விடாதிருந்தன வீரர் முகங்கள் என்று ஆசிரியர் இச்செய்யுளிற் கூறும் பொருளின் அழகும், உவமை யழகும், சந்தப்பொலிவும் வீரச்சுவையும், கவிநயம் விழைவார்க்குத் தீராப் பெருமகிழ்வளிக்கும்.

' நீலமா மஞ்ஞை யேங்க
நிரைக்கொடி புறவம் பாடக்
கோலவெண் முகையேர் முல்லை
கோபம்வாய் முறுவல் காட்ட
ஆலுமின் னிடைசூழ் மாலைப்
பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீ டரங்கி லாடக்
காரெனும் பருவ நல்லாள்.'

என்று கார்காலத்தை ஆசிரியர் வருணனை செய்துள்ளார். இச்செய்யுளில் கார்காலம், ஞாலவரங்கிலாடவந்த நல்லாளாக உருவகம் செய்யப்பட்டுளது.

காதலர் கூடலால் விளைந்த இன்பத்தை ஆசிரியர் நயம்பட அடியிற் கண்டவாறு உரைத்துள்ளார்.

' தென்னாவலூர் மன்னன்
தேவர்பிரான் திருவருளான்
மின்னாருங் கொடிமருங்குற்
பரவையெனும் மெல்லியல்தன்
பொன்னாரும் முலையோங்கற்
புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோகம்
பரம்பரையின் விரும்பினார் '

என்றும்,

' பண்டுநிகழ் பான்மையினாற்
பசுபதிதன் னருளாலே
வண்டமர்பூங் குழலாரை
மணம்புணர்ந்த வன்றொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப்
புறங்கண்ட நலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற்
றமர்ந்திருந்தார் காதலினால் '

என்றும்,

' இருவரும் தம்பிரானார்
தாமிடை யாடிச்செய்த
திருவருட் கருணைவெள்ளத்
திறத்தினைப் போற்றிச்சிந்தை
மருவிய இன்பவெள்ளத்
தழுந்திய புணர்ச்சி வாய்ப்ப
வொருவரு ளொருவர்மேவு
நிலைமையி லுயிரொன்றானார்.'—ஏ-381.

காதலர் கூடிப்பெற்ற இன்பத்தைக் கனிவொழுகு பாடல்களாற் றெய்வமணங் கமழக் கவிகூறி யிருக்கும் அழகை நோக்குக.

' வீழுமவர்க் கிடைதோன்றி
மிகும்புலவி புணர்ச்சிக்கண்
ஊழியா மொருகணந்தா
னவ்வூழியொரு கணமாம் '

என்று ஆசிரியர் புலவியையும், அதன்பின் நிகழும் கூடலையும் அவற்றால் மிகும் இன்பத்தையும் புலப்படுத்திச் செய்யுள் செய்துள்ளார்.

பரவையார் தம் கேள்வனாரைப் பிரிந்து ஆற்றொணாத் துயரமடைந்தமையைச் சேக்கிழார் கூறியிருக்கும் திறம், புலவரெல்லாம் போற்றுந் தகையது.

' மென்பூஞ் சயனத்திடைத் துயிலுமேவார்
விழித்து மினிதமரார்
பொன்பூந் தவிசின் மிசையினிரார் நில்லார்
செல்லார் புறம்பொழியார்
மன்பூவாளி மழைகழியார் மறவார்
நினையா ரென்செய்வார்
என்பூடுருக்கும் புலவியோ பிரிவோ
இரண்டினிடைப் பட்டார்.'

ஏனைக்காப்பியங்களி லிடையிடையே நுவலப்படும் சான்றோர் சரிதம், ஈண்டின மாறாது காணப்படும். 'வீரம் என்னால் விளம்புந்தகையதோ' என அடியாரது வீரம் வாக்கிறந்து நிற்குமெனச் சேக்கிழார் கூறியுள்ளார். அடியார்கள் ' தனி வீரர்'கள். அவர்கள் வீரச்செயல்களுக் கிணையான பிற வீரச்செயல்கள் கிடையா. வெல்லுமாற்ற லுடையராயிருந்தே ஏனாதிநாதரும், மெய்ப்பொருளாரும் மாற்றான் கையில் உயிரிழக்க ஒருப்பட்டு நின்ற சான்றாண்மையும், வீரமும், அடியார்பத்தி நலமும் ஆசிரியர் கூறியிருப்பதுபோல் பிற கவிகள் கூறவில்லை. அடியார்கள் ஒவ்வொருவரும் தனித்தனிப் பெரும் வீரர் ஆவார்கள்.

நம் பெருங்காப்பியத்தில், காப்பியச்சுவைகள் பொங்கி வழிகின்றன. அச்சுவைகள் நகைமுதலாக எண்வகைப்படும் என்ப. அச்

" நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் - பண்புடை யாளர் தொடர்பு "

சுவைகளின்றிக் காப்பியம் நிகழாது. நம் பெருங் காப்பியத்தில் நகைச் சுவையுள் அளவே சிரித்தலும், முறுவலித்து நகுதலும் ஆங்காங்கே காணலாம். பெருகச் சிரித்தலைக் காணலரிது.

'....எனடியானிந் நாவனகரூரன்' என முதியவேதியர் கூறியபோது, அம்முதியோர் மொழிகள் பொருளொடு புணராதிருப்பது கண்டு, சுந்தரர் மணப்பந்தரில் எம்மருங்கு மிருந்தாரும் எள்ளி, வெகுண்டு சிரித்தார்; நாவலூரரும் எள்ளி நகையாடினர். இந்நகை அளவே சிரித்தலாம். ஈண்டு 'குடிகோள்' காரணமாகப் பிறந்த வெகுளிச்சுவையையும் நோக்குக.

"என்றா னிறையோ
    னிதுகேட்டவ ரெம்மருங்கு
நின்றாரிருந்தா ரிவனென்
    னினைந்தான் கொலென்று
சென்றார் வெகுண்டார்
    சிரித்தார் திருநாவலூரர்
நன்றால் மறையோன் மொழியென்
    றெதிர்நோக்கி நக்கான்"

நம்பியாரூரர் சங்கிலியாரை மணக்க விரும்பி, ஒற்றி நகரமர்ந்த பிரான் சொல்லியாங்கு, சபதமும் சங்கிலியார்க்குச் செய்து கொடுக்க விசைந்து, ஒற்றிப்பெருமானை நோக்கி, அச் செய்கை முற்றுப்பெறுதற்கு அவர் அருள் வேண்டுமென்று கூறி விண்ணப்பித்தார். எத்திறத்தில் நம் பெருமான் திருவருள் வேண்டுமென்று சுந்தரர் கூறுமுன்னரே இவர் உள்ளக் கிடையை நம்பெருமான் அறிந்து, அவர் கருத்தின் சிறப்பின்மையைச் சுட்டி முறுவல் பூத்தார் என்னும் பொருள்கொண்டு,

"என்செய்தா லிதுமுடியு
    மதுசெய்வன் யானிதற்கு
மின்செய்த புரிசடையீர்
    அருள்புரிதல் வேண்டுமென
முன்செய்த முறுவலுடன்
    முதல்வரவர் முகநோக்கி
யுன்செய்கை தனக்கினியென்
    வேண்டுவதென் றுரைத்தருள"

என்று நகைச்சுவை மலர ஆசிரியர் செய்யுள் செய்துள்ளார்.

சிறுத்தொண்டர் புராணத்தில், சீராளனைத் தாய்தந்தையர் வாள்கொண்டரியத் தலைப்பட்டாரெனவும், இளையான்குடிமாறர் சரிதத்தில், மாறர், பண்டை வளமெலாம் சுருங்கி, வறுமையுற்று, அடியார்க்கமுதாக்கத் துப்புரவுமின்றித் தம் வயலில் பகலில் வித்திய நெல் முளைகளை, நள்ளிருளில் காலாற் றடவிச் சென்று, வாரிக்கொடுவந்து விறகின்மையில், தம் வீட்டின் அலக்கை அறுத்துக் கீழே தள்ளி, அதை விறகாக் கொண் டமுதாக்கினர் எனவும் ஆசிரியர் கூறுங்கால் அவற்றைக் கேட்போர்க் கவலச்சுவை பிறக்கின்றது. சீராளன் அடிமுடிகளையும் கரங்களையுந் தாய் தந்தையர்பற்றி நிற்கக் கண்டு, தாய் தந்தையர் தன்னுடன் மகிழ்கின்றாரென்று மகிழ, செல்வச் சிறுவன் நகை கண்டும், வாளை நெகிழவிடாது பற்றி, அவன் தலையை வாளினா லரிந்தாரெனக் கவி கூறுங்கால், சீராளன் குறுநகையாய செய்தியினால், அவலச்சுவை மிகவும் பெருகுகின்றது.

"அச்சமெய்திக் கறியமுதா மென்னு
    மதனா லரும்புதல்வ
னுச்சிமோவார் மார்பின்க ணணைத்தி
    முத்தர் தாமுண்ணார்"

என்றவிடத்தும்,

"பெருகுமச்சமோ டாருயிர்
    பதைப்ப வர்பின்பு
திருமடப் புறமருங்கு
    தீதின்மை யிற்றெளிந்து"

என்றவிடத்தும் அச்சச் சுவையைக் காட்டியுள்ளார். 'இறையின்' பகுதியா லச்சம் பிறந்தது காண்க. இறை யீண்டு, அடியவரும், குரவரும்.

காதலர் கூடலால் பிறந்த மகிழ்வை, உவகைச் சுவைக்கும் எடுத்துக் காட்டாகக் கொள்க. அன்றியும் உவகையின் உச்சியாய 'மாறிலா மகிழ்ச்சியை' எண்ணுதற்கும் அரிதா யிருக்கப் படிப்போ ருள்ளமும் மகிழ்ச்சியிற்றிளைக்க ஆசை கொள்ளுமாறு ஆசிரியர்,

"ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
    அளப்பருங் கரணங்க ணான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றந்
    திருந்து சாத்துவிக மேயாக





இந்துவாழ் சடையா னாடும் ஆனந்த
    வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் டிளைத்து
    மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்"

என்று செய்யுள் செய்துள்ளார்.

"அற்புதமோ சிவனருளோ
    அறியேன் என்றதிசயித்தார்"

என்றவிடத்தும்,

"ஆனந்தவெள் ளத்திடை
    மூழ்கி அம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத்
    தமுதுண்டு தெளிவெய்தி
வானந்தா னிலராகி
    உவந்திருந்தார் தமைக்கண்டு
ஈனந்தங் கியதிலதாம்
    என்னஅதிசயம் என்றார்"

என்றவிடத்தும் ஆசிரியர் மருட்கைச் சுவையைக் கூறியிருந்தல் காண்க.

தென்னவற்கு வெப்புநோய்கண்டபோது அவன், கருத்தொழிந்துரை மறந்தனன்' என்று தன்கட் டோன்றிய இளிவரலையும், மீனவன் பிணி கேட்டலும், அமணரெல்லாம் வெய்துயிர்த் தழிந்து 'மான முன் தெரியாவகை மன்னன்மாட் டணைந்தார்' என்று பிறன்கட் டோன்றிய பிணிகாரணமாகத் தோன்றிய விளிவரலையும் கூறி, இளிவரல் சுவையை விரித்துள்ளார்.

III

சேக்கிழார் திருவாய் மலர்ந்தருளிய பெரிய புராணம் ஒரு பெருங்காப்பியமெனக் கண்டோம். அக்காப்பியம் பேரழகுடையது; கவிநயங்களிற் சிறந்து விளங்குவது. கவி யரசர்களிடத்திலன்றிப் பிறகவிகளிடம் காணப்படா பல சிறப்பியல்கள் நம் கவியரசரிடத்திற் காணப்படுகின்றன.

"அலைபுரிவாய் எனப்பரவி
    வாயாலஞ் சாதுரைத்தார்"

என்றும்,

"மதிசெய்வ தினிக்கொடிய
    வல்விட மூட்டுவதென்று
முதிரவரும் பாதகத்தோர்
    முடைவாயால் மொழிந்தார்கள்"

என்றும் ஆசிரியர் செய்யுளமைத்து 'வாயாலென வேண்டாதுகூறி, அமணர் வாயில் தீய சொற்களல்லால் நற்சொற்கள்பயிலாவென்ற நுண்பொருளைக் குறிப்பா னுய்த்துணர வைத்துள்ளார். 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனிக்'குளாக விளங்குகின்றன நம்மாசிரியர் தெய்வஅருட் கவிகள். அக்கவிகளின் நுண்பொருள்களையும், குறிப்புப் பொருள்களாய தொனிப் பொருள்களையும் கற்கத் தலைப்படுவார், வற்றா இன்பக் கேணியைப் பெற்றாராவர். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றலுடையார் நம்கவிஞர். அங்ஙனம் சுருங்கச்சொல்லலும், நுண்பொருள்களை வெளிப்படையாகக் கூறாது உய்த்துணரவைத்துக் கவி செய்தலும், பெருங் கவிகள் மரபு. நம்பெருங்கவி, பொருள் நயங்களைக் கொப்புளிக்கும் பொருளணிகள் நிறைந்த பாடல்களையே பெரிதும் பாடியுள்ளார். சொல்லணிகளும், பொருளைச் சிறப்பிக்கத் துணைசெய்யுமாயின் சொல்லணிகளும் போற்றப்படுவன. நம் கவிஞர் பெருமான் சொல்லணிகளும் எளிதிற் பொருள் பயந்து, பொருள் நயத்தை விளக்கும். 'தெய்வநெறிச் சிவம் பெருக்கும் திருவாரூர் திருவாரூர், 'மறைத் திருவாக்கூர் ஆக்கூர்' என்ற தொடர்களிலுள்ள சொல்லணிகள், பொருளை எளிதிற் புலப்படுத்தி, பொருள் நயத்தை விளக்கி நிற்பதைக் காண்க.

சேக்கிழாரது நாட்டணிநகரணிகள், அவை கூறப்பட்டுள்ள அவ்வச் சரிதங்களுக்கு ஏற்ற தோற்றுவாயாக விளங்கும். அவைகளுட் பல, தெய்வ மணமகலாத செஞ்சொற் கவிகள். பண்டைப் பனுவற் கருத்துகளைத் தழுவி நமதாசிரியர் கவி செய்தலுமுண்டு. அவ்விதம் நமதாசிரியர் கவி பாடுங்கால், பண்டைநூற் கருத்துகள், புதுநலம் பெற்றுப் பன்னலம் புணர்ந்து வெளிவரும். 'சிவனார் செய்ய கழல்பற்றி எப்பற்றினையும் அற எறிவார்' என்றும், 'கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றமர்ந் திருந்தார் காதலினால்' என்றும், மழைக்குதவுஞ் பெருங்கற்பு' என்றும் ஆசிரியர் கூறியுள்ளார். அத்தொடர்களின் பொருள்கள், 'பொய்யாமொழி'யின் சில பொருள்களையும், 'சொற்றொடர்களையும் நினைவூட்டுகின்றன. ஆவது அழிவுமெல்லாமவர் செயல்' என்ற நமதாசிரியர் அருமைத்

திருவாக்கு, சிந்தாமணியில் வரும் ‘ ஆதலு மழிவு மெல்லாமவை பொருட் கியல்பு’ என்ற தொடரைத் திருத்தியமைக்க வந்ததுபோல் விளங்குவது காண்க.

நினைப்பவர் நெஞ்சை விட்டகலாவாறு, இலக்கிய சித்திரங்களுட் டலைநின்ற அப்பர் சம்பந்தர் சந்தித்தல், அப்பரப்பூதியார் சந்தித்தல், சம்பந்தர் குலச்சிறையார் சந்தித்தல் ஆதி சித்திரங்களையும், அப்பர் சம்பந்தர் வடிவு காட்டும் சொற்படங்களையும் ஆசிரியர் தம் உள்ளக்கிழியின் உருவெழுதிப் பார்த்தாங்கு தீட்டி யுவந்தளித்துள்ளார். தேவாரப்பாசுரங்களையும் காரைக் காலம்மையார் நூல்களையும் துருவியாராய்ந்துள்ளார் என்பது மூவர் முதலிகள் சரிதங்களையும், காரைக்காலம்மையார் சரிதத்தையும் கற்போர்க்கினிது விளங்கும். உதாரணமாக, வன்றொண்டர் ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்திற் கொண்டு வந்து தரும்படி நம்பெருமானை வேண்டிப் பணிந்தபோது, பரவையாருமுடனிருந்தா ரெனச் சேக்கிழார் புராணம் செய்துள்ளார். வன்றொண்டரருளிச்செய்த, ‘பொன்செய்த மேனியினீர்’ என்ற பதிகத்தில் ‘பரவையிவள் தன் முகப்பே’ என்றும் ‘பரவையிவள்’ என்று பாடி யருளினமையால் அப்பதிகத்தை நுணுகி யாராய்ந்த நமதாசிரியர் அங்ஙனம் கூறினாதல் வேண்டும். திருப்பாசுரத்தையுள்ளிட்ட பாசுரங்கட்குச் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்துள்ள உரையை நோக்கின், அவர்க்குத்தேவாரப்பதிகங்களிலிருந்த ஆராய்ச்சியும், கலைவன்மையும் வெளியாகும்.

ஆசிரியர் சேக்கிழார் பெருங் கவிஞர். அன்றியும் அவர் மெய்யன்பின் மிக்க அரனடியார். அவர் செய்தருளிய ‘மாக்கதையாம்’ பெருங்காப்பியம் திருத்தொண்டர் புராணமாகும். அப்புராணம், கவி நலன்களும், காப்பியச் சுவைகளும், காப்பிய நலன்களும் நிறைந்த ஒரு செந்தமிழ்நூல். அதுகற்போரிதயத்தில் கவியின்பத்தையும் கடவுட் பற்றையும் ஒருங்கே விளைவித்துப் பெருக்கி உலவாப் பேரின்ப மளிக்கும்.

பெரிய புராணம் பெரியோர் மெய்ச் சரிதங்களைக் கூறும் நூல். அப்பெரியார்கள் உலகில் உடல்கொடு தோன்றி வாழ்ந்து, அரனடிக்கும், அடியார்க்கும் தொண்டு செய்து வீடுபெற்ற சான்றோர்கள் ஆவர். அவர்கள் உலகை வென்ற தூயோர்கள். மாசிலா மேனிமேல் பூசுநீறுபோ லுள்ளும் புனிதர்கள்; கோதிலாத குணப்பெருங்குன்றனார்கள்; ஈரவன்பினர்கள்; ‘கேடுமாக்கமும் கெட்டதிருவினார்’கள். அப்பெரியார் சரிதங்களைப்போல் உலகிற்கு நன்மைதரும் சரிதங்கள் பிறவில்லை. அத்தகைய பெரியோர் சரிதங்கள் கூற அவற்றுள் உலக சரிதமும் அடங்கும். பெரியோர்களுள் வீரரல்லாதாரில்லை. அவர்களே உலகிற்குப் பொய்யா விளக்கங்கள். அவர்கள் மருங்கிருக்கப் பெறின், ஒருவர்க்கு பொய்ம்மைபோம் மெய்ம்மை உண்டாம்; இன்பம் விளையும். அவர்களொடு பராமுகமாய்த் திரிந்தாலும் ஒருவர்க்கு நலம்பெருகும். அவ்வீரர் வணங்கப் படற்குரியர். வீரர்வணக்கம் வீரம்விளைத்து, வீடளிக்கும். வீரருள் வீரராய அடியார் மெய்ச்சரிதங்களைக் கூறுதற்குச் தமிழ் செய்த தவப்பயனால் தனி வீரராய் சேக்கிழாரவதரித்தார். தொண்டர் சரிதங்களைத் ‘தொண்டர்க்காணியாம்’ சேக்கிழார் விரித்துரைத்தார். திருத்தொண்டர் புராணமும் உலகமாந்தர்க்கு வாழு நெறியறிவிக்கும் மெய்ந்நூல். பிறவிக்கடலில் வாழ்க்கைக் கலத்தைச் செலுத்த வகையறியாது பேதுறுவார்க்குப் பெருந்துணை. இவ்வருணூல் யாண்டும் பரவுக. எங்கணும் ஒளி வீசுக. என்றும் இன்பம் பெருக்குக. என்றும் நின்று நிலவுக.

சேக்கிழார் திருவடி வாழ்க

“ [illegible] மெய்க்கவக் கோர்க்குப் பர்க மியின பெருமான் ”

# ச ச் சி தா ந ந் த ம்

வ. உ. சிதம்பரம் பிள்ளை

சில உபநிடதங்களும் ஆகமங்களும் கடவுளுக்கு இலக்கணம் கூறுமிடத்து “ சச்சிதாநந்தம்” என்று கூறுகின்றன. இவ்வுபநிடத ஆசிரியர்களும் ஆகம ஆசிரியர்களும் சுருதி, யுக்தி, அநுபவம் நிறைந்தவர்களென்றே நாம் கொள்ளுதல் தகுதி. அவ்வாறு நாம் கொள்ளின் அவர்கள் கடவுளுக்குக் கூறியுள்ள சத், சித், ஆனந்தம் என்னும் இலக்கணங்கள் மனிதர்கள் சுருதி, யுக்தி, அநுபவங்களாற் கடவுளுக்குக் கூறக்கூடிய சகல இலக்கணங்களையும் உட்கொண்டும், மனிதர் சுருதி, யுக்தி, அநுபவங்களால் மறுக்கக் கூடிய எவ்வித இலக்கணத்தையும் உட்கொள்ளாதும் நிற்கவேண்டும்.

நான்கு மகா வேதவாக்கியங்களில் ஒன்று, “ பிரஹ்மம் பிரஜ்ஞானம் ” என்கின்றது. ‘பிரஹ்மம்’ கடவுள் எனவும், ‘பிரஜ்ஞானம்’ அறிவு எனவும் பொருள்படும். இம்மகா வாக்கியம் தோன்றியதற்கு நீண்ட காலத்திற்குப் பின்னரே கடவுளுக்குச் “ சச்சிதாநந்தம் ” என்னும் இலக்கணம் கூறப்பட்டிருத்தல்வேண்டும். வேதங்கள் ‘பிரஹ்மம்’ என்பது அறிவு, அஃதாவது சித்து, என்று கூறி நிற்கவும், அதற்குப் பின்னர்த் தோன்றிய உபநிடதம் முதலியவை சத், ஆனந்தம் என்பவற்றை முறையே ‘சித்’ என்பதற்கு முன்னும் பின்னும் சேர்த்துக் கூறியதற்குக் காரணம் ‘சித்’ என்னும் பதம் கடவுளது பூரண இலக்கணங்களையும் விளக்கத்தக்கதா யில்லையென்று அவ்வுபநிடதம் முதலியவற்றின் ஆசிரியர்கள் கருதியதே என்று நாம் கொள்ளுதல் மிகையாகாது.

உபநிடத ஆகம உரையாசிரியர்களுள் பலர் ‘சத்’ என்பதற்கு நித்தியம் எனவும், ‘சித்’ என்பதற்கு அறிவு எனவும், ‘ஆனந்தம்’ என்பதற்குச் சுகம் எனவும் பொருளுரைத்திருக்கின்றனர். இவர் உரைத்த பொருள்களே சரியான பொருள்களென்று இவருக்குப் பிற்பட்ட பலரும் கொண்டனர். ஆயினும், இவரில் ஒரு சிலர் “அகண்ட பரிபூரணம்” என்பதைச் ‘சச்சிதாநந்தம்’ என்பதன் முன்னர்ச் சேர்த்துக் கடவுளை “அகண்ட பரிபூர்ண சச்சிதாநந்தம்” என்று கூறினர். சத், சித், ஆனந்தம் என்பன கடவுளது முழு இலக்கணத்தையும் விளக்கி நிற்கவில்லையென்று இவர் கருதியதே அவற்றின் முன்னர் அகண்ட பரிபூரணம் என்பதைச் சேர்த்ததற்குக் காரணமா யிருத்தல்வேண்டும்.

இவ்வான்றோர் “ சச்சிதாநந்தம்” என்பதற்குக் கொண்ட பொருள் “ நித்தியத் தன்மையும் சுகத் தன்மையும் பொருந்திய அறிவு” என்பதே. இப்பொருளைக் கொள்ளும் எவரும் “ சச்சிதாநந்தம் ” என்பது “சர்வ வியாபகம்” என்னும் கடவுளிலக்கணத்தைக் கொண்டு நிற்கவில்லை யென்று கருதாதிரார். இவ்விலக்கணக் குறைவை நிவிர்த்திக்கவே “அகண்ட பரிபூரண” என்பது “ சச்சிதாநந்தம் ” என்பதற்கு முன்னர்ச் சேர்க்கப்பட்டதென் றறிக. ஆன்றோரிற் சிலர் நித்ய வஸ்து (என்றுமுள்ளது) வியாபக வஸ்தாக (எங்கு முள்ளதாக)வே யிருக்குமென்று விவகரித்துச் ‘சச்சிதாநந்தம்’ என்பது கடவுளது சர்வ வியாபக இலக்கணத்தையும் விளக்கி நிற்கிறதென்று கூறுகின்றனர். ‘என்று முள்ளது’ ‘எங்கு முள்ளது’ என்று விவகரித்தல் பிழை. நித்தியத்திற்கும் வியாபகத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை யாகலான்.

உதாரணமாக, வாயுவை எடுத்துக்கொள்வோம். அது நித்திய பொருளென்பது வெள்ளிடை மலை. அஃதில்லாமல் ‘உலகம் இல்லையாகலான். அவ்வாறே, வாயு சர்வ வியாபகப் பொருளன்றென்பதும் வெள்ளிடைமலை. அது வைரம் முதலிய கடினப் பொருள்களுள் இல்லையாகலின். உலகப் பொருள்களிலிருந்து எடுத்துக் காட்டப்படும் உதாரணங்களெல்லாம் “ உலகம் மித்தை ” என்னும் கொள்கையாலும், “சத் என்பது

“நாளார் வந்தணுகி நலியாமுனை நின்றனக்கே-ஆளா வந்தடைந்தேன் அடியேனையும் என்றுகொள்நீ”

நித்திய பொருளைக் குறிப்பதன்றிச் 'சர்வ வியாபகப் பொருளைக் குறிக்க மாட்டா'' தென்பது ''நித்தியமாயுள்ள பிரஹ்மம் சர்வ வியாபகப் பொருளாயு மிருக்கின்றது'' என்னும் உண்மையாலும் மறுக்கப்பட்டுப்போனதாகக் கூறுகின்றனர் சிலர். மேற்சொல்லிய உதாரணமும் பத அர்த்தமும் மேற்சொல்லிய கொள்கையாலும் உண்மையாலும் மறுக்கப்பட்டுப் போனதாகக் கருதுகின்ற மக்களை நோக்கி இவ்வியாஸம் எழுதப்படவில்லையென்று அவர்கள் அறிவார்களாக.

நமது முன்னோர் தமது முன்னோர் கூறியவற்றைச் சரியென்றே கொள்ளும் சுபாவத்தைக் கொண்டிருந்தா ரென்பதும், தமது முன்னோர் கூறியவை சரியானவையா பிசகானவையா என்று விசாரிக்கும் சுபாவத்தைக் கொண்டிருக்கவில்லை யென்பதும் நம்மில் ஒரு சிலர் அறிந்தவையே. நமது முன்னோர் கூறியுள்ளவற்றில் ஒன்று சரியானதா பிசகானதா என்று நம்மில் ஒருவர் விசாரிக்கப்புகின், அவரைப் புரட்சிக்காரரென்றும் ஆன்றோரை நிந்திப்பவரென்றும், ஆன்றோரினும் அறிவுடையவ ரென்ற பெயரைக் கொள்ளக் கருதுபவரென்றும் பலவாறாக நிந்திக்கின்றனர் நம்மிற் பலர். அப்பலரையும் தாமே முற்றுமுணர்ந்தவரென்று தருக்கித் திரிகின்ற சிலரையும் கருதியதன்று; முழுநடுவு நிலைமையோடும் யுக்தியோடும் மெய்ப்பொருளை ஆராய்வாரையே கருதியது இனி இங்குக் கூறப்படுவது.

'சத் சித்' என்னும் இரண்டு பதங்களுக்கும் நமது முன்னோர் உரைத்துள்ள பொருள்கள் எனக்கு உடன்பாடானவையே. ஆனந்தம் என்பதற்கு நமது முன்னோர் உரைத்துள்ள பொருளே எனக்கு உடன்பாடற்றது. சுகமும் அதற்கு மறுதலையாய துக்கமும் மனத்தின் அநுபவங்களே யென்பது யாவருக்கும் நேரில் தெரிந்த தொன்று. கடவுள் மனதிற்கு அப் அப்பாற்பட்ட பொருளென்பது அறிஞர் பலர்க்கும் ஒப்பமுடிந்த ஒரு முடிவு. அம்முடிவைக் கொண்டும் மனத்தின் அனுபவமாகிய சுகத்தை மனத்தைக் கடந்து நிற்கும் கடவுளது வடிவமாகவோ இலக்கணமாகவோ கூறுதல் இழுக்கினுள்ளெல்லாம் பெரிய இழுக்கு.

சில சுருதிகள் ''பிரஹ்மம் சுகமன்று'' எனக் கூறுகின்றனவென் றறிக. சுருதிகள் ஒன்றற்கொன்று மாறாக ஒரு பொருளைக் கூறுமிடத்துச் சுருதிப் பிரமாணத்தை எடுத்துக் கூறாது விடுதலே முறைமை. ஒரு கணமேனும் தான்தானாக நின்றவர் சுகமும் துக்கமுமற்ற நிலையே தனது நிலை. அஃதாவது ஆத்ம நிலை, அஃதாவது பிரஹ்ம நிலை என்று அறிவர். தான்தானாகி நின்றறியாதார் அந்நிலையில் நிற்றற்குப் பயிலுவதே முறைமை; மற்றையோர்பால் அந்நிலையைப்பற்றி வினவப் புகுதல் முறைமையன்று. அம்மற்றையோர் தான் தானாக நின்றவரோ என்பதைப் பிறர் அறியமுடியாதாகலான். இனி, நடுவு நிலைமையோடு நின்று ஆராயும் யாவர்க்கும் பொதுவாய யுக்தி கொண்டே ''பிரஹ்மம் சுகம்'' என்பது சரியா, பிழையா என்று விசாரித்தல் வேண்டும். அவ்யுக்தியின் விசாரணையில் மனத்தின் ஓர் அநுபவமாகிய சுகத்தைக் கடவுளுக்கு இலக்கணமாகக் கூறுதல் இழுக்கென்று முன்னரே கண்டோம்.

'ஆனந்தம்' என்பதற்குச 'சுகம்' என்னும் பொருளைக் கூறுங்காலையில, ''சச்சிதானந்தம்'' என்பது கடவுளின் சர்வ வியாபக இலக்கணத்தை விளக்கி நிற்கின்றதென்று சொல்லமுடியாது, சத் என்பது நித்யத்துவத்தையே காட்டும் பதமாகலான். கடவுளைச் ''சச்சிதாநந்தம்'' என்று கூறிய 'ஆன்றோர் அத்தொடர் மொழிக்கு' பொருளுரைத்த ஆன்றோரினும் பெரியவரென்றே நாம் கொள்ளல்வேண்டும். அப்பெரியோர் கடவுளுக்கு இன்றியமையாத சர்வ வியாபக இலக்கணத்தைவிட் டிருச்கமாட்டாரென்று நாம் நினைத்து ''ஆனந்தம்'' என்பதற்கு வேறு பொருளுண்டாவென்று விசாரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இங்கு விசாரிக்கப் படுவது 'ஆனந்தம்' என்னும் பதத்தின் அர்த்தமே யன்றி, பிரஹ்மத்தின் சர்வ வியாபக இலக்கணமன்றென்பதையும், சத்தாயுள்ள பிரஹ்மம் சர்வவியாபகமாயிருத்தலால் 'சத்' என்னும் பதம் சர்வவியாபகப் பொருளையும் குறித்து நிற்கின்ற தென்றல் பொருந்தா தென்றும் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.





'' சச்சிதானந்தம் '' என்பது ஆன்றோருரைப்படி கடவுளது சர்வவியாபக இலக்கணத்தைத் தாங்கி நிற்கவில்லையே யென்று வினவுவார்க்குச் சமாதானமாக ''ஆநந்தம்'' என்பது (ஆ=எங்கும், நந்தம்=சுகம்) ''எங்கும் நிறைந்தசுகம்'' எனப்பொருள் படுமென்று சிலர் கூறுகின்றனர். 'நந்தம்' என்பதற்குச் 'சுகம்' என்னும் குணப் பெயர்ப் பொருளில்லையென்றும், சுகித்தல் என்னும் தொழிற் பெயர்ப் பொருளே உண்டென்றும், அப் பொருளைக் கொள்ளுங்கால் ''கடவுள் சுகிக்கின்றவர்' என்று ஒப்புக் கொள்ள நேரிடு மென்றும், அவ்வாறு ஒப்புக் கொள்ளின் ''கடவுள் செயலற்றவர் என்னும் கோட்பாட்டிற்குக் கேடு நேரிடு மென்றும் அவர் அறிவாராக. அன்றியும், 'சித்' என்பதற்குப் பின்னுள்ள 'நந்தம்' எங்கும் நிறைந்ததென்றால், அதற்கு முன்னுள்ள 'சித்' எங்கும் நிறையாத தென்று கூற நேரிடுமென்றும் அவர் அறியக்கடவர்.

இனி, ''ஆநந்தம்'' என்பதற்கு யான் கூறுகிற பொருள் ''எங்கும் நிறைந்திருத்தல்'' என்பதாம் 'ஆ' என்பது 'எங்கும்' என்று பொருள் படுமென்று மேலே கூறப்பட்டுள்ளது. 'நந்தம்' என்பது 'நத்' என்னும் தாதுவினின்று வந்தது. 'நத்' என்னும் தாதுவுக்கு இரண்டு பொருள்களுண்டு. ஒன்று 'சந்தோஷி' என்பது; மற்றொன்று 'நிறைந்திருக்க' என்பது. முந்திய பொருளைக் கொள்ளாது பிந்திய பொருளைக்கொள்ளின், ''ஆனந்தம்'' என்பது ''எங்கும் நிறைந்திருத்தல்,'' அஃதாவது ''சர்வ வியாபகம்'' என்று பொருள்படும். அப்போது ''சச்சிதாநந்தம்'' என்பது ''நித்தியமாகவும் சர்வ வியாபகமாகவும்நிற்கின்ற அறிவு'' என்னும் பொருளைத் தரும். அப்பொருளைக் கொள்ளுங்காலையில் மனத்தின் பல அநுபவங்களில் ஒன்றாகிய சுகத்தைக் கடவுளுக்கு இலக்கணமாகக் கூறி இழுக்கப்படுதலும் கடவுளுக்கு இன்றியமையாத சர்வ வியாபக இலக்கணத்தை ''சச்சிதாநந்தம்'' என்பது கொண்டு நிற்கவில்லை யென்னும் கூற்றுக்குட்பட்டு இடர்ப்படுதலும் நீங்கி ஒழியும்.

# திரோதான சத்தி

காருடை - சு. சூரியமூர்த்தி பிள்ளையவர்கள்

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் ஐம்பதாம் ஆண்டு நிறைவுப் பொன் விழாவை ஒட்டி, நான் ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்றும், அக்கட்டுரைப் பொருள் ''திரோதான சத்தி'' என்று இருக்கவேண்டும் என்றும் அச்சபையார் ஆணை தந்தார்கள். அவ்வாணை வழியில் வந்த கட்டுரை இதுவாகும்.

திரோதானம், திரோபவம் என்னும் சொற்கள் மறைப்பு என்னும் பொருளைக் குறிப்பன. திரோதான சத்தி என்பது கடவுளது அருட்சத்தி ஆற்றல்களில்ஒன்று. உயிர்களை அநாதியே பற்றி, விட்டு நீங்காது உயிர்கட்குக் கேடு விளைப்பதாகிய ஆணவக் குற்றத்தின் வலுவைக் குறைக்க வேண்டிக் கடவுள் மாயா, கருமம் என்னும் மல (குற்ற)ங்களை இடைக்காலத்தே சேர்த்தார். உயிரற்ற அறிவற்ற இவை, தானே தொழிற்படுதல் கூடாமையின், இறைவன் தன் சத்தியை ஏவி அம்முக்குற்றங்களையும் தொழிற்படுத்தினர். அவ்விதம் தொழிற்படுத்தும் சத்திக்குத் திரோதான சத்தி என்பது பெயர். குற்றங்களோடு கலந்து நின்று தொழிற் செய்யும் காரணத்தால் உயிர்களின் குற்றம் போல் எண்ணப் படுகின்றது. உண்மையில் இது இறைவனது அருட்சத்தி

யேயாகும். சத்தி என்பது ஆற்றல் ஆகும். கடவுளின் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில் வரிசையில் திரோபவம் (மறைப்பு) நான்காவதாகும். சத்தி என்னும் சொல்லைக் கடவுட் சத்தி ஒன்றற்கே சிறப்பாகக் கூறுதல் முன்னோர் மரபு. ஆதலின் திரோதான சத்தி என்பது கடவுட் சத்தியின் ஒரு பாகமாக இருக்கிறது. கடவுள் பேரிரக்கவழியே செயல் புரிபவராகலின் (இரக்கம் - அருள்) திரோதான சத்தியும், கடவுளின் அருட் செயலாகவே கொள்ளத்தக்கது. இவ்வாறு சத்திகளைக் கொண்டதினால் கடவுளுக் குண்டாகும் பயனோ எட்டுணையுமின்று; உயிர்களே அதனாற் பெரும் பயனுறுவன. இயற்கையில் உயிர்கட் குரிய சிற்றறிவையும் ஆணவம் மறைக்க, அம்மறைப்பால் உயிர்கள் மயங்கித் தவிக்க, அம் மயக்கத்தை நீக்கவே பேரிரக்கக் கடவுள் தமது அருட் சத்தியை விடுத்து மயக்கஞ்செய் பொருளை அல்லது மலத்தைக் கலக்கிக் கெடுத்து உயிர்கள் தெளிவடையும்படி செய்கிறார். உயிர்களின் மயக்க அறிவிற் கலந்து உயிர்கள் தெளிவு பெறும்படி கடவுளின் சத்தி இங்கு தொழில் செய்கிறது. குற்றவாளியின் வழக்கறிஞனை "குற்றவாளி வழக்கறிஞன்" எனவும், சேற்றைக் கலக்கு மனிதனைச் "சேற்றுமனிதன்" எனவும் கூறி யாங்கு மயக்கத் தோடுள்ள உயிரறிவிற் கலந்து தொழில் செய்கிற அருட் சத்தியையும் மயக்கச்சத்தி என்றல் ஒருவகை மரபே. திரோதான சத்தி உயிரின் மயக்கத்தை நீக்க உயிரறிவைச்சார்ந்து (உயிரறிவுடன் கூடி) தொழிற் செய்கிறதாகின்றது.

உயிர்களிடத்துள்ள ஆணவ மறைப்பு நீங்க நீங்கக் கடவுளின் திரோதான சத்தி அருட்சத்தியாக மாறுகிறது. பின் அவ் அருள் அறிவால் உயிரறிவு வலுவடைய அடைய அதனால் உயிர்ச் செயலும் வலுமிகுவதாகின்றது. "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்ற நீதிப்படி அறிவும் செயலும் அருட்டுணையால் வலுவடையப் பெற்ற பெருமை பொருந்திய உயிர் (மகா= பெரிய + ஆத்மா = உயிர்) தனக்கென வாழாது பலர்க்கும் பயனுதவுகின்ற பல செயல்களைப் புரிகின்றது. அருள் அறிவும் அருட்செயலும் உயிர்களிடத்துச் சேர்ந்து வருகிற காலத்தைச் (சத்தி = அருள் + நிபாதம் = உயிர்களிடத்துவிழுதல் பதிதல்) சத்தி நிபாத காலம் அல்லது அருள் பதிந்த காலம் என்பர். "தந்த நாள் முதல் இன்பக்கால் சற்று அல்லால், தடையற ஆனந்த வெள்ளம் தானே பொங்கி வந்த நாளில்லை" என்றார் தாயுமானவர். திரோதான சத்தியும் இதுவரை உயிர்களின் மயக்க கால சத்தியாயிருந்து பின் உயிர்கள் தெளிவடைந்த பின் அருட் சத்தியாக மாறித் தனது உண்மையை உயிர்கள் அறியும்படி உதவி செய்கின்றது.

இவ்வாறு திரோதான சத்தியைப் பற்றிக் கூறும் நூல்கள் உளவோ எனின்? ஆம். அவற்றுள் இரு பெருநூல்கள் தலைசிறந்து நிற்கின்றன. முதலாவதாக அருள் அறிவு கூறும் நூலாகிய சிவஞான போதமும், இரண்டாவதாக அருள் அறிவுப் பயன் கூறும் நூலாகிய சிவஞான சித்தியாரும் உள்ளன. இவற்றுட் போத நூலின் கருத்தை விளக்கி அதனை உயிர்களடையும்படி செய்ய வந்த நூல் சித்தியார் என்பதைப் போதம் சித்தியார் என்ற இரு பெயர்களுமே விளக்கும். அவைகளுள் சித்தியாருள் மலத்தின் உண்மை கூற வந்த இரண்டாம் சூத்திரம் 86-வது 87-வது செய்யுள்கள் திரோதான சத்தியின் இயல்பை விளக்கும்.

"மும்மலம் நெல்லி னுக்கு
முளையொடு தவிடுமிப் போல்
மம்மர் செய்து அணுவின் உண்மை
வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போக பந்த
போத்திருத் துவங்கள் பண்ணும்
இம்மலம் மூன்றினோடும் இருமலம்
இசைப்பன் இன்னும்"

"மாயையின் காரி யத்தை
மாயேய மலம தென்றும்
ஏயும்மும் மலங்கள் தத்தம்
தொழிலினை இயற்ற ஏவும்
தூயவன் தனது ஓர்சத்தி
திரோதான கரியது என்றும்
ஆய்வர்இம் மலங்கள் ஐந்தும்
அணுக்களை அணைந்து நிற்கும்"

தூயவன் ஏவும் தனது ஓர்சத்தி என்பது குறிப்பிடத்தக்கது.





திரோதான கரி என்று கூறியது ஏனெனில் சிவக் கடவுளைப் போல அவரது அருளும் எங்கும் நிறைந்திருப்பது பற்றியே. எங்கும் நிறைந் திருக்கிற பொருளே உலகிலுள்ள ஒவ்வொரு செயலையும் காணுமேயன்றி, ஓர் இடத்திலோ சில இடங்களிலோ நிறைந்தோ தொடர்ந்தோ இருக்கிற பொருள்கள் அவ்வாறு உலகின் ஒவ்வொருசெயலையுங் காணமுடியாது. ஆகையால் கடவுளின் அருட் சத்தியே திரோதான சத்தி என்று குறித்து உணர்த்த வந்த அந்த அறிவு நூல், திரோதான சத்தியை உலகிற் கெல்லாம் சாட்சியாயிருப்பது பற்றி 'திரோதான கரி' என்று விளக்கிற்று. கரி என்பது சாட்சி என்று இங்கு பொருள் கொண்டு நிற்கிறது.

கரி என்பதனைச் செய்வது எனவும் சில ஆசிரியர்கள் உரை கண்டார்கள். அதற்கு இறைவன் ஏவ, அவ்வாணைப்படி இச்சத்தியானது ஆணவம் மாயா கருமம் என்னும் மூன்று மலங்களையும் தொழிற் படுத்துதலாகிய செய்கையைத் தான் கொண்டதால், அவர் கூறும் செய்கைப் பொருளும் பொருத்தமே.

முதல் நூலாகிய சிவஞான போதத்தில் உயிர்க்கு (மும்மலம்) முக்குற்றங்களே குறிப்பிடப் பட்டிருக்க, இங்கு ஐங்குற்றங்களைக் கூறியது என்னை எனில்; இயற்கைக் குற்றம் (க) இடைச்சேர்ந்த குற்றங்கள் (உ) காரியக் குற்றம் (க) அருளை (மலமாக)க் குற்றமாக உபசரித்துக் கொண்டது (க) ஆக ஐங்குற்றங்கள் இங்குக்கூறப்பட்டன. முதல் இயற்கைக் குற்றம்(க)இடைசேர் (ஆகந்துக) குற்றங்கள் (உ) இம் மூன்றையுமே முதல் நூல் கூறுகின்றது. காரிய வகையில் கூறப்பட்டது மாயேயம். திரோதானமே அருளைக் குற்றம் போல உபசரித்துக் கூறப்பட்டது. நீத்தல் விண்ணப்பத்தில் "குலங்களைந்தாய்" என்று தொடங்குகிற மணிவாசகம் "மலங்கள் ஐந்தாற் சுழல்வன்" என்னும் உண்மையைக் காட்டுகிறது. உயிரை மறைப்பதும் மயக்குவதுமாகிய பொருள்களை "மலம்" என்று நூல்கள் கூறுகின்றன.

உயிரை அநாதியே தொடர்ந்து உயிரின் அறிவை மறைத்துப் பெருங்கேடு செய்வது ஆணவம். (ஆண்மை+அவம் ஆணவம்) இதுவே உயிரைப் பொருந்திய முதற் குற்றம். இது முதல் மலம் அல்லது மூல மலம் எனச் சொல்லப்படுவது. அது அநாதியே உயிரைச் சேர்ந்துள்ள காரணத்தால் சகசமலம் எனவும் படும். ஆணவ மறைப்பால் அறிவு மறைந்து மயங்கியஉயிர்கள்மீது இரங்கிய கடவுள் அதனோடு மாயா (உள் பொருளாதலின் கெடாத) மலத்தை உயிர்க்குத் துணையாகச் சேர்த்தார். அதனால் 'பாசிபடு குட்டத்தில் கல்லினை விட்டு எறியப் படும்பொழுது நீங்கி அது விடும்பொழுது பரக்கும்' என்ற முறையில் மாயை ஆணவ மறைப்பைச் சிறிது நீக்கி உயிர்க்கு விளக்கத்தைச் செய்யினும்தன் காரியத்தில்உயிரை மயங்கச் செய்வதால் மாயாமலம் எனப்படுகிறது. இது இரண்டாம் மலம். மாயையின் உதவியால் உயிர்கள் சிறிது அறிவுவிளங்கப் பெற்ற பொழுது ஒரு தொழில் செய்யத் தொடங்கும். 'குறைந்த அறிவு குடியைக் கெடுக்கும்' என்பது பழமொழி. உயிர், மலத்தால் மறைப்புண்டு மயங்கிச் செய்யும் செயல்கள் அருட் செயல்களாகாமல், மருட் செயல்களேயாகி, அவை நல்வினை தீவினைகளின் பாற்பட்டு, துன்புறுத்தற்கு ஏதுவாய் முடிதலின், கருமம், மூன்றாவது மலமாகின்றது.

இரண்டாம் மூன்றும் மலங்கள் இடையிற் சேர்ந்தவை. இடைசேர் மலம், பிற் கூட்டு மலம் ஆவன:

மாயாவால் உடம்பும் கரணமும் பெற்ற உயிரானது மாயாவாற்றோன்றிய பொருள்களின் நிறம் தன்மை முதலியன கண்டு நுகரும் போதெல்லாம் மயங்குகின்றது. இம்மயக்கமும் பெருகுகின்றது.

இதனால் (மாயாவால் இயைந்த=மாயா+இயை) மாயேயமலம் நான்காவது மலமாகின்றது. மாயை+இயை=மாயேய என்பது மரூஉச்சொல். பேரிரக்கப் பெரும் பொருள் ஆகிய கடவுள் ஓர் உயிரற்ற அறிவற்ற ஆணவப் பொருளால் உயிரறிவுக் குண்டாகிய மறைப்பைத் தடுக்க அல்லது குறைக்க மாயா கருமம் என்னும் இருபொருள்களைச் சேர்த்தும், அவை அறிவற்ற பொருள்களாதலால் அங்கு தொழிற்படும் வன்மையுண்டாமாறில்லை. ஆதலின் இறைவன்

தமது அருட் சத்தியை ஏவினர். இச் சத்தியின் ஏவலால் மற்றைய குற்றப் பொருள்களும் தொழிலில் ஆடியது. எது போல் என்னில்; பெரிய தேர் தரையிற் பதிந்து நிற்கிறது. அதனைப் பதிவினின்றும் எழுப்பி ஓட்டுவதற்காக, எழுப்புக் கருவியை (ஜாக்கியை)த் தேர் பதிந்துள்ள இடம்கொண்டு சேர்த்தமாத்திரத்தில் தேர் எழுப்புவதில்லை. பின் அறிவுடைய மனிதன் முயற்சிசேர்ந்ததும் எழுப்புக்கருவி தேரைப் பதிந்திருந்த இடத்தை விட்டுத் தூக்குகின்றது. தேர் ஓடுகின்றது. இதுபோல ஆணவ மாயா கருமம் என்னும் முக்குற்றங்களும் சடமாதலின், அவை தாமே தொழிற்பட்டில. அறிவுள்ள திரோதான சத்தியே தொழில் நடத்துகின்றது. உயிரறிவின் மறைப்புச் சிறிது சிறிது நீங்குவதும், பின் முடுவதுமாக வர, மறைப்பு நீக்கம் சிறிது சிறிது வலுவடைகிறது. மறைப்பின் நீக்கம் எவ்வளவுக்கு வலுவடைகிறதோ, அவ்வளவுக்கு மறைப்பின் வலு குறைகின்றது. மறைப்புள்ளவரை மயக்கமும் பெருகி வளர்கிறது. அது, எதுபோல் எனின், நீண்டகால நோயாளிக்கு, மருத்துவன் அந்நோயை நீக்கத் தகுந்த மருந்தைக் கொடுக்கிறான்; மருந்து உள்ளே போனதும், ஒண்டி உறைந்திருந்த நோய் கலக்கப்படுகிறது. கலங்கிய பொழுது நோயின் கொடுமை நோயாளியை மிக வருத்துகிறது. நோயாளியும் 'நோய் மிகுந்தது' என்கிறான். இதுபோல, உயிரறிவை மறைக்கிற குற்றத்தை மருந்து போலுள்ள மற்றக் குற்றத்தைக் கொடுத்துக் கலக்கும் போது, கலக்க மிகுதியால் உயிரறிவு மிகக் கலங்குகிறது. அதனால் திரோதான (திருஅருட்) சத்தியும் ஒரு குற்றமாக எண்ணப்படுகின்றது. இதுவே ஐந்தாவது குற்றம்.

இவ்வாறு ஆணவ மலமானது அறிவற்ற பொருள்களாகிய மாயா கருமங்களாலும் அறிவுள்ள பொருளாகிய அருட் (திரோதான) சத்தியாலும் தொழிற்படுத்தப்பட்டு தேய்ந்தகழிய (வலுவற்றுப் போக) உயிரறிவு விளக்கம் உறுகிறது. விளங்கிய உயிர் அறிவைப் பின்னும் மாசடைய ஒட்டாது காக்கவேண்டிக் கடவுள் தமது அருட் பெருங்குணங்களோடு சேர்கிறார். சத்தியே சிவத்தின் குணத்தை வெளிப்படக் காட்டுவதால், இங்கு சத்தி சேர்தல், சத்தி பொருந்துதல், உயிரறிவிற் சத்தி விழுதல், சத்தி பதிதல் என்று சொல்லப் படுகிறது. அறிவுவிளங்க, அருள்பதிய மலவலுக் குறைகின்றது. இதனை மலவலு நீக்கம் என்னுது, மலநீக்கம் என்பர். இதுவே, பந்தமறுத்தல், பந்த விலக்கம், பந்தம்விடல், கட்டுநீக்கம், வீடு, முத்தி எனப்பெயர் கொள்கிறது.

திரோதான சத்தியின் நுட்பம் திருக்கோயில் வழிபாட்டு முறையில் வைத்து விளக்கப் பட்டிருக்கின்றது. ஒவ்வொரு கால வழி பாட்டைத் தொடங்கும் பொழுதும் கடவுட் குறியை மறைக்கும்படி ஒரு திரை யிடப்பட்டிருக்கின்றது. கடவுட் குறிக்கு நீராட்டி உடைகட்டிப் பூப்புனைந்து உணவூட்டுவது போல நடித்து முடிகிற காலம் வரைக்கும் திரையால் கடவுட் குறி மறைக்கப் பட்டிருக்கின்றது. பின், திரையை நீக்கி ஒளி காட்டுகிறார்கள். அதாவது திரை நீங்கும் பொழுது ஒளி தோன்றுகிறது. இத்திரையே திரோதான சத்தியைக்காட்டி நிற்கின்றது. தெளிவு தோன்றிய பின் திரையிடப் படுவதின்று என்பது அருள் பதியப் பெற்ற உத்தமர்மீண்டும் மயங்கார் என்னும் உண்மையை உணர்த்துகின்றது. இது போன்று கோயிலுள் பல நுட்பங்கள் நிகழ்கின்றன. இவைகளை உற்றறியவும் கேட்டறியவும் மதியிலார் தகாதமொழிபலசாற்றுவர். திருவருள் அன்னவர்களையும் நன்னெறிப் புகுத்தி உய்விக்க வேண்டி வணங்குகிறேன்.

இவ்வாறு மயக்க மறைப்புச் சத்தி எனப் பொருள் பெறும் திரோதான சத்தியானது (க) இறைவனது அருட்சத்தி, (உ) உயிர் மயங்குவது பற்றி மயக்கச் சத்தி, (ங) மாயா, கருமங்களையும் சேர்த்துத் தொழிற்படுத்தும்படி ஏவிய சத்தி, (ச) உயிரறிவினைப் பொருந்தி நின்று தொழிலியற்றுவதால் அணுவினை அணைந்து நிற்கும் சத்தி (ரு) உயிரறிவில் திருவருள் பதியும்படி செய் சத்தி, (சு) திருவருளை உயிரறிவில் நிரப்பிப் பேரின்ப மருள்கிற சத்தி எனப் பல திறப் பட்டு நிற்கின்றது.

ஓம் சிவம்! ஓம் சிவம்!! ஓம் சிவம்!!!



# சைவமாதர் சைவத்தை வளர்க்க வேண்டும்

திருவரங்க நீலாம்பிகையார்

சைவம் முழுமுதற் கடவுளாகிய சிவத்தை வழிபடுவது. சிவம் பிறப்பு இறப்பு இல்லாதது; எங்குமுள்ளது; இன்ப வடிவினது. பேரறிவு பேராற்றல் பேரின்பமுடைய அறிவுப் பொருளின் சேர்க்கையினுற்றான் பிறந்திறக்கும் உயிர்கட்குப் பேரறிவும் பேராற்றலும் பேரின்பமும் உண்டாகல் வேண்டும். அறிஞர் சேர்க்கையால் அறிவும், வலிவுடையார் சேர்க்கையால் வலிவும், அன்புடையார் சேர்க்கையால் அன்பும் இன்பமும் வருதல் கண்கூடு. அது போல் அறிஞர் எல்லாரினும் வலிவுடையார் எல்லாரினும் அன்புடையார் எல்லாரினுஞ் சிறந்த சிவத்தின் துணை நமக்கும் எல்லா உயிர்கட்கும் இன்றியமையாதது. இறைவனுதவியினுலேயே பிறந்தும், இறைவன் செயலினுலேயே மறைந்தும் போகும் நமக்கு வேறு யார் நிலையான துணையாகக் கூடும்? நாம் எல்லாரும் பிறப்பவரும் இறப்பவருமாயிருக்கையில், நாம் ஒருவருக்கொருவர் துணையாவதெல்லாம், சில நாளோ, சில திங்களோ, சில ஆண்டோ, அதற்கு மேலில்லை.

அறிவின் முயற்சியினுல்தான் உலகமெல்லாம் - உலகத்துள்ள செயல்களெல்லாம் நடக்கக் காண்கின்றேம். உயிர்கள் அறியாமையில் அழுந்தி உறங்கியோ மயங்கியோ கிடக்கையில் ஏதொரு முயற்சியும் இல்லை. ஆகவே, இந்நிலவுலகத்தின் நிகழ்ச்சிகளுக்கும், இதற்கும் அப்பாலுள்ள எண்ணிறந்த உலகங்களின் நிகழ்ச்சிகளுக்கும், இவ்வுலகங்களில் உள்ள புற் பூண்டு முதல் மக்களீருன எல்லா உயிர்களின் பிறப்பு வளர்ப்பு இறப்பு முதலான நிகழ்ச்சிகளுக்கும் ஒரு பேரறிவு முதலாய் நின்றன்றே அவை தம்மை நடத்தல் வேண்டும்? கடவுள் இல்லையென்றும், கடவுளிருந்தாலும் அவரையறிய வேண்டுவதில்லை யென்றும், அறிந்தாலும் அவரை நினைந்து வணங்க வேண்டுவ தில்லை யென்றும் சொல்வோர் சொல் எதனையொத்திருக்கின்ற தென்றால், 'எனக்குத் தாய் தந்தையர் ஆசிரியர் அன்புடையார் இல்லை, இருந்தாலும் அவரை அறிய வேண்டுவதில்லை, அறிந்தாலும் அவரை நினைந்து அவர்பால் அன்பு பூண்டு வணங்க வேண்டுவதில்லை' என்று ஒருவன் சொல்வதையே ஒத்திருக்கின்றது. என் அறிவே சிறந்ததென்பவன் தன் தாய் இன்றித் தந்தையின்றி ஆசிரியர்இன்றிக் கற்றார்உதவியின்றி அவ்வறிவைப் பெற்றதுண்டோ? வரவர அறிவிற் பெரியராதற்கு, வரவர அறிவிற் சிறந்தார் சேர்க்கையும் அவர் எழுதிய நூற் பயிற்சியும் நமக்குக் கட்டாயமாக வேண்டப் படுதல் போலவே, எல்லா அறிவினுஞ் சிறந்த பேரறிவு பேரின்பத்தைப் பெறுதற்கு அவை யெல்லாம் ஒருங்குடைய சிவத்தின் சேர்க்கை இன்றியமையாத தென்க.

நம்போற் பிறந்து இருந்து துன்புற்று இறந்து மறுமை யுலகங்களில் அலறித் திரியும் பேய்களைத் தெய்வங்களாக வணங்குவோர், அப்பேய் வடிவைப் பெற்று மறுமையில் அலறித் திரிவார்கள். அமெரிக்காவில் ஒரு கல்லூரியில் விலங்குகளின் அமைப்பை ஆராய்ந்து படித்த ஒரு மாணவன், ஓர் எருமை மாட்டின் அமைப்பிற் கருத்தைச் செலுத்தி அதனை இரவு பகல் நினைந்து வர, அவன் சிலநாளில் தன்னை ஓர் எருமை மாடாகவே கருதி அதற்குரிய செயல்களைச் செய்தனன் என்று ஓர் ஆங்கிலப் புலவர் மிக நுணுகி ஆராய்ந்தெழுதிய மனநூலில் எழுதியிருக்கின்றார். ஆகையால், நம்சைவத் தாய்மார்கள் பேய்களைத்தெய்வமாகநினைந்து வணங்குதல் தமக்குந் தம்மைச் சேர்ந்தார்க்கும் பெருந் தீமை செய்வதுடன், தம் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகட்குந் தீமை செய்தவராவார்கள். எல்லா அறிவும், எல்லா ஆற்றலும், எல்லாச் செல்வமும், எல்லா இன்பமும் ஒருங்குடைய சிவத்தையும் அம்மையையும், நம்சைவ ஆசிரியரான மாணிக்கவாசகர், திருஞான சம்பந்தர் முதலாயினரை

யும் மிக நினைந்து மிக வணங்கி மிகவாழ்த்தி வணங்குதலே நமக்கும் நம்மைச் சார்ந்தார்க்கும் அளவுபடாத பெரும் பயனைத் தரும்.

மற்றைச் சமயங்களும் மற்றை மொழிகளும் தத்தம் ஆசிரியர் பெயராலும் தத்தம் மக்களின் பெயராலுந் தம் மதங்களைப் பௌத்தம், கிறித்துவம், மகமதியம், மத்வம், இராமாநுஜம் என்றும், தம் மொழிகளை ஆரியம், ஆங்கிலம், கிரேக்கம், எபிரேயம், சீனம் என்றும் முறையே வழங்கிவரச், சைவருந் தமிழரும் ஆகிய நாம் மட்டும் இன்ப வடிவினனாய் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாயுள்ள சிவத்தின் பெயரால் 'சைவம்' என்று நமது சமயத்தையும், அச் சிவத்தின் இன்பு இயல்பைத் தன்கண் உடைமையால் இனிமை யென்னும் பொருளுடைய 'தமிழ்' என்னும் பெயரால் நமது தமிழ் மொழியையும் வழங்கி வருகின்றோம். இத்துணைச் சிறந்த தமிழைக் கற்றுச் சிவத்தை வணங்குதலையே நாம் உறுதியாகப் பிடித்தல் வேண்டும். மற்றை மொழிகளைத் தமிழ் கற்ற பிறகுதான் கற்றல் வேண்டும்.

குறிப்பு :— எனக்குத் தெரிந்தவரை சைவ மாதர் சைவத்தை வளர்க்க வேண்டும் என்னும் பொருள் பற்றி மிகச் சுருக்கமாக வரைந்தேன். இதனைப் பெருக்கிப் பின்னால் வெளியிடத் திருவருள் துணை புரியுமென்று நம்புகிறேன்.

# சைவ சமயப் பாதுகாப்பு

ச. சச்சிதாநந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி.

"ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே !"

என்று இற்றைக்குச் சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பு மதுரைச் சோமசுந்தரக் கடவுள் சந்நிதியில் புகலித் திருஞானசம்பந்தப்பெருமான் விண்ணப்பித் தருளினார். அப்பெருமான் கொண்டிருந்த ஆர்வம், அவர் பாதுகாத்துத் தந்த சைவசமயத்தில் இக்காலத்துப் பிறந்துள்ளோருள் பெரும்பாலாருக்கில்லை.

தற்கால உலகை நோக்குமிடத்து, பொதுவாகச் சமயம் என்ற அளவிலேயே வெறுப்பும் பகைமையும் ஆங்காங்குத் தோன்றியிருப்பது புலனாகும். சமயமானது மக்களைப் பலவாறாய்ப் பிரித்து அவர்கள் முன்னேற்றத்தைத் தடுத்து நிற்குமொரு தீமை என்றும், அது வலியிழந்து ஒழிந்தாலல்லது உலகம் நலம்பெறுதென்றும் கருதுவார் பலருளர். சமயப்பற்றுள்ளார் சிலர் இவர்களை நாஸ்திகர் என்று பழிப்பர்.

உண்மைச் சமயம் இன்னதெனக் காய்தல் உவத்தல் அகற்றி மேற்குறித்த இருதிறத்தாரும் ஆராய்வராயின், அவருக்குள்ளிருக்கும் கருத்து முரண்பாடு பெரிதும் மறைந்துவிடும். ஆகையால் சைவசமயப் பாதுகாப்பைப்பற்றிப் பேசுமுன்பு, சமயத்தினியல்பையும் அவசியத்தையும் பற்றிச் சிறிது ஆராய்தல் அவசியமாகும்.

சமயம் என்பது வரட்டுச் சாத்திரமல்ல ; வெறுந் தத்துவக் கொள்கையல்ல ; போலி வேடமல்ல ; பொருள்தராச் சடங்கல்ல; மெய்ஞ்ஞானமில்லாக் குருட்டுக் குருமார் வழிபாடுமல்ல ; அறிவையும் அன்பையும் வளர்க்காத ஆலயம் மடம் முதலிய அமைப்புக்களுமல்ல. மேற்குறித்த அடைமொழிகள் அணுகப்பெறாத சாத்திரமும், திருவேடமும், சடங்கும், ஆசிரியனும், ஆலயமும், திருமடமும் சாதனமாகக் கொண்டு மக்களைச் சிவ நெறியிற் செலுத்தும் ஒரு நல்ல ஏற்பாடாகும். ஆயினும், அடிக்கடி மக்கள் இச்சாதனங்களையே சமயம் என





மயங்கி எண்ணி, அதைக் கெடுத்துத் தாமுங் கெட்டுவந்திருப்பது மெய்ம்மையே. ஆனால், இதுபற்றியே போலிச் சமயத்தையும் உண்மைச் சமயத்தையும் ஒன்றெனக் கொண்டு, சமயமே தீயது என்றல் முறையாகாது. போலிச் சமயத்தை உண்மைச் சமயத் தலைவர்கள் அவ்வப்போது கண்டித்துத் தம் வாழ்க்கையினாலும் அறிவுரைகளினாலும் மெய்ச்சமயம் இன்னதென விளக்கி வந்திருக்கிறார்கள். உண்மைச் சமயம் இல்லையேல், மக்கள் உயிர்வாழ்க்கை வளம்பெறாது; உண்மையான முன்னேற்றம் ஒன்றும் ஏற்படாது. "Religion is not a strange or added thing, but the inspiration of secular life, the breathing of an eternal spirit through this temporal world " * "சமயம் என்பது புதுமையான, அல்லது புறத்திலிருந்து கொண்டு வந்து சேர்க்கப்பட்ட ஒரு பொருள் என்று ; அது நம் அன்றாட லௌகிக வாழ்க்கை நல்வழியில் நடக்கத் தூண்டுமொரு சக்தி ; என்றுமுள்ள பரமான்மா இம்மண்ணுலகின் வாயிலாக விடுகின்ற மூச்சு". கடவுளுக்கும் தனக்கும், பிற உயிர்களுக்கும் தனக்கும், பிற வுயிர்களுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை மனிதன் உள்ளவாறு அறிந்து ஒழுகுதலே உண்மைச் சமய ஞானமும் ஒழுக்கமுமாம். இச்சமய ஞானமும் ஒழுக்கமும் மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவை. உண்மைச் சமயம், மக்களை அன்பினால் பிணித்து ஒன்றுபடுத்தும் இயல்புடையதேயன்றி, வேறுபடுத்திப் பிளவுகளையும் பகைமையையும் வளர்க்கும் இயல்புடையதன்று; எல்லாப் பொருள்களின் உண்மையையும் மக்கள் காணுமாறு தூண்டுவதேயன்றி, ஆராய்ச்சியில் அறிஞர் கண்ட எந்த உண்மையையும் சமயசாத்திரங்கட்கோ சமயவாதிகள் நம்பிக்கைக்கோ முரணாயிருக்கிறதென்னும் காரணத்தால் மறைக்கவோ எதிர்க்கவோ முயலுவதன்று. "அன்பே சிவம்", "அறிவே சிவம்" என்றனர் ஆன்றோர். ஆதலின் அன்பையும் அறிவையும் எதிர்ப்பது ஆண்டவனையே எதிர்ப்பதாகும்.

இவ்வியல்பினதாகிய மெய்ச்சமயம், உலகில் போதிய ஆற்றலுடன் விளங்காமையால்தான், பொய், பசி, பிணி, பயம், பொறாமை, பகை முதலிய பொல்லாங்குகள் நிறைந்திருக்கின்றன. இவைகளை ஒழித்தற்குரிய ஒரே சக்தி சமய சக்திதான் என்று லாயிட்ஜார்ஜ் (Lloyd George) முதலிய அறிஞர்கள் அநுபவத்திற் கண்டு கூறுகின்றனர். ஆகவே சமயம் வேண்டும் என்னும் முடிபு சித்திக்கும்.

ஆனால், 'ஒரு சமயமென்றில்லாமல், உலகில் பல சமயங்கள் இருக்கின்றனவே ; இவைகளும் ஒன்றோடொன்று ஒவ்வாமல் உளவன்றே ! இத்தனை சமயங்கள் ஏன் ? இத்தனையும் மெய்ச் சமயங்கள் தாமா?' என்னும் ஐயங்கள் பலர்க்குத் தோன்றுவது இயல்பே. சமயங்கள் பல உண்டென்பது கண்கூடே. பத்து, இருபதல்ல ; பலகோடியுண்டு. "சமய கோடிகள்", "அரிய சமயம் ஒருகோடி" என்பர் ஆன்றோர். ஆழ்ந்து நோக்கினால் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு சமயமுண்டு. மக்கள் தம் அறிவு குணம் செயலில் ஒரே தன்மையும் முதிர்ச்சியளவும் உடையவர்களாயில்லை. யாவர்க்கும் பொதுவாகச் சில அடிப்படியான இலக்கணங்கள் இருப்பினும், ஒவ்வொருவர்க்கும் தனித்தனிச் சிறப்பியல்புகளும் சில உள. இதனால் மக்களிடையே அறிவிலும் ருசியிலும் வேற்றுமைகள் காணப்படுகின்றன. ஆகவே, அவர்கள் சமயக்கொள்கைகளும் சிற்சில அமிசங்களில் வேறுபடுவதும் இயற்கையே. இதனால்தான் கடவுளைப்பற்றிய கோட்பாடுகளிலும், அவரை அடைதற்குரிய வழிகளைப்பற்றிய கருத்துக்களிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே, சமயங்கள் பல உள்ளன. இவை மனித இயற்கையின் அடிப்படையைப்பற்றி நிற்பதால் இவற்றை அழிக்கவோ, ஒன்றாக்கவோ முடியாது. இவை யனைத்தும் அவசியம் என்று ஒப்புக்கொள்ளவும் வேண்டியிருக்கிறது.

ஆயினும், பல்வேறு சிறப்பியல்புகளால் வெவ்வேறெனக் கணக்கிடப்படும் சமய கோடிகளினூடே ஒரே சமயந்தான் உயிர்நாடியாய் ஓடிக்கொண்டிருக்கின்றது. வடிவிலும், அளவிலும், நிறத்திலும் பலதிறப்பட்ட விளக்குக் கூடுகளுடன் மின்சார

* Henry Drummond.

விளக்குகள் எரியும்போது, காட்சி பலவாயிருக்கின்றது; உள்ளிருந்து இயக்கும் சக்தி ஒன்றுதான். இவ்வொரு மின்சார சக்தியே பெரிதாயும் சிறிதாயும் பலவேலைகளைச் செய்கின்றது. இதுபோலவே சமயங்கள் பல இருப்பினும், அப்போர்வைகளினுள்ளே இருப்பது ஒரு சமயந்தான். "வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின், விளங்கு பரம்பொருளே! நின்விளையாட்டல்லால், மாறுபடுங் கருத்தில்லை" என்றார் தாயுமானார்.

இச்சமயங்களை அவ்வவற்றின் உண்மை நிலையில் வைத்துக் காணும்போது, அவை யாவும் மெய்ச்சமயங்களென்றே தோன்றும். ஒரு கலாசாலையில் முதல் வகுப்பு முதல், எம். ஏ. வகுப்புவரை பல வகுப்புக்கள் இருக்கலாம். அவற்றிற் படிப்போர் யாவரும் மாணவர் என்னும் தன்மையில் ஒரு கூட்டத்தினரே. அனைவரும் உண்மையையே உணர்ந்து வருகின்றனர். அக்கலாசாலை முழுவதிற்கும் தலைவர் ஒருவரே. ஆயினும், வகுப்புகளின் அறிவாற்றல்களை நோக்கப் படிமுறையில் அளவு வேறுபாடிருப்பது புலனும். இவ்வியற்கையில் தவறொன்றுமில்லை. எல்லா வகுப்புக்களும் அவசியமே; எல்லாவற்றிலும் கற்பிக்கப்படுவதும் மெய்யே. இவைபோன்றே உலகமாகிய கலாசாலையிலும் பல வகுப்புக்களுள்ளன. மக்கள் தத்தம் அறிவினளவிற்கேற்ற வகுப்பில் சேர்ந்து உண்மையறிந்து வருகின்றனர். எல்லா வகுப்புகளும் தேவையே; எல்லாப் பாடங்களும் உண்மை தெரிப்பனவே, எல்லாவற்றையும் நடத்தும் தனித்தலைவர் ஒருவரே. இவ்வகுப்புகள் தாம் பல்வேறு சமயங்கள். இவைகளைப் படிமுறையில் வைத்து உள்ளபடி காணுகையில் முரண்பாடு தோன்றாது; யாவும் நல்லன என்றே தோன்றும்.

இதுவரையில் விளக்கிய உண்மைகளால், உயிராயுள்ள ஒரு பெருஞ் சமயம் உள்ளிருந்தியக்கி மக்கட்கு நலஞ் செய்வதற்கு உடம்பு போன்றுள்ள பல சமயங்கள் தேவை என்பது புலப்படும். ஆனால், "உடம்பார் அழிந்தால் உயிரார் அழிவார்". ஆகவே, பன்னெடுங்காலம் நிலவி நின்று தம் உபயோகத்தையும் சக்தியையும் காட்டி வந்துள்ள சமயங்களாகிய உடம்புகளை, போலி புணர்வொழுக்கங்களால் நோய்வாய்ப்படாமற் பாதுகாத்து வருதல் அவசியமாகும். அவைகளில் பொய் மிகுந்து மெய்யைத் துரத்திவிடுமாயின், அவ்வுடம்புகள் மாய்ந்துபோம். ஆதலின், அவ்வச் சமயத்திற் பிறந்தோர் அவரவர் பிறந்த சமயம் நன்னிலையில் நின்று மக்கட்கு உபகரித்து வருவதற்கான முயற்சிகளைச் செய்யுங் கடப்பாடுடையராவர். முடிவில், அவை இருத்தலும் இறத்தலும் கருத்தன் கருத்தின்படியாகும். 'எல்லாச் சமயங்கட்கும் உயிர்நாடி ஒன்றே. எல்லாச் சமயங்களும் முடிவில் ஆன்மாக்களைக்கொண்டு சேர்க்குமிடமும் ஒன்றே' என்னும் அடிப்படை உண்மைகளைச் சமயவாதிகள் அனைவரும் மறவாதிருப்பாராயின் சமயப்பிணக்கு நேர வழியில்லை.

இவ்வாறு நோக்குங்கால், சமயங்களுள் ஒன்றெனக் கணக்கிடப்படும் நிலையில் சைவமும் போற்றிப் பேணற்குரிய தொன்றென்பது சொல்லாமலே அமையும். இதற்கு இந்நிலையே யன்றி, ஏனைச் சமயங்கட்கெல்லாம் தாயகமும் நாயகமுமாய் நிற்கும் ஒரு தனி நிலையும் உண்டு. இந்நிலையில் இதைச் சன்மார்க்கம், ஒளி நெறி, திருநெறி என்று குறிக்கலாம். இதன் உச்சியிலேயே சமய அதீத நிலைமையும் அமைந்திருக்கின்றது.

இப்பெரிய பொது நிலையில் சைவம் மற்றைச், சமயங்களினூடே விளங்கிக்கொண்டிருக்கின்றது. அதை ஒரு பெருஞ் சமயம் எனப் பார்க்கும் சிறப்பு நிலையில், அது இந்தியாவில் மட்டும் காணக்கூடிய தொன்றாம். அதிலும் தமிழ்நாட்டில் ஒரு தனிச்சிறப்புடன் விளங்குந் தன்மையுடையது.

இச் சிறப்புச் சைவம் தமிழ்நாட்டில் இன்று சீரிய நிலையில் இல்லை. சைவசமயத்திற் பிறந்தோர் பலர் பிற சமயம் புகுந்து வருகின்றனர். மதமாறுதல் செய்யாதோரும் தமக்கென வொன்றிலராய், வேளைக்கொரு கோலமும் கொள்கையு முடையராய் வழுவழுப்பான வழுவாழ்க்கை நடத்தித் தம் மிறைவனை நண்ணறியாமல் நழுவுகின்றார்கள். தேவாரம் பெற்ற திருத்தலங்கள் தாமும் பல ஊர்களில் விளக்கம் பெரிதும் குன்றிப் பரிதாபகரமான நிலையிலுள்ளன. சைவசமய வளர்ப்புக்கென ஏற்பட்ட திருமடங்கள் தம் சமய வளர்ச்சிக்கான முயற்சிகளை மேற்கொள்ளாது, பலவேறு லௌகிகத் தொல்லைகளிலகப்பட்டு அல்லற்படுகின்றன. வீட்டிலேனும், கல்லூரிகளிலேனும், கோயில் மடங்களிலேனும் சமய போதனை ஒழுங்காக நிகழாமையால், சைவ சமயத்தைப்பற்றிச் சைவர் பெரும்பாலோர்க்குத் தெளிவான யாதொரு அறிவும் கிடைப்பதரிதாய் விட்டது. அசட்டையும், அறியாமையும், விபரீத ஞானமும் ஒன்றுகூடித் தமிழ்நாட்டிற் சைவ சமயிகள் வாழ்வை உலைத்துவிட்டன. இன்னுஞ் சில தலைமுறைகள்வரை இந்நிலையே நீடித்து விடுமாயின், சிறப்புச் சைவம் செத்தே போகும்.

'சிறப்புச்சைவம் செத்தொழிந்தால் முழுகிப் போவதென்ன? உலகிற்கு அதனால் என்ன நஷ்டம்?' என்னும் கேள்வி பிறக்கலாம். சைவத்தின் தனிமேம்பாட்டை ஆன்றோர் பலர் நன்குணர்ந்து பாராட்டியுள்ளார். ஐயங்கொள்வோரைச் சமரச ஞானியாகிய தாயுமானார் 'ஆகாரபுவனம் - சிதம்பர ரகசியம்' என்னும் பகுதியில் அருளிச் செய்துள்ள பாடல்களை ஆழ்ந்து நோக்க வேண்டுவல். சைவ நன்னெறி "அம்மையப்பரே உலகுக்கு அம்மை அப்பர்" என்னுங் கொள்கையில் நிற்பதொன்றாதலால், மக்களனைவரும் அன்பாற் பிணிக்கப்பட்டு மேனெறி யடைதற்குத் தூண்டும் தன்மையது. "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொரு"ளாயுள்ள முதல்வன் "பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றிய"னாவான் என்று போதித்தலின், அது காலமாறுதலால் கலங்க வேண்டிய நிலையிலிருப்பதொன்றன்று; இக்காலத்தில் தோன்றும்சிக்கல்களாகிய நாட்டுத்தொல்லை, சாதித்தொல்லை, சமயத்தொல்லை, பொருளாதாரத் தொல்லை, அரசியல் தொல்லை, தொழிலாளி முதலாளித் தொல்லை, ஆண் பெண் போட்டித் தொல்லை முதலிய தொல்லையினின்றும் மக்கள் விடுபடுதற்கு வேண்டிய வழிகளைக் காட்டும் மாண்பினையும் உடையது. இத்தகைச் சிறப்புடைய சைவம் ஏட்டளவில் ஒடுங்கிப் போமாயின், உலகிற்கே ஒரு பெரு நஷ்டமாகும். இனிச் சைவ மரபில் தோன்றி விளங்கிய யோகியர், ஞானியர், புலவர் இவர் தம் அரும் பெரும் அறிவும் அனுபவமும் பிற்கால உலகிற்குக் கிடைக்காது மறைந்துபோமே! இதுவும் பெரு நஷ்டமன்றோ? போக்குவரவு சாதன மிகுதியால் பல தேசங்களும் நெருங்கிய தொடர்புடையனவாகி, உலகமெல்லாம் ஒரு பெருங் குடும்பம் என்னும் குறிக்கோளை ஒருவாறு மக்கள் உணரத் தலைப்பட்டிருக்கும் இந்நாளில், பல நாட்டு ஆன்றோர் கூறிய உயரிய உண்மைகளும் அனுபவங்களும் அவசியமாகும். இப்படிக் காண்கையில், தண்டமிழ்நாட்டுச் சைவப் பெருமக்கள் அறிவனுபவங்களும் பொதுவாய் உலகிற்கு வேண்டும்; சிறப்பு வகையில் தமிழ்நாட்டிற்கு வேண்டும். ஆதலால் சைவத்தை அதன் சிறப்புருவத்திலும் பாதுகாத்தல் நல்லோர் கடனும்.

உண்மைச் சமயத்தை உயிரென்று மேலே குறித்தோம். உயிர் உடம்பொடு கூடியல்லது தொழிற்படல் இல்லை. அதுபோல் சமயமும், சாத்திரம், அநுட்டானம், கோயில், மடம் முதலிய அமைப்புகள் என்னும் உடம்பொடு பொருந்தியே பொதுமக்கட்கு உபகரிக்கும் இயல்பினதாயுள்ளது. இப்படி இவற்றொடுகூடிநிற்கையில்தான் சமயத்திற்கு ஆபத்துவிளைகின்றது. ஆயினும் அடியோடு இப்புறக் கருவிகளைத் தள்ளிவிட வழியில்லை. மக்கட்கு வேண்டிய கருப்பஞ்சாறும் தனிச்சாறாக இயற்கையில் கிடைக்கக் காண்கிலேம். கோதும் சாறும் கூடிய கருப்பஞ்செடியிலிருந்தே சாற்றைப் பெறவேண்டியிருக்கின்றது. ஆகவே, சமயக் கோட்பாடு, அமைப்பு, சடங்கு, சாத்திரம் என்பவற்றை அளவோடும் எச்சரிப்போடும் கொண்டுதான் சமயத்தினால் உலகம் நன்மையடைய வேண்டியிருக்கிறது. உயிரை மறந்து உடம்பையே உயிரெனப் போற்றல் பிழைபாவது போலவே, உடம்பே வேண்டாம் உயிரே சாலும் என்றலும் பொதுஜனங்கட்கு நன்மை பயவாப் பிழைபாடாம். உடம்பை அளவில் மதித்து, அதனினும்சிறந்தது உயிரென்பதை எந்நாளும் வற்புறுத்தி வருதலே சமய அறிஞர் செய்கடன் என்க.

"சொல்ல நமன்தமர் கொண்டு போமிடத் - தல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே"

இதுவரை விளக்கியவற்ருல், சைவர் தம் சமய விஷயத்தில் அசட்டையோ டிருத்தலும், விபரீத சமரசம் பேசித் தம் சமயத்தின் நல்ல சிறப்பியல்புகளைப் பேணுதிருத்தலும் தவறென்பது புலப்படும். பிற சமய சகோதரர்கள் தத்தம் சமயங்களைப் பேணி வருவதையும் சைவ நன்மக்கள் உணர்ந்து, அச்சமய சோதரர்களிடமிருந்து கற்கவேண்டிய நல்லனவற்றைக் கற்றுக்கொள்ளல் மிகவும் அவசியமாகும். அவற்றிற் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடத் துணிவாம் : முதலில் கிறிஸ்துவ சோதரர்கள் சமயத் தொண்டாற்றும் முறைகள் உலகறிந்தவை. அவர்கள் விவிலிய நூலை 600-க்கு மேற்பட்ட பாஷைகளில் மொழிபெயர்த்திருக்கிருர்கள். 1928-ல் 1,13,89,540 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டன. இலவசமாக வழங்கப்பட்டவை எண்ணில. இந்தியாவில் மட்டும் 700-க்குக் குறையாமல் கிறிஸ்துவப் பிரசார சபைகள் இருந்து வருகின்றன. மேற்குறித்த ஆண்டில் சமயப் பிரசாரத்திற்கென்று சில மேல்நாடுகள் தந்த நன்கொடைப் பொருளின் மொத்தம் 3,89,44,846 சவரன்கள். இப்பெரும்பொருளையும், அதனினும் சிறந்ததாக மதிக்கவேண்டிய தியாக உணர்வுடன் வெளிவரும் சமய அறிஞர்களின் துணையையும் கொண்டு, அச்சமயத்தார் எத்தனையோ பாடசாலைகளையும், சங்கங்களையும், வைத்திய சாலைகளையும் பல தேசங்களிலும் வைத்து நடாத்தி, எளிய மக்கள் துன்பங்களைத் துடைத்து அவர்களைக் கிறிஸ்துவர்களாக்கப் பாடுபட்டு வருகிருர்கள். தீண்டப்படா மரபினரில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் கிறிஸ்துவர் முயற்சியால் அறிவொழுக்கங்களிலும் செல்வத்திலும் செல்வாக்கிலும் முதிர்ந்து விளங்குகின்றன. இப்படிக் கிறிஸ்துவர் உலகெங்குஞ் சென்று மக்கட்கு எல்லாத் துறைகளிலும் தொண்டாற்றி வரும் பெருஞ் சிறப்பு சைவர் குறிக்கொள்ளத் தக்கதொன்று. மற்றொரு பெருநலமாவது அவர்கள் ஞாயிறுதோறும் கிறிஸ்துவ ஆண்மக்களையும் பெண் மக்களையும் அவ்வவ்வூர்க் கிறிஸ்துவக் கோயில்களில் ஒருங்கே கூட்டி முறைப்படக் கடவுள் வழிபாடு செய்யப் பழக்குதலும், சமயநூற் பயிற்சி பெற்ற போதகர்களைக் கொண்டு கிரமமான சமய போதனை செய்வித்தலுமாகும். இம்முறையால் இருபாலாருக்கும் அறிவும், கடவுட்பற்றும் ஒருசேர வளர்கின்றன. தத்தம் கடமைகளைத் திறமையோடு புரியும் ஆற்றலும் பெருகுகின்றது. அனுவசியமான விதிகளும் தடைகளும் அவர் கோயில்களில் இல்லை. அவரவர் தனித்தனி வழிபடவேண்டும் என்றும் வற்புறுத்தப்படுகின்றது. பஜனைகள் புராணப் பிரசங்கங்கள் இந்துக்களுக்கு ஓரோ வழி இப்பயனைத் தரினும், கிறிஸ்துவர் கைக்கொள்ளும் முறையை நன்கு தழுவி, இவர்களும் தத்தம் கோயில்களில் அறிவையும் அன்பையும் பெருக்கும் முறையில் வழிபாடும் சமய போதனையும் வாரந்தோறும் நிகழ ஏற்பாடு செய்வது இன்றியமையாததாம். நம்மவருள் காணப்படும் பேதஉணர்ச்சியையும் அறியாமையையும் குறைக்க இது ஒரு பெருஞ் சாதனமாகும். தியாக உணர்வை வளர்க்கக் கிறிஸ்துவப் பெரியோர் வரலாறுகள் பெரிதும் தூண்டும்.

இனி, முகம்மதிய சகோதரர் சமய வாழ்க்கையிலும் நாம் போற்றிக்கொள்ளுதற்குரிய நலங்கள் பலவுள : அவர்கள் ஒரு தெய்வ வழிபாட்டில் ஊன்றி நிற்பவர்கள். சைவர் போல் இறைவன் பிறவான் இறவான் என்னும் கொள்கை யுடையவர்கள். வழிபடு முறையை எவ்வளவு சுருக்கல் கூடுமோ அவ்வளவும் சுருக்கி, மனதால் வழிபட முயலும் மாண்பினையுடையோர் ; ஒருநாளைக்குக் குறைந்தது ஐந்து முறையேனும் ஆண்டவனை நினைக்கும் வழக்கமுடையோர் ; பிறப்பால், நிறத்தால் உயர்வு தாழ்வு பாராட்டாது, மகம்மதியர் எல்லோரும் சகோதரர்களே என்பதைத் தம் அன்றாட வாழ்வில் - வெறும் பேச்சிலன்று - காட்டி வருபவர். ஆதலால் உலகத்தில் பல வேறிடங்களிலுள்ள மகம்மதியர் எல்லோரும் ஒரு பெருங் கூட்டமென்னும் ஒத்துணர்ச்சியையும், அதனுல் வரும் பலத்தையும் பெற்றவர்களா யுள்ளார்கள். கிறிஸ்தவர்களைப் போலவே இவர்களுக்கும் சமயபோதனைக்கு ஏற்பாடுண்டு. போதகர்கள் ஒரு சாதியை அல்லது குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கவேண்டும் என்னும் கட்டுப்பாடில்லை. அவரவர் தகுதிமட்டுமே கவனிக்கப்படுகின்

“ பிறப்பில் பெருமானைப் பின்தாழ் சடையானை - மறப்பிலார் கண்டீர் மையல் தீர்வாரே ”



பர்களிற் கற்ரேரும் மற்ரேரும்
ற நாடோறும் ஆண்டவனை வழி
நவதோடு, ரம்சான் மாதத்தில்
ஒரு ஏ மட்டும் உண்ணும் விரதத்தைக் கடுமையாய் அநுட்டித்து வருகின்றனர். அதுமட்டுமன்று: தம்சொத்தில் குறித்த ஒரு பங்கைத் தம்சமய சகோதரர் நன்மைக்கென ஆண்டுதோறும் மனமாரக் கொடுத்துதவும் தியாகப் பழக்கம் அவர்கள்பால் திகழ்கின்றது. செல்வக் குடும்பங்களில் அத்தொகை பல்லாயிரக் கணக்கில் செல்லும். அதுபற்றி அவர் மனம் சுருங்குவதில்லை. ஏழைகட்குத் தாராளமாய் வழங்கும் இயல்பு அவர்கட்கு எந்நாளும் உண்டு. மற்றுமொன்று குறிப்பிடத் தக்கது : ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் முகம்மதிய ரனைவரும் மசூதிகளில் தொழ வரும் வழக்க முடையவர்கள். அதுகாலை அவர்கள் வேதத்துக்குத் தக்காரால் பொருள் விளக்கப்படுவதோடு, அவர் ஊரிலுள்ள சமய சோதரர்களின் லெளகிக க்ஷேமம் வைதிக க்ஷேமம் இரண்டையும் பற்றிய விசாரணை செய்யும் கடமையும் நிறைவேற்றப்படுகின்றது. இத்துறைகளில் வேண்டிய உதவி புரிதற்கு அவர்கள் விரைகின்ருர்கள். சமய நூல் வல்லோரையும் நல்லோரையும் போற்றிப் பொருளுதவி முதலிய உதவிபுரிந்து அன்பு காட்டுவதில் முகம்மதிய சகோதரர்கள் சாலச் சிறந்தவர்கள். சமயங் கற்பிக்கப் படாத கல்வி பயனற்றதென்னும் கொள்கை யுடைய இவர்கள், சமய விஷயத்தில் நடுநிலைமை வகித்துவந்த அரசாங்கத்தின் கொள்கையை ஒருவகையில் அசைத்து, அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளிலும் முகம்மதியர்க்குச் சமயபோதனை நிகழ்ந்து வருவதற்குரிய ஏற்பாட்டைச் செய்துவிட்டனர். அவர்கட்குள்ளிருக்கும் ஒற்றுமை உலகறிந்தது.

கிறிஸ்துவமும் இஸ்லாமும் தம் மதத்தைப் பரப்புதலில் அதிக தீவிரமான முயற்சி யுடையவை. இவற்றிற்கு ஆள் தருவோர் இந்துக்கள்! இந்துமத உண்மைகளையும் இவ்விருமத உண்மைகளையும் அறிந்து சீர்தூக்கிப் பார்த்தபின் இந்துக்கள் அப் புறமதம் புகுகின்ருர் என்பதில்லை. சமய லங்கனம் [illegible]ரிற் பலர் இந்துமத ஞானம் ஏதுமில்லாதோர். இம்மதத்
கும்வரை இம்மையில் தொல்
இருத்தலறிந்து, அவற்றை நீக்க ஆ
பிறர் வந்து அழைக்குங்கால் அங்குச் செ
அறிவு, செல்வம், செல்வாக்கு, மரிய
முதலிய நலங்களைப் பெற ஆண்டுச்
பவர்களே. இப்படிச் சென்றுகொண்டி
கும் இந்துக்கள் தொகை பெருகிக்கொண்
இருக்கின்றது. 1911-ம் ஆண்டுவரை இந்துக்கள் தொகை 100க்கு 15 தான் வளர்ந்தது. அதேகாலத்தில் கிறிஸ்துவர் தொகை 100க்கு 100 ஆகவும், 40 ஆண்டுகளை நோக்கினுல் 100க்கு 200 ஆகவும் இந்தியாவில் வளர்ந்துள்ளது. இன்னும் தீண்டா வகுப்பு இந்துக்கள் குடும்பம் குடும்பமாய்ப் புறமதம் போய்க்கொண்டே யிருக்கின்றனர்.

இன்னும் சிறிது காலம் தென்னிந்திய இந்துக்கள் குறுகிய நோக்குடனும் சுயநலத்துடனும் இருந்து, சிறுசண்டையும் கலகமும் தம்முள் விளைத்துக்கொண்டு தம்மெளிய சகோதரர்க்குச் சமயஞானம் புகட்டாது வாளா கழிவரேல், தென்னுட்டிலும் இந்துக்கள் சிறுபான்மையினராய்ப் போவது திண்ணம். கண்ணுள்ளோர் காணக் கடவர்; காதுள்ளோர் கேட்கக்கடவர்.

இனி, சிக்கியரிடத்தும் கற்கவேண்டிய படிப்பினைகள் சிலவுள: அவர்களும் புறவழிபாட்டில் ஆடம்பரத்தைக் குறைத்து விட்டவர்கள். சிக்கியரனைவரும் ஒரு குழுவினர் என்னும் உணர்ச்சியை வளர்த்து வருபவர்கள்; பிறப்பாற் சாதி பாராட்டாதவர்கள் ; அனைவரும் சகோதரர் சமானஸ்தர் என்று எண்ணி யொழுக முயல்பவர்கள். அவர்கள் குருமார்களுள் ஒருவராகிய குருகோவிந்த சிங்கு என்பார் ஒரு முறை தமது சீடரொருவரையே தமக்குத் தீக்ஷை பண்ணும்படி செய்தார் என்னில், அவர்கள் சமத்துவ நாட்டத்தை என்னென்று வருணிப்பது !

இந்துக்களில் ஒரு பிரிவினராகிய ஆரிய சமாஜத்தாரை நோக்குகையில், அவர்கள் இந்துக்களுக்கு நேர்ந்துள்ள ஆபத்தை யுணர்ந்து, அவர் மதத்தின் குறைபாடுகளை அகற்றி, அதன் தூய நிலைமையில் அதைப் பரப்பும் தீவிர முயற்சியுடையராய் இருக்கின்றனர். அவரவர் தகுதியாலேயே சாதி

“ [illegible]ல்லா றெனப்ப[illegible]தியாதெனின் யாதொன்றுங் - கொல்லாமை சூழு நெறி ”

று கொண்டு, தம்முள் ஒத்து ர். தீண்டாமையைத் தீக்கை லைத்து, தாழ்ந்தோரை உயர்க் க்கு வருகின்றனர். அவர்களுள்ளும் ு உணர்வு சிறந்து விளங்குகிறது.

'வோர் ஆரிய சமாஜியும் தம் வரு ல் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் 'பத் தொண்டிற்கும் கல்வி வளர்ச்சிக்கு மன்று மணமுவந்து அளித்து வருகின் றார். இவர்கள் பல பாடசாலைகளையும், உயர்தரக் கல்லூரிகளையும், குரு குலங் களையும் வைத்து நடத்திப் பல்லாயிரம் மக்களை உடல் வலிவு, அறிவு நலம், தியாக வுணர்வு, தீரம் முதலிய நன்மைகள் நிரம்பப் பெற்ற வீரர்களாக்கி நாட்டுக்குதவி வரு கின்றனர்; மலைவாசிகளாகிய எளிய மக்க ளிடையே பிரசாரஞ் செய்து அவர்களையும் இந்துக்களாக்கி வருகின்றனர்; புறமதம் புக் கோர் மீண்டும் இந்துக்களாக விரும்பினால், அவர்களை அன்புடன் வரவேற்கின்றனர்.

மேற் குறித்த பல சமயச் சகோதரர் சமயப் பற்றைச் செயலில் காட்டி வரும் சிறப்பு, சைவர் கவனத்தையும் இழுக் கத் தக்கதொன்றாம். இப்போது நம் நாடும் நம் சமய சகோதரர்களும் அடைந்துள்ள நிலையைஉள்ளபடி அறிய மனமும்முயற்சியும் இன்றி, சுயநலச் சிறுவாழ்வு வாழ்ந்து ஒழிந்துபோதல் 'சைவமாம் சமயம் சாரும்' நல்லூழ் படைத்த நன்மக்கட்குச் சிறிதும் அழகாகாது. ஆதலால், தம் பண்டைப் பெரியோர்கள் மாண்பையும், தமது பொறுப் பையும் உணர்ந்து, தாமே செய்து தீரவேண் டிய சைவசமயப் பாதுகாப் பென்னுந் தொண்டைச் சைவரனைவரும் ஒன்று கூடி ஆற்றிவருதல் மிகவும் அவசியமாகும். மேலே, பிற சில சமய சகோதரர்கள் பால் காணப்படும் நலங்கள் விவரிக்கப்பட்டன. இவை போல்வன இன்னும் சில உள. இவற்றைச் சிந்தை செய்து, சைவர்கள் தம் கோயில்களையும், மடங்களையும், சபை களையும் சமூக வாழ்விலையும் கல்வி முறை களையும் வேண்டிய அளவு திருத்தியமைத் துக்கொள்ளும் கடப்பாடுடையர்.

செல்வாக்குள்ள இப் பிறசமய சகோதரர் களிலும் தாமும் சமயநலங்களில் சீர

மானவை, சுத்தமும் சுருக்கமும் வழிபாட்டு முறை, அவ்வச்சமயத் தோரனைவர்க்கும் சமய வுரிமையி வம், வெறும் பிறப்பில் உயர்வு க டாமை, சமயவளர்ச்சியில் ஆர்வம், சமயப் பாதுகாப்புக்காக யாவரும் பொருளுதவி செய்யக் கட்டான ஏற்பாடு, எளியோர்க் கிரங்கிச் செய்யும் தொண்டு, தியாக புத்தி, ஒற்றுமையால் வரும் பலம் முதலியவாம். இவற்றில் எதுதை எவ்வளவில் சைவ மக்கள் பின்பற்றுவது நலம், அல்லது சாத்தி யம் என்பதைப்பற்றிச் சைவ அறிஞர்கள் தனித்தும் ஒன்றுகூடியும் தீர ஆலோசித்த லும், முடிந்த ஆலோசனைகளைத் தம் சமய சகோதரர்கட்குத் தக்கவாறு அறிவித்த லும், அறிந்தபடி சைவ சமூகம் நடத்தலும் மிகவும் அவசியமாம். இதற்கெல்லாம் உரு வான வேலைத்திட்டமொன்று தேவை. அதை நடத்துவிக்கத் தக்க தலைவர் வேண் டும். பிற மதத்துள்ளோரைச் சைவம் சேர்க்க முயலுவதைச் சைவர் தம் தற்காலக் கடமையாகக் கொள்ள வேண்டுவதில்லை. சைவத்தில் பிறந்தோர் தஞ்சமய மறியாமல் நாஸ்திகராகவோ புற மதத்தினராகவோ போவதைத் தவிர்க்கவேண்டி, அவர்க்கு அவர் சமய உண்மைகளைப் போதித்தலும், அவர்பால் அறிவும் அன்பும், ஒற்றுமையும் முறுகி வளரத் தொண்டாற்றலுமே முதற் கடமையாகக் கோடல் சாலும்.

தமிழ் நாட்டிலுள்ள சைவசமயிகளனை வரும் தத்தம்மூர்ச் சிவாலயங்களைத் தம் முயிரென மீண்டும் போற்றி, அவற்றை அறிவும் அன்பும் தரும் சமயசக்தி வளர்ப் பிடங்களாக்கவேண்டும். அங்கு வாரத்திற் கொருமுறையேனும் இருபாலாரும் குறித்த நேரத்தில் வழிபாடாற்றக் கட்டாயம்செல்ல வேண்டும். திருவுருவ வழிபாட்டின் பின் னர், ஒரு குறிப்பிட்ட நேர அளவு ஒரு திட்டப்படி சைவசமய போதனையைத் தக்க புலமையும் ஒழுக்கமும் சொல்வன்மையும் உடைய சைவர்களைக் கொண்டு நடாத்திவர வேண்டும். அப்போதகர்க்கு மாதம் நாற்பது ஐம்பது ரூபாய் கோவில் வருமானத்தி லிருந்தோ, அது முடியாவிடத்து அவ்வவ் விடத்துச் சைவ சமயிகள் தாங்களே விதித் துக்கொள்ளும் தலைக்கட்டு வரி